# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூன் 2024

www.tnpscthervupettagam.com
























SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ....... 10**

**தமிழ்நாடு செய்திகள் ....... 27**

புதுமைப் பெண் திட்டங்களின் தாக்கம் ....... 27
மாநில அரசுப் பள்ளிகளுக்கு இணைய சேவை இணைப்பு ....... 27
வணிக வரி வருவாய் அதிகரிப்பு ....... 28
தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2024 ....... 29
திருநர்களுக்கான இட ஒதுக்கீடு ....... 30
மக்களவைத் தேர்தல் 2024 – தமிழ்நாடு ....... 30
கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை ....... 31
2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் நோட்டா பதிவு ....... 32
2021 ஆம் ஆண்டு முதல் உருவான புதிய புத்தொழில் நிறுவனங்கள் ....... 32
அமைச்சர்களின் வீடுகளுக்கு வாடகை ....... 33
மேட்டூர் அணை நீர் திறப்பு ....... 34
நிலையான கழிவு மேலாண்மை – சென்னை ....... 34
மரகதப் பூஞ்சோலை ....... 35
செயற்கைத் தீவுகள் – தமிழ்நாடு ....... 36
பொட்டாசியக் கலப்பு முறை ....... 36
புதிய விரிவான மினி பேருந்து திட்டம், 2024 ....... 37
புதிய தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் 2024 ....... 37
நீதிபதி சந்துரு கமிட்டி வழிகாட்டுதல்கள் ....... 38
தத்தெடுக்கப்பட்ட நபரின் சட்டப்பூர்வ வாரிசுரிமை ....... 39
தமிழகத்தில் அருகி வரும் எட்டு தாவர இனங்கள் ....... 40
புதிய சதுப்பு நிலக் காடுகள் ....... 41
மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம் ....... 41
'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தின் முதல் கட்டம் ....... 41
நிலம் குவிப்பு மேம்பாட்டுத் திட்டம் ....... 42
தமிழ்நாட்டின் வருவாய் வருமானம் 2023-204 ....... 43
பெரும்பாலை அகழாய்வு – தமிழ்நாடு ....... 44
மக்காச்சோளம் சாகுபடிக்கான சிறப்பு திட்டம் – தமிழ்நாடு ....... 44
தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீடுகளின் வரவு 2023-24 ....... 46
125வது ஆண்டு நிறைவு தினம் - ஊட்டி மலை இரயில் ....... 47
பல்வேறு தலைவர்களின் சிலைகள் ....... 47
விமானப் போக்குவரத்து சான்றிதழ் பயிற்சி திட்டம் ....... 48
தமிழ்நாட்டில் SC/ST பெண்களுக்கான புதிய திட்டங்கள் ....... 49

நிரந்தரப் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் ........ 50
காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல் ........ 50
தலைவர்களின் பிறந்தநாள் அரசு விழா கொண்டாட்டம் ........ 51
வெம்பக்கோட்டையில் சுடுமண் பாண்டத்திலான பெண் உருவப் பொம்மை ........ 52
தமிழ்நாடு ஏரிகள் தரக் கண்காணிப்புத் திட்டம் ........ 53
உலக வங்கியின் நிதியுதவிப் பெற்ற மகளிருக்கான திட்டம் ........ 53
5 பாரம்பரிய கைத்தறி வகைகளுக்கு புதிய புவிசார் குறியீடு ........ 54
தமிழ்நாட்டில் புதிய சுற்றுச்சூழல் சார் முன்னெடுப்புகள் ........ 54
தேசியச் செய்திகள் ........ 55
இந்திய அரசியலமைப்பின் 329(b)வது சட்டப்பிரிவு ........ 55
உத்பவ் திட்டம் ........ 56
பணிக்கொடை வரம்பு உயர்வு ........ 57
விரைவான சுகாதாரக் காப்பீட்டு உரிமை கோரல்களுக்கான பல்வேறு புதிய வழிகாட்டுதல்கள் ........ 57
புகையிலை பயன்பாடு இல்லாத கல்வி நிறுவனங்கள் ........ 58
மக்களவைத் தேர்தலில் உலக சாதனை ........ 59
2024 மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு ........ 59
உள்நாட்டுக் காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்பு ........ 60
‘ஏக் பெட் மா கே நாம்’ பிரச்சாரம் ........ 60
100 சதவிகித பழச்சாறுகள் என்ற கோரல்கள் ........ 61
18வது மக்களவையில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ........ 61
மக்களவைத் தேர்தல் முடிவுகள் 2024 ........ 62
அமைச்சரவை பதவியேற்பு விழா 2024 ........ 63
CSIR அமைப்பின் 'Phenome India' திட்டம் ........ 64
PraVaHa மென்பொருள் ........ 64
2025 ஆம் ஆண்டிற்குள் காசநோய் ஒழிப்பு ........ 65
புதிய அமைச்சரவைக் குழு அமைச்சர்கள் ........ 65
தேசிய சுகாதார உரிமை கோரல் இணைப்பகம் ........ 67
சிறப்பான கட்டமைப்பினை உருவாக்குதல் : உயர்தர உள்கட்டமைப்பினை நோக்கிய இந்தியாவின் பாதை - அறிக்கை ........ 67
பிரதமர் ஆவாஸ் யோஜனா நீட்டிப்பு ........ 68
இந்தியாவில் உள்ள கிராமப்புற அரசாங்கம் குறித்த விமர்சனம் ........ 69
ஆண்டிற்கு இரண்டு முறை பல்கலைக்கழக சேர்க்கை ........ 69
GREAT திட்டம் ........ 70
பாராளுமன்றத்தில் பிரேர்னா ஸ்தலம் ........ 71
அர்ஜென்டினாவில் லித்தியம் இருப்புகள் ........ 71
14 காரீஃப் பருவ பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பு ........ 72
இந்திய முதுமை அறிக்கை 2023 ........ 73
தேசிய தடயவியல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ........ 74
ஒருங்கிணைந்த இணைய வெளி கோட்பாடு ........ 74

கிருஷி சாகி ஒருங்கிணைப்பு திட்டம் ........ 75
தபால் அலுவலகச் சட்டம் 2023 ........ 75
கொள்கலன் துறைமுகச் செயல்திறன் குறியீடு 2023 ........ 76
வினாத்தாள் வெளியாதல் தடுப்புச் சட்டம் ........ 77
"ஒரு வாரம் ஒரு கருத்துரு" (OWOT) பிரச்சாரம் ........ 78
மின்சார வாகனங்களுக்கான BIS தரநிலைகள் ........ 78
மக்களவை சபாநாயகர் 2024 ........ 79
மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ........ 80
வாடகைத் தாய் மூலம் பெறும் குழந்தைகள் பராமரிப்பு விடுப்பு ........ 81
**சர்வதேசச் செய்திகள் ........ 82**
நிலச்சரிவு - பப்புவா நியூ கினியா ........ 82
WIPO அமைப்பின் புதிய ஒப்பந்தம் ........ 83
2024 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் வேலைவாய்ப்பின்மை ........ 83
கொழும்பு செயல்முறை மன்றத்தின் தலைமை ........ 84
தாலிபான் – தீவிரவாதக் குழு பட்டியல் ........ 85
77வது உலக சுகாதார சபை ........ 85
டெக்கோ ஃபுனன் கால்வாய் திட்டம் ........ 86
பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் ........ 86
அதி இலாப விருப்பப் பணவீக்கம் குறித்த கோட்பாடு ........ 87
UNSC தேர்தல் 2024 ........ 88
கார்டி சுக்துப் தீவில் இருந்து வெளியேறும் மக்கள் ........ 88
உலகின் முதல் மின்சார வாகனங்களின் மின்கலங்களுக்கான கடவுச்சீட்டு ........ 89
சர்வதேச சுகாதார விதிமுறைகள் ........ 89
NaturAfrica திட்டம் ........ 90
ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் புதிய நாடுகள் இணைவு ........ 91
பசுமை சார் கல்விக்கான யுனெஸ்கோவின் புதிய செயற்கருவிகள் ........ 91
கருங்காய்ச்சல் (VL) வழிகாட்டல் கட்டமைப்பு ........ 92
கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு - அர்மேனியா ........ 93
உக்ரைன் சந்திப்பு அறிக்கை ........ 94
அல்சைமர் நோய்க்கான புதிய மருந்து ........ 94
STSS தொற்றுகள் அதிகரிப்பு – ஜப்பான் ........ 95
G7 உச்சி மாநாடு 2024 ........ 96
செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்கு NATO நிதி ........ 96
வார்ட்சிலா எஞ்சின் இயக்க ஆற்றல் உற்பத்தி ஆலை ........ 97
ஏப்ப (Burp) வரி – நியூசிலாந்து ........ 97
ஹிஜாப் அணிவதற்குத் தடை – தஜிகிஸ்தான் ........ 98
மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் – சாட் ........ 98
அமெரிக்கா – 'நுண்பள்ளிகள்' தோற்றம் ........ 99
அஸ்ம்-இ-இஸ்தேகாம் நடவடிக்கை ........ 99

**பொருளாதாரச் செய்திகள் ..... 100**
மதிப்பு பணவீக்கக் குறியீடு 2023/24 ..... 100
இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய முன்னெடுப்புகள் ..... 100
மூன்றாம் தரப்புப் பரிவர்த்தனை மாதிரி ..... 101
தங்க கையிருப்புப் பரிமாற்றம் ..... 102
இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2023-24 ..... 103
இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கை புதுப்பிப்பு ..... 103
அந்நியச் செலாவணி கையிருப்பு – ஜூன் 2024 ..... 104
வீட்டு மனைத் துறையில் முதலீட்டிற்கான உலகளாவிய இலக்குகள் ..... 104
வீட்டு நுகர்வுச் செலவினக் கணக்கெடுப்பு 2022-23 ..... 105
சுவிஸ் வங்கியில் இந்தியச் சொத்துக்கள் ..... 106
53வது சரக்கு மற்றும் சேவை வரி சபைக் கூட்டம் ..... 107
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 108**
நிலையான லித்தியம் அயனி மின் கலன்கள் ..... 108
கம்பளிப் புழுக்களின் மின்னேற்ற உணர்வு ..... 108
மெகெல்லன் ஆய்வுக் கலம் - நாசா ..... 109
மரபணு மாற்றப்பட்ட கொசுக்கள் – டிஜிபௌட்டி ..... 109
OSIRIS-APEX ..... 110
மரத்தினால் ஆன உலகின் முதல் செயற்கைக்கோள் ..... 111
கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை 'RudraM-II' 2024 ..... 111
Y குரோமோசோம்களில் நிகழும் விரைவான மாற்றங்கள் ..... 112
PREFIRE ஆய்வுத் திட்டம் ..... 112
மீளிணைவு புரதங்களின் அதிகளவிலான உற்பத்தி ..... 113
சங்க்’கே-6 தரையிறங்கு கலம் ..... 114
ஆரம்பகால மாபெரும் அண்டம் ..... 114
தொற்றாத வகையிலான நிபா வைரஸ் போன்ற துகள்கள் ..... 115
உலகின் மிகப்பெரிய மரபணு ..... 116
எந்திர இயக்கத்திலான 'மூன்றாவது கட்டைவிரல்' ..... 116
சுடர்மிகு நட்சத்திரம் ..... 117
ICBM மினிட்மேன் III ..... 118
போயிங் ஸ்டார்லைனர் ..... 118
இந்தோ-பிரெஞ்சு TRISHNA திட்டம் ..... 119
ஹைட்ராக்ஸியூரியா உருவாக்கம் ..... 120
விண்வெளியில் நோய்க்கிருமிகள் ..... 120
சூரியச் சுடர்களின் சீற்றத்தினைப் படம் பிடித்த ஆதித்யா-L1 ..... 121
safeEXO-Cas ..... 121
எடுத்து செல்லக் கூடிய புதிய அணு கடிகாரம் ..... 122
பூமியின் உள் கருவத்தின் சுழற்சியின் வேகத்தில் தொய்வு ..... 123
செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பள்ளங்களுக்குப் பெயரிடல் ..... 123

ஒலிம்பஸ் மோன்ஸில் உறைபனி நிறைந்த மலைச்சிகரங்கள் ........ 124
புதிய வகையிலான சூரிய சுழற்சி ........ 125
நாகாஸ்த்ரா-1 ஆளில்லா விமானங்கள் ........ 125
சங்'கே-7 ஆய்வுத் திட்டம் ........ 126
குறுங்கோள் 2024 LZ4 ........ 127
செவ்வாய்க் கிரகத்தில் ஊதா நிற துருவ மின்னொளி ........ 127
புரதம் கொண்ட அரிசி வகை ........ 128
SN 2023adsy மீவொளிர் விண்முகில் ........ 129
துருவா ஸ்பேஸ் நிறுவனத்தின் தைபோல்ட் செயற்கைக்கோள்கள் ........ 129
சனிக்கோளின் ஆற்றல் சமநிலையின்மை ........ 130
இரட்டை சூரிய ஒளிவட்டம் ........ 131
ASMI மிதரக தானியங்கு துப்பாக்கி ........ 131
பலோன் புரதம் ........ 132
காசிமிர் விளைவு ........ 132
சீனாவின் சங்'கே-6 ஆய்வுக் கலம் ........ 133
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 134
நகரமயமாக்கல் மற்றும் இரவு நேர வெப்பமயமாதல் ........ 134
தென்மேற்குப் பருவமழையின் தொடக்கம் 2024 ........ 134
ஹாலோவீன் பிளவு ........ 135
புதிய பாசி இனம் ........ 136
அரிவாள் மூக்கு உள்ளான் அல்லது கோட்டான் ........ 136
ஆரஞ்சு நிறமாக மாறும் அலாஸ்கா நதிகள் ........ 137
இந்தியாவின் இரண்டாவது வெப்பமான ஆண்டு ........ 137
டோங்கா எரிமலை வெடிப்பு ........ 138
2 புதிய ராம்சர் தளங்கள் – பீகார் ........ 139
உலகளாவிய வருடாந்திரம் முதல் தசாப்தம் அளவிலான பருவநிலை தகவல் சேர்ப்பு அறிக்கை (2024-2028) ........ 139
இந்தியாவின் முதல் தனியார் உயிர்க்கோளக் காப்பகம் ........ 140
ஆந்த்ரோபோசீன் காலத்தின் காற்றின் நிலை குறித்த திட்டம் ........ 141
அதிக எண்ணிக்கையிலான ஆலிவ் ரிட்லி ஆமை குஞ்சு பொரிப்பு பதிவுகள் 2024 ........ 142
நைட்ரஸ் ஆக்சைடு உமிழ்வு நாடுகள் 2024 ........ 142
தாவரங்களை உண்ணும் பனிச் சிறுத்தைகள் ........ 143
ஓசோன் அளவைக் குறைக்கும் பொருட்கள் 2024 ........ 143
காந்தி சாகர் சரணாலயத்தில் சிவிங்கிப் புலிகள் – மத்தியப் பிரதேசம் ........ 144
புதிய வகை விலாங்கு மீன் ........ 145
பாண்டனல் சதுப்பு நிலத்தில் தீ விபத்து ........ 145
பர்புரோகலின் நிறமி ........ 146
புதிய தாவர இனங்கள் – அந்தமான் மற்றும் அருணாச்சல் ........ 146
உலகின் முதல் ஆசிய ராஜ கழுகுகள் வளங்காப்பு மையம் ........ 147

இக்தியோபிஸ் ஸ்ப் ............ 148
**அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ............ 148**
உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2024 ............ 148
உலகளாவிய சமூகப் பாதுகாப்பில் நிலவும் இடைவெளியை நிரப்புதலுக்கான நிதி - ILO அறிக்கை . 149
உலகச் செல்வ வள அறிக்கை 2024 ............ 150
QS அமைப்பின் உலகப் பல்கலைக் கழக தரவரிசை 2025 ............ 151
உலக கடன் அறிக்கை 2024 ............ 152
சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2024 ............ 152
பெருங்கடல்களின் நிலை குறித்த அறிக்கை 2024 ............ 153
குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்த அறிக்கை 2024 ............ 154
உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கை 2024 ............ 155
உலகளாவியப் பாலின இடைவெளிக் குறியீடு 2024 ............ 155
NDCகள் பற்றிய UNEP அறிக்கை 2024 ............ 156
உலகளாவிய அமைதிக் குறியீடு 2024 ............ 156
உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2024 ............ 157
உலகளாவியப் போக்குகள் அறிக்கை: 2023 ஆம் ஆண்டில் பதிவான கட்டாய புலம் பெயர்வு ............ 158
SDG 7 இலக்குகளைக் கண்காணித்தல்: ஆற்றல் முன்னேற்ற அறிக்கை 2024 ............ 159
THE இதழின் பல்கலைக்கழக தாக்க தரவரிசை 2024 ............ 160
உலகின் பிரதான நகரங்கள் குறியீடு ............ 161
பாக்டீரியா எதிர்ப்பு ஆராய்ச்சி பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை ............ 162
மெர்சர் நிறுவனத்தின் அதிக செலவு மிக்க நகரங்களின் பட்டியல் ............ 162
நிலையான மேம்பாட்டு அறிக்கை 2024 ............ 163
SIPRI இயர்புக் 2024 ............ 164
உலக ஆற்றல் மாற்றக் குறியீடு 2024 ............ 165
வெப்பம் மற்றும் நீர் நெருக்கடி சார்ந்தப் பிரச்சினைகளின் உலகளாவியத் தாக்கங்கள் – அறிக்கை 165
**மாநிலச் செய்திகள் ............ 166**
புதைபடிவ மரத்தில் வரலாற்றுக்கு முந்தைய கலைப்பொருட்கள் ............ 166
அதிக அரசியல் பேரணிகள் ............ 167
இணைத் தலைநகர் - ஹைதராபாத் ............ 168
உத்தரகாண்டில் உள்ள இடங்களின் பெயர்கள் மாற்றம் ............ 168
முதல் பசுமை அம்சங்கள் கொண்ட மாநிலத் தலைமையகம் ............ 169
வாதவன் துறைமுகத் திட்டம் ............ 170
ஹெமிஸ் திருவிழா 2024 ............ 171
இந்தியாவின் முதல் யுனெஸ்கோ இலக்கிய நகரம் ............ 171
பீகார் மாநிலத்தின் 65 சதவிகித இட ஒதுக்கீடு ............ 172
KGF தங்கச் சுரங்கத்தினைப் புனரமைத்தல் ............ 172
அம்புபாச்சி மேளா 2024 ............ 173
சிறுத்தைகளைக் காண்பதற்கான இந்தியாவின் மிகப்பெரிய சுற்றுலாப் பூங்கா ............ 173
அமைச்சர்களுக்கு வருமான வரி ............ 173

பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....174
டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் ....174
கிரகத்தின் நிலைத்தன்மை குறித்த கண்ணோட்ட உச்சி மாநாடு ....175
காசா உச்சி மாநாடு ....175
ருசிரா கம்போஜ் ....175
மராத்திய இராணி அஹில்யா பாய் ஹோல்கர் ....176
சுனில் சேத்ரிக்கு உலக நாடுகள் பிரியாவிடை ....177
சுனிதா வில்லியம்ஸ் 3வது விண்வெளி பயணம் ....177
பான் பருவநிலை மாநாடு 2024 ....177
WEF தொழில்நுட்ப முன்னோடி நிறுவனங்களின் பட்டியல் 2024 ....178
சாகித்ய அகாடமி விருதுகள் 2024 ....179
2024 ஆம் ஆண்டின் காவ்லி பரிசு ....179
விளையாட்டுச் செய்திகள் ....180
ஆசிய கைவலு மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2024 ....180
தைவான் தடகள ஓபன் போட்டி 2024 ....180
நார்வே சதுரங்கப் போட்டி 2024 ....181
பிரெஞ்ச் ஓபன் போட்டி 2024 ....181
U-17 ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி 2024 ....182
முக்கிய தினங்கள் ....182
உலக செரிமான ஆரோக்கிய தினம் - மே 29 ....182
உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 01 ....183
சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02 ....183
தெலுங்கானா மாநில உருவாக்க தினம் - ஜூன் 02 ....184
உலக பால் தினம் - ஜூன் 01 ....184
உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03 ....185
உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 05 ....186
உலகப் பூச்சி தினம் - ஜூன் 07 ....186
உலக உணவுப் பாதுகாப்பு தினம் - ஜூன் 07 ....186
சர்வதேச இருப்புப் பாதை கடப்பு விழிப்புணர்வு தினம் - ஜூன் 07 ....186
உலகப் பெருங்கடல் தினம் – ஜூன் 08 ....187
உலக மூளைக் கட்டி நோய் தினம் - ஜூன் 08 ....187
தற்சிறப்பினத் தன்மைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 05 ....187
சட்டவிரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேச தினம் - ஜூன் 05 ....188
உலக அங்கீகார தினம் - ஜூன் 09 ....189
குழந்தைத் தொழிலாளர் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12 ....189
சர்வதேச தோல் வெளிர்தல் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13 ....189
உலக இரத்த தான தினம் - ஜூன் 14 ....190
உலகளாவிய காற்று தினம் - ஜூன் 15 ....191

உலக முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வு தினம் - ஜூன் 15 ....... 191
சர்வதேச கல்லீரல் அதிகொழுப்பு படிவு நோய் தினம் - ஜூன் 13 ....... 192
ASEAN டெங்கு தினம் - ஜூன் 15 ....... 192
சர்வதேச ஆப்பிரிக்கக் குழந்தைகள் தினம் - ஜூன் 16 ....... 193
வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16 . 193
பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினம் - ஜூன் 17 ....... 194
மன இறுக்க நோய் நினைவு தினம் - ஜூன் 16 ....... 195
உலக முதலை தினம் - ஜூன் 17 ....... 195
நிலையான சமையல் கலை தினம் - ஜூன் 18 ....... 196
வெறுப்பினை உண்டாக்கும் பேச்சைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18 ....... 197
உலக அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 19 ....... 197
தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19 ....... 198
மோதல் நிகழ்வுகளில் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19 ....... 199
உலக அகதிகள் தினம் - ஜூன் 20 ....... 199
உலக நீர் நிலையியல் தினம் - ஜூன் 21 ....... 200
சர்வதேச யோகா தினம் - ஜூன் 21 ....... 200
கோடைகால சங்கிராந்தி - ஜூன் 21 ....... 200
சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23 ....... 201
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23 ....... 201
மாலுமிகள் தினம் - ஜூன் 25 ....... 202
உலக மழைக்காடுகள் தினம் 2024 - ஜூன் 22 ....... 202
உலக தோல் நிறமி இழப்பு நோய் தினம் - ஜூன் 25 ....... 202
உலக போதைப் பொருள் தினம் - ஜூன் 26 ....... 203
சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 26 ....... 204
சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் - ஜூன் 27 ....... 204
தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29 ....... 205
சர்வதேச வெப்ப மண்டல தினம் - ஜூன் 29 ....... 205
உலக குளிர்பதனத் தினம் - ஜூன் 26 ....... 206
உலக குறுங்கோள் தினம் - ஜூன் 30 ....... 206
சர்வதேசப் பாராளுமன்ற தினம் - ஜூன் 30 ....... 207
இதரச் செய்திகள் ....... 207
புவியியல் சாராத சிற்றினத் தோற்ற வழிமுறைகள் ....... 207
பிரஸ்டன் வளைவு ....... 208
பனி உருகுவதைக் குறைக்கும் வைரஸ்கள் ....... 209
2022 ஆம் ஆண்டில் அதிகளவில் பிடிக்கப்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் ....... 209
மிகச்சிறிய மனிதக்குரங்கு இனங்கள் ....... 210
முசங்க்வா சன்யாடியென்சிஸ் ....... 210
உலகளாவிய கடல்சார் உணவு உற்பத்தி ....... 211
படகோனியாவில் புதிய டைனோசர் இனங்கள் ....... 212

**500 ஆண்டுகள் பழமையான இந்தியாவின் வெண்கலச் சிலை ........ 212**
**மினோவான் நாகரிகம் - கிரீஸ் ........ 213**
**செனாப் பாலத்தில் சோதனை ஓட்டம் ........ 213**
**கோட்பந்தர் கோட்டையில் உள்ள இரகசிய அறை ........ 213**
**பண்டைய முத்து நகரம் - துயாம் ........ 214**
**அதி நீர்விலக்குத் தன்மைக் கொண்ட வினையூக்கி ........ 214**
**உலகின் பழமையான கரையான் புற்றுகள் ........ 215**

# TNPSC துளிகள்

- டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரில் நடைபெற்ற WAN-IFRA 2024 எண்ணிம ஊடக விருதுகளில், தி இந்து நிறுவனத்தின் 'Made of Chennai' என்ற பிரச்சாரமானது 'சிறந்த பார்வையாளர் ஈடுபாடு' பிரிவில் விருதினை வென்றது.
- சென்னையில் உலக விளையாட்டு நகரத்தினை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இந்தியாவின் முதல் பல் மாதிரி தளவாடப் பூங்காவினை சென்னைக்கு அருகில் உள்ள மப்பேடு என்ற இடத்தில் அமைக்க உள்ளது.
- தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது, மத்திய உள்துறை அமைச்சகத்துடன், சஞ்சார் சாதி முன்னெடுப்பின் கீழ் மோசடி குறுஞ்செய்தி மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.
- இந்தியப் பெண் அமைதிப்படை வீராங்கனை மேஜர் ராதிகா சென், ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்புமிக்க 2023 ஆம் ஆண்டு இராணுவப் பாலின ஆதரவாளர் விருதை பெற்றுள்ளார்.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இந்தியாவின் முதல் குவாண்டம் வைர நுண் சில்லுகள் பதிவுக் கருவியினை உருவாக்குவதற்காக டாடா ஆலோசனை சேவைகள் வழங்கீட்டு நிறுவனத்துடன் ஓர் உத்திசார் கூட்டாண்மையில் ஈடுபட்டுள்ளது.
- இந்திய மலையேறும் வீரரான சத்யதீப் குப்தா ஒரு பருவத்தில் இரண்டு முறை எவரெஸ்ட் மற்றும் லோட்சே மலைச் சிகரத்தில் ஏறிய முதல் நபர் என்ற ஒரு வரலாற்றைப் படைத்துள்ளார்.
    - எவரெஸ்ட் சிகரத்திலிருந்து 11 மணி நேரம் 15 நிமிடங்களில் லோட்சே மலையை அடைந்த முதல் இந்தியர் என்றச் சாதனையையும் அவர் படைத்து உள்ளார்.
- நான்காவது சர்வதேச வளர்ந்து வரும் சிறு தீவு நாடுகள் (SIDS4) மாநாடானது ஆன்டிகுவா மற்றும் பார்புடாவின் செயின்ட் ஜான்ஸ் நகரில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்வின் கருத்துரு: " Charting the course toward resilient prosperity" என்பது ஆகும்.
- புலம்பெயர்ந்த தமிழர்களின் மறுவாழ்வு மற்றும் நலன் ஆணையர் அலுவலகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகியவை கூட்டாக இணைந்து இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கான 'கலங்கரை' எனப்படும் ஒரு தொழில் வழிகாட்டித் திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- 2024-2029 ஆகிய காலக்கட்டத்திற்கான உலக விலங்கு நல அமைப்பின் (WOAH) தலைமை இயக்குனராக டாக்டர் இம்மானுவேல் சௌபெய்ரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தொடர்ந்து ஆறாவது ஆண்டாக, இலண்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளி கலைஞர் அனிஷ் கபூர், ஹுருன் இந்தியா கலை அமைப்பின் வாழும் மிகவும் வெற்றிகரமான இந்திய ஓவியக் கலைஞர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தமிழ்த் தாளில் குறைந்தபட்சம் 40% மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும் என்று மனிதவள மேலாண்மைத் துறை பிறப்பித்த ஒரு அரசாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

- இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான ராகேஷ் ரஞ்சன், பணியாளர்கள் தேர்வு ஆணையத்தின் (SSC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய விமானப்படையானது அமெரிக்காவின் அலாஸ்காவில் ரெட் ஃப்ளாக் எனப் படும் 16 நாட்கள் அளவிலான ஒரு மாபெரும் பலதேச ராணுவப் பயிற்சியில் பங்கேற்கிறது.
- டாடா குழுமம், இந்திய சீரம் நிறுவனம் (SII) மற்றும் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (RIL) நிறுவனம் ஆகியவை 2024 ஆம் ஆண்டில் உலகின் மிக முக்கியமான நிறுவனங்களாக டைம் இதழால் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்திய விண்வெளி சார் புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், மாற்றமிக்க உலகின் முதல் ஒற்றை-துண்டு முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஏவுகல இயந்திரத்தினால் இயக்கப்படுகின்ற தனது முதல் சுற்றுப்பாதை சார் நிலை சோதனை வாகனத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த ஏவுகலம் ஆனது தனுஷ் எனப்படும் அதன் இடம் நகர்த்தக் கூடிய ஏவுதளம் மூலம் எந்த இடத்திலிருந்தும் ஏவக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிச் சபையானது, "PRAGATI-2024" (ஆயுர்கியான் மருந்து ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கம்) என்ற புதியதொரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
  - இது ஆயுர்வேதத் துறையில் கூட்டு ஆராய்ச்சி மற்றும் பல்வேறு புதுமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசியப் பங்குச் சந்தைக் குறியீடுகள் லிமிடெட் நிறுவனம் ஆனது, இந்தியாவின் முதல் மின்சார வாகனப் பங்குகள் (EV) குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, பெங்களூருவில் உள்ள தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்திற்கு (NIMHANS) 2024 ஆம் ஆண்டிற்கான சுகாதார மேம்பாட்டிற்கான நெல்சன் மண்டேலா விருதினை வழங்கியுள்ளது.
- நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ஆகியவை ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக நிலவிற்கான தரப்படுத்தப்பட்ட நேர அமைப்பை உருவாக்க ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளன.
- இந்தியக் குத்துச்சண்டை கூட்டமைப்பு (BFI) ஆனது, புதிதாக அமைக்கப்பட்ட உலக குத்துச் சண்டை அமைப்பில் சேர ஒப்புதல் அளித்துள்ளது.
  - சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC) ஆனது, சர்வதேச குத்துச்சண்டைச் சங்கத்தினை (IBA) அங்கீகரிப்பதற்கு மறுத்ததையடுத்து இது உருவாக்கப்பட்டது.
- இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி, ICC அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த வீரர் விருதைப் பெற்றுள்ளார்.
- 7 ஆம் வகுப்பு தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பப் பாடப்புத்தகத்தில் செயற்கை நுண்ணறிவு கற்றலைக் கேரள மாநில அரசு இணைத்துள்ளது.
- மூடிஸ் மதிப்பீடுகள் ஆனது, நடப்பு ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.8 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 6.5 சதவீதமாகவும் இருக்கும் என கணித்து உள்ளது.
- சர்வதேச மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் சங்கங்களின் கூட்டமைப்பு (IFPMA) ஆனது, சமீபத்தில் எதிர்ப்புத் திறன் முதல் நெகிழ்திறன் வரை: நுண்ணுயிர் எதிர்ப்புத் திறனுக்கான எதிர் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டது.

- சீனாவில் 71 வயது முதியவர் ஒருவர், மரபணு மாற்றப்பட்ட பன்றியிலிருந்துப் பெறப்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட முதல் உயிருள்ள நபர் மற்றும் பன்றியின் உறுப்புகள் பொருத்தப்பட்ட ஐந்தாவது நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- OpenAI நிறுவனம் ஆனது, GPT-4o மொழி மாதிரியினால் இயக்கப்படும் ChatGPT Edu எனப்படும் அதன் செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளின் புதிய வடிவத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வளாகச் செயல்பாடுகளில் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதற்காக என்று பல்கலைக்கழகங்களுக்காக உருவாக்கப்பட்டதாகும்.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மற்றும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆகியவை இணைந்து "ஒருங்கிணைந்த இந்தியா - இயற்கை வேளாண்மை பொருள்" முத்திரைச் சின்னத்தினை உருவாக்கியுள்ளன.
  - இது இந்தியா இயற்கை வேளாண்மை முறையிலான பொருட்கள் மற்றும் ஜெய்விக் பாரத் முத்திரைச் சின்னங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும்.
- தேர்தல் கருத்துக்கணிப்பு முடிவுகளால் தூண்டப்பட்ட பங்குச் சந்தையின் ஆரம்ப கட்ட வர்த்தகத்தில் சென்செக்ஸ் புள்ளி 76,738 என்ற சாதனை அளவினை எட்டியது (ஜூன் 3).
  - நிஃப்டி புள்ளியும் இதுவரை இல்லாத அளவிலான 23,338 புள்ளிகளை எட்டியது.
- 1986 ஆம் ஆண்டில் பண்டிட் ஜுகல் கிஷோர் சுக்லா அவர்களால் தொடங்கப்பட்ட உதாந்த் மார்தண்ட் எனப்படும் இந்தியாவின் முதல் இந்தி மொழி செய்தித்தாள் வெளியான நாளினை நினைவு கூரும் விதமாக இந்தி மொழி இதழியல் தினம் என்பது ஒவ்வோர் ஆண்டும் மே 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- உலக மின்சாரச் சிகரெட்டுகள் தினம் ஆனது மே 30 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
  - மின்சாரச் சிகரெட்டுகள் பற்றி விழிப்புணர்வினை அதிகரிப்பது மற்றும் புகை பிடிப்பதை நிறுத்த முடியாத புகைப்பிடிக்கும் பழக்கத்தினை நிறுத்துவதற்கு உதவுவதும் இதன் நோக்கமாகும்.
- அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வங்கிக் கணக்குகளைத் தொடங்குமாறு தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, முதல் முறையாக 10 ஆண்டு கால பசுமைப் பத்திரங்களின் ஏலத்தை ரத்து செய்துள்ளது.
- பாகிஸ்தான் நாடானது, அதன் நட்பு நாடான சீனாவின் உதவியுடன் அதிவேக இணைய இணைப்பிற்காக PAKSAT MM1 என்ற பல்-பயன்பாட்டுத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளை விண்ணில் ஏவியுள்ளது.
- மெக்சிகோவின் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற கிளாடியா ஷீன்பாம் நாட்டின் 200 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ரியல் மாட்ரிட் அணியானது 15வது UEFA கால்பந்து சாம்பியன்ஸ் லீக் போட்டியில் பட்டத்தை வென்று சாதனையைப் படைத்துள்ளது.

- ❖ புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டின் படி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானியைப் பின்னுக்கு தள்ளி, ஆசியாவின் மிகப் பெரியப் பணக்காரர் என்ற பட்டத்தினைக் கௌதம் அதானி மீண்டும் பெற்றுள்ளார்.
- ❖ மும்பை உயர்நீதிமன்றத்தின் கோவா அமர்வு நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதி M.S. சோனக், கோவாவில் "உயிரோடுள்ள போதே உயில்" பதிவு செய்த முதல் நபர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
  - ○ அவரால் சொந்தமாக முடிவெடுக்க முடியாத பட்சத்தில் அவரது குடும்பத்திற்கு வழங்கப் படும் முன்கூட்டிய மருத்துவம் சார் வழிகாட்டல் அது ஆகும்.
- ❖ உச்சநீதிமன்றம் ஆனது, நீதிபதி ஹிமா கோலியின் தலைமையின் கீழ் பாலின உணர்வு மற்றும் உள் புகார்கள் குழுவை மீண்டும் அமைத்துள்ளது.
  - ○ இந்தக் குழுவில் சட்டம், சட்டப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் பிறர் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மொத்தம் 12 உறுப்பினர்கள் உள்ளனர்.
- ❖ தங்களின் வாழ்க்கையில் பயங்கரமான அனுபவங்களைச் எதிர்கொண்ட அப்பாவிக் குழந்தைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி, வன்முறைகளால் பாதிக்கப் பட்ட அப்பாவிக் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் ஆனது ஜூன் 04 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம் (AIBEA) ஆனது, வங்கி வாடிக்கையாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக "வங்கி கிளினிக்" எனும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ❖ ஆளும் பா.ஜ.க. மற்றும் சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா (SKM) ஆகிய கட்சிகள் முறையே அருணாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் முறையே மூன்றாவது மற்றும் இரண்டாவது முறையாக ஆட்சியைத் தக்க வைக்கும் வகையில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்துள்ளன.
- ❖ நிதித் தொழில்நுட்பத் துறையில் (SRO-FT) பிரதிநிதித்துவ அங்கத்தினைக் கொண்டிருக்கும் வகையில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி சுய-ஒழுங்குமுறை வகையிலான நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான ஒரு இறுதிக் கட்டமைப்பை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- ❖ ஆசியாவின் முதன்மையான பாதுகாப்பு உச்சி மாநாடான 2024 ஆம் ஆண்டு IISS ஷங்க்ரி-லா பேச்சுவார்த்தையானது சிங்கப்பூரில் நடைபெற்றது.
- ❖ என்விடியா நிறுவனத்தின் ரூபின் என்று அழைக்கப்படும் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்திலான செயற்கை நுண்ணறிவு (AI) சில்லுகள் இயங்குதளம் ஆனது 2026 ஆம் ஆண்டில் வெளியிடப்பட உள்ளது.
- ❖ 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஈராக்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் காப்பு படையானது (UNAMI) 2025 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டை விட்டு வெளியேறும் என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை ஒருமனதாக முடிவு செய்துள்ளது.
- ❖ பாகிஸ்தான் இராணுவ மருத்துவப் படையினைச் சேர்ந்த டாக்டர் ஹெலன் மேரி ராபர்ட்ஸ், படைத் தளபதி பதவியை எட்டிய கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த முதல் பெண் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க குட்லெப்ப ஹல்லிக்கேரி விருதிற்கு மூத்த எழுத்தாளர் சித்தலிங்க பட்டணஷெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- மத்திய அரசானது, குடிமக்கள் நேரிய (நியாயமான) அழைப்புகளை எளிதாகக் கண்டறிவதற்காகவும், தொலைபேசி வழிச் சந்தையிடல் நிறுவனங்களிடமிருந்து வரும் தேவைப்படாத அழைப்புகளைத் தடுப்பதற்காகவும் சேவை அல்லது பரிவர்த்தனை சார்ந்த அழைப்புகளைச் செய்வதற்காக 160xxxxxxx என்ற புதிய எண்ணிடுதல் தொடரினை அறிமுகப் படுத்தியது.
    - விளம்பர/சேவை/பரிவர்த்தனை சார்ந்த தொலைபேசி அழைப்புகளைச் செய்வதற்கு தொலைபேசி வழிச் சந்தையிடல் நிறுவனங்களுக்கு தற்போது, 140xxxxxxx எண் தொடர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மே 29 ஆம் தேதியன்று 52.9 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையினைப் பதிவு செய்த டெல்லி வானிலை நிலையம் ஆனது உணர்வுக் கருவிகளின் பிழையால் சரியாகச் செயல்படவில்லை.
    - இது 1998 ஆம் ஆண்டு மே 26 ஆம் தேதியன்று பலம் எனுமிடத்தில் பதிவான 48.4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையானது மிக உயர்ந்த வெப்பநிலையாக குறிப்பிடப்பட்டிருந்தது.
- NPCI சர்வதேசப் பண வழங்கீட்டு நிறுவனம் (NIPL) மற்றும் பெரு மத்திய ரிசர்வ் வங்கி (BCRP) ஆகியவற்றின் கூட்டிணைவானது உலக அளவிலான ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகப் பரிவர்த்தனைகள் (UPI) தொழில்நுட்பத்தைப் பின்பற்றும் தென் அமெரிக்காவின் முதல் நாடாக பெருவினை மாற்றியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, தொற்றுள்ள விலங்குகளுடன் எந்தவிதத் தொடர்பும் கொண்டிராத 59 வயதுடைய மெக்சிகன் மனிதர், பறவைக் காய்ச்சலின் H5N2 துணை வகை வைரசினால் உயிரிழந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.
- விண்வெளியில் ஒட்டுமொத்தமாக 1,000 நாட்களைச் செலவழித்த முதல் நபர் என்ற சாதனையை ரஷ்ய விண்வெளி வீரரான ஒலெக் கொனோனென்கோ படைத்துள்ளார்.
- ஐக்கியப் பேரரசில் மூன்றாம் சார்லஸ் மன்னரின் உருவப்படம் கொண்ட ரூபாய் தாளினை இங்கிலாந்து வங்கி வெளியிட்டுள்ளது.
- பூமியின் சுற்றுப்பாதையில் நீண்ட காலத்திற்கு மனிதச் செயல்பாடுகளை மேற் கொள்வதற்கு, ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) விண்வெளிச் சிதைவுகள் இல்லாத மேலாண்மை சாசனத்தில் 12 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியமானது (ITU), உலகளாவியத் தகவல் சமுதாய மன்றம் (WSIS)+20 பற்றிய 2024 ஆம் ஆண்டின் உலக உச்சி மாநாடு எனப்படும் ஓர் உயர்மட்ட நிகழ்வினை நடத்தியது.
- "கைபேசி வழியிலான தகவல் பரப்பு அவசர எச்சரிக்கை நுட்பம் மூலம் தொலைபேசி மூலமான பேரிடர் நெகிழ்திறன்" என்ற திட்டத்திற்காக, தகவல் தொலைத்தொடர்பு மேம்பாட்டு மையத்திற்கு (C-DOT) WSIS+ 20 மன்றத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் WSIS 2024 "சாம்பியன்" விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- தார்வாதின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, தீயணைப்புப் பணிகளில் மீட்பு நடவடிக்கைகளுக்கு துணை புரியும் முதல் வகையிலான ஆளில்லா விமானத்தை உருவாக்கியுள்ளது.
    - இந்த ஆளில்லா விமானமானது சிறிய அறைகள் மற்றும் அதிக வெப்பநிலையிலும் பறக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற வகையில் இது பல சிக்கல்கள் நிறைந்த பகுதிகளில் தீயை அணைப்பதில் போராடுவதற்கு முக்கியமானது.

- தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னை எழும்பூரில் உள்ள அரசு மருத்துவமனையான மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவக் கல்விக் கழகத்தில் (IOG) அதிநவீன செயற்கை முறை கருத்தரித்தல் (IVF) வசதியானது தொடங்கப் பட்டுள்ளது.
- புகழ்பெற்ற இந்திய வனவிலங்கு உயிரியலாளரும், அர்ப்பணிப்பு மிக்க வளங் காப்பு ஆர்வலருமான ஆசிர் ஜவஹர் தாமஸ் ஜான்சிங் என்பவர் சமீபத்தில் பெங்களூருவில் காலம் ஆனார்.
- ஒடிசாவில் உள்ள பாராபதி-கட்டாக் தொகுதியின் காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரான சோபியா ஃபிர்தௌஸ், ஒடிசா சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிம் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- SBI பரஸ்பர நிதி (SBI MF) ஆனது, நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துகளில் (AUM) 10 டிரில்லியன் ரூபாய் மைல்கல்லை எட்டிய நாட்டின் முதல் நிதியம் என்ற வரலாற்றைப் படைத்துள்ளது.
- என்விடியா அதன் பங்குகள் 3 டிரில்லியன் டாலர் மதிப்பை உயர்த்தியதை அடுத்து, ஆப்பிள் நிறுவனத்தினை முந்தி உலகின் இரண்டாவது மதிப்புமிக்க நிறுவனமாக மாறியுள்ளது.
- யுனெஸ்கோ தெற்காசியா அமைப்பானது, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்துடன் (MeitY) இணைந்து பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நெறிமுறை மிக்க செயற்கை நுண்ணறிவு பற்றிய தேசிய பங்குதாரர் பயிலரங்கத்தினைப் புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 600 (427 போட்டிகள்) சிக்சர்களை அடித்த முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை இந்தியாவின் ரோஹித் சர்மா பெற்றுள்ளார்.
  - அவரைத் தொடர்ந்து கிறிஸ் கெய்ல் (483 போட்டிகளில் 553 சிக்சர்கள்) மற்றும் ஷாஹித் அப்ரிடி (524 போட்டிகளில் 476 சிக்சர்கள்) ஆகியோர் உள்ளனர்.
- சிக்கோடியைச் சேர்ந்த பிரியங்கா ஜார்கிஹோலி என்பவர் சுதந்திரம் பெற்றது முதல் கர்நாடகாவில் பிரத்தியேகமாக இட ஒதுக்கீடு செய்யப்படாத தொகுதியில் இருந்து பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவியினைப் பெற்ற இளம் பழங்குடியினப் பெண் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- உலகளவில் 330க்கும் மேற்பட்ட விமான நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் (IATA) வருடாந்திரக் கூட்டத்தினை அடுத்த ஆண்டு இந்தியா நடத்தவுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அடுத்த படியாக நெதர்லாந்து என்பது இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி நாடாக உருவெடுத்துள்ளது.
- அசாமில் கௌஹாத்திக்கு அருகில் புதியதொரு இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தினை (IIM) அமைக்க இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
- மும்பை காவல்துறையின் தீவிரவாதத் தடுப்புப் பிரிவான ஃபோர்ஸ் ஒன் பிரிவின் தலைவரான கிருஷ்ண பிரகாஷுக்கு மதிப்பு மிக்க வருடாந்திர இந்தி சாகித்ய பாரதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

- ஸ்லோவேனியா நாட்டின் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்ததையடுத்து, சுயாட்சி கொண்ட பாலஸ்தீனிய அரசினை அங்கீகரித்த 9வது ஐரோப்பிய ஒன்றிய நாடு ஆக மாறியுள்ளது.
- தென் கொரிய நாடானது தனது விண்வெளித் துறையில் கொள்கை மற்றும் தொழில் துறை வளர்ச்சியை வழிநடத்துவதற்காக, கொரிய வான்வெளி நிர்வாக (KASA) அமைப்பினை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு (UNCTAD) அமைப்பு மற்றும் பார்படாஸ் அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய விநியோகச் சங்கிலி மன்றம் ஆனது சமீபத்தில் நிறைவடைந்தது.
- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, கடந்த 20 ஆண்டுகளில் மீண்டும் மக்களவை தேர்தலில் வெற்றி பெற்ற முதல் சபாநாயகர் ஆவார்.
  - இதற்கு முன்பு மக்களவையின் சபாநாயகராக இருந்து மீண்டும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 1996 முதல் 1998 ஆம் ஆண்டு வரை 11வது மக்களவையின் சபாநாயகராக இருந்த P.A. சங்மா ஆவார்.
- ரஷ்ய மொழி தினம் ஆனது, புகழ்பெற்ற ரஷ்ய கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கின் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 06 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- கேமரூன் நாட்டின் முன்னாள் பிரதமர் ஃபிலிமோன் யாங், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 79வது UNGA அமர்வின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ஹங்கேரி நாடானது, 'தேசிய ஒற்றுமையின் பாலம்' என்றழைக்கப்படும் 700 மீட்டர் பாதசாரிகள் பாலத்தினை புடாபெஸ்டில் பாயும் டான்யூப் ஆற்றின் குறுக்கே ஒரு நினைவுச்சின்னமாக நிறுவியுள்ளது.
- உயிரி மருந்துப் பொருட்கள் உற்பத்தி துறையில் ஒரு நெகிழ்திறன் மிக்க விநியோகச் சங்கிலியை உருவாக்குவதற்கான சில கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்காக ஒரு கூட்டணியைத் தொடங்குவதற்காக தென் கொரியா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை ஒன்றிணைந்துள்ளன.
- சமீபத்தில் இந்தியப் பங்குச் சந்தை மற்றும் பரிமாற்ற வாரியத்திற்கு (SEBI) ஆசிய-பசிபிக் பகுதிக்கான "சிறந்த வணிக ஒழுங்குமுறை நடத்தைக்கான" விருது வழங்கப் பட்டுள்ளது.
- ETV நெட்வொர்க் மற்றும் ராமோஜி பிலிம் சிட்டியின் தலைவரான ராமோஜி ராவ் சமீபத்தில் காலமானார்.
  - இவர் ஒரு தேசிய விருதினையும், இரண்டு பிலிம்பேர் விருதுகளையும் வென்று உள்ளார்.
- திமுக பொருளாளர் T.R.பாலு, 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் வெற்றி பெற்றதன் மூலம், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ப. சிதம்பரத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் இருந்து ஏழாவது முறையாக பாராளுமன்றத்தின் கீழவையில் இடம் பெற்ற இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
  - மேலும் இந்த தேர்தலில் வெற்றியினைப் பதிவு செய்த மிகவும் வயதான வேட்பாளர் இவரே ஆவார்.

- ❖ தூத்துக்குடியில் தொழிற்சாலைகள் அமைக்கும் நிறுவனங்களுக்கு உதவும் முயற்சியில், தூத்துக்குடியில் ஒரு நாளைக்கு 60 மெகா லிட்டர் (MLD) திறன் கொண்ட உப்புநீர் சுத்திகரிப்பு ஆலையினை அமைப்பதற்காக தமிழக அரசு விரைவில் ஒப்பந்த அறிக்கையினை வெளியிடவுள்ளது.
- ❖ விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு மாதிரி தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.
- ❖ தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் (NCLT) ஆனது ஏர் இந்தியா நிறுவனம் மற்றும் விஸ்தாரா ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது என்ற நிலையில் இதன் மூலம் அது உலகின் மிகப்பெரிய விமான நிறுவனங்களில் ஒன்றாக மாறும்.
- ❖ பில் கேட்ஸ் தனது ஆரம்ப கால வாழ்க்கை பற்றிய நினைவுக் குறிப்பினை உள்ளடக்கிய 'Source Code' எனப்படும் தனது புத்தகம் 2025 ஆம் ஆண்டில் வெளியாகும் என்று அறிவித்துள்ளார்.
- ❖ மக்களுக்கு விரிவான வானியல் சுற்றுலா அனுபவத்தை வழங்குவதற்கான நக்சத்திர சபா எனப்படும் புதிய முன்னெடுப்பினை அறிமுகப்படுத்துவதற்கு, உத்தரகாண்ட் சுற்றுலா மேம்பாட்டு வாரியம் ஆனது ஸ்டார்ஸ்கேப்ஸுடன் கைகோர்த்துள்ளது.
- ❖ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) கீழ் உள்ள தன்னாட்சி சமூகமான இந்தியாவின் மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்கள் (STPI), அதன் 33வது ஸ்தாபன தினத்தினை 2024 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் தேதியன்று கொண்டாடியது.
- ❖ ஆவணப் பதிவகங்கள் மற்றும் காப்பகங்களின் முக்கியத்துவம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என்று ஜூன் 09 ஆம் தேதியன்று சர்வதேச ஆவணக் காப்பக தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- ❖ தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக பாராளுமன்ற உறுப்பினரான கனிமொழி, அந்தக் கட்சியின் பாராளுமன்றக் கட்சித் தலைவராக TR பாலுவிற்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ ஒடிசாவின் கியோன்ஜார் தொகுதியில் இருந்து நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட மோகன் மஜ்ஹி, ஒடிசாவின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டு உள்ளார்.
    - ○ இந்த மாநிலத்தின் 15வது முதல்வரும் 3வது பழங்குடி முதல்வருமான இவர் இந்த மாநிலத்திற்கான பாஜக கட்சியின் முதலாவது முதல்வர் ஆவார்.
- ❖ சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா (SKM) அமைப்பின் தலைவர் பிரேம் சிங் தமாங் ஜூன் 10 ஆம் தேதியன்று தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக பதவியேற்றார்.
- ❖ டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் இந்தியா (TII) நிறுவனத்தின் நிர்வாகத் துணைத் தலைவர் வெள்ளையன் சுப்பையா 2024 ஆம் ஆண்டின் சிறந்த EY உலகத் தொழில்முனைவோராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ இந்திய இராணுவம் வித்யுத் இரக்சக் என்ற புதிய இணைய வசதியில் இயங்கும் சாதன பொருட்களின் இணைப்பு உலகம் (IoT-இணைய உலகம்) மூலம் செயல்படும் ஒருங்கிணைந்த மின்னியற்றிக் கண்காணிப்பு, பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.

- ❖ சுஹெல்வா வனவிலங்கு சரணாலயத்தில் புலிகள் காணப்படுவதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து, விரைவில் உத்தரப் பிரதேசத்தில் இது புதிய புலிகள் வளங்காப்பகமாக நிறுவப்படவுள்ளது.
  - ○ உத்தரப் பிரதேசத்தின் 5வது புலிகள் சரணாலயமான இது இந்தியாவின் 56வது புலிகள் சரணாலயமாகும்.
- ❖ விண்வெளியில் நிலவில் இருந்து 'புவி உதிக்கும் காட்சியினை' புகைப்படம் எடுத்த அப்பல்லோ 8 விண்கலத்தின் விண்வெளி வீரர் வில்லியம் ஆண்டர்ஸ் விமான விபத்தில் உயிரிழந்தார்.
- ❖ 2023 ஆம் ஆண்டு கொள்கலன் துறைமுகம் செயல்திறன் குறியீட்டில் (CPPI 2023), அரசுக்குச் சொந்தமான விசாகப்பட்டினம் துறைமுகம் முதல் 20 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளது.
  - ○ இது உலக வங்கி மற்றும் S&P உலகச் சந்தைத் தகவல் வழங்கீட்டு அமைப்பு ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டது.
- ❖ அகில இந்திய டென்னிஸ் சங்கம் (AITA) ஆனது பயிற்சியாளர் நர் சிங்கிற்கு வாழ்நாள் சாதனைக்கான திலீப் போஸ் விருதினை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
  - ○ பெண் பயிற்சியாளர்களுக்கான AITA சங்கத்தின் புதிய வாழ்நாள் சாதனை விருது 69 வயதான ரோகினி லோகண்டேவிற்கு வழங்கப்படவுள்ளது.
- ❖ கடலூர் மாவட்டம் வடலூரில் உள்ள சத்திய ஞான சபையில் 3.18 ஏக்கர் நிலப்பரப்பில் 99.99 கோடி செலவில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் ஒரு திட்டத்தை தமிழக அரசு முன்மொழிந்துள்ளது.
- ❖ துணைக் கடற்படை அதிகாரி அனாமிகா P. இராஜீவ் இந்தியக் கடற்படையின் முதல் பெண் ஹெலிகாப்டர் பைலட் ஆனார்.
- ❖ இந்தியாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (இந்தியா எக்ஸிம் வங்கி) சமீபத்தில் நைரோபி நாட்டில் தனது கிழக்கு ஆப்பிரிக்கச் சார்நிலை அலுவலகத்தினைத் திறந்து வைத்துள்ளது.
- ❖ சுவிட்சர்லாந்த் நாட்டின் ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) சர்வதேச தொழிலாளர் மாநாட்டின் (ILC) 112வது அமர்வில் திருமதி சுமிதா தவ்ரா தலைமையிலான இந்திய முத்தரப்புக் குழு பங்கேற்றது.
- ❖ உத்தரகாண்டின் டேராடூனில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை-இந்திய பெட்ரோலியக் கல்வி நிறுவனத்தில் (CSIR-IIP) 3வது இந்தியப் பகுப்பாய்வு மாநாடு (IAC) நடைபெற்றது.
- ❖ OECD/G20 அமைப்பின் வரி விதிப்பு மதிப்பீட்டுத் தளம் மற்றும் பங்குப் பகிர்வு (BEPS) மீதான உள்ளார்ந்தக் கட்டமைப்பு குறித்த 16வது கூட்டம் பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் நடந்தது.
- ❖ செழுமைக்கான இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பு (IPEF) தூய்மையானப் பொருளாதார முதலீட்டாளர் மன்றம் ஆனது சிங்கப்பூரில் நடைபெற்றது.
- ❖ கண் தானத்தின் மாற்றமிக்க ஆற்றலைப் பற்றி பொதுமக்களுக்கு உணர்த்துவதற்காக ஜூன் 10 ஆம் தேதியன்று உலகக் கண் தான தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ அனைத்து மக்களும், குறிப்பாக குழந்தைகள், விளையாட்டின் பயன்களைப் பெற்று, அவர்களின் முழுத் திறனுடன் செழித்து வளர, விளையாடும் பழக்கத்தினைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும், முன்னுரிமை அளிக்கவும், 2024 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் தேதியன்று முதல் முறையாக சர்வதேச விளையாட்டு தினம் அனுசரிக்கப்பட்டது.

- பசுந்தாள் உரம் பூசப்பட்ட விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் மண் வளத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசானது, தமிழக முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- எண்ணிம வழி பணம் செலுத்துதல் தகவல் வழங்கீடு தளத்திற்கான எண்ணிமப் பொது உள்கட்டமைப்பினை நிறுவுவதற்கான பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக A.P. ஹோடாவின் தலைமையின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியானது ஒரு குழுவை அமைத்துள்ளது.
- பிரதமர் கிசான் நிதி திட்டத்தின் 17வது தவணைத் தொகையை வழங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.
- தெலுங்கு தேசம் கட்சியின் (TDP) தலைவர் N. சந்திரபாபு நாயுடு ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக நான்காவது முறையாக பதவியேற்றுள்ளார்.
- ஜெர்மனியில் நடைபெற்ற ஹெயில்ப்ரோன் நெக்கர்கப் 2024 ஆம் ஆண்டு ATP சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்திய டென்னிஸ் வீரர் சுமித் நாக்பால் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்றுள்ளார்.
- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் (FIH) நிர்வாகக் குழுவானது, 2025 ஆம் ஆண்டிற்கான முதலாவது FIH ஹாக்கி ஆடவர் இளையோர் உலகக் கோப்பைப் போட்டியை நடத்துவதற்கான நாடாக இந்தியாவை நியமித்துள்ளது.
- சீனாவின் ஒரு முன்மொழிதலின் பேரில், நாகரிகங்களுக்கிடையேயான ஒரு பேச்சு வார்த்தைக்கான சர்வதேச தினமாக ஜூன் 10 ஆம் தேதியினை ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ளது.
  - 2024 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதியானது, நாகரிகங்களுக்கிடையில் மேற் கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைக்கான முதல் சர்வதேச தினத்தினைக் குறிக்கிறது.
- இந்தியாவின் பூஜா தோமர், அமெரிக்காவில் நடைபெற்ற அல்டிமேட் ஃபைட்டிங் சாம்பியன்ஷிப் (UFC) போட்டியில் வெற்றி பெற்ற முதல் இந்தியக் கலப்பு தற்காப்புக் கலை வீராங்கனை என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மத்திய அரசானது, இராணுவத்தின் துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் உபேந்திர திவேதியை அடுத்த இராணுவத் தளபதியாக நியமித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினை 'சர்வதேச குவாண்டம் (துளிம) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக' நியமித்துள்ளது.
- 8வது ஜப்பான் இந்தியா கடல்சார் பயிற்சி - 24 (JIMEX - 24) ஆனது ஜப்பானில் உள்ள யோகோசுகா நகரில் தொடங்கியது.
- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினரான விஜய பாரதி சயானி, ஜூன் 02 ஆம் தேதி முதல் அந்த அமைப்பின் தற்காலிகத் தலைவராகப் பொறுப்பேற்று உள்ளார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான காந்தர் பிராண்ட்ஸ் அமைப்பின் மிகவும் மதிப்பு மிக்க உலகளாவிய நிறுவனங்கள் என்ற அறிக்கையின் படி, இன்ஃபோசிஸ் நிறுவனமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உலகின் மிக மதிப்பு மிக்க 100 நிறுவனங்களில் ஒன்றாக (74வது) இடம் பிடித்துள்ளது.
  - 100 முன்னணி நிறுவனங்கள் என்ற இந்தப் பட்டியலில் இந்தியாவிலிருந்து TCS, இன்போசிஸ் மற்றும் ஏர்டெல் ஆகிய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ள நிலையில் இதில் ஆப்பிள், கூகுள், மைக்ரோசாப்ட் மற்றும் அமேசான் ஆகியன முன்னணியில் உள்ளன.

- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கங்களின் கூட்டமைப்பானது (FICCI) ஜோதி விஜ் என்பவரை அதன் இயக்குநராக நியமித்துள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் செஹோர் மாவட்டத்தில் உள்ள அஷ்டா எனுமிடத்தில் ஈத்தேன் மூலக்கூறினை நெகிழிப் பொருட்களாக மாற்றும் 1500 KTA திறன் கொண்ட ஒரு ஆலையினை அமைக்க உள்ளதாக GAIL அறிவித்துள்ளது.
- ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மகளிருக்கான 200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் போட்டியின் இறுதிப் போட்டியில் 1 நிமிடம், 52.23 வினாடிகளில் நிறைவு செய்து ஆஸ்திரேலியாவின் ஆரியர்னே டிட்மஸ் உலக சாதனை படைத்துள்ளார்.
- மலாவி நாட்டின் துணை அதிபர் சௌலோஸ் சிலிமாவின் விமானம் மலாவி நாட்டில் உள்ள சிக்கங்காவா மலைத் தொடரில் விழுந்து நொறுங்கியதில் அவர் உட்பட பத்து பேர் உயிரிழந்தனர்.
- மோதிலால் ஓஸ்வால் பரஸ்பர நிதியம் ஆனது, இந்தியாவில் பாதுகாப்பு துறை சார்ந்த, நிஃப்டி இந்தியா பாதுகாப்பு குறியீட்டு நிதி என்ற பெயரிலான சந்தைக் குறியீட்டினை ஒத்த முதல் குறியீட்டினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அஜித் தோவலை தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக மீண்டும் நியமித்திட வேண்டி அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
  - மத்திய அரசானது P.K. மிஸ்ராவினை பிரதமரின் முதன்மைச் செயலாளராக மீண்டும் நியமித்துள்ளது.
- இந்தியப் பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் "I Have the Streets: A Kutti Cricket Story" என்ற தலைப்பிலான தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.
- 92 வயதான இந்திய செவ்வியல் இசைக் கலைஞர், சரோத் கலைஞர் பண்டிட் இராஜீவ் தாராநாத் காலமானார்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் ஆனது, புதியக் குற்றவியல் சட்டங்கள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதற்காக "குற்றவியல் சட்டங்களின் NCRB சங்கலன்" எனப்படும் கைபேசிச் செயலியினை ஜூலை 01 ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்த உள்ளது.
- ஆப்பிள் நிறுவனமானது, தனது வருடாந்திர உலகளாவிய மென்பொருள் வடிவமைப்பாளர்கள் மாநாட்டில் ஆப்பிள் இண்டெலிஜென்ஸ் எனப்படும் செயற்கை நுண்ணறிவு தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆப்பிள் நிறுவனமானது 3.3 டிரில்லியன் டாலர்களுடன் உலகின் மிகவும் மதிப்பு மிக்க நிறுவனமாக மீண்டும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தினை விஞ்சியுள்ளது.
- சீனாவின் வுஹான் நகரம் ஆனது, 500 ஓட்டுநர் இல்லாத கார்களின் சோதனையை மேற் கொள்வதன் மூலம் உலகின் மிகப்பெரிய தானியங்கு மகிழுந்துகளின் சோதனையை தொடங்கியுள்ளது.
- 5.2 டிரில்லியன் டாலர் மதிப்புடன் ஹாங்காங்கை விஞ்சி, உலகின் நான்காவது பெரிய பங்குச் சந்தையாக இந்தியா மீண்டும் தனது நிலையைப் பெற்றுள்ளது.
- இந்தியா-IORA பயணியர் கப்பல் சுற்றுலா மாநாடு ஆனது இந்தியப் பெருங்கடல் விளிம்போர நாடுகள் சங்கத்தின் (IORA) உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் புது டெல்லியில் நடைபெற்றது.

- நாக்பூரைச் சேர்ந்த 18 வயது திவ்யா தேஷ்முக், குஜாரத்தின் காந்தி நகரில் நடந்த 20 வயதுக்குட்பட்ட மகளிருக்கான FIDE உலக சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
    - இவர் கோனேரு ஹம்பி, ஹரிகா துரோணவல்லி மற்றும் சௌமியா சுவாமிநாதன் ஆகியோருக்கு அடுத்தபடியாக FIDE U20 மகளிருக்கான உலக சதுரங்க சாம்பியன் ஷிப் போட்டியில் வென்ற 4வது இந்தியர் ஆவார்.
- இந்தியாவிலேயே முதன்முறையாக, கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் (KSRTC) ஆனது, பணியின் போது உயிரிழந்த நான்கு ஊழியர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு விபத்துக் காப்பீட்டு நிவாரண இழப்பீடாக தலா 1 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.
- ஆக்கப்பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு (Gen AI) பற்றிய சர்வதேச மாநாடு ஆனது கொச்சியில் நடைபெறவுள்ளது.
- இந்திரா காந்தி தேசிய கலை மையம் (IGNCA) மற்றும் சன்சத் TV ஆகியவை இந்தியக் கலை மற்றும் கலாச்சாரத்தை அணுகக் கூடியதாக மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- அசாம் மாநில அரசாங்கமானது இளம் வயது சிறுமிகள் பள்ளிக்குச் செல்வதனை ஊக்குவிப்பதற்கும், அவர்கள் இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்வதைத் தடுப்பதற்கும் உதவுகிற வகையில் முக்கிய மந்திரி நிஜுத் மொய்னா (MMNM) திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு ஆனது, நடைப்பாணி மற்றும் எலும்புக் கூடு போன்ற மாறாத உடலியல் அளவுருக்களுடன் முக அடையாளம் காணல் நுட்பத்தினை ஒருங்கிணைக்கும் "திவ்ய த்ரிஷ்டி" என்ற செயற்கை நுண்ணறிவுக் கருவியை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- ஸ்ருதி வோரா, ஸ்லோவேனியாவின் லிபிகா நகரில் நடைபெற்ற FEI டிரஸ்ஸேஜ் (குதிரையேற்றம்) உலகக் கோப்பை போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், மூன்று நட்சத்திர கிராண்ட் பிரிக்ஸ் குதிரையேற்றப் போட்டியில் வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.
- தென்னாப்பிரிக்கப் பாராளுமன்றம் ஆனது சிரில் இராமபோசாவை தென்னாப்பிரிக்க அதிபராக மீண்டும் தேர்வு செய்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது (WHO) ஐதராபாத்தில் உள்ள தேசிய இந்திய மருத்துவ பாரம்பரியக் கல்வி நிறுவனத்தினை (NIIMH) பாரம்பரிய மருத்துவ ஆராய்ச்சிக்கான 3வது இந்திய WHO கூட்டுறவு மையமாக (CC) நியமித்துள்ளது.
    - முன்னதாக இது ஆயுர்வேதக் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிக்கான கல்வி நிறுவனம், ஜாம்நகர் மற்றும் மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கல்வி நிறுவனம் (MDNIY), புது டெல்லி ஆகியவற்றை நியமித்தது.
- ஆரக்கிள் நிறுவனமானது மாநில இளைஞர்களுக்கு பல்வேறு தகவல் தொழில்நுட்பத் திறன்களை வழங்கி வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் கைகோர்த்துள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, பல இடங்களில் நடைபெற்ற அரசின் சேவைகளில் அதிக எண்ணிக்கையிலான மக்களை ஈடுபடுத்தியதற்காக என்று லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

- இந்தியா தனது சொந்த ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தினைக் கொண்ட ஆறாவது நாடாக மாற உள்ளது.
- மஹாராஷ்டிராவைச் சேர்ந்த விவசாயியும், AGRO RANGERS நிறுவனத்தின் நிறுவனருமான சித்தேஷ் சாகோர், பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடச் செய்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை (UNCCD) அமைப்பினால் நில வளங்காப்பு நாயகர் என்று பெயரிடப்பட்டுள்ளார்.
- ஐக்கியப் பேரரசின் மத்திய வங்கியானது, இந்திய ரிசர்வ் வங்கிக்கு '2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த இடர் மேலாண்மை நிறுவனம்' என்ற விருதினை வழங்கியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் அல்பனா கில்லாவாலா, "A Fly on the RBI Wall: An Insider's View of the Central Bank" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- தந்தையர் தினம் ஆனது ஆண்டுதோறும் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
  - இந்த ஆண்டு இத்தினம் ஜூன் 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- நடிகை ஆலியா பட், "Ed Finds a Home" என்ற தனது முதல் குழந்தைகள் புத்தகத்தின் முதல் தோற்றத்தினை வெளியிட்டார்.
- புகழ்பெற்ற வனவிலங்குத் திரைப்படத் தயாரிப்பாளர் சுப்பையா நல்லமுத்துவிற்கு மதிப்புமிக்க 18வது V. சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டு உள்ளது.
- இந்தியா தரங் சக்தி-2024 எனப்படும் தனது முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியினை 10 நாடுகள் மற்றும் சில பார்வையாளர் நாடுகளின் பங்கேற்புடன் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடத்தவுள்ளது.
- சர்வதேசச் சுற்றுலா தினம் ஆனது, ஜூன் 18 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- மக்கள் தங்கள் வாழ்க்கையில் சற்று இடைவெளி எடுத்து தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை ரசித்து, இயற்கையோடு இணைந்திருக்கவும் மக்களை வெகுவாக நன்கு ஊக்குவிப்பதற்காகவும் ஜூன் 19 ஆம் தேதியன்று உலக பொழுதுபோக்கு நடை தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அரவிந்தன் செல்வராஜ் இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பின் (ASSOCHAM) தமிழ்நாடு மாநில மேம்பாட்டுச் சபையின் 2024-25 ஆம் ஆண்டிற்கானத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 18வது மக்களவையின் தற்காலிக சபாநாயகராக ஒடிசாவின கட்டாக்கில் இருந்து 7வது முறையாக உறுப்பினராகியுள்ள பர்த்ருஹரி மஹ்தாப் என்பவரை இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.
- பீகார் மாநிலம் ராஜ்கிர் அருகே அமைக்கப்பட்டுள்ள நளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தினைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- டெல்லி சர்வதேச விமான நிலையம் ஆனது, பயணிகள் தங்கள் பொருட்களை வழங்கி, குறியீடுகளைப் பெற்று சோதனைக்கு உட்படுத்தும் செயல்முறையை மிகவும் திறன் மிக்கதாகவும் விரைவாகவும் முடிக்க உதவுகின்ற ஒரு சுய சேவைப் பொறிமுறையை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்திய இராணுவம் ஆனது, படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்படும் கடுமையான தீக்காயங்கள் மற்றும் தோல் தொடர்பான பிற நிலைமைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், அதன் முதல் வகையிலான தோல் வங்கி வசதியைத் தொடங்கியுள்ளது.
- திரைப்படத் தயாரிப்பாளரான வினோத் கனத்ரா, திரைப்படங்களுக்கான அவரது பங்களிப்பிற்காக வேண்டி தென்னாப்பிரிக்காவின் மதிப்புமிக்க 'நெல்சன் மண்டேலா வாழ்நாள் சாதனையாளர் விருதினை' பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஆளில்லா ஆயுத அமைப்புகள் கொண்ட படைகள் எனப்படும் ஆளில்லா விமான அமைப்புகளுக்காக இராணுவத்தில் பிரத்தியேக புதிய தனி கிளையை உருவாக்கிய முதல் நாடு உக்ரைன் ஆகும்.
- சில்லுகள் தயாரிப்பு நிறுவனமான என்விடியா நிறுவனத்தின் பங்கு மதிப்பானது எப்போதும் இல்லாத அளவிற்கு (3.34 டிரில்லியன் டாலர்) உயர்ந்ததையடுத்து உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக மாறியுள்ளது.
- கிரிக்கெட் வீரர் விராட் கோலி, சுமார் 227.9 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன், இந்தியாவின் மிகவும் மதிப்புமிக்க பிரபலமாக தனது நிலையை மீண்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.
- தாய்லாந்தின் மேலவை ஆனது தன்பாலின திருமணத்தினை அங்கீகரிக்கும் திருமண சமத்துவ மசோதாவை நிறைவேற்றியுள்ளதையடுத்து, தென்கிழக்கு ஆசியாவில் தன் பாலின திருமணத்தினை அனுமதிக்கும் முதல் நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது.
- கள்ளக்குறிச்சியில், கள்ளச்சாராயம் குடித்து அதிக எண்ணிக்கையில் நபர்கள் உயிரிழந்த சம்பவம் குறித்து ஒரு முழுமையான விசாரணை நடத்த உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி P. கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் ஆணையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.
- கேரள உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி S. மணி குமார், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் (SHRC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியப் பொது விமானப் போக்குவரத்து இயக்குனரகம் (DGCA) ஆனது, சமீபத்தில் இந்தியப் பொது விமானப் போக்குவரத்தில் பாலினச் சமத்துவத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கிய ஆலோசனை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.
    - இது 2023 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 25% பெண்கள் வெவ்வேறு விமானப் போக்குவரத்து பணிகளில் பணிபுரிகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21 ஆம் தேதியன்று உலக இசை தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21 ஆம் தேதியன்று, மனிதநேயத்தை ஒரு தத்துவ வாழ்க்கை நிலைப்பாடாகவும், உலகில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறையாகவும் கருத்தில் கொள்வதற்கான விழிப்புணர்வை பரப்புவதற்காக உலக மனிதநேய தினம், கொண்டாடப்படுகிறது.
- சங்கரா கண் அறக்கட்டளை நிறுவனமானது, அதிநவீன ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் பயிற்சி வழங்கீடு மூலம் கண் நலச் சிகிச்சை சேவைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையிலான நாட்டின் முதல் வகையிலான புத்தாக்க ஆய்வகத்தினைத் தொடங்கியுள்ளது.

- கல்வியாளர், நடனக் கலைஞர், இசைக்கலைஞர், நடன இயக்குனர் மற்றும் மிகப் பெரும் வழிகாட்டியான CVC அல்லது சந்துரு அண்ணா என்று குறிப்பிடப்படுகின்ற C.V. சந்திரசேகர் சமீபத்தில் காலமானார்.
- 2024 ஆம் ஆண்டு தேசிய யோகா ஒலிம்பியாட் போட்டியானது, கர்நாடகாவின் மைசூரு நகரில் தொடங்கப்பட்டது.
- ஐக்கியப் பேரரசு (UK) ஆனது, சீன நாட்டினைப் பின்னுக்கு தள்ளி இந்தியாவின் நான்காவது பெரிய ஏற்றுமதிச் சந்தையாக மாறியுள்ளது.
- இந்திய-அமெரிக்கரான சுஹாஸ் சுப்ரமணியம் விர்ஜீனியா மாகாணத்தின் காங்கிரஸின் (பொதுச் சபை) தொகுதிக்கான ஜனநாயகக் கட்சியின் முதன்மைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
  - அவர் 2019 அம் ஆண்டில் விர்ஜீனியா மாகாணத்தின் பொதுச் சபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் இந்திய-அமெரிக்கன், தெற்காசிய மற்றும் இந்து நபர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- தமிழக அரசானது, பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கு ஊக்குவிப்பதற்காகவும் 'மகளிரால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனச் சேவையினை' சென்னை நகரில் பிங்க் ஆட்டோக்கள் (Pink Autos) என்ற பெயரில் அறிமுகப் படுத்தியுள்ளது.
  - 200 மகளிர் மூன்று சக்கர (ஆட்டோ) வாகன ஓட்டுநர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படவுள்ளது.
- இந்திய தொழில் துறைக் கூட்டமைப்பு (CII) ஆனது, அதன் மத்திய நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டுப் பரிந்துரைகளில் 'ஏஞ்சல் வரிகள்-புத்தொழில் நிறுவனங்களின் மிகை மதிப்பு வரி' எனப்படும் வருமான வரிச் சட்டத்தின் 56(2)(viib) பிரிவினை அகற்ற பரிந்துரைத்துள்ளது.
- சர்வதேச தொழிலாளர் மாநாட்டின் (ILC) 112வது அமர்வு ஆனது ஜெனீவாவில் உள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) தலைமையகத்தில் நடைபெற்றது.
- OpenAI நிறுவனத்தின் மிகப்பெரியப் போட்டியாளரான Anthropic நிறுவனம் ஆனது, Claude 3.5 Sonnet எனப்படும் அதன் சமீபத்தியச் செயற்கை நுண்ணறிவு மாதிரியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- முன்மொழியப்பட்டுள்ள கோதாவரி-காவிரி நதி நீர் இணைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை நகரத்திற்கான குடிநீர் மற்றும் தொழில்துறை தேவைகளுக்காக சுமார் 10 ஆயிரம் மில்லியன் கன அடி (ஆயிரம் மில்லியன் கன அடி) நீர் ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.
- 1,000 மகளிர் மற்றும் திருநர்கள் சமூகத்தினைச் சேர்ந்த மூன்று சக்கர வாகன ஓட்டுநர்களுக்குப் புதிய தானியங்கி மூவுருளி உந்து (ஆட்டோ) வாகனம் வாங்குவதற்காக 1 லட்சம் ரூபாய் மானியம் வழங்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
  - இதனைப் பெற அவர்கள் தமிழ்நாடு ஓட்டுநர்கள் மற்றும் வாகன தொழில் பட்டறை தொழிலாளர்கள் நல வாரியத்தில் தங்களைப் பதிவு செய்திருக்க வேண்டும்.
- சோமாலியாவின் அனைத்து மகளிர் செய்திக் குழுவான பிலன், 2024 ஆம் ஆண்டிற்கான ஒன் வேர்ல்டு ஊடக செய்தியாளர் சுதந்திர விருதினை வென்றுள்ளதை அடுத்து, இந்த கௌரவ விருதினைப் பெறும் முதல் சோமாலிய ஊடகக் குழுவாக அது மாறியுள்ளது.

- ❖ உலகெங்கிலும் உள்ள கைம்பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்காகவும், சமுதாயத்தில் இந்தப் பிரிவினரின் நலனுக்காக இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஜூன் 23 ஆம் தேதியன்று சர்வதேச கைம்பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ அரசு முறை நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பைச் சிறப்பிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 24 ஆம் தேதியன்று சர்வதேச அரசுமுறை நடவடிக்கைகளில் பெண்களின் பங்கு தினம் கொண்டாடப் படுகிறது.
- ❖ விருதுநகரில் உள்ள காரியாபட்டி, மல்லாங்கிணறு காவல் நிலையங்கள் சமீபத்தில் ISO (ISO 9001 : 2015) தரச்சான்றிதழைப் பெற்றுள்ளன.
- ❖ தமிழ்நாடு அரசானது, ஆறாம் வகுப்பிலிருந்து செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் அடிப்படை கணினி அறிவியலை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள சிறுமிகளுக்கு மனம், உடல் மற்றும் சமூகப் பிரச்சனைகளைச் சமாளிக்க உதவும் வகையில் மகளிர் ஆசிரியர்களைக் கொண்ட குழுக்களை அமைக்க வழிவகுக்கும் 'அகல் விளக்கு' என்ற திட்டத்தினைத் தமிழ்நாடு அரசானது தொடங்க உள்ளது.
- ❖ முதலமைச்சரின் கிராமப்புறச் சாலை மேம்பாட்டுத் திட்டங்களின் மீதான இரண்டாம் கட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் மொத்தம் 10,000 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப் பட உள்ளன.
  - ○ 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 8,120 கிலோ மீட்டர் நீள சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.
- ❖ இஸ்ரோ நிறுவனமானது, கர்நாடகாவின் சித்ரதுர்காவில் உள்ள வானியல் சோதனை தளத்தில் (ATR) புஷ்பக் எனப்படும் மூன்றாவது மறுபயன்பாட்டு ஏவுகணையின் (RLV) தரையிறங்கும் பரிசோதனையை (LEX) நிறைவு செய்துள்ளது.
- ❖ கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து அதிக எண்ணிக்கையிலான நபர்கள் உயிரிழந்த சோகம் குறித்து விசாரிப்பதற்காக தேசிய மகளிர் ஆணையம் ஆனது, தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு சுந்தர் தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவினை அமைத்துள்ளது.
- ❖ தமிழ்நாடு மாநில வனத் துறையானது தமிழ்நாட்டில் தற்போதுள்ள 40 மலையேற்ற வழிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளில் மலையேற்றங்களை மேற் கொள்ளச் செய்வதற்கான முன்பதிவு செய்வதற்காக ஒரு இணையதளத்தை விரைவில் தொடங்க உள்ளது.
- ❖ உதகமண்டலத்தில் சராசரி கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,240 மீட்டர் உயரத்தில் தென்னிந்தியாவின் ஒரே உயர்மட்ட விளையாட்டுப் பயிற்சி மையம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் தேதியானது, 'தமிழ் மொழி தியாகிகள் நாள்' (தமிழ் மொழி தியாகிகள் தினம்) ஆக அனுசரிக்கப்பட உள்ளது.
- ❖ முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி அவர்களின் பிறந்த நாளான ஜூன் 03 ஆம் தேதியானது 'செம்மொழி நாள் விழா' ஆக கொண்டாடப்பட உள்ளது.
- ❖ கேரள மாநிலத்தின் பெயரை அதிகாரப்பூர்வமாக 'கேரளம்' என மாற்றுவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி கேரள சட்டசபை ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

- லெப்டினன்ட் ஜெனரல் N.S. ராஜா சுப்ரமணி, இராணுவத்தின் அடுத்த துணைத் தளபதியாக பதவியேற்க உள்ளார்.
- குளிர்பதனம், வளிப்பதனம் மற்றும் வெப்ப விசையியக்கி தொழில் துறைகள் பற்றிய பொது மக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 26 ஆம் தேதியன்று உலக குளிர்பதனத் தினம் கொண்டாடப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன், சாதி வாரியான மக்கள்தொகைக் கணக்கெடுப்பினையும் நடத்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- பாஜகவின் தேசியத் தலைவரும், மத்திய அமைச்சருமான J.P. நட்டா, மாநிலங்களவையின் அவைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- செயற்கை நுண்ணறிவிற்காக பிரத்தியேகமாக இயங்கும் இந்தியாவின் முன்னணி நிறுவனமான உலக செயற்கை நுண்ணறிவுப் பல்கலைக்கழக (UAIU) நிர்வாகமானது சர்வதேச உத்தியியல் நிபுணரும் விருது பெற்ற பேராசிரியருமான சைமன் மேக் என்பவரை அதன் துணைவேந்தராக நியமித்துள்ளது.
  - இவர் இந்திய நிறுவனமொன்றின் ஸ்தாபக துணைவேந்தர் பதவியை வகிக்கும் முதல் இந்தியர் அல்லாதவர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- இந்தியக் கிரிக்கெட் வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா ஒருநாள் போட்டிகளில் தொடர்ச்சியாக சதம் அடித்த முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை பெற்று உள்ளார்.
- வெளியுறவுத் துறை அமைச்சகமானது, 1967 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதியன்று கடவுச் சீட்டுச் சட்டம் இயற்றப் பட்டதைக் குறிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதியன்று 12வது கடவுச் சீட்டு சேவை தினத்தினை அனுசரித்தது.
- தமிழ்நாட்டின் தொழில் நகரமான ஓசூரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது.
- திருச்சியில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதாக தமிழக முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.
- ICICI வங்கி லிமிடெட் நிறுவனமானது, 100 பில்லியன் டாலர் (8.4 லட்சம் கோடி ரூபாய்) சந்தை மூலதனத்தினை எட்டிய ஆறாவது இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- பராகுவே நாடானது, அதிகாரப்பூர்வமாக சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியின் (ISA) 100வது முழு உறுப்பினராக மாறியது.

# தமிழ்நாடு செய்திகள்


## புதுமைப் பெண் திட்டங்களின் தாக்கம்

- புதுமைப் பெண்கள் திட்டத்தினால் உயர்கல்வியில் மாணவிகளின் சேர்க்கை சதவீதம் 34% அதிகரித்துள்ளது.
- மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதாந்திர உதவித் தொகையாக 1,000 ரூபாய் வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தில் சுமார் 2.73 லட்சம் மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.




## மாநில அரசுப் பள்ளிகளுக்கு இணைய சேவை இணைப்பு

- மொத்தமுள்ள 37,553 அரசுப் பள்ளிகளில் 20,332 பள்ளிகளுக்கு இணைய சேவை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 17,221 பள்ளிகளுக்கு ஜூன் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் இணைய சேவை வழங்கப்படும்.
- மாநிலம் முழுவதும் உள்ள 6,223 அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், 5,913 இணைய சேவை இணைப்பினைப் பெற்றுள்ளன.
- 6,992 நடுநிலைப் பள்ளிகளில் 3,799 பள்ளிகளுக்கு இணைய வசதி வழங்கப்பட்டுள்ளது.
- தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை, மொத்தம் 24,338 பள்ளிகளில் சுமார் 10,620 பள்ளிகளுக்கு இணைய சேவை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.




## வணிக வரி வருவாய் அதிகரிப்பு

### A substantial rise

The tax collection in Tamil Nadu has increased by over 50% in the first quarter of fiscal 2023

| | Q1 2023 | Q1 2022 | % change |
|---|---|---|---|
| State Goods and Services Tax | 13692.84 | 9224.11 | 48.4 |
| Stamps and Registration Fees | 4457.95 | 2314.46 | 92.6 |
| Land Revenue | 58.46 | 38.07 | 53.5 |
| Taxes on Sales, Trade etc | 13119.24 | 9484.81 | 38.3 |
| State Excise Duties | 2594.55 | 1199.23 | 116.3 |
| **Total** | **33923.04** | **22260.68** | **52.3** |

(IN ₹ CRORE) SOURCE: COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA

- 2020-21 ஆம் ஆண்டில் 85,606.41 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு அரசின் வணிக வரி வருவாய் ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 47.19% அதிகரித்து 1,26,005.92 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- கடந்த மூன்று ஆண்டுகளில் 40,399.51 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டு உள்ளது.
- வணிக வரிகளின் கீழ் நிர்வகிக்கப்படும் பல்வேறு வரிகள் தொடர்பான வரி, அபராதம் அல்லது வட்டியின் நிலுவைத் தொகையை திரும்ப வழங்குவதற்காக சமாதான் திட்டம் 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 50,000 ரூபாய் வரையிலான வரி நிலுவைகள் தள்ளுபடி செய்யப் பட்டன.
- 50,000 ரூபாய்க்கும் அதிகமான வரி நிலுவைத் தொகையில் 247.89 கோடி ரூபாய் வசூலிக்கப் பட்டுள்ளது என்ற நிலையில் இது முந்தையத் திட்டங்களுடன் ஒப்பிடும் போது மிக அதிகமாகும்.
- இந்த முன்னெடுப்பின் மூலம் வருவாய் இழப்புகளின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக வணிக வரித் துறையானது தரவுத் தொகுப்புப் பகுப்பாய்விற்காக ஹைதராபாத் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்துள்ளது.
- கடந்த நான்கு மாதங்களில் 129.77 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 2024




- 32,595 மெகாவாட்டாக இருந்த தமிழகத்தின் மின் உற்பத்தித் திறன் ஆனது 36,671 மெகா வாட்டாக அதிகரித்துள்ளது.
- 17,785 கி.மீ புதிய உயர் மின்னழுத்தக் கம்பி இணைப்புகளும், 31,705 கி.மீ நீள குறை மின்னழுத்தக் கம்பி இணைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன.
- 2,739 MVA திறன் கொண்ட 54 புதிய துணை மின்நிலையங்களும், 33/11 KV திறன் கொண்ட 46 புதிய துணை மின் நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.
- மே 02 ஆம் தேதியன்று ஏற்பட்ட 20,830 மெகாவாட் என்ற இதுவரை இல்லாத உச்சகட்ட மின் தேவையானது எந்த சிரமமும் இல்லாமல் பூர்த்தி செய்யப்பட்டது.
- சூரிய மின்னாற்றல் உற்பத்தித் திறன் 8,496 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

## திருநர்களுக்கான இட ஒதுக்கீடு

- திருநர்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் தேதி அன்று வெளியிடப்பட்ட அரசாணையை (GO) சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து உள்ளது.
- இது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) பிரிவின் கீழ் கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் திருநர்களுக்கு வெளி இட ஒதுக்கீடு வழங்குகிறது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சான்றிதழ்களை வைத்திருப்பவர்கள் அந்தந்த சாதிப் பிரிவின் கீழ் பரிசீலிக்கப்படுவார்கள் என்று தெளிவு படுத்துகின்ற மற்றொரு அரசாணையினை 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று அரசாங்கம் கொண்டு வந்தது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சான்றிதழ்கள் இல்லாத திருநர்கள் மட்டுமே MBC பிரிவின் கீழ் உட்பட்டவர்களாக கருதப்படுவார்கள் என்று 2017 ஆம் ஆண்டு அரசாணை கூறியது.
- இந்த உத்தரவு ஆனது, வெளிப்படையாக நியாயமற்றது மற்றும் அரசியலமைப்பின் 14,15,16,19 மற்றும் 21வது சட்டப் பிரிவுகளை மீறுவதாக நீதிமன்றம் கருதியது.
- அனைத்து சாதிக் குழுக்களிலும் திருநர்களுக்கு உள் இடஒதுக்கீடு வழங்குமாறு மாநில அரசிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- அனைத்து சாதிக் குழுக்களிலும் உள்ள திருநர்களுக்கு 1% உள் இடஒதுக்கீடு அளித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கர்நாடகா அரசு அமல்படுத்தியது.




## மக்களவைத் தேர்தல் 2024 – தமிழ்நாடு

- மாநிலத்தில் மொத்தமுள்ள 6,18,90,348 வாக்காளர்களின் மொத்த வாக்குப்பதிவு 69.72% ஆகும்.
- 39 தொகுதிகளிலும் தருமபுரியில் அதிகபட்சமாக 81.48 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.
- மத்திய சென்னையில் குறைவாக 53.91 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- பெண் வாக்காளர்களின் வாக்குப் பதிவானது 69.85% ஆகவும், ஆண் வாக்காளர்களின் வாக்குப் பதிவு 69.58% ஆகவும் பதிவாகியுள்ளது.

- தமிழகத்தின் 39 தொகுதிகளிலும், புதுச்சேரியின் ஒரு தொகுதியிலும் தி.மு.க. கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அமோக வெற்றியினைப் பெற்றன.
- திருவள்ளூரில் காங்கிரஸ் வேட்பாளரும், முன்னாள் ஆட்சிப் பணி அதிகாரியுமான சசிகாந்த் செந்தில் அதிகபட்சமாக 5,72,155 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.
- விருதுநகர் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் மாணிக்கம் தாகூர் 4379 என்ற மிகவும் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

The vote share garnered by various players in Tamil Nadu in the last three elections held in the State

| Coalition | 2019 Lok Sabha | 2021 Assembly | 2024 Lok Sabha |
|---|---|---|---|
| DMK+ | 53.20% | 45.40% | 47% |
| AIADMK+ | 31.06% | 39.70% | 23% |
| BJP+ | Not applicable | Not applicable | 18.24% |
| NTK | 3.90% | 6.60% | 8.22% |

**Note:** In all the 3 elections, the DMK-led front comprised Congress, CPI, CPI(M), VCK, MDMK and IUML. In 2019, the AIADMK-led front comprised

## கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை

- 'பொது அதிகார அமைப்பு' என்ற சொல் 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 2(h) பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளதால், அந்த வரையறையின் கீழ், மாநிலத்தில் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் வராது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறி உள்ளது.
- முன்னதாக தமிழ்நாடு தகவல் ஆணையமானது (TNIC) பயிர் மற்றும் நகைக் கடன் விவரங்களை வெளியிட 2022 ஆம் ஆண்டு மே 04 ஆம் தேதியன்று உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 14.84 லட்சம் விவசாயிகளுக்கு 10,292 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**Public Authorities**
**Section 2h**

"public authority" means any authority or body or institution of self government established or constituted--

(a) by or under the Constitution;
(b) by any other law made by Parliament;
(c) by any other law made by State Legislature;
(d) by notification issued or order made by the appropriate Government,

and includes any--

(i) body owned, controlled or substantially financed;
(ii) non-Government organisation substantially financed, directly or indirectly by funds provided by the appropriate Government;

### 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் நோட்டா பதிவு

**Last resort**

The performance of NOTA in elections over the years

| Election | Votes in numbers | Vote share % |
|---|---|---|
| 2014 Lok Sabha | 5,68,809 | 1.4 |
| 2016 Assembly | 5,61,174 | 1.3 |
| 2019 Lok Sabha | 5,50,577 | 1.29 |
| 2021 Assembly | 3,45,591 | 0.75 |
| 2024 Lok Sabha | 4,67,068 | 1.07 |




- தமிழகத்தில் 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திய போது, ஏறக்குறைய 4.67 லட்சம் வாக்காளர்கள் மேற்கண்ட எவரும் இல்லை (நோட்டா) என்ற விருப்பத் தேர்வினைத் தேர்வு செய்துள்ளனர்.
- மாநிலத்திலேயே அதிகபட்சமாக ஸ்ரீபெரும்புதூரில் மொத்தம் 26,450 வாக்காளர்கள் நோட்டாவைத் தேர்வு செய்தனர் என்ற நிலையில் திண்டுக்கல் (22,120) மற்றும் திருவள்ளூர் (SC) (18,978) வாக்காளர்கள் நோட்டாவைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- நோட்டா வாக்குகள் மிகவும் குறைவாக கன்னியாகுமரி (3,756), இராமநாதபுரம் (6,295) மற்றும் கடலூரில் (7,292) பதிவாகியுள்ளது.
- நோட்டா 19 இடங்களில் 1 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றது.
- 2014 ஆம் ஆண்டு தேர்தலில், நோட்டா அறிமுகப்படுத்தப்பட்ட போது, தமிழகத்தில் சுமார் 5.7 லட்சம் வாக்காளர்கள் நோட்டா விருப்பத் தேர்வினைத் தேர்வு செய்தனர்.
- 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 3.45 லட்சம் வாக்காளர்கள் மட்டுமே நோட்டா விருப்பத் தேர்வினைத் தேர்ந்தெடுத்தனர்.
- 2021 ஆம் ஆண்டில் 0.75 சதவீதமாகப் பதிவான நோட்டா, 2024 ஆம் ஆண்டு தேர்தலில் 1.07% ஆக பதிவாகியுள்ளதால் நோட்டா பதிவில் சரிவுப் போக்கு பதிவாகியுள்ளது.

### 2021 ஆம் ஆண்டு முதல் உருவான புதிய புத்தொழில் நிறுவனங்கள்

- 2021 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து மொத்தம் 6,384 புத்தொழில் நிறுவனங்கள் உருவாகியுள்ளன.
- 2021 ஆம் ஆண்டு வரை, மாநிலம் முழுவதும் உருவாக்கப்பட்ட மொத்த புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032 ஆக இருந்தது.
- புதிய அரசாங்கம் ஆனது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் புத்தாக்கக் கொள்கையை வெளியிட்டது.

- இன்றைய நிலவரப்படி நம் மாநிலத்தில் உள்ள மொத்தப் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 8,416 ஆக ஆகும்.
- பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டில் 966 ஆக இருந்த எண்ணிக்கை தற்போது 3,163 ஆக உயர்ந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சென்னையில் உலகளாவியப் புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாடு நடத்தப் படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

**FACT FILE**

- Total startups | 8,416
- Startups till 2021 | 2,032
- Startups in the last 3 years | 6,384
- Startups headed by women until 2021 | 966
- Startups headed by women in 2024 | 3,163
- Total funds given to startups under TANSEED | ₹13.95cr

## அமைச்சர்களின் வீடுகளுக்கு வாடகை

**3. *Charge for accommodation.*-**(1) Every Member along with his family shall be entitled to allotment of an apartment on payment of monthly rent as specified in sub-section (3) of section 12 of the Act.

(2) Rental charges for accommodation in Hostel for Former Members shall be Rs.300/- (Rupees three hundred only) per day:

Provided that the Former Members shall be entitled to accommodation in Hostel only upto five days in a calendar month either continuously or in spells and they shall be permitted to stay in the Hostel either with his or her spouse or with an attendant:


Provided further that the Former Members who attend the celebrations shall be provided free accommodation in the Hostel on the day of the celebrations and one day before and one day after the celebrations on first come and first served basis and in case of non-availability of accommodation in the Hostel, they shall be paid at the rate prescribed above or the actual rent paid by them for private accommodation, whichever is less.

- தமிழக அரசானது, அமைச்சர்கள் அவர்களுக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு வழங்கப் படுகின்ற வாடகைத் தொகையினை சமீபத்தில் உயர்த்தியுள்ளது.
- இந்த இரு வகைகளின் கீழ், அவர்களுக்கு வழங்கப்படும் வாடகைத் தொகையானது, மாதத்திற்கு 70,000 ரூபாயிலிருந்து 1.5 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- சபாநாயகர், துணை சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தலைமைக் கொறடா ஆகியோருக்கும் இது பொருந்தும்.
- எட்டு ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு வாடகைத் தொகையில் திருத்தம் செய்யப் பட்டுள்ளது.

- முந்தைய திருத்தமானது 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், அப்போதைய மாநில அரசு அமைச்சர்களுக்கு வழங்கும் வாடகையை மாதத்திற்கு 20,000 ரூபாயிலிருந்து 70,000 ரூபாயாக உயர்த்தியது.
- மாநில அரசு வழங்கும் வீட்டில் அவர்கள் தங்கியிருந்தால் அவர்களுக்கு வீட்டு வாடகை கொடுப்பனவு வழங்கப் படாது.

## மேட்டூர் அணை நீர் திறப்பு

- காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்காக திறக்கப்படும் சேலத்தில் உள்ள மேட்டூர் அணை வழக்கமான தேதியான ஜூன் 12 ஆம் தேதியன்று திறக்கப்படவில்லை.
- கடந்த ஐந்தாண்டுகளில் வழக்கமான தேதி தவறியது இதுவே முதல் முறையாகும்.
- அணையின் நீர் மட்டமானது, அதன் முழுக் கொள்ளளவான 93.47 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மாறாக 13.97 ஆயிரம் மில்லியன் கன அடி மட்டுமே உள்ள காரணத்தினால் இந்த ஆண்டு அணை திறக்கப்படவில்லை.
- நீர்மட்டம் ஆனது அதன் முழு கொள்ளளவான 120 அடிக்கு மாறாக 43.52 அடியாக உள்ளது.
- அணைக்கு வரும் நீர்வரத்து வினாடிக்கு 404 கனஅடியாகவும் (cusecs), நீர் வெளியேற்றம் 1,500 கன அடியாகவும் இருந்தது.
- பொதுவாக, குறுவை சாகுபடி பருவத்தில் 3.24 லட்சம் ஏக்கர் பாசனத்திற்காக மேட்டூரில் இருந்து நீர் திறக்கப்படும்.
- ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில், 2019-20 ஆம் ஆண்டில் பாசனப் பரப்பானது 2.9 லட்சம் ஏக்கர் பரப்பிற்கு மாறாக 5.6 லட்சம் ஏக்கர் பரப்பளவாக உயர்ந்துள்ளது.




## நிலையான கழிவு மேலாண்மை – சென்னை

- நகரத்தில் நிலையான கழிவு மேலாண்மை நிலையினை அடைய சென்னை பெருநகர மாநகராட்சிக் கழகத்திற்கு (GCC) உலக வங்கி நிதியளிக்க உள்ளது.
- நகரத்திலும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் 20 ஆண்டுகளுக்குள் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதற்கு உலக வங்கி திட்டமிட்டுள்ளது.

- நகரின் திடக்கழிவு மேலாண்மையின் நிலை குறித்தும் இது ஆய்வு மேற்கொள்ளும்.
- சென்னை பெருநகர மாநகராட்சிக் கழகமானது 2026-2027 ஆம் ஆண்டில் கொடுங்கையூரில் கழிவுகள் கொட்டப் படுவதை நிறுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.





## மரகதப் பூஞ்சோலை

- பசுமைப் பரவலை மேம்படுத்தும் முயற்சியாக, பெரம்பலூர் மாவட்டத்தில் காலியாக உள்ள நிலங்களைப் புனரமைக்கும் முன்னெடுப்பாக 'மரகதப் பூஞ்சோலை' என்ற ஒரு அமைப்பினை நிறுவ வனத்துறை திட்டமிட்டுள்ளது.
- சுமார் ஒரு ஹெக்டேர் நிலம் புனரமைக்கப்பட்டு மரக் கன்றுகளை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.
- முதற்கட்டமாக வாலிகண்டபுரம் அருள்மிகு வாலீஸ்வரர் கோயில் அருகில் உள்ள காலி நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்திற்காக துறைமங்கலம் மற்றும் சாமியப்பா நகர் ஆகிய பகுதிகளில் மேலும் இரண்டு இடங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன.



## செயற்கைத் தீவுகள் – தமிழ்நாடு




- புதுக்கோட்டை மாவட்டத்தின் மிகப்பெரிய பாசனக் குளங்களில் ஒன்றான கவிநாடு கண்மாயில் செயற்கைத் தீவுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- இந்தப் பாசனக் குளத்தில் 10 செயற்கைத் தீவுகள் உருவாக்கப்படும் முன் அவற்றில் படிந்துள்ள வண்டல் படிவுகள் அகற்றப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் மனிதர்களால் உருவாக்கப்பட உள்ள தீவுகளில், பறவைகளை ஈர்க்கும் வகையில் உருவாக்கப்படும் செயற்கை மேடுகளின் மேல் பல்வேறு பழம் தரும் மரங்கள் மற்றும் உள்ளூர் மர இனங்களின் நாற்றுகள் நடப்பட உள்ளன.
- தமிழ்நாடு பசுமை பருவநிலை நிறுவனத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பொட்டாசியக் கலப்பு முறை

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது பொட்டாசியத்தினை அம்மோனியம் பெர்குளோரேட்டாக மாற்றுவது ஒரு ஆக்கமிக்க நடவடிக்கை இல்லை என்றும், எனவே அது காப்புரிமைப் பெற அறவே தகுதியற்றது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- விண்வெளி மற்றும் பாதுகாப்புப் பயன்பாடுகளில் பயன்படுத்தப்படும் திட உந்து பொருள்களில் பற்றி எரியும் தன்மையின் விகிதத்தை அதிகரிக்க வேண்டி இந்த முறை பயன்படுத்தப்படுகிறது.
- இந்த கண்டுபிடிப்பானது கரைசல், வடிகட்டுதல், வெப்பமாக்கல், உலர்த்துதல் மற்றும் மீண்டும் வெப்பமாக்கல் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.
- எனவே, இந்தச் செயல்முறைகள் நன்கு அறியப்பட்டவை என்பதாலும், அவை புதியத் தயாரிப்பை விளைவிப்பதில்லை என்பதாலும் அதற்கு காப்புரிமை வழங்க இயலாது.



## புதிய விரிவான மினி பேருந்து திட்டம், 2024




- ஒரு புதிய விரிவான மினி பேருந்து (சிற்றுந்து) திட்டம், 2024 என்ற ஒரு புதிய வரைவு அறிக்கையானது தமிழ்நாடு அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த வரைவுத் திட்டமானது, பேருந்துகளை இயக்கும் நிறுவனங்கள் 25 கி.மீ. என்ற அனுமதிக்கப் பட்ட அதிகபட்ச தொலைவு வரையில் பேருந்துகளை இயக்குவதற்கு அனுமதிக்கச் செய்கிறது.
- தற்போது, மினி பேருந்துகள் அதிகபட்சமாக 20 கி.மீ வரை இயக்கப்பட அனுமதிக்கப் பட்டுள்ளது என்ற நிலையில் இதில் 16 கி.மீ பேருந்து இயக்கப் பாதையானது தொலை தூரப் பகுதிகளில் அமைய வேண்டும்.
- மாநில அரசு ஆனது, 1997 ஆம் ஆண்டில் மினி பஸ் திட்டத்தை அறிமுகப்படுத்தியது என்ற நிலையில் அதன் கீழ் பேருந்து இயக்க நிறுவனங்கள் 16 கி.மீ. நீளப் பாதை வரை மினி பேருந்துகளை இயக்க அனுமதி வழங்கப்பட்டன.
- இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பேருந்து இயக்க நிறுவனங்கள் 20 கி.மீ. வரை நீளம் பாதைகளிலும் இயக்க அனுமதிக்கும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

## புதிய தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் 2024

- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையானது கீழடியில் பத்தாம் கட்ட அகழாய்வுப் பணிகள் உட்பட தமிழகம் முழுவதும் எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகளை தொடங்கியுள்ளது.
- இந்த ஆண்டு நான்கு புதிய இடங்களில் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடங்கப் பட்டு உள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் பத்தாம் கட்ட அகழாய்வுப் பணிகளும், கொந்தகையில் ஐந்தாம் கட்ட அகழாய்வுப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.
- மற்ற இடங்களாவன, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் 3வது கட்டம், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டியில் 2வது கட்டம், புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டையில் 2வது கட்டம் மற்றும் தென்காசி மாவட்டம் திருமால் புரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னூர், திருப்பூர் மாவட்டம் கொங்கல்நகரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் மருங்கூர் ஆகிய இடங்களில் முதல் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன.



## நீதிபதி சந்துரு கமிட்டி வழிகாட்டுதல்கள்

**RECOMMENDATIONS**


- **Removal of caste prefixes from school names and must refer to them solely as government schools, followed by their place of location**
- Periodic transfer of high school and higher secondary school teachers
- **Seating arrangements of students in every classroom should be strictly based on alphabetical order**
- Committee to monitor the curriculum relating to social issues and suggest appropriate modifications in a time-bound manner.
- **Students should be prohibited from wearing any coloured wristbands, rings, or forehead marks**

❖ கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே சாதி, சமூகம் சார்ந்த வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான வழிகாட்டுதல்களை வகுப்பதற்காக, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி K.சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட தனிநபர் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

❖ மாணவர்கள் பயன்படுத்தும் நெற்றித் திலகக் குறிகள், வண்ண மணிக்கட்டுக் கயிறுகள் மற்றும் பிற சாதி அடையாளங்களைத் தடை செய்து, சமூக நீதி மாணவர் படையை (SJSF) அமைக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது.

- பள்ளிகளின் பெயர்களில் இருந்து சாதி முன்னொட்டுகள் நீக்கப்பட்டு, பள்ளிகளை அவற்றின் இருப்பிடத்தின் பெயருடன் கூடிய 'அரசுப் பள்ளிகள்' என்று அழைக்க வேண்டும்.
- மேலும், நன்கொடையாளர் அல்லது அவர்களது குடும்பத்தைக் குறிக்கும் அரசுப் பள்ளிகளுடன் தொடர்புடைய அனைத்து சாதி முன்னொட்டு அல்லது பின்னொட்டு நீக்கப்பட வேண்டும்.
- மாணவர்களின் வருகைப் பதிவேட்டில் அவர்களின் சாதி தொடர்பான பத்தியோ அல்லது விவரங்களோ இருக்கக் கூடாது.
- தற்போதுள்ள 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தினைத் திருத்தி அமைப்பதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஆரம்பக் கல்வி மீதான உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டை அதிகரிக்கவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- ஆசிரியர் ஆட்சேர்ப்பு வாரியம் (TRB) மூலம் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன் சமூக நீதிப் பிரச்சினைகளுக்கான அவர்களின் அணுகுமுறை கண்டறியப்பட்டு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.
- நிறுவனத் தலைவர் பதவியில் அந்தப் பகுதியில் ஆதிக்க நிலையில் உள்ள சாதியைச் சேர்ந்த நபர்களை நியமிக்கக் கூடாது என்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் உடன் வெளியிடப்பட வேண்டும்.

## தத்தெடுக்கப்பட்ட நபரின் சட்டப்பூர்வ வாரிசுரிமை




- தத்தெடுக்கப்பட்ட ஒரு நபரின் உயிரியல் (இரத்தப் பந்த ரீதி) பூர்வ உறவினர்களை, அவரைத் தத்தெடுத்த குடும்பத்திலிருந்து அவர் பெற்ற சொத்துக்களுக்கு உரிமை கோருவதற்காக அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக கருத முடியாது என்று சென்னை உயர்

நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- 1956 ஆம் ஆண்டு இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டத்தின்படி தத்தெடுப்பு சார்ந்த விதிகள் நிர்வகிக்கப்படுகின்றன.
- ஒருவர் மற்றொரு குடும்பத்தினால் தத்தெடுக்கப்படும் நாளில் உயிரியல் பூர்வ குடும்பத்துடனான அனைத்து உறவுகளும் துண்டிக்கப்படும்.
- எனவே, அவரது/அவளுடைய இரத்த சம்பந்தப்பட்ட உறவினர்கள் அவர் இறந்த பிறகு சட்டப் பூர்வ வாரிசுரிமைச் சான்றிதழைப் பெற முடியாது.

## தமிழகத்தில் அருகி வரும் எட்டு தாவர இனங்கள்



தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGP)

- அருகி வரும் மற்றும் அரிய தாவரங்களைப் பாதுகாப்பதற்கான தமிழ்நாடு அரசின் திட்டமானது எளிதில் பாதிக்கப்படக்கூடிய, அருகி வரும் மற்றும் மிகவும் அருகி வரும் இனங்கள் நிலைகளில் உள்ள எட்டு வகையான அரிய தாவரங்களை பட்டியலிட்டு உள்ளது.
- இந்த எட்டு தாவரங்களும் 25 அரிய தாவரங்களின் பட்டியலில் இருந்து பட்டியலிடப் பட்டுள்ளன.
- இந்த எட்டு இனங்களும் 'பாதுகாப்பு நிலையில் முன்னுரிமை பெற்ற இனங்கள்' என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- சேலத்தில் உள்ள சேர்வராயன் மலைப்பகுதியில் காணப்படும் வெர்னோனியா ஷெவரோயென்சிஸ் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள மர இனமாகும்.
- ஏற்காட்டில் உள்ள இந்தியத் தாவரவியல் ஆய்வுத் துறையின் தாவரவியல் பூங்காவில் வெர்னோனியா ஷெவரோயென்சிஸ் மரம் ஒன்று இருந்தது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைமலை மலைப் பகுதிகளிலும், வால்பாறை பீட பூமியின் சில இடங்களிலும் காணப்படும் பைலாந்தஸ் அனமலையானஸ் என்பவை மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகும்.
- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் காணப்படும் டிப்டெரோகார்பஸ் போர்டில்லோனி மற்றும் கொடைக்கானலில் உள்ள பழனி மலையின் வட்டக்கனல் சோலைக் காடுகளில் காணப்படும் எலேயோகார்பஸ் பிளாஸ்கோய் ஆகியவை அருகி வரும் நிலையில் உள்ள பிற தாவர இனங்கள் ஆகும்.

## புதிய சதுப்பு நிலக் காடுகள்



- தமிழ்நாடு வனத்துறையானது, கடலூர் மாவட்டத்தில் உள்ள குடிகாடு கிராமத்தில் 25 ஹெக்டேர் பரப்பளவில் சுமார் 37,500 சதுப்புநிலத் தாவரங்களை பயிரிட்டுள்ளது.
- இது பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.
- முதன்முறையாக, தற்போதுள்ள சதுப்புநிலப் பகுதிக்குப் பதிலாக, வேறொரு இடமானது சதுப்புநிலத் தோட்டம் அமைப்பதற்கு சாதகமானதாக இது அடையாளம் காணப் பட்டுள்ளது.
- கடலோர வாழ்விடங்களின் மறுவாழ்வுத் திட்டம் ஆனது 2023-24 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு பத்து மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்பட உள்ளது.

## மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம்


- மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தமிழக அரசானது முதலமைச்சரின் புத்தாய்வு மாணவர் திட்டத்தினை அறிமுகப் படுத்த உள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் Ph.D (முனைவர் படிப்பு) படிக்கும் மொத்தம் 50 ஆராய்ச்சி மாணவர்களுக்கு இந்த புத்தாய்வு மாணவர் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படும்.
- இந்த 50 மாணவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பிற ஆட்சேர்ப்பு நிறுவனங்களால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு அரசானது பயிற்சி வகுப்புகளையும் வழங்க உள்ளது.
- சென்னையில் தங்குமிட வசதியுடன் சேர்த்து மொத்தம் 200 பயனாளிகளுக்கு சிறப்பு வகுப்புகள் வழங்கப்படும்.
- இதுவரை இளம் சாதனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அளவிலான விருது ஆனது இனி மறைந்த ஹெலன் கெல்லரின் பெயரால் அழைக்கப்பட உள்ளது.

## 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்தின் முதல் கட்டம்

- ஜல் சக்தி அமைச்சகத்தின் தேசிய நதி வளங்காப்பு இயக்குநரகம் (NRCD) ஆனது, 'நடந்தாய் வாழி காவிரி திட்டத்தின்' முதல் கட்டத்திற்கு 934.3 கோடி ரூபாய் நிதி ஒதுக்க ஒப்புதல்

அளித்துள்ளது.

- ❖ காவிரி ஆற்றின் வளங்காப்பு மற்றும் மறுசீரமைப்பு செய்வதற்காக தமிழக அரசானது இத்திட்டத்தினை முன்மொழிந்துள்ளது.
- ❖ மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆனது இதற்கான திட்டச் செலவினங்களை முறையே 560.58 கோடி மற்றும் 373.72 கோடி ரூபாய் என்ற 60:40 விகித அடிப்படையில் பகிர்ந்து கொள்ளும்.
- ❖ முதற்கட்டத்தில் மேட்டூர் அணையின் தாழ்மட்டத்தில் இருந்து திருச்சி வரையிலான நதி பாய்வின் வளங்காப்பு பணிகள் உள்ளடக்கும்.
- ❖ இரண்டாம் கட்டத்தில், திருச்சியிலிருந்து பூம்புகார் (நதியானது கடலுடன் சங்கமிக்கும் இடம்) வரையிலான ஆற்றின் எஞ்சியப் பாய்வு பகுதியின் வளங்காப்புப் பணிகள் மேற் கொள்ளப் படும்.




## நிலம் குவிப்பு மேம்பாட்டுத் திட்டம்

- ❖ நிலம் குவிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ❖ அரசாங்கம் ஆனது இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் சென்று, 2024 ஆம் ஆண்டு நிலம் குவிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்ட விதிகளை வகுத்துள்ளது.
- ❖ இந்தத் திட்டம் ஆனது, புதிய பகுதிகளின் திட்டமிடப்பட்ட உருவாக்கத்தினை எளிதாக்குவதோடு, அடிப்படை வசதிகளை வழங்கி, மனை விற்பனை சார்ந்த


உள்கட்டமைப்புகளுக்காக நிலத்தைத் திரட்ட உதவும்.

- தனிநபர்/தனிநபர்களுக்குச் சொந்தமான நிலத்தை ஒருங்கிணைத்து, தகுந்த திட்டமிடல் ஆணையத்தின் உதவியுடன் அதை மேம்படுத்த இந்தத் திட்டம் உதவுகிறது.




## தமிழ்நாட்டின் வருவாய் வருமானம் 2023-204

- 2023-24 ஆம் ஆண்டில் மதுபான விற்பனை மூலம் 45,855.67 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப் பட்ட நிலையில், இதில் 35,081.39 கோடி ரூபாய் மதிப்புக் கூட்டு வரி மற்றும் 10,774.28 கோடி கலால் வரி வருவாயும் அடங்கும்.
- 2022-23 ஆம் ஆண்டில் பதிவான 44,121.13 கோடி ரூபாயை விட 2023-24 ஆம் ஆண்டில் பதிவான மொத்த வருவாய் 1,734.54 கோடி ரூபாய் அதிகமாகும்.
- 2023-24 ஆம் ஆண்டில், இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்கான சிறப்புக் கட்டணத்தின் மூலம் அரசாங்கம் 53.93 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.




## பெரும்பாலை அகழாய்வு – தமிழ்நாடு




- தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் துறை அகழாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகளில் "வடிவியல் குறியீடுகளை ஒத்திருக்கும்" சுவர் ஓவிய அடையாளங்களும் அடங்கும்.
- இந்தத் தளத்தின் அடிமட்டத்தில் கண்டறியப்பட்ட இந்த பொருட்களானது கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையதாகும்.
- மட்பாண்டங்களின் வடிவங்கள் மற்றும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் இது இரும்புக் காலத்தைச் சேர்ந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது.
- காவிரி ஆற்றின் கிளை நதிகளில் ஒன்றான நாகாவதி (பண்டைய கால பாலாறு) ஆற்றின் கரையில் பெரும்பாலை அமைந்துள்ளது.
- விஜயமங்கலத்தைச் சேர்ந்த கார்மேககவிராயர் எழுதிய 13 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இலக்கியப் படைப்பான கொங்குமண்டல சதகம், கொங்கு மண்டலத்தின் வடக்கு எல்லையாக பெரும்பாலையைக் குறிப்பிடுகிறது.

## மக்காச்சோளம் சாகுபடிக்கான சிறப்பு திட்டம் – தமிழ்நாடு

- தமிழ்நாடு மாநில அரசானது, 18 மாவட்டங்களில் மக்காச்சோளச் சாகுபடியின் பரப்பினை அதிகரிப்பதற்காக 30 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்த உள்ளது.
- 50,000 விவசாயிகளுக்கு உயர்தர மக்காச்சோள விதைகள், இயற்கை மற்றும் திரவ உரங்கள் மற்றும் யூரியா ஆகியவை அடங்கிய தொகுதி வழங்கப்படும்.

- இது மக்காச்சோளச் சாகுபடி நிலப்பரப்பினை 50,000 ஹெக்டேர் பரப்பளவு வரை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில், 39.09 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியுடன், சிறு தானியங்களின் சாகுபடி பரப்பளவை 9.95 லட்சம் ஹெக்டேராக அதிகரிப்பதற்கு மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த இலக்கானது 31.31 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது.
- 2024-25 ஆம் ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்தி இலக்கு 129.63 லட்சம் மெட்ரிக் டன்களாக இருந்தது.
- கடந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியானது, 118.02 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது.



## தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீடுகளின் வரவு 2023-24




- 2022-23 ஆம் நிதியாண்டில் 2.17 பில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீடுகளின் (FDI) வரவானது, 2023-24 ஆம் நிதியாண்டில் சுமார் 2.44 பில்லியன் டாலர் அதிகரித்து 12.44% உயர்வை பதிவு செய்துள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் 46.03 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவிற்கான ஒட்டு மொத்த அந்நிய நேரடி முதலீடுகளின் வரவு ஆனது 2023-24 ஆம் நிதியாண்டில் 44.42 பில்லியன் டாலராக குறைந்துள்ளது.
- 2020-21 ஆம் நிதியாண்டில் 1.66 பில்லியன் டாலராக இருந்த மாநிலத்தின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியானது 2023-24 ஆம் நிதியாண்டில் 9.56 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் 4.71 பில்லியன் டாலராக இருந்த குஜராத்தின் அந்நிய நேரடி முதலீடு ஆனது 2023-24 ஆம் நிதியாண்டில் 54.9% அதிகரித்து 7.3 பில்லியன் டாலராக இருந்தது.
- 1.30 பில்லியன் டாலராக இருந்த தெலுங்கானாவின் அந்நிய நேரடி முதலீட்டு வரவு ஆனது 133% உயர்ந்து 3.03 பில்லியன் டாலராக உள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டில் 10.43 பில்லியன் டாலராக இருந்த கர்நாடகாவின் அந்நிய நேரடி முதலீடு ஆனது, 2023-24 ஆம் நிதியாண்டில் சுமார் 37% குறைந்து 6.57 பில்லியன் டாலராக இருந்தது.
- டெல்லியின் அந்நிய நேரடி முதலீடுகளின் மதிப்பு ஆனது, 2023-24 ஆம் நிதியாண்டில் 13.41% குறைந்து 6.52 பில்லியன் டாலராக இருந்த நிலையில், இது முந்தைய ஆண்டில் 7.53 பில்லியன் டாலராக இருந்தது.

## 125வது ஆண்டு நிறைவு தினம் - ஊட்டி மலை இரயில்



- மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் வரையிலான இரயில் பாதையானது பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் போது 1899 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்று போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்ட நிலையில் பின்னர் அது உதகை மலை வாழிடம் வரையில் நீட்டிக்கப்பட்டது.
- சர் இராபர்ட் ஸ்டேன்ஸ் தலைமையில் ஒரு 'இரயில்வே குழு' நிறுவப்பட்டு பின் குன்னூர் இரயில்வே நிறுவனம் (லிமிடெட்) என்று அழைக்கப்படுகின்ற லிமிடெட் கூட்டுப் பங்கு நிறுவனம் ஆனது 1880 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டது.
- பின்னர் 1896 ஆம் ஆண்டில் வேறு புதிய நீலகிரி இரயில்வே நிறுவனம் உருவாக்கப் பட்டது.
- இந்த இரயில் பாதையானது இறுதியாக 1899 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திறக்கப் பட்டது என்பதோடு அது ஓர் ஒப்பந்தத்தின் கீழ் சென்னை இரயில்வே நிர்வாகத்தினால் இயக்கப்பட்டது.
- யுனெஸ்கோ அமைப்பானது 2005 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று நீலகிரி மலை இரயில் பாதையை உலகப் பாரம்பரியத் தளமாக அறிவித்தது.

## பல்வேறு தலைவர்களின் சிலைகள்



- தமிழகம் முழுவதும் பல்வேறு தலைவர்கள் மற்றும் பிரமுகர்களின் சிலைகள் நிறுவப் பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- சென்னையில் காந்தி மண்டபம் வளாகத்தில் இராணி வேலு நாச்சியார் அவர்களின் சிலை நிறுவப் பட உள்ளது.
- முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, சிந்து சமவெளி நாகரிகத்தின் ஹரப்பா மற்றும் மொஹஞ்சதாரோ தளங்களின் அகழ்வாராய்ச்சியில் ஒரு முக்கியச் செயற் கருவியாக விளங்கிய தொல்பொருள் ஆய்வாளர் சர். ஜான் ஹூபர்ட் மார்ஷல் ஆகியோரின் சிலைகள் 50 லட்சம் ரூபாய் செலவில் சென்னையில் நிறுவப்பட உள்ளன.
- சிவகங்கை மாவட்டத்தில் மருது சகோதரர்களுக்கென சிலைகள் அமைக்கப்படும்.
- 1713 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு (தரங்கம்பாடி) அச்சகத்தினை அறிமுகம் செய்து, 'புனித தேவ ஆகமத்தின்' (புதிய ஏற்பாடு) தமிழ் மொழிபெயர்ப்பினை அச்சிட்ட பார்தலோமியூ சீகன்பால்க் அவர்களின் சிலையும் நிறுவப்பட உள்ளது.
- தமிழகத்தில் கோயம்புத்தூரில் G.D. நாயுடு அவர்களுக்கு 50 லட்சம் ரூபாய் செலவில் சிலை நிறுவப்பட்டு அவரது பெயரில் ஒரு கலையரங்கம் கட்டப்படும்.
- முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணியில் சிலை நிறுவப்படும்.
- சுதந்திரப் போராட்ட வீரர் வை. நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் சிலை நிறுவப்படும்.
- காவிரி மீட்புக் குழுவில் விவசாயிகளின் உரிமைக்காகப் போராடியவரும் கரூர் சட்டமன்ற உறுப்பினருமான C. முத்துசாமி அவர்களுக்கு கரூரில் சிலை நிறுவப்படும்.

## விமானப் போக்குவரத்து சான்றிதழ் பயிற்சி திட்டம்




- தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) ஆனது,

சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகம் (IATA) சான்றிதழ் பயிற்சித் திட்டத்தை மீண்டும் தொடங்கியுள்ளது.

- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற உதவும் வகையில் இது வழங்கப்படுகிறது.
- IATA தேர்விற்கான பதிவுக் கட்டணம், புத்தகக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் உள்ளிட்ட முழுப் பயிற்சித் தொகை 1.25 லட்சம் ரூபாயும் TAHDCO மூலம் வழங்கப் படும்.
- இந்தப் பயிற்சித் திட்டத்தை நிறைவு செய்த பிறகு, விண்ணப்பதாரர்கள் IATA சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

## தமிழ்நாட்டில் SC/ST பெண்களுக்கான புதிய திட்டங்கள்

- விவசாயக் கூலிகளாகப் பணிபுரியும் நிலமற்ற பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப் பட்ட பழங்குடியினப் பெண்கள் நிலம் வாங்க உதவும் வகையில் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று தமிழக அரசு சட்டப்பேரவையில் அறிவித்துள்ளது.
- தகுதியுள்ள ஒவ்வொரு மனுதாரரும் அதிகபட்சமாக 5 லட்சம் ரூபாய் அல்லது நில மதிப்பில் 50% மானியம் பெற இயலும்.
- தற்போது சொந்த வீடுகள் இல்லாத பழங்குடியினச் சமூகத்தினருக்காக 4,500 வீடுகள் கட்டமைக்க 70 கோடி ரூபாய் வழங்கப்படும்.
- பழங்குடியினர் குடியிருப்புகளை அணுகும் வகையில் 50 கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்படும்.
- சிவகங்கை, ஈரோடு, விருதுநகர், கடலூர் மாவட்டங்களில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்காக சுமார் 15 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டப்படும்.
- திருச்சி, மதுரை மற்றும் கோவையில் ‘அமுத சுரபி’ திட்டத்தின் கீழ் 9 கோடி ரூபாய் செலவில் மையப்படுத்தப்பட்ட சமையலறை அமைக்கப்படும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினச் சமூகங்களின் கலாச்சாரம், மரபுகள், இலக்கியப் படைப்புகள், மொழியியல் அடிப்படையிலான தே சபக்தி ஆகியவற்றைக் கொண்டாடுவதற்காக அரசாங்கம் ‘வாழ்க்கை விழா’ ஒன்றை ஏற்பாடு செய்ய உள்ளது.
- உயர்கல்வியில் சிறந்து விளங்கும் பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்டப் பழங்குடியின மாணவர்களுக்கு ‘திறன் சார் படிப்புகளைத் தேர்வு செய்வதற்கான பற்றுச் சீட்டுகள்’ வழங்கப்படும்.




## நிரந்தரப் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள்




- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் 36 கோடி ரூபாய் செலவில் மூன்று நிரந்தரப் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்களை தமிழ்நாடு மாநில அரசு அமைக்க உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் 17.50 கோடி ரூபாய் செலவில் இரண்டு பல்நோக்கு நிவாரண மையங்கள் கட்டமைக்கப்படும்.
- திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள், கடல் சீற்றம், அணைகளில் இருந்து நீர் வெளியேற்றம் போன்ற சில இயற்கைப் பேரிடர்கள் குறித்து மக்களை எச்சரிக்கும் வகையில் 1,000 மையங்களையும் அரசு நிறுவ உள்ளது.


## காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல்

- வனப்பகுதிகளுக்கு அருகில் உள்ள விவசாய நிலங்களை மிக மோசமாக சேதப்படுத்தி விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தும் காட்டுப்பன்றிகளைக் கொல்ல

அனுமதிப்பதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

- இதன்படி காப்புக்காடுகளை ஒட்டிய பகுதிகள் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்படும்
    - மண்டலம் A (வன எல்லையிலிருந்து ஒரு கிலோமீட்டர் வரம்பிற்குள்);
    - மண்டலம் B (ஒன்று முதல் ஐந்து கிலோமீட்டர் வரம்பு வரை); மற்றும்
    - மண்டலம் C (ஐந்து கிலோமீட்டர் வரம்பிற்கு அப்பால்).
- காப்புக் காட்டிலிருந்து ஐந்து கிலோமீட்டர் வரம்பிற்குள் காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

## தலைவர்களின் பிறந்தநாள் அரசு விழா கொண்டாட்டம்




- பின்வரும் தலைவர்கள்/ முக்கியப் பிரமுகர்களின் பிறந்தநாளை ஒவ்வோர் ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 07.
- சுதந்திரப் போராட்ட வீரர் அஞ்சலை அம்மாள் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 01.
- சுதந்திரப் போராட்ட வீரர் இம்மானுவேல் சேகர் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 09.
- அல்லாலா இளைய நாயக்கர் அவர்களின் பிறந்த நாளான தை 01 ஆம் தேதி.
- சுதந்திரப் போராட்ட வீரர் K.M. அண்ணல் தங்கோ அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 13.
- சென்னை மாகாண முன்னாள் முதல்வர் பா.சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 11.


- இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15 ஆம் தேதி.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் பிறந்த நாளான ஜூலை 07 ஆம் தேதி.
- M.K. தியாகராஜ பாகவதர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 01 ஆம் தேதி.
- ‘நீதிக்கட்சியின் வைரத்தூண்’ என்று அழைக்கப்படும் சர் A.T. பன்னீர்செல்வம் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 01 ஆம் தேதி.
- தமிழறிஞர் முனைவர் மு. வரதராசனார் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 25 ஆம் தேதி.
- எழுத்தாளர் கி. இராஜநாராயணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 19 ஆம் தேதி.
- செங்கல்பட்டு, கடலூர், இராமநாதபுரம், நாமக்கல், வேலூர், சென்னை, புதுக்கோட்டை, திருச்சி, இராணிப் பேட்டை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் அந்தந்த முக்கியத் தலைவர்களின் ஊர்களில் அவர்களின் பிறந்த நாளானது அரசு விழாக்களாகக் கொண்டாடப் படும்.

## வெம்பக்கோட்டையில் சுடுமண் பாண்டத்திலான பெண் உருவப் பொம்மை



- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டை-விஜயகரிசல்குளத்தில் சுடுமண் பாண்டத்திலான பெண் உருவப் பொம்மையின் தலைப் பகுதி கண்டறியப் பட்டுள்ளது.
- சாத்தூர் அருகே வைப்பாற்றின் கரையில் செழுமையான நாகரிகம் இருந்ததாக வெம்பக் கோட்டை தொல்லியல் அகழாய்வு மூலம் தெரியவந்துள்ளது.
- இது கீழடி மற்றும் பொருநை நாகரிகத்தில் காணப்படும் பண்டைய நாகரிகத்திற்கு இணையாக உள்ளது.
- கிருஷ்ணகிரி மாவட்டம் சென்னனூரில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியில் உடைந்த புதிய கற்கால கை கோடரி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இது இப்பகுதியில் புதிய கற்காலக் கலாச்சாரத்தின் சான்றுகளைப் பிரதிபலிக்கிறது.

## தமிழ்நாடு ஏரிகள் தரக் கண்காணிப்புத் திட்டம்




- தமிழ்நாடு ஏரிகள் தரக் கண்காணிப்புத் திட்டம் ஆனது, நீர்நிலைகளில் நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தரவுப் பகுப்பாய்வு மூலம் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டமானது முதற்கட்டமாக பூண்டி, செம்பரம்பாக்கம், உதகமண்டலம், கொடைக் கானல் ஏரிகளில் 5 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) ஆனது தமிழ்நாடு கடல் வளங்கள் மற்றும் கடல்சார் பொருளாதாரங்களை மிக நிலையான முறையில் பயன்படுத்துதல் திட்டத்தின் மூலம் 100 கோடி ரூபாய் மதிப்பிலான மாசுக் குறைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

## உலக வங்கியின் நிதியுதவிப் பெற்ற மகளிருக்கான திட்டம்

- தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு (WE-SAFE) உலக வங்கி நிதியுதவி வழங்குகிறது.
- இது அடுத்த ஐந்து ஆண்டுகளில் (2024-29) 1,185 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப் பட உள்ளது.
- வேளாண்மை சாராத மற்றும் வளர்ந்து வரும் தொழில் துறைகளில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- நடப்பு ஆண்டின் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 168 கோடி ரூபாய் என்பதோடு இது எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.





## 5 பாரம்பரிய கைத்தறி வகைகளுக்கு புதிய புவிசார் குறியீடு

- ❖ தமிழ்நாடு கைத்தறித் துறையானது ஐந்து பாரம்பரியக் கைத்தறிப் பொருட்களுக்கு புவிசார் குறியீட்டினைக் கோரி முன்மொழிந்துள்ளது.
- ❖ அவை, சின்னாளபட்டியைச் சேர்ந்த பட்டுப் புடவைகள்; கூறைநாட்டுப் புடவைகள்; நாகர்கோயில் வேட்டிகள்; உறையூர் புடவைகள்; மற்றும் குடியாத்தம் லுங்கிகள் ஆகியவனவாகும்.
- ❖ தமிழ்நாட்டில் தற்போது 58 தயாரிப்புப் பொருட்கள் புவிசார் குறியீட்டினைப் பெற்று உள்ளன.
- ❖ இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் புவிசார் குறியீட்டினைப் பெற்ற தயாரிப்புகளைக் கொண்ட மாநிலங்களில் (75) உத்தரப் பிரதேச மாநிலம் முதல் இடத்தில் உள்ளது.

## தமிழ்நாட்டில் புதிய சுற்றுச்சூழல் சார் முன்னெடுப்புகள்

- ❖ கோவையில் உள்ள தமிழ்நாடு வனக் கழகத்தில் 10 கோடி ரூபாய் செலவில் உள்நாட்டு விதை இனங்கள் பெட்டகத்தை அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இராமேஸ்வரம் மற்றும் மன்னார் வளைகுடாவில் 15 கோடி ரூபாய் செலவில் சமூக அடிப்படையிலான சூழல் சுற்றுலா உருவாக்கப்படும்.
- ❖ நாமக்கல் கொல்லிமலையில் இரவு நேர வான்வெளிப் பூங்கா அமைக்கப்படும்.
- ❖ கும்பகோணம் அணைக்கரை வன வரம்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் முதலை வளங்காப்பு மையம் அமைக்கப்படும்.

- புகழ்பெற்ற வனவிலங்கு உயிரியலாளர் A.J.T. ஜான்சிங்கின் மரபினை நினைவு கூரும் வகையில், ஆண்டுதோறும் 'டாக்டர் A.J.T. ஜான்சிங் வனவிலங்கு பாதுகாப்பு விருதினை' உருவாக்க அரசு முன்மொழிந்துள்ளது.
    - வனவிலங்கு வளங்காப்பில் பெரும் பங்களிப்பை வழங்கிய சிறந்து விளங்கும் வன விலங்கு ஆர்வலருக்கு இந்த விருது வழங்கப்படும்.




# தேசியச் செய்திகள்

## இந்திய அரசியலமைப்பின் 329(b)வது சட்டப்பிரிவு

- அரசு ஊழியர் ஒருவர் தனது பதவியை ராஜினாமா செய்த பின்னரே தேர்தலில் போட்டியிட முடியும் என தமிழகத்தைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அவர் மனு தாக்கல் செய்திருந்தார்.
- உயர் நீதிமன்றம் தகுதி அடிப்படையில் இந்த வழக்கு குறித்து முடிவு செய்வதைத் தவிர்த்தது.
- அரசியலமைப்பின் 329(b)வது சட்டப்பிரிவானது, தேர்தல் செயல்முறையின் இடையில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டில் நீதித் துறையானது தலையிடுவதைத் தடை செய்கிறது.
- 1952 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதியன்று, 329வது சட்டப்பிரிவை ஆராய்ந்து, வேட்பு மனு நிராகரிப்பு உத்தரவில் தலையிடுவதற்காக உயர் நீதிமன்றங்களோ அல்லது உச்ச நீதிமன்றமோ தங்கள் நீதிப் பேராணை அதிகார வரம்பைப் பயன்படுத்த முடியாது என்ற முடிவுக்கு உச்ச நீதிமன்றம் வந்தது.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (RPA), 100வது பிரிவு, ஒரு வேட்பு மனுவை முறையற்ற முறையில் நிராகரிப்பதை ஒரு தேர்தலைச் செல்லாது என்று

அறிவிப்பதற்கான காரணங்களில் ஒன்றாக பட்டியலிடுகிறது.

- ❖ தேர்தலில் போட்டியிடும் உரிமை ஒரு குடிமை உரிமை அல்ல, மாறாக ஒரு சட்டம் அல்லது சிறப்புச் சட்டத்தின் ஓர் அம்சம் மட்டுமே ஆகும்.
- ❖ அத்தகைய உரிமையானது, சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட முக்கிய வரம்புகளுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

**329. Bar to interference by courts in electoral matters.**—Notwithstanding anything in this Constitution—

(*a*) the validity of any law relating to the delimitation of constituencies or the allotment of seats to such constituencies, made or purporting to be made under article 327 or article 328, shall not be called in question in any court;

(*b*) no election to either House of Parliament or to the House or either House of the Legislature of a State shall be called in question except by an election petition presented to such authority and in such manner as may be provided for by or under any law made by the appropriate Legislature.

**329A.** [*Special provision as to elections to Parliament in the case of Prime Minister and Speaker.*] *Rep. by the Constitution (Forty-fourth Amendment) Act*, 1978, *s.* 36 (*w.e.f.* 20-6-1979).

## உத்பவ் திட்டம்

- ❖ இந்திய ராணுவமானது உத்பவ் திட்டத்தின் மூலம் அதன் வளமான பாரம்பரியத்துடன் மீண்டும் இணைந்துள்ளது.
- ❖ பண்டைய உத்திசார் தகவல்களுடன் நாட்டின் பாதுகாப்புக் கண்ணோட்டத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது இந்திய ஐக்கிய சேவை நிறுவனத்துடன் இணைந்து கடந்த ஆண்டு தொடங்கப் பட்டது.
- ❖ உத்பவ் திட்டம் ஆனது இந்தியாவின் பண்டைய உத்திசார் மதி நுட்பங்களை நவீன இராணுவ நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கிறது.



## பணிக்கொடை வரம்பு உயர்வு

**GRATUITY CALCULATION FOR VARIOUS CATEGORIES**

**For employees covered under the Gratuity Act:**

- Formula for calculation:
  Gratuity = (n x b x 15) / 26
  - n = Tenure of service completed in the company
  - b = Last drawn basic salary + dearness allowance
- Example:
  - If you have worked for XYZ company for 15 years
  - Last drawn basic salary with dearness allowance: ₹30,000
  - Gratuity amount = (15 x 30,000 x 15) / 26 = ₹259,615

**For employees not covered under the Gratuity Act**

- Formula for calculation:
  Gratuity = (15 x your last drawn salary x the working tenure) / 30
- Example:
  - Basic salary: ₹30,000
  - Continuous service: 7 years
  - Gratuity amount = (15 x 30,000 x 7) / 30 = ₹105,000

❖ மத்திய அரசு ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அகவிலைப்படி மற்றும் அகவிலை நிவாரணத் தொகையினை 4% அதிகரித்துள்ளது.

❖ இது ஓய்வுப் பணிக்கொடை உட்பட மற்ற கொடுப்பனவுகளில் மிகவும் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

❖ 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல், ஓய்வூதியம் மற்றும் உயிரிழப்புக் கருணைத் தொகைக்கான அதிகபட்ச வரம்பு 20 லட்ச ரூபாயில் இருந்து 25 லட்சம் ரூபாயாக 25% உயர்த்தப்பட்டுள்ளது.

❖ பணிக்கொடை என்பது ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கும் மேலாக தொடர்ந்து பணி ஆற்றும் பணியாளருக்கு முதலாளிகளால் வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட பலன் வழங்கீட்டுத் திட்டமாகும்.

## விரைவான சுகாதாரக் காப்பீட்டு உரிமை கோரல்களுக்கான பல்வேறு புதிய வழிகாட்டுதல்கள்

❖ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது, சுகாதாரக் காப்பீடு குறித்த புதிய முதன்மை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

❖ இனிமேல் காப்பீட்டு நிறுவனங்கள் கோரிக்கையைப் பெற்ற ஒரு மணி நேரத்திற்குள் பணமில்லா அங்கீகாரம் குறித்து முடிவு செய்ய வேண்டும்.

❖ மருத்துவமனையிலிருந்து வெளியேற்ற அங்கீகார கோரிக்கையைப் பெற்ற மூன்று மணி நேரத்திற்குள் காப்பீட்டு நிறுவனம் இறுதி அங்கீகாரத்தை வழங்க வேண்டும்.


❖ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காப்பீட்டுக் கொள்கை எடுத்தவர்கள் தாமாகவே மருத்துவமனையில் இருந்து வெளியேறும் வரை காத்திருக்கச் செய்யக் கூடாது.

❖ மூன்று மணி நேரத்திற்கு மேல் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், மருத்துவமனையால் வசூலிக்கப் படும் கூடுதல் தொகையினை, பங்குதாரரின் நிதியிலிருந்து காப்பீட்டு நிறுவனம் ஏற்க வேண்டும்.

| | Nitty-gritties | Until March 31, 2024 | April 1, 2024 onwards* | Impact for policyholders |
|---|---|---|---|---|
| Pre-existing disease waiting period | Period when health insurers will not pay claims related to pre-existing diseases | Maximum four years | Maximum three years | Positive |
| Moratorium period | Period after which policies/ claims become incontestable on the grounds of non-disclosure or misrepresentation, except frauds. | Eight years | Five years | Positive |
| Entry age | Maximum age at the time of buying a policy | Insurers had to provide for an entry age of at least 65 years | No mention of 65 years; insurers could specify maximum age at entry as per their discretion | Unclear^ |

## புகையிலை பயன்பாடு இல்லாத கல்வி நிறுவனங்கள்

- கல்வி அமைச்சகம் ஆனது, புது டெல்லியில் புகையிலை பயன்பாடு இல்லாத கல்வி நிறுவனங்களின் (ToFEI) அமலாக்கக் கையேட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ToFEI வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதில் பள்ளிகளுக்கு உதவுதல், மிகவும் நன்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல் மற்றும் புகையிலை சார்ந்த ஆபத்துக்களில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்க பங்குதாரர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இந்த கையேடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புகையிலை பயன்பாட்டைத் தடுக்கவும், புகையிலைப் பழக்கத்திற்கு அடிமையாகும் நிலையில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கவும் அனைத்து கல்வி நிறுவனங்களும் கல்வி நிறுவனங்களைப் புகையிலை இல்லாத ஒரு மண்டலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.



## மக்களவைத் தேர்தலில் உலக சாதனை

- இந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் 31.2 கோடி பெண்கள் உட்பட 64.2 கோடி வாக்காளர்களுடன் இந்தியா உலக சாதனைப் படைத்துள்ளது.
- அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா என அனைத்து G7 நாடுகளின் வாக்காளர்களின் எண்ணிக்கையினை விட இது 1.5 மடங்கு அதிகமாகும்.
- இது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையினை விட 2.5 மடங்கு அதிகமாகும்.
- இந்த உலகின் மிகப்பெரிய தேர்தல் நடவடிக்கையில் 68,000 கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் 1.5 கோடி வாக்குச் சாவடி மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் ஈடுபட்டனர்.
- 2019 ஆம் ஆண்டில் 3,500 கோடி ரூபாயாக இருந்த வகையில் 2024 ஆம் ஆண்டு தேர்தலின் போது ரொக்கப் பணம், இலவசங்கள், போதைப்பொருள், மதுபானம் உட்பட 10,000 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.




## 2024 மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு

- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் மொத்தம் 65.79% வாக்குகள் பதிவாகியுள்ளன.
- ஏழாம் கட்ட வாக்குப் பதிவு அளவு 63.88% ஆகும்.
- லட்சத்தீவில் அதிகபட்சமாக 84% வாக்குகளும், அசாமில் 81% வாக்குகளும் பதிவாகி உள்ளன.
- பீகாரில் மிக குறைந்த பட்ச அளவாக 56.19% வாக்குகள் பதிவாகியுள்ளது.
- உத்திரப் பிரதேசம் (56.92%) மற்றும் மிசோரம் (56.87%) குறைந்த அளவில் வாக்குகள் பதிவாகியுள்ள இதர மாநிலங்கள் ஆகும்.
- தேசிய ஜனநாயகக் கூட்டணி 293 இடங்களிலும், எதிர்க்கட்சியான INDIA கூட்டணி கட்சி 234 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.
- 2019 ஆம் ஆண்டுத் தேர்தலில் 67.40% வாக்குகள் பதிவாகியிருந்தன.
- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் 63,47,509 வாக்காளர்கள் நோட்டா பொத்தானை அழுத்தி 'மேற்கண்டவற்றில் யாரும் இல்லை' என்ற விருப்பத் தேர்வினை தேர்வு செய்துள்ளனர்.

- குஜராத்தில் உள்ள 25 தொகுதிகளில், 24 தொகுதிகளின் வாக்காளர்களின் மூன்றாவது தேர்வாக நோட்டா பொத்தான் அழுத்தப் பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் 2.18 லட்சம் வாக்காளர்கள் 'மேற்கண்ட எதுவும் இல்லை' (14.01%) என்ற விருப்பத்தைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் நோட்டா பதிவில் புதிய சாதனை பதிவாகியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு 1.06 சதவீத வாக்காளர்கள் நோட்டா விருப்பத் தேர்வினை தேர்வு செய்த நிலையில், 2014 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் 1.08 சதவீத வாக்காளர்கள் நோட்டா விருப்பத் தேர்வினைத் தேர்வு செய்துள்ளனர்.




## உள்நாட்டுக் காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்பு

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது (MeitY), AQ-AIMS எனப்படும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்பினை தொடங்கியுள்ளது என்பதோடு புது டெல்லியில் Air-Pravah என்ற செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- 'Air-Pravah' என்ற கைபேசி செயலியானது நிகழ்நேரக் காற்றுத் தரக் குறியீட்டு (AQI) கண்காணிப்புத் தகவலை வழங்குகிறது.
- இது 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் கீழ் குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட ஒரு செயலியாகும்.

## 'ஏக் பெட் மா கே நாம்' பிரச்சாரம்

- உலகச் சுற்றுச்சூழல் தினத்தன்று, 'ஏக் பெட் மா கே நாம்' என்ற பிரச்சாரத்தைப் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
- இப்பிரச்சாரத்தின் மூலம் மக்கள் தங்களது தாய்க்கு கௌரவமளிக்கும் வகையில் மரம் நட வேண்டும் என கோரிக்கை விடப்படுகிறது.
- உலகச் சுற்றுச்சூழல் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 05 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.




## 100 சதவிகித பழச்சாறுகள் என்ற கோரல்கள்

- உணவுப் பாதுகாப்பு ஒழுங்குமுறை அமைப்பான இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சங்கமானது (FSSAI), கலன்களில் அடைக்கப்பட்ட பொருட்களில் 100 சதவீத பழச்சாறுகள் உள்ளது எனக் குறிப்பிட வேண்டாம் என்று நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி உள்ளது.
- மேலும் இந்த அனைத்துப் பழச்சாறுகளிலும் அதிக அளவு தண்ணீரே உள்ளது.
- சிறிதளவு பழச்சாறு அல்லது பழக்கூழ் சேர்ப்பதால் அவை 100 சதவீதம் பழச்சாறு கொண்டதாக ஆகாது.
- மேலும் இந்த பழச்சாறுகளில் ஒரு கிலோவுக்கு 15 கிராமிற்கு மேல் சர்க்கரை அளவு இருந்தால், நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை இனிப்பு சாறு என்றே பெயரிட வேண்டும்.

## 18வது மக்களவையில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள்


- திரிணாமுல் காங்கிரஸ் கட்சியானது, வெற்றி பெற்ற வேட்பாளர்களில் அதிக சதவீதத்திலான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு திரிணாமுல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் மொத்தம் 38% பேர் பெண்கள் ஆவர் என்ற நிலையில் இது நாட்டிலுள்ள எந்த அரசியல் கட்சியிலும் பதிவாகாத எண்ணிக்கையாகும்.
- 18வது மக்களவையில் மொத்தம் 74 பெண் உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர் என்ற நிலையில் இது கடந்த பதவிக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 77 பாராளுமன்ற உறுப்பினர்களை விட குறைவாகும்.
- 18வது மக்களவையில் 13.44% பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள் என்ற நிலையில் இது 1952 ஆம் ஆண்டு முதல் பதிவான அதிக விகிதங்களில் ஒன்றாகும்.
- 17வது மக்களவையில் 78 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் என்ற நிலையில் இதன் பங்கு மொத்த எண்ணிக்கையில் 14% அதிகமாக இருந்தது.
- 16வது மக்களவையில் 64 பெண் உறுப்பினர்களும், 15வது மக்களவையில் 52 பெண் உறுப்பினர்களும் இருந்தனர்.
- பல அறிக்கைகளின்படி, 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகையில் 48.41% பெண்கள் ஆவர்.




## மக்களவைத் தேர்தல் முடிவுகள் 2024

- இந்திய தேர்தல் ஆணையம் ஆனது 543 மக்களவைத் தொகுதிகளில் 542 தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளை அறிவித்தது.
- 2019 ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க. 303 இடங்களைக் கைப்பற்றிய நிலையில், இந்த ஆண்டு தேர்தலில் 240 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.
- பாஜக கட்சி 272 பெரும்பான்மை நிலையை இழந்து, அந்தக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியினைச் சேர்ந்த கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளது.
- தமிழ்நாடு, பஞ்சாப், மணிப்பூர், மேகாலயா, மிசோரம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் பாஜக ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை.
- திருச்சூர் மக்களவைத் தொகுதியில் (சுரேஷ் கோபி) வெற்றி பெற்று முதல்முறையாக மக்களவைத் தேர்தலில் கேரளாவில் தனது ஈடுபாட்டினைத் தொடங்கியது.
- 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு காங்கிரஸ் அதன் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பதிவு செய்ததன் மூலம், INDIA கூட்டணி வியக்கத்தக்க வகையில் பெரு மகத்தான வெற்றிகளை (235) பெற்றது.
- ஒட்டு மொத்தமாக, பா.ஜ.க. தனது உறுப்பினர் இடப் பங்கில் 21% சரிவினை எதிர் கொண்டது என்ற நிலையில் காங்கிரஸ் 90% முன்னேற்றத்தினைப் பதிவு செய்துள்ளது.
- பா.ஜ.க. கட்சியின் சங்கர் லால்வானி இந்தூர் மக்களவைத் தொகுதியில் 100877 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளார்.
- பீகாரில் உள்ள கோபால்கஞ்ச் பகுதியில் முன்னர் பதிவான அதிகபட்ச நோட்டா ('மேற்கண்ட எவரும் இல்லை' விருப்பத் தேர்வு) எண்ணிக்கையினை முறியடித்து, அதே இந்தூர் தொகுதியில் 2.18 லட்சத்திற்கும் அதிகமான நோட்டா வாக்குகள் பதிவானது.

- மகாராஷ்டிராவின் மும்பை வடமேற்குத் தொகுதியில், சிவசேனா (SS) வேட்பாளர் ரவீந்திர தத்தாராம் வைகர், SS (UBT) கட்சி வேட்பாளர் அமோல் கஜானன் கிர்த்திகரை வெறும் 48 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தினார்.




## அமைச்சரவை பதவியேற்பு விழா 2024

- தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) இணைந்து 293 இடங்களை வென்றது என்ற நிலையில் இது ஆட்சி அமைப்பதற்குப் போதுமான பெரும்பான்மையாகும்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக இராஷ்டிரபதி பவனில் பதவியேற்றார்.
- இந்தியாவின் அண்டை நாடு மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளின் உயர்மட்டத் தலைவர்கள் – மாலத்தீவின் அதிபர், வங்காளதேச பிரதமர், நேபாள தலைவர், இலங்கை அதிபர், மொரீஷியஸ் பிரதமர், பூடான் பிரதமர் மற்றும் செய்ஷெல்ஸ் நாட்டின் துணை அதிபர் ஆகியோர் இந்த விழாவில் முக்கியச் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.
- அமைச்சரவையின் உறுப்பினர் எண்ணிக்கையானது பிரதமர், 30 அமைச்சரவைக் குழு உறுப்பினர்கள், 5 இணை அமைச்சர்கள் (சுயாதீனப் பொறுப்பு) மற்றும் 36 இணை அமைச்சர்கள் என 71 ஆக அதிகரித்தது.
- இந்தப் புதிய அமைச்சரவையில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த 5 பேருடன் தென் இந்தியாவிலிருந்து 13 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு மத்திய அமைச்சர்களுக்கு புதிய அமைச்சரவையில் மீண்டும் பதவியளிக்கப்பட்டது.
- புதிய 18வது மக்களவை அமைச்சரவையில் ஏழு பெண்கள் இடம்பெற்றுள்ளனர்.
- ஜூன் 05 ஆம் தேதி கலைக்கப்பட்ட முந்தைய சபையில் பத்து பெண் அமைச்சர்கள் இருந்தனர்.
- TDP பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சந்திர சேகர் பெம்மாசானி, 5700 கோடி ரூபாய் சொத்துக்களுடன், அமைச்சர்கள் குழுவில் இணைந்த செல்வ வளம் மிக்க அமைச்சர் ஆவார்.

- 18வது மக்களவையின் 543 உறுப்பினர்களில் கடந்த தேர்தலில் இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 216 பேர் உட்பட 262 பேர் முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றியவர்கள் ஆவர்.
- புதிய மக்களவையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சராசரி வயது 56 வயது ஆகும் என்ற நிலையில் இது 17வது மக்களவையில் 59 வயதாக இருந்தது.
- முந்தைய மக்களவையில் 78 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் என்ற நிலையில் தற்போது மொத்த உறுப்பினர்களில் சுமார் 14% என்ற அளவில் 74 பெண் உறுப்பினர்களே உள்ளனர்.
- 48% புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பிரமாணப் பத்திரங்களில் தங்களது தொழிலினைச் சமூகப் பணி என்றும், அதைத் தொடர்ந்து 37% பாராளுமன்ற உறுப்பினர்கள் விவசாயம் என்றும் அறிவித்துள்ளனர்.

## CSIR அமைப்பின் 'Phenome India' திட்டம்

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) இந்தத் திட்டத்தினை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 07 ஆம் தேதியன்று தொடங்கியுள்ளது.
- PI-CHeCK திட்டம் ஆனது இந்திய மக்களிடையே தொற்றாத (இருதய-வளர்சிதை சார்ந்த) நோய்களில் உள்ள அபாயக் காரணிகளை மதிப்பிடுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தனித்துவமான முன்னெடுப்பில், ஒரு விரிவான சுகாதாரத் தரவை வழங்கச் செய்வதற்காக முன் வந்துள்ள 10,000 பங்கேற்பாளர்கள் சேர்ந்துள்ளனர்.
- தற்போது, அவர்கள் அந்தத் திட்டத்தின் தொடர் சுகாதாரக் கண்காணிப்புத் திட்டத்தின் 'Phenome India-CSIR சுகாதார கூட்டு ஆய்வுத் தகவல் தளம்' (PI-CheCK) என்ற முதல் கட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.
- இந்தக் குறிப்பிடத்தக்கதொரு மைல்கல்லைக் குறிக்கும் வகையில், கோவாவில் உள்ள தேசியப் பெருங்கடலியல் நிறுவனத்தில் (NIO), 'Phenome India Unboxing 1.0' என்ற ஒரு நிகழ்வை CSIR ஏற்பாடு செய்தது.

## PraVaHa மென்பொருள்

- விண்வெளி வாகன காற்று-வெப்ப-இயக்கவியல் பகுப்பாய்விற்கான (PraVaHa) இணை நிலை RANS தீர்வு அமைப்பு என்ற கணினி திரவ இயக்கவியல் (CFD) மென்பொருளை ISRO உருவாக்கியுள்ளது.
- இதன் மூலம் ஏவுகணை வாகனங்கள், இறக்கைகள் கொண்ட மற்றும் இறக்கைகள் இல்லாத மறு நுழைவு வாகனங்களில் வெளிப்புற மற்றும் உட்புறப் பாய்வுகளை ஒத்தவாறான அமைப்பினை உருவாக்க முடியும்.
- PraVaHa ககன்யான் திட்டத்தில் மனிதர்களைக் கொண்ட ஏவுகணை வாகனங்கள், அதாவது HLVM3, விண்வெளி வீரர்கள் தப்பித்தல் அமைப்பு (CES) மற்றும் விண்வெளி வீரர்கள் தப்பித்தலுக்கானப் பெட்டகம் ஆகியவற்றின் மீதான காற்றியக்கவியல் பகுப்பாய்விற்காக பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

## 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோய் ஒழிப்பு

| Estimated | Global | India |
|---|---|---|
| Incidence | 99,00,000 (127/ lakh) | 25,90,000 (188/ lakh) |
| Deaths (excluding HIV) | 12,80,000 (17/ lakh) | 4,93000 (36/ lakh) |
| HIV TB cases | 7,87,000 (10/ lakh) | 53,000 (3.8/ lakh) |
| HIV TB deaths | 2,14,000 (2.7/ lakh) | 11,000 (0.78/ lakh) |

- 2025 ஆம் ஆண்டிற்குள் நாட்டில் காசநோயை ஒழிப்பதை நோக்கிச் செயல்படும் அதே வேளையில், காசநோய் நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு விகிதத்தில் ஒரு விரைவான சரிவு நிலை என்ற இலக்கினை அடைவதே இந்தியாவின் குறிக்கோள் ஆகும்.
- காசநோயினால் ஒவ்வோர் ஆண்டும் 480,000 இந்தியர்கள் அல்லது ஒவ்வொரு நாளும் 1,400 நோயாளிகள் உயிரிழக்கின்றனர்.
- 2021 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 2.64 மில்லியன் நோயாளிகளுடன், உலகின் காசநோய் பாதிப்பு எண்ணிக்கையில் இந்தியா 25% பங்கினைக் கொண்டுள்ளது.
- எச்.ஐ.வி நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களைத் தவிர்த்துப் பதிவான இறப்பு விகிதம் அதே ஆண்டில் தோராயமாக 450,000 ஆக இருந்தது.
- இது நாட்டின் பொதுச் சுகாதார அமைப்பில் காசநோய் ஏற்படுத்தும் கடுமையான தாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

## புதிய அமைச்சரவைக் குழு அமைச்சர்கள்


- புதிய அரசின் முதல் கூட்டம் ஆனது பிரதமர் அவர்களின் தலைமையில் நடைபெற்று இலாகா ஒதுக்கீடுகள் அறிவிக்கப்பட்டது.
- இரண்டு பெண்களுக்கு அமைச்சரவைக் குழுவில் அமைச்சர் பதவி வழங்கப்பட்டதுடன் ஏழு பெண் தலைவர்கள் அமைச்சரவைக் குழுவில் சேர்க்கப்பட்டனர்.
- தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அமைச்சரவையில் 11 இடங்கள் ஒதுக்கப்பட்டன.
- உள்துறை, பாதுகாப்பு, நிதி மற்றும் வெளிவிவகாரங்கள் துறை ஆகிய முன்னணி நான்கு அமைச்சகங்களில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.
- தொடர்ந்து மூன்றாவது முறையாக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நிதின் கட்கரி பதவியேற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் சிவராஜ் சிங் சௌகான் வேளாண்மை, விவசாயிகள் நலன் மற்றும் ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- அதே நேரத்தில், அமைச்சரவைக் குழு அமைச்சராகப் பதவியேற்றுள்ள பாஜக தலைவர் J.P. நட்டா, சுகாதார அமைச்சகத்தின் பொறுப்பினையும் ஏற்றுள்ளார்.

- ஹரியானா மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மனோகர் லால் கட்டார், மின்சாரம் மற்றும் வீட்டு வசதி போன்ற முக்கிய இலாகாக்களைக் கொண்டிருப்பார்.
- 10 முன்னணி அமைச்சர்களில், H.D. குமாரசாமி மட்டுமே பாஜக சாராத தலைவராவார்.
- அவருக்கு கனரக தொழில்துறைகள் மற்றும் எஃகு அமைச்சகத்தின் பொறுப்பு வழங்கப் பட்டுள்ளது.
- அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு இரயில்வே அமைச்சர் பதவி மீண்டும் வழங்கப் பட்டுள்ளது.
- V. சோமன்னா மற்றும் ரவ்னீத் சிங் பிட்டு ஆகியோர் இரயில்வே அமைச்சகத்தின் இணை அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.
- அன்னபூர்ணா தேவிக்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் பொறுப்பு அளிக்கபட்டுள்ளது.
- தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த, அரசாங்கத்தின் இளம் அமைச்சரான K. ராம் மோகன் நாயுடு, விமானப் போக்குவரத்து துறை அமைச்சராக பதவி ஏற்றுள்ளார்.
- விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சராக மன்சுக் மாண்டவியா நியமிக்கப் பட்டுள்ளார்.
- விளையாட்டுத் துறையின் இளம் இணை அமைச்சராக ரக்சா காட்சே நியமிக்கப்பட்டு உள்ளார்.
- L. முருகனுக்கு தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் மற்றும் பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.
- கேரளாவைச் சேர்ந்த சுரேஷ் கோபி பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் மற்றும் சுற்றுலா துறை அமைச்சகம் ஆகியவற்றின் இணை அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- முதல் முறையாக எந்தவொரு இஸ்லாமியப் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சராக பதவியேற்கவில்லை.
- உண்மையில், இந்த முறை தேசிய ஜனநாயகக் கூட்டணியினைச் சேர்ந்த எந்த ஒரு முஸ்லிம் வேட்பாளரும் 18வது மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.



## தேசிய சுகாதார உரிமை கோரல் இணைப்பகம்

- அமைச்சகம் மற்றும் இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆகியவை தேசிய சுகாதார உரிமை கோரல் இணைப்பகத்தினை (NHCX) தொடங்குகின்றன.
- இது காப்பீட்டு நிறுவனங்கள், சுகாதாரத் துறை சேவை வழங்குநர்கள் மற்றும் அரசாங்கக் காப்பீட்டு திட்ட நிர்வாக நிறுவனங்கள் ஆகியவற்றினை ஒன்றிணைக்கும் ஓர் எண்ணிம தளமாகும்.
- தற்போது, நாட்டில் மேற்கொள்ளப்படும் சுகாதாரக் காப்பீட்டுக் கோரல்களுக்கான தீர்வுச் செயல்முறை பெரும்பாலும் கைமுறையாகவும் நேர விரயம் கொண்டதாகவும் உள்ளது.
- சுகாதார நலம் மற்றும் சுகாதாரக் காப்பீட்டு சூழல் அமைப்பில் உள்ள பல்வேறு பங்கு தாரர்களிடையே உரிமை கோரல்கள் தொடர்பான பல்வேறு தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான நுழைவாயிலாக NHCX செயல்படும்.
- அனைத்துச் சுகாதார உரிமை கோரல்களுக்குமான மையப்படுத்தப்பட்ட மையமாக செயல்படுவதால், NHCX மருத்துவமனைகளின் மீதான நிர்வாக ரீதியிலான வேலைப் பளுவினைக் கணிசமாகக் குறைக்கும்.




## சிறப்பான கட்டமைப்பினை உருவாக்குதல் : உயர்தர உள்கட்டமைப்பினை நோக்கிய இந்தியாவின் பாதை - அறிக்கை


- இது உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பு அமைப்பினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- இந்தியாவின் தர உள்கட்டமைப்பில் இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் (BIS) தலைமையிலான தரநிலைப்படுத்தல், தரக் கட்டுப்பாட்டு ஆணைகள் (QCOs) மற்றும் கட்டாயப் பதிவு ஆணைகள் (CRO) ஆகியவை அடங்கும்.

- QCO மற்றும் CRO வழங்குவதை இந்தியா துரிதப்படுத்தியுள்ளது, ஆனால் தரமான உள் கட்டமைப்பின் ஒவ்வொரு பகுதியையும் இந்தியா மேம்படுத்த வேண்டும்.
- 2016 ஆம் ஆண்டு BIS சட்டம் செயல்படுத்தப்பட்டதில் இருந்து சுமார் 550க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்கு 140க்கும் மேற்பட்ட QCO ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

| Product Category | Order | Ministry |
|---|---|---|
| **Toys** | Toys (Quality Control) Order (QCO) of 2020 | DPIIT, Ministry of Commerce and Industry |
| **Shoes** | Footwear made from Leather and other materials (Quality Control) Order, 2024 | |
| **Automotive tyres** | Pneumatic Tyres and Tubes for Automotive Vehicles (Quality Control) Order, 2009 | |
| **Steel and Steel Products** | Steel and Steel Products Quality Control Order, 2018 | Ministry of Steel |
| **Electronic & IT Products** | Compulsory Registration Order, 2012 (Mobiles, Mobile batteries, laptops etc.) | Ministry of Electronics & IT |


## பிரதமர் ஆவாஸ் யோஜனா நீட்டிப்பு

- அனைவருக்குமான வீட்டு வசதித் திட்டம் தொடர்வதை உறுதி செய்வதற்காக PMAY திட்டத்தின் கீழ் 3 கோடி வீடுகள் கட்டமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- 2015-16 ஆம் ஆண்டு முதல், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா அல்லது PMAY ஆனது தகுதியுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகளைக் கட்டமைக்க உதவி வருகிறது.
- PMAY திட்டத்தின் கீழ், கடந்த 10 ஆண்டுகளில் வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் தகுதி உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு மொத்தம் 4.21 கோடி வீடுகள் கட்டி முடிக்கப் பட்டு உள்ளன.



## இந்தியாவில் உள்ள கிராமப்புற அரசாங்கம் குறித்த விமர்சனம்

- உலக வங்கிக் குழுமமானது இருநூற்று ஐம்பதாயிரம் மக்களாட்சி அமைப்புகள்: இந்தியாவில் உள்ள கிராமப்புற அரசாங்கங்கள் குறித்த ஓர் ஆய்வு என்ற ஒரு தலைப்பிலான கொள்கை ஆராய்ச்சி அறிக்கைத் தாளினை வெளியிட்டுள்ளது.
- 1992 ஆம் ஆண்டில், இந்திய அரசியலமைப்பின் 73வது சட்டத் திருத்தம் ஆனது 800 மில்லியன் குடிமக்களை உள்ளடக்கிய 250,000 கிராமப்புற மக்களாட்சி அமைப்புகளை (கிராமப் பஞ்சாயத்துகள் என அழைக்கப்படும்) உருவாக்கியது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மாநில மற்றும் தேசிய அரசாங்கங்களால் வழங்கப் படும் மானியங்களை மட்டுமே முழுவதுமாக சார்ந்துள்ளன.
- சராசரியாக, ஒரு கிராமப் பஞ்சாயத்துக்கு 0.67 பஞ்சாயத்து செயலாளர்கள் மட்டுமே உள்ளனர் என்ற நிலையில் உத்தரப் பிரதேசம் போன்ற சில மாநிலங்களில் இந்த எண்ணிக்கை 0.33 ஆகக் குறைந்துள்ளது.
- 1992 ஆம் ஆண்டு 73வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் ஆனது பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கி, ஒரே மாதிரியான அமைப்பு, தேர்தல்கள், இட ஒதுக்கீடு ஆகியவற்றை நிறுவியது.




## ஆண்டிற்கு இரண்டு முறை பல்கலைக்கழக சேர்க்கை

- பல்கலைக்கழக மானியக் குழு (UGC) ஆனது 2024-25 ஆம் கல்வியாண்டில் இருந்து ஆண்டிற்கு இரண்டு முறை மாணவர் சேர்க்கைகளை மேற்கொள்வதற்கு உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.
- முந்தைய விதிமுறைகள் ஆனது ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் மட்டுமே மாணவர் சேர்க்கைகளை மேற்கொள்ள அனுமதித்தது.
- 2023 ஆம் ஆண்டில், ஒரு கல்வியாண்டில் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் திறந்த வெளி மற்றும் தொலைதூரக் கற்றல் (ODL) மற்றும் இயங்கலை போன்ற வழியிலான கல்விகளுக்கு ஆண்டிற்கு இரண்டு முறை சேர்க்கைகளை மேற்கொள்ள ஆணையம் அனுமதித்தது.




## GREAT திட்டம்

| | |
|---|---|
| **Agrotech** Horticulture + landscape gardening, agriculture + forestry, animal keeping | **Meditech** Hygiene, medicine |
| **Buildtech** Membrane, lightweight + massive construction, engineering + industrial building. | **Mobiltech** Cars, ships, aircraft, trains, space travel |
| **Clothtech** Garments, shoes | **Oekotech** Environmental protection, recycling, waste disposal |
| **Geotech** Road infrastructure, Railways, Irrigation and Hydraulic structures, Waste Landfills, Dams etc. | **Packtech** Packaging, protective-cover systems, sacks, big bags, container systems |
| **Hometech** Furniture, upholstery + interior furnishing, rugs, floor coverings | **Protech** Person and property protection |
| **Indutech** Filtration, cleaning, mechanical engineering, chemical industry | **Sporttech** Sport and leisure, active wear, outdoor, sport articles. |

- ஜவுளி அமைச்சகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட திட்டக் குழுவானது, GREAT திட்டத்தின் கீழ் 7 புத்தொழில் நிறுவன முன்மொழிதல்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய அரசானது புத்தொழில் நிறுவனம் ஒன்றிற்கு 18 மாதங்களுக்கு மேலான கால கட்டத்திற்கு அதிகபட்சமாக 50 லட்சம் ரூபாய் நிதியுதவியை வழங்குகிறது.

- GREAT என்பது தொழில்நுட்ப ஜவுளித் துறையில் (செயல்பாட்டு நோக்கங்களுக்காக வடிவமைக்கப்படும் ஜவுளிப் பொருட்கள்) ஆர்வமுள்ள கண்டுபிடிப்பாளர்களின் ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவுக்கான மானியம் என்பதைக் குறிக்கிறது.
- இது தேசியத் தொழில்நுட்ப ஜவுளித் திட்டத்தின் (NTTM) ஒரு பகுதியாகும்.
- தொழில்நுட்ப ஜவுளித் துறையில் இந்தியாவின் திறன் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி புதுமையான தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைச் சந்தையில் அறிமுகப்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பாராளுமன்றத்தில் பிரேர்னா ஸ்தலம்

- பாராளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 15 சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகள் மற்றும் இந்திய வரலாற்றின் சின்னங்களைக் கொண்ட ‘பிரேர்னா ஸ்தலம்’ என்ற கட்டிடத்தினைக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இதில் முன்னதாக பாராளுமன்ற வளாகத்தின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவப்பட்ட M.K. காந்தி மற்றும் B.R. அம்பேத்கர் ஆகியோரின் சிலைகளும் தற்போது ஒரே இடத்திற்கு மாற்றப் பட்டுள்ளது.
- பாராளுமன்ற வளாகத்தில் உள்ள இந்த சிலைகள் ஒரே இடத்தில் நிறுவப்பட வேண்டும் என்பதே பிரேர்னா ஸ்தலம் நிறுவப்படுவதன் முக்கிய நோக்கமாகும்.
- ஆனால் பாராளுமன்ற வளாகத்தில் தேசியத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உருவப்படங்கள் மற்றும் சிலைகளை நிறுவுவதற்கு ஒரு பிரத்தியேக குழு உள்ளது.
- இது நாட்டின் பாராளுமன்ற வளாகத்தில் தேசியத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உருவப்படங்கள் மற்றும் சிலைகளை நிறுவுவதற்கான குழு என்று அழைக்கப் படுகிறது.
- இதில் இரு அவைகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர்.
- இருப்பினும், 2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு இக்குழு மீண்டும் அமைக்கப்படவில்லை.

## அர்ஜென்டினாவில் லித்தியம் இருப்புகள்

- கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம் ஆனது, மின்கலப் பொருட்களின் வழங்கீட்டினை நிலைப்படுத்துவதற்காக வேண்டி ஓர் அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து அர்ஜென்டினாவில் லித்தியம் இருப்புகளை ஆய்வு செய்து வருகிறது.
- மின்சார வாகனங்களின் மின்கலங்களைத் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான மூலப்பொருளான லித்தியம் வழங்கீட்டினை நிலைப்படுத்துவதற்கான பல வழிகளை இந்தியா ஆராய்ந்து வருகிறது.
- இந்திய நாடானது, இரு நாடுகளும் ஒவ்வொன்றின் மீதும் விதிக்கப்படும் பரஸ்பர வரிகளைத் தடை செய்யும் வகையில் ஒரு முக்கியமான கனிம வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அமெரிக்காவிடம் முன்மொழிந்துள்ளது.




## 14 காரீஃப் பருவ பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பு

**HARVEST REWARDS**

| Crop | New MSP* | % (Absolute*) hike over 2023-24 |
|---|---|---|
| Niger seed | 8,717 | 12.7% (983) |
| Ragi | 4,290 | 11.5% (444) |
| Tur/Arhar | 7,550 | 7.8% (550) |
| Sunflower seed | 7,280 | 7.7% (520) |
| Cotton | 7,121 | 7.5% (501) |
| Sesamum | 9,267 | 7.3% (632) |
| Urad | 7,400 | 6.5% (450) |
| Groundnut | 6,783 | 6.4% (406) |
| Maize | 2,225 | 6.4% (135) |
| Soybean | 4,892 | 6.3% (292) |
| Jowar | 3,371 | 6% (191) |
| Paddy | 2,300 | 5.3% (117) |
| Bajra | 2,625 | 5% (125) |

*₹per quintal   **Paddy** (Common); **Jowar** (Hybrid); **Cotton** (Medium Staple)

- ஜூலை மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான 2024-25 ஆம் ஆண்டின் பயிர் பருவத்திற்கான அனைத்து 14 காரீஃப் பருவப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- எண்ணெய் வித்துக்களான காட்டு எள் மற்றும் எள் ஆகியவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் அதிக அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இந்த விலை உயர்வானது ₹983 மற்றும் ₹632 உயர்த்தப்பட்டு, முறையே குவிண்டாலுக்கு ₹8,717 ஆகவும் ₹9,267 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

- துவரை அல்லது அர்ஹர் (புறா பட்டாணி) போன்ற பருப்பு வகைகளுக்குமான குறைந்த பட்ச ஆதரவு விலையானது கடந்த ஆண்டை விட சுமார் 550 ரூபாய் அதிகரித்து ஒரு குவிண்டாலுக்கு 7,550 ரூபாயாக இருந்தது.
- எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை, சூரியகாந்தி விதை மற்றும் மஞ்சள் சோயா அவரை ஆகியவற்றிற்கான குறைந்தபட்ச ஆதரவு விலையானது முறையே ₹406, ₹520 மற்றும் ₹292 உயர்ந்துள்ளது.
- விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்திச் செலவில் எதிர்பார்க்கப்படும் லாப வரம்பு ஆனது கம்பு (77%) மற்றும் துவரை (59%), மக்காச்சோளம் (54%) மற்றும் உளுந்து (52%) ஆகியவற்றிற்கு மிக அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய முதுமை அறிக்கை 2023


- 'இந்தியாவில் முதுமை – தயார்நிலையினை ஆராய்தல் மற்றும் பராமரிப்பு சவால்களுக்கான எதிரான நடவடிக்கை - ஹெல்ப் ஏஜ் இந்தியா என்ற அமைப்பின் அறிக்கை' என்ற தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- சுமார் 29% முதியோர்கள் தங்களது குடும்ப உறுப்பினர்களிடமிருந்து நிதி உதவி பெறுகின்றனர் என்ற நிலையில் ஆண்களை விட முதுமகளிர்களுக்கு நிதி உதவி பெறுவதற்கான வாய்ப்பு சற்று அதிகமாக உள்ளது.
- முதியோர்களின் எண்ணிக்கையானது நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆண்டிற்கு 3% அதிகரிப்புடன் 319 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆயிரம் ஆண்களுக்கு 1,065 பெண்கள் என்ற பாலின விகிதத்தில் இந்த மதிப்பீடு பெண் பாலினம் சார்ந்ததாக இருக்கும்; மேலும், வயது முதிர்ந்த பெண்களில் சுமார் 54% பேர் கைம்பெண்களாக இருப்பார்கள்.




- வயது முதிர்ந்த ஆண்களில் 6% பேர் தனியாக வாழ்கின்றனர் ஆனால் பெண்களில் இது 9% ஆக உள்ளது என்பதோடு அவர்களில் 70% பேர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.
- 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 6% பேர் மிகக் குறைந்த அளவில் உணவு உண்டோ அல்லது உணவைத் தவிர்த்தோ வாழ்வதால் இந்தியாவின் முதியவர்களிடையே உணவுப் பாதுகாப்பின்மை நிலவுகிறது.

- அவர்களில் 5.3% பேர் பட்டினி நிலையில் இருந்தாலும் உணவு உண்பதில்லை.
- முதியவர்களில் 75% பேர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாள்பட்ட நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் 45 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 40% பேர் ஒன்று அல்லது மற்ற குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

## தேசிய தடயவியல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்




- மத்திய அரசின் நிதியுதவிப் பெறும் "தேசிய தடயவியல் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (NFIES) எனப்படுகின்ற ஒரு திட்டத்திற்காக வேண்டி உள்துறை அமைச்சகத்தின் முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பின்வரும் கூறுகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது:
  - நாட்டில் தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தின் (NFSU) வளாகங்களை நிறுவுதல்.
  - நாட்டில் மத்திய தடய அறிவியல் ஆய்வகங்களை நிறுவுதல்.
  - NFSU பல்கலைகழகத்தின் டெல்லி வளாகத்தின் தற்போதைய உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

## ஒருங்கிணைந்த இணைய வெளி கோட்பாடு

- இணைய வெளிச் செயல்பாடுகளுக்கான 'கூட்டுக் கோட்பாட்டினை' பாதுகாப்புப் பணியாளர்களின் (CDS) தலைவர் அனில் சௌஹான் வெளியிட்டார்.

- இந்திய தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றில் இணையவெளி செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கும் புரிந்து கொள்வதற்கும் இந்தக் கோட்பாடு ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை வழங்குகிறது.
- இது நவீன இணைய வெளிப் போர் முறையின் சிக்கல்களை ஆய்வு செய்து, நன்கு ஒருங்கிணைந்த மற்றும் பயனுள்ள செயல்பாடுகளை உறுதி செய்வதற்குத் தேவையான வழிகாட்டுதலுடன் இராணுவப்படைத் தளபதிகளை தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கிருஷி சாகி ஒருங்கிணைப்பு திட்டம்

- கிருஷி சாகி ஒருங்கிணைப்பு திட்டத்தின் (KSCP) கீழ் சுமார் 30,000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களின் (SHGs) மூலம் 'கிருஷி சாகிஸ்' என்ற சான்றிதழ்களை மத்திய அரசு வழங்கியுள்ளது.
- KSCP கிராமப்புறப் பெண்களை கிருஷி சாகியாக மேம்படுத்துவதன் மூலம் கிராமப்புற இந்தியாவை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சான்றிதழ் கல்வித் திட்டமானது "இலக்பதி தீதி" திட்டத்தின் நோக்கங்களுடனும் ஒத்துப் போகிறது.





## தபால் அலுவலகச் சட்டம் 2023

- 2023 ஆம் ஆண்டு தபால் அலுவலக மசோதாவானது, 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, டிசம்பர் 04 ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்டது.
- குடிமக்களை மையப்படுத்தியச் சேவைகள், வங்கிச் சேவைகள் மற்றும் அரசின் திட்டங்களின் பலன்களை தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கச் செய்வதற்கான ஒரு எளிய வகை சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தச் சட்டம் ஆனது, முதன்முறையாக, தனியார் விரைவு அஞ்சல் சேவைகளை அதன் வரம்பிற்குள் கொண்டு வருவதன் மூலம் அவற்றினை ஒழுங்குபடுத்துகிறது.
- இந்தச் சட்டமானது 1898 ஆம் ஆண்டு இந்தியத் தபால் அலுவலகச் சட்டத்தினை மாற்றி அமைக்கிறது.
- இந்தச் சட்டத்தின் 9வது பிரிவானது, ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு நலன் கருதி, ஒரு அறிவிப்பின் மூலம், எந்தவொரு பொருளையும் "இடைமறித்து, திறக்க அல்லது தடுத்து வைக்க" எந்த ஒரு அதிகாரிக்கும் அதிகாரம் அளிக்க மத்திய அரசுக்கு அனுமதி அளிக்கிறது.





## கொள்கலன் துறைமுகச் செயல்திறன் குறியீடு 2023




- கொள்கலன் துறைமுகச் செயல்திறன் குறியீடு (CPPI) ஆனது, உலக வங்கி மற்றும் S&P உலகச் சந்தை தகவல் அளிப்பு நிறுவனம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது.
- சமீபத்தியக் குறியீட்டில், இந்தியாவின் ஒன்பது துறைமுகங்கள் உலகின் 100 முன்னணி துறைமுகங்கள் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.
- விசாகப்பட்டினம் துறைமுகம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் உலகின் 20 முன்னணி துறைமுகங்களில் 19வது இடத்தினைப் பெற்றது.
- முந்த்ரா துறைமுகம் தற்போதைய தரவரிசையில் 27வது இடத்திற்கு உயர்ந்துள்ளது.

- மற்ற 7 துறைமுகங்கள் ஆவன: பிபாவாவ் (41), காமராஜர் (47), கொச்சின் (63), ஹசிரா (68), கிருஷ்ணப் பட்டினம் (71), சென்னை (80) மற்றும் ஜவஹர்லால் நேரு (96).

## வினாத்தாள் வெளியாதல் தடுப்புச் சட்டம்




- சமீபத்தில் அறிவிக்கப்பட்ட வினாத்தாள் வெளியாதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்ட விதிகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- கணினி அடிப்படையிலான தேர்வுகளுக்கான விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களைத் தயாரிக்க தேசிய ஆட்சேர்ப்பு நிறுவனத்திற்கு (NRA) வலியுறுத்தப் பட்டுள்ளது.
- பொதுத் தேர்வுகள் (நியாயமற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) சட்டம், 2024 செயல் படுத்தப் பட்ட சில நாட்களுக்குள் இந்த விதிகள் அறிவிக்கப்பட்டன.
- பல்வேறு அரசு அமைப்புகளால் நடத்தப்படும் ஆட்சேர்ப்புத் தேர்வுகளில் முறைகேடு செய்வதற்கு நியாயமற்ற வழிகளைப் பயன்படுத்துவதற்கு எதிரான முதல் தேசியச் சட்டம் இதுவாகும்.
- பொதுத் தேர்வுகள் (நியாயமற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) மசோதா, 2024 ஆனது பிப்ரவரி 09 ஆம் தேதியன்று மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு, பிப்ரவரி 06 ஆம் தேதியன்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று ஒப்புதல் பெறப்பட்டது.
- மத்தியக் குடிமைப் பணிகள் தேர்வாணையம் (UPSC), பணியாளர் தேர்வு ஆணையம் (SSC), இரயில்வே, வங்கி ஆட்சேர்ப்புத் தேர்வுகள் மற்றும் தேசியப் பயிற்சி அகாடமி போன்றவற்றால் நடத்தப்படும் பொதுத் தேர்வுகளில் நியாயமற்ற வழிமுறைகளைத் தடுப்பதை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தச் சட்டத்தின் கீழ், எந்தவொரு நபரும் அல்லது நபர்களும் ஒரு வினாத்தாளை வெளியிட்டாலோ அல்லது விடைத்தாள்களை சேதப்படுத்தினாலோ குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை பெறுவார்கள்.
- இது 10 லட்சம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் கூடிய ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனையாக நீட்டிக்கப்படலாம் என்பதோடு இந்தச் சட்டத்தின் கீழான அனைத்து குற்றங்களும் நடவடிக்கை எடுக்கத் தக்கதாகவும் பிணை ஆணையில் வெளியில் வர முடியாததாகவும் இருக்கும்.
- தேர்வுச் சேவை வழங்குநர்கள், நிகழ்ந்த குற்றத்தைப் பற்றி அறிந்திருந்தாலும் அதைப் புகாரளிக்காதவர்களுக்கு 1 கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

## "ஒரு வாரம் ஒரு கருத்துரு" (OWOT) பிரச்சாரம்

| S.No. | Thematic Areas | Organizing Week |
|---|---|---|
| 1 | Energy and Energy Devices | 24 – 28 June 2024 |
| 2 | Chemicals (including Leather) and Petrochemicals | 15 - 20 July 2024 |
| 3 | Aerospace, Electronics, and Instrumentation & Strategic Sectors | 2 - 30 August 2024 |
| 4 | Civil Infrastructure and Engineering | 2 - 6 September 2024 |
| 5 | Agri, Nutrition & Biotech | 21 - 26 October 2024 |
| 6 | Healthcare | 11 - 15 Nov 2024 |
| 7 | Mining, Minerals, Metals and Materials | 25 - 30 November 2024 |
| 8 | Ecology, Environment, Earth & Ocean Sciences and Water | 10- 17 December 2024 |

- மத்திய அரசானது, "ஒரு வாரம் ஒரு கருத்துரு" (OWOT) என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளில் இந்தியாவின் சமீபத்தியச் சாதனைகளை எடுத்துக் காட்டுகிறது.


## மின்சார வாகனங்களுக்கான BIS தரநிலைகள்

- இந்திய தரநிலைகள் வாரியம் ஆனது (BIS) IS 18590: 2024 மற்றும் IS 18606: 2024 எனப்படும் இரண்டு புதிய தரநிலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தரநிலைகள் பல்வேறு வகைகளில் மின்சார வாகனங்களின் ஆற்றல் தொடர் அமைப்புகள் மற்றும் மின் கலங்கள் தொடர்பான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் தரநிலைகள் ஆனது, மின்சார வாகனங்களின் முக்கியமான கூறுகள், குறிப்பாக ஆற்றல் தொடர் அமைப்புகள், மிகவும் கடுமையான பாதுகாப்புத் தேவைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளன.




## மக்களவை சபாநாயகர் 2024

- ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியின் வேட்பாளர் ஓம் பிர்லா 18வது மக்களவையின் சபாநாயகராக குரல் வாக்கெடுப்பு மூலம் தொடர்ந்து இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த ஆண்டு, மக்களவை சபாநாயகர் பதவிக்கு ஓம் பிர்லாவுக்கும், கேரளாவின் மாவேலிக்கராவில் பகுதியில் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக எட்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட கொடிக்குன்னில் சுரேஷ் என்பவருக்கும் இடையே போட்டி திகழ்ந்தது.
- மக்களவை சபாநாயகர் என்பவர் அவையின் அரசியலமைப்பு மற்றும் சம்பிரதாயத் தலைவர் ஆவார்.
- அவர் பாராளுமன்றத்தின் மிக அவசியத் தேவைகள் மற்றும் அதன் செயல்பாடுகளின் செயல்திறனில் ஈடுபாடு செலுத்துவார்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி, சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகிய இருவரையும் தேர்ந்தெடுப்பதற்கு 93வது சட்டப்பிரிவு விதிகளை வழங்குகிறது.
- மக்களவை உறுப்பினர்கள் ஒரு சாதாரணப் பெரும்பான்மையின் கீழ், தங்களது தலைமை அதிகாரியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- புதிதாக அமைக்கப்படும் மக்களவையில் பொதுவாக சபாநாயகர் தேர்தல் தான் முதல் அலுவல் ஆகும்.
- இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் இடைக்கால சபாநாயகர் இந்தச் செயல்முறையை மேற்பார்வையிடுகிறார்.
- மக்களவையின் 72 ஆண்டுகளில், சபாநாயகர் பதவிக்கான தேர்தல் மூன்று முறை மட்டுமே - அதாவது 1952, 1967 மற்றும் 1976 – ஆகிய ஆண்டுகளில் மட்டுமே நடைபெற்று உள்ளது.
- மக்களவையின் சபாநாயகர் பதவிக்கு ஒருவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவது இது ஆறாவது முறையாகும் என்பதோடு தொடர்ந்து இரண்டாவது முறையாக அப்பதவிக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டது இது ஐந்தாவது முறையாகும் என்பது மிக குறிப்பிடத் தக்கது.




## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்




- ❖ மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, ராகுல் காந்தியை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துள்ளார்.
- ❖ 1977 ஆம் ஆண்டு பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் சம்பளம் மற்றும் படிகள் சட்டத்தின் 2வது பிரிவின் கீழ் அவர் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப் பட்டு உள்ளார்.

- எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற, ஒரு கட்சியிலிருந்து குறைந்தபட்சம் 10% அளவு பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களவை இருக்க வேண்டும்.
- எதிர்க்கட்சித் தலைவரின் மிகவும் முக்கியமான ஒரு கடமையானது அவையில் எதிர்க் கட்சியின் கருத்துக்களை முன்வைப்பதாகும்.
- மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் நிழல் அமைச்சரவை கொண்ட நிழல் பிரதமராகக் கருதப்படுகிறார்.
- ஆட்சியில் உள்ள அரசானது ராஜினாமா செய்தாலோ அல்லது மக்கள் அவையில் அதன் பெரும்பான்மை வீழ்த்தப் பட்டாலோ அரசு நிர்வாகத்தைக் கைப்பற்ற அந்த நிழல் அமைச்சரவை தயாராக இருக்கும்.

## வாடகைத் தாய் மூலம் பெறும் குழந்தைகள் பராமரிப்பு விடுப்பு



SURROGACY

- Having another woman bear a child for a couple (or single women or men) to raise.
- The surrogate offers to carry a baby through pregnancy and then return the baby to the intended parent(s) once it is born.
- Surrogacy is an option to fulfill the desire to have a child of a couple for whom it is physically or medically impossible or undesirable to carry a baby to term on their own.
- There are two types of surrogacy – traditional surrogacy and gestational surrogacy.
- In Traditional Surrogacy, a surrogate mother is artificially inseminated, either by the intended father or an anonymous donor. The surrogate mother provides the egg and is thus genetically related to the child.
- In Gestational Surrogacy, an embryo is created using an egg and sperm produced by the intended couple and is transferred into the surrogate's uterus. The surrogate has no genetic link to the child. Her eggs cannot be used to conceive the child.
- The Surrogacy (Regulation) Bill seeks to allow and regulate Gestational Surrogacy.
- Surrogacy can be altruistic or commercial. In altruistic surrogacy, the surrogate is not paid for her services, except for medical expenses and insurance. In commercial surrogacy, the surrogate is paid over and above these expenses.
- The Surrogacy (Regulation) Bill seeks to ban commercial surrogacy but protect the altruistic surrogate through enhanced, prescribed payments (for medical expenses, food and care, longer-duration insurance).

- வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறும் பெண் அரசு ஊழியர்களுக்கு 180 நாட்கள் மகப்பேறு விடுப்பு அளிக்க அனுமதிக்கும் வகையில், 1972 ஆம் ஆண்டு மத்திய குடிமைப் பணிகள் (விடுப்பு) விதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- விதிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி, குழந்தைப் பராமரிப்பு விடுப்புடன் கூடிய "பதிலித் தாய்" (வாடகைத் தாய் செயல்முறை மூலம் பிறக்கும் குழந்தையின் உண்மைத் தாய்) இந்த விடுமுறைகளுக்குத் தகுதியுடையவர் ஆவார்.
- "இந்தச் செயல்முறையில் பங்காற்றும் தந்தைக்கும்" அரசாங்கம் 15 நாட்கள் மகப்பேறு கால விடுப்பினை வழங்குகிறது.
- தற்போதைய விதிமுறைகள் ஆனது, "ஒரு பெண் அரசு ஊழியர் மற்றும் தனியாக குழந்தையை வளர்க்கும் ஆண் அரசு ஊழியர்" தங்கள் பணிக்காலம் முழுவதிலும் 730 நாட்கள் வரை குழந்தைப் பராமரிப்பு விடுப்பு எடுத்து தங்கள் இரண்டு வயதான குழந்தைகளைப் பராமரிக்க வழி வகை செய்கின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## நிலச்சரிவு - பப்புவா நியூ கினியா

- சமீபத்தில் பப்புவா நியூ கினியாவின் மலைப்பகுதிகளில் மாபெரும் நிலச்சரிவானது ஏற்பட்டது.
- எங்கா மாகாணத்தின் ஒரு தொலைதூரப் பகுதியில் இந்தப் பேரழிவு நிகழ்ந்தது.
- இந்தப் பேரழிவு காரணமாக சுமார் ஆறு கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
- புவியீர்ப்பு விசையின் இழுப்பு ஒரு மலை அல்லது குன்றின் சரிவை உருவாக்கும் புவி கட்டமைப்பு மூலப்பொருளின் வலிமையை மீறும் போது நிலச்சரிவுகள் ஏற்படச் செய்கின்றன.
- புவிக் கட்டமைப்புப் பொருட்கள் என்பவை பாறைகள், மணல், வண்டல் மற்றும் களிமண் போன்ற பல்வேறு வகைகளாக இருக்கலாம்.
- பெரும்பாலான இயற்கை நிலச்சரிவுகள் ஆனது நிலநடுக்கங்கள் அல்லது மழைப் பொழிவு அல்லது இரண்டும் இணைந்து ஏற்படுவதால் தூண்டப்படுகின்றன.
- பப்புவா மற்றும் நியூ கினியா புவியின் மிகவும் ஈரமான இடங்களில் ஒன்றாகும்.




## WIPO அமைப்பின் புதிய ஒப்பந்தம்



- உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) ஆனது அறிவுசார் சொத்து, மரபணு வளங்கள் மற்றும் அது தொடர்புடைய மரபார்ந்த தகவல்கள் (ஒப்பந்தம்) தொடர்பான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, முதன்மையாக பழங்குடியின மக்களின் பாரம்பரிய மதி நுட்பத்திலிருந்து பெறப்பட்ட காப்புரிமை விண்ணப்பங்களில் மரபணு பொருட்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த உடன்படிக்கையானது மரபுவழியின் செயல்பாட்டு அலகுகளைக் கொண்ட தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிர்கள் அல்லது பிற தோற்றத்தின் எந்தவொரு பொருளாகவும் 'மரபணுப் பொருள்' இருக்கலாம் என்று வரையறுக்கிறது.

## 2024 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் வேலைவாய்ப்பின்மை




- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது, 2024 ஆம் ஆண்டில் உலக நாடுகளில் உள்ள வேலைவாய்ப்பின்மை விகிதம் 4.9% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறது.
- 2023 ஆம் ஆண்டில் ஐந்து சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது இந்த ஆண்டு 5.2% ஆக உயரும் என்று முதலில் கணித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 4.9% ஆக இருக்கும் என்று ஜெனிவா நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முகமை கணித்துள்ளது.

- 183 மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பில்லாதவர்கள் என்ற வரையறையினுள் இடம் பெறுகின்றனர் என்ற நிலையில் வேலை செய்ய விரும்புகின்ற ஆனால் வேலை வாய்ப்பில்லாதவர்களின் எண்ணிக்கை 402 மில்லியனாக உள்ளது.
- 15.3 சதவீத ஆண்களுடன் ஒப்பிடுகையில், வேலை செய்ய விரும்புகின்ற, வேலை வாய்ப்பில்லாதவர்களில் 22.8 சதவீதத்துடன் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள பெண்கள் குறிப்பாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.
- அதிக வருமானம் கொண்ட நாடுகளில், பெண்கள் மத்தியில் இந்த விகிதம் 9.7% ஆகவும், ஆண்கள் மத்தியில் 7.3% ஆகவும் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் 45.6% பணிக்குச் செல்லும் வயது பெண்கள் பணியமர்த்தப் பட்டு உள்ளனர்.
- ஆண்கள் மத்தியில், இந்த எண்ணிக்கை 69.2% ஆக இருந்தது.

## கொழும்பு செயல்முறை மன்றத்தின் தலைமை

- 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து முதல் முறையாக இந்திய நாடானது கொழும்பு செயல்முறை மன்றம் எனப்படும் பிராந்தியக் குழுமத்தின் தலைவராக மாறியுள்ளது.
- கொழும்பு செயல்முறை மன்றம் என்பது ஆசியாவின் 12 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிராந்திய ஆலோசனை வழங்கீட்டு மன்றமாகும்.
- கொழும்பு செயல்முறை என்பது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் இருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பூர்வீக நாடுகளின் பிராந்திய ஆலோசனை செயல் முறை ஆகும்.
- இது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய மிகச் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு மன்றமாகச் செயல்படுகிறது



## தாலிபான் – தீவிரவாதக் குழு பட்டியல்

- ஆப்கானிஸ்தானில் மீண்டும் ஆட்சிக்கு வந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் இருந்து தாலிபான்களை ரஷ்யா நீக்க உள்ளது.
- ரஷ்யாவில் 2003 ஆம் ஆண்டு முதல் தாலிபான் அமைப்பு ஆனது தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டது.
- கஜகஸ்தான் நாடானது, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் இருந்து தாலிபான்களை நீக்கியது.
- தாலிபான்கள் 2021 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் ஆதரவு பெற்ற அரசாங்கத்திடம் இருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினர்.
- பெண்களைப் பொது வாழ்விலிருந்து பெருமளவில் தடை செய்யும் ஒரு இஸ்லாமியச் சட்டத்தின் தீவிர வடிவத்தை அவர்கள் அந்நாட்டில் அமல்படுத்தியுள்ளனர்.




## 77வது உலக சுகாதார சபை


- உலக சுகாதார அமைப்பின் 77வது உலக சுகாதார மாநாடானது சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்றது.
- மனித செல்கள் மற்றும் திசுக்கள் உள்ளிட்ட உறுப்பு மாற்றுச் சிகிச்சை கிடைக்கப் பெறுவதை மேம்படுத்துவதற்கான வரைவுத் தீர்மானத்திற்கு இது ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்தத் தீர்மானமானது 2026 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் படுவதற்காக முன் வைக்கப் படுவதற்கான பல்வேறு உலகளாவிய உத்திகளை உருவாக்கும் பணியை நாடுகளுக்கு வழங்கியுள்ளது.
- பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் உறுப்பு தானங்களை வழங்குவதற்காக உலக உறுப்பு தான தினத்தினை நிறுவுவதற்கும் இது ஊக்குவித்தது.
- 2013 ஆம் ஆண்டில் 4,990 ஆக இருந்த உறுப்பு தானம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 16,041 ஆக அதிகரித்துள்ளது.

## டெக்கோ ஃபுனன் கால்வாய் திட்டம்




- கம்போடியா நாடானது, ஃபுனான் டெக்கோ கால்வாய் என்று அழைக்கப்படுகின்ற 1.7 பில்லியன் டாலர் மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் 180 கி.மீ. நீளம் கொண்ட ஒரு கால்வாய் கட்டமைப்பாது மெகாங் நதிப் படுகையை கம்போடிய நாட்டின் கடற்கரையுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நாட்டின் தலைநகரில் உள்ள புனோம் பென் தன்னாட்சி துறைமுகத்தினை கெப் எனப்படும் கடலோர மாகாணத்துடன் இணைக்கிறது.
- வியட்நாம் அரசானது, இந்தத் திட்டத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து தனது கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது.
- இந்த விரிவாக்கத் திட்டம் ஆனது, நாட்டில் சீனாவின் இராணுவ ஈடுபாட்டினை மிகவும் எளிதாக்கும் எனவும் அஞ்சுகிறது.

## பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்




- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் (PoK) ஒரு வெளிநாட்டுப் பிராந்தியம் என்பதை இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் பாகிஸ்தான் அரசு ஒப்புக் கொண்டுள்ளது.
- உள்ளூர் காஷ்மீரி மொழிக் கவிஞரும் பத்திரிகையாளருமான அகமது பர்ஹாத் ஷா கடத்தப்பட்ட வழக்கின் விசாரணையின் போது இந்த அரிய ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர், காஷ்மீர் அதன் சொந்த அரசியலமைப்பு மற்றும் அதன் சொந்த நீதிமன்றங்களைக் கொண்ட ஒரு வெளிநாட்டுப் பிரதேசம் என்று கூறினார்.
- மேலும், PoK பகுதியில் உள்ள பாகிஸ்தான் நீதிமன்றங்களின் தீர்ப்புகள் வெளிநாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளாகக் கருதப்படுகின்றன என்று அவர் கூறினார்.

## அதி இலாப விருப்பப் பணவீக்கம் குறித்த கோட்பாடு




- சான் பிரான்சிஸ்கோவின் பெடரல் ரிசர்வ் வங்கியின் புதிய ஆராய்ச்சியானது, நிறுவனங்களின் அதிக இலாபம் ஈட்டும் மனப்பான்மையினால் ஏற்படும் பணவீக்கம் குறித்த கோட்பாடு பற்றிய புதிய கண்ணோட்டத்தினை எழுப்பியுள்ளது.
- தொழில்முனைவோருக்கு தொழில் தொடங்க ஊக்கமளிக்கின்றது என்பதால், சில சமத்துவமின்மை நிலை உண்மையில் பயனளிக்கின்றது.
- நிறுவனங்களின் அதிக இலாபம் ஈட்டும் மனப்பான்மையினால் ஏற்படும் பணவீக்கம் என்பது உற்பத்திச் செலவினம், தேவை அல்லது கூலி ஆகியவற்றின் அதிகரிப்பைக் காட்டிலும் இலாபம் ஈட்ட பெருநிறுவனங்கள் எண்ணுவதால் ஏற்படுகின்ற ஒரு பொருளாதாரத்தின் பணவீக்க நிலையைக் குறிக்கிறது.
- பணவீக்கம் என்பது ஒரு பொருளாதாரத்தில் சரக்குகள் மற்றும் சேவைகளின் பொது விலை அளவு உயரும் வீதமாகும்.
- பெருநிறுவனங்கள் அவற்றின் உண்மையான உள்ளீட்டு செலவு அதிகரிப்பை விடவும் அதிகமாகப் பொருட்களின் விலைகளை உயர்த்தி தற்போதுள்ள பணவீக்கத்தைப் பயன்படுத்தி இலாபம் ஈட்ட முயல்வது அதி இலாப விருப்பம் ஆகும்.

## UNSC தேர்தல் 2024




- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது டென்மார்க், கிரீஸ், பாகிஸ்தான், பனாமா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளை பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்பினர்களாகப் பங்கு பெறுவதற்குத் தேர்ந்தெடுத்துள்ளது.
- அவர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்குப் அந்த அந்தஸ்தினைக் கொண்டிருக்கும்.
- அவை டிசம்பர் 31 ஆம் தேதியன்று பதவிக் காலம் முடிவடைய உள்ள ஈக்வடார், ஜப்பான், மால்டா, மொசாம்பிக் மற்றும் சுவிட்சர்லாந்திற்குப் பதிலாக இந்த அந்தஸ்தினைப் பெற உள்ளன.
- பாதுகாப்புச் சபையில் உள்ள 10 நிரந்தரமற்ற இடங்கள் நான்கு பிராந்திய குழுக்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.
- அவையாவன: ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா; கிழக்கு ஐரோப்பா; லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன்; மற்றும் மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற மாநிலங்கள் குழு ஆகியன ஆகும்.


## கார்டி சுக்துப் தீவில் இருந்து வெளியேறும் மக்கள்

- கடல் மட்டம் உயர்வதால் பனாமாவின் கார்டி சுக்துப் தீவில் இருந்து சுமார் 300 குடும்பங்கள் வெற்றிகரமாக புலம் பெயர்ந்துள்ளனர்.
- பருவநிலை மாற்றம் காரணமாக ஒரு தீவு முழுச் சமூகத்தையும் வெளியேற்றும் முதல் நாடாக இந்த லத்தீன் அமெரிக்க நாடு உருவாக உள்ளதை இது குறிக்கிறது.
- குணா யாலா என்ற பிரதேசத்தின் தீவுக் கூட்டத்தில் உள்ள மக்கள் வசிக்கும் சுமார் 50 தீவுகளில் கார்டி சுக்துப் தீவும் ஒன்றாகும்.




## உலகின் முதல் மின்சார வாகனங்களின் மின்கலங்களுக்கான கடவுச்சீட்டு

- வோல்வோ கார்ஸ் நிறுவனம் ஆனது, அதன் முதன்மையான EX90 SUV வாகனத்திற்காக உலகிலேயே முதல் முறையாக மின்சார வாகனங்களின் மின்கலங்களுக்கான கடவுச் சீட்டினை அறிமுகப்படுத்துகிறது.
- 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தில் விற்கப்படும் மின்சார வாகனங்களுக்கு (EVs) மின்கலக் கடவுச் சீட்டு பெறுவது கட்டாயமாக்கப்பட உள்ளது.
- முக்கியப் பொருட்களின் தோற்று இடம், அவற்றின் கார்பன் தடம் மற்றும் மறுசுழற்சி செய்யப்பட்ட பாகங்கள் உள்ளிட்ட மின்கலங்களின் கலப்பு குறித்தத் தகவல்களை இது கொண்டிருக்கும்.




## சர்வதேச சுகாதார விதிமுறைகள்

- 194 உறுப்பினர் நாடுகளின் ஒரு வருடாந்திரக் கூட்டமான 77வது உலக சுகாதாரச் சபையானது, சர்வதேச சுகாதார விதிமுறைகளில் (2005) (IHR) மேற்கொள்ளப்பட்ட முக்கியமான திருத்தங்களின் தொகுப்பை ஏற்றுக் கொண்டது.

- எதிர்காலப் பெருந்தொற்றுகள் மற்றும் தொற்றுநோய்களின் அபாயத்திலிருந்து அனைத்து மக்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் பாதுகாப்பதற்காக அனைத்து நாடுகளிலும் இது விரிவான, வலுவான அமைப்புகள் இருப்பதை உறுதி செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IHR விதிமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய திருத்தங்களில் பின்வருவன அடங்கும்:
    - பெருந்தொற்று அவசரநிலைக்கு ஒரு வரையறையை அறிமுகப்படுத்துதல்,
    - மருத்துவப் பொருட்கள் மற்றும் நிதியுதவிக்கான அணுகலை வலுப்படுத்துவதில் ஒற்றுமை மற்றும் சமத்துவத்திற்கான உறுதிப்பாடு,
    - திருத்தப்பட்ட ஒழுங்குமுறைகளைத் திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக அரசுகளின் குழுவை அமைத்தல்,
    - தேசிய IHR அதிகாரிகளை உருவாக்குதல்.




## NaturAfrica திட்டம்

- NaturAfrica திட்டத்திற்கு ஐரோப்பிய ஆணையம் நிதியளிக்கிறது.
- இது பல்லுயிரியலைப் பாதுகாப்பதையும், முக்கிய ஆப்பிரிக்க நிலப்பரப்புகளில் நிலையான மேம்பாட்டினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமீபத்தில், மனித உரிமை மீறல் நிகழ்வுகள் காரணமாக ஐரோப்பிய ஆணையம் ஆனது தான்சானியாவை இந்தத் திட்டத்தில் இருந்து விலக்கியது.
- தான்சானியாவில் உள்ள கோரோரோன்கோரோ பாதுகாப்புப் பகுதி மற்றும் லோலியோண்டோவில் இருந்து மசாய் பழங்குடிச் சமூகங்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல் நிகழ்வுகள் பதிவாகின.
- சமீபத்தில், உலக வங்கி மற்றும் ஜெர்மன் மேம்பாட்டு ஒத்துழைப்பு அமைப்பு போன்ற பிற நிறுவனங்களும் இதே போன்ற நிகழ்வுகளால் அப்பிராந்தியத்தில் தங்களது நிதியளிப்புத் திட்டங்களை நிறுத்தியுள்ளன.





## ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் புதிய நாடுகள் இணைவு

- ஸ்லோவாக்கியா மற்றும் பெரு ஆகிய நாடுகள் விண்வெளியில் பாதுகாப்பான ஆய்வை மேற்கொள்வதற்கான அமெரிக்க நாட்டின் தலைமையிலான நாசாவின் ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த இரு நாடுகளின் இணைவினால், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் மொத்த எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது.
- ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கைகள் முதன்முதலில் 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்ட போது அமெரிக்கா உட்பட எட்டு நாடுகள் அதில் கையெழுத்திட்டன.
- இது பொதுவான ஆய்வு மற்றும் விண்வெளி, நிலவு, செவ்வாய், வால் நட்சத்திரங்கள் மற்றும் குறுங்கோள்கள் ஆகியவற்றை அமைதியான பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கானப் பொதுவான கொள்கைகளை நிறுவுவதை பெரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பசுமை சார் கல்விக்கான யுனெஸ்கோவின் புதிய செயற்கருவிகள்

- UNESCO அமைப்பின் பசுமை சார் கல்விக் கூட்டாண்மையின் கீழ் பசுமை சார் பாடத் திட்ட வழிகாட்டுதல் (GCG) மற்றும் பசுமை சார் பள்ளி தரத் தரநிலைகள் (GSQS) ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பருவநிலை சார்ந்த கல்வி எதைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் பாடத் திட்டங்களில் சுற்றுச்சூழலைப் பற்றிய கருத்துக்களை உலக நாடுகள் எவ்வாறு பிரதானப் படுத்தலாம் என்பது பற்றிய பொதுவான புரிதலை வழங்கும் ஒரு செயல் முறை கையேடுயாகும்.
- கொள்கை வகுப்பாளர்கள், கல்வி அமைச்சகங்கள், கல்வியாளர்கள், கற்பவர்கள் மற்றும் சமூகங்கள் இந்தத் திட்டத்தின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டவர்கள் ஆவர்.
- யுனெஸ்கோ அமைப்பின் சமீபத்தியக் கணக்கெடுப்பில் 100 நாடுகளில் 50% நாடுகள் தங்கள் பாடத் திட்டத்தில் பருவநிலை மாற்றம் பற்றி குறிப்பிடவில்லை.
- சுமார் 70% இளைஞர்களால் பருவநிலை சீர்குலைவு பற்றி விளக்க முடியவில்லை.

Figure 1: Key principles of greening education




## கருங்காய்ச்சல் (VL) வழிகாட்டல் கட்டமைப்பு

- உலக சுகாதார அமைப்பானது (WHO) கிழக்கு ஆப்பிரிக்காவில் கருங்காய்ச்சல் நோயை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்கும் புதிய கருங்காய்ச்சல் (உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸ்) கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் கிழக்கு ஆப்பிரிக்காவின் துணைப் பிராந்தியத்தில் VL பாதிப்பு எண்ணிக்கைகளை 90 சதவிகிதம் குறைத்து, ஆண்டிற்கு சுமார் 1,500க்கும் குறைவான எண்ணிக்கையாக குறைப்பது என்பது இதன் இலக்குகளில் அடங்கும்.
- இந்தி மொழியில் காலா-அசார் என்று அழைக்கப்படுகிற இது பாதிக்கப்பட்ட பெண் மணல் ஈக்கள் கடிப்பதால் பரவுகிறது மற்றும் 80 நாடுகளில் இதன் தொற்று பரவுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய VL பாதிப்புகளில் 73 சதவீதப் பாதிப்புகள் கிழக்கு ஆப்பிரிக்காவில் பதிவானது என்ற நிலையில் இதில் 50 சதவீதமானது 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் ஏற்பட்டது.
- முன்னதாக, 2004 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட உலகளாவியப் பாதிப்புகளில் வங்காளதேசம், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் 70 சதவீதப் பங்கினை கூட்டாகக் கொண்டிருந்தன.

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், வங்காளதேசம் VL நோயினை வெற்றிகரமாக ஒழித்து விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்ததையடுத்து அந்த நாடு இந்த சாதனையினை எட்டிய உலகின் முதல் நாடு என்ற பெருமையினை அடைந்தது.

Annex. Reported incidence of visceral leishmaniasis, 2010-2022

| Country | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | Total | Average of 13 years (2010-2022) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Chad | 96 | 59 | 74 | 0 | 2 | 0 | ND | ND | ND | ND | ND | ND | ND | 231 | 18 |
| Djibouti | 16 | 35 | 9 | 1 | 12 | 34 | 9 | 10 | ND | ND | ND | ND | ND | 126 | 10 |
| Eritrea | 283 | 268 | 1034 | 514 | 502 | ND | ND | ND | ND | ND | ND | ND | ND | 2601 | 200 |
| Ethiopia | 881 | 794 | 1077 | 1360 | 1828 | 1490 | 1593 | 1990 | 2705 | 1732 | 2381 | 2032 | 1936 | 21 799 | 1677 |
| Kenya | 1573 | 1746 | 1178 | 1621 | 590 | 950 | 692 | 894 | 580 | 181 | 457 | 406 | ND | 11 168 | 859 |
| Somalia | 793 | 831 | 471 | 294 | 411 | 857 | 780 | 1165 | 1045 | 936 | 394 | 290 | ND | 8267 | 636 |
| South Sudan | 1058 | 792 | 827 | 1013 | 1867 | 3567 | 4285 | 2840 | 7472 | 2364 | 4353 | 10 468 | 9166 | 50 072 | 3852 |
| Sudan | 4347 | 3323 | 2563 | 2851 | 2711 | 3894 | 3810 | 2829 | 3415 | 2389 | 5153 | 7418 | 6957 | 51 660 | 3974 |
| Uganda | 262 | 129 | 55 | 101 | 29 | 31 | 35 | 34 | 32 | 141 | 86 | 77 | 78 | 1090 | 84 |
| Total | 9309 | 7977 | 7288 | 7755 | 7952 | 10 823 | 11 204 | 9762 | 15 549 | 7743 | 12 824 | 20 691 | 18 137 | 147 014 | 11 309 |

## கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு - அர்மேனியா




- அர்மேனியா நாட்டுப் பிரதமர், அந்த நாட்டு அரசானது கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பிலிருந்து (CSTO) வெளியேற உள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.


- CSTO என்பது தாக்குதல் ஏற்பட்டால் தங்களுக்குள் ஒன்றையொன்றுப் பாதுகாப்பதாக உறுதியளித்துள்ள முன்னாள் சோவியத் நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட, ரஷ்யாவின் தலைமையிலான கூட்டணியாகும்.
- ரஷ்ய நாட்டு அரசானது, நாகோர்னோ-கராபாக் விவகாரத்தில் தலையிட மறுத்ததால் ரஷ்யாவுடனான அர்மேனியாவின் உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளன.
- அர்மேனியா நாடானது, ரஷ்ய நாட்டின் அதிபருக்கு பிடியாணை பிறப்பித்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பிப்ரவரி மாதத்தில் இணைந்தது.
- இந்த CSTO அமைப்பானது 2002 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த அரசுகளுக்கு இடையேயான இராணுவக் கூட்டணி (ஆறு நாடுகள்) ஆகும்.

## உக்ரைன் சந்திப்பு அறிக்கை

- சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற அமைதி மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட இறுதி ஆவணத்தை இந்தியா ஏற்க மறுத்துள்ளது.
- சுவிட்சர்லாந்தில் பர்கென்ஸ்டாக் நகரில் வெளியிடப்பட்ட "சமாதானக் கட்டமைப்பின் மீதான கூட்டு அறிக்கைக்கு" ஒப்புதல் அளிப்பதற்கு மறுத்த சுமார் ஏழு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- உக்ரைனின் சமாதானக் கட்டமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் தீர்மானங்கள் அடிப்படையில் வெகுவாக கட்டமைக்கப்பட்ட உக்ரைனின் "பிராந்திய ஒருமைப்பாட்டை" பாதுகாப்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில், இதுவரை 80க்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மெக்சிகோ மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை இந்த அறிக்கையில் கையெழுத்திட மறுத்த இதர நாடுகளாகும்.
- பிரேசில் ஒரு பார்வையாளர் நாடாக இதில் கலந்து கொண்டது என்ற நிலையில் இதில் பங்கேற்பதற்கான அழைப்பினைச் சீனா முற்றிலும் நிராகரித்தது.


## அல்சைமர் நோய்க்கான புதிய மருந்து

- அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பின் (FDA) சுயாதீன ஆலோசகர்கள் குழுவானது டோனனெமாப் என்ற ஒரு புதிய அல்சைமர் மருந்திற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- டோனனெமாப் என்பது மூளையில் உள்ள அமிலாய்டு பீட்டா புரதப் படலங்களை குறி வைக்கின்ற ஓர் ஓரின நகல் நோய் எதிர்ப்பொருள் (மோனோக்ளோனல் ஆன்டிபாடி) ஆகும்.
- இச்சிகிச்சையானது நோயின் முன்னேற்றத்தைக் குறைத்தாலும், அது முழுவதுமாக நோயினைக் குணப்படுத்துவதில்லை.
- பல வகை அல்சைமர் நோய்கள் உள்ளதால், அவற்றிற்கு என்று பல்வேறு சிகிச்சைகள் தேவைப் படும்.




## STSS தொற்றுகள் அதிகரிப்பு – ஜப்பான்

- நாடு முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட கொடிய தொற்றுப் பாதிப்புகள் பதிவாகியதை அடுத்து ஜப்பான் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளது.
- இந்த நோயானது ஸ்ட்ரெப்டோகாக்கல் டாக்சிக் ஷாக் சிண்ட்ரோம் (STSS) அல்லது 'சதை உண்ணும் பாக்டீரியா' என அழைக்கப்படுகிறது.
- இது வேகமாகப் பரவி, குறுகிய காலத்திற்குள் உயிரிழப்பை ஏற்படுத்துகிறது.
- STSS என்பது A குழும ஸ்ட்ரெப்டோகாக்கஸ் பாக்டீரியாவினால் ஏற்படும் அரிதான அதே சமயம் தீவிரமான பாக்டீரியத் தொற்று ஆகும்.
- இந்தப் பாக்டீரியாக்கள் ஆழமான திசுக்கள் மற்றும் இரத்த ஓட்டத்தில் நுழைந்து உடலில் விரைவான மற்றும் ஆபத்தான எதிர் வினைகளை ஏற்படுத்தும் நச்சுகளை வெளியிடுவதால் இந்த நோய்த் தொற்று ஏற்படுகிறது.




## G7 உச்சி மாநாடு 2024

- இத்தாலியின் அபுலியா நகரில் நடைபெற்ற G7 உச்சி மாநாட்டில் G7 குழு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.
- G7 நாடுகளோடு சேர்த்து, இந்தியா, போப் பிரான்சிஸ் மற்றும் உக்ரைன் அதிபர் விளாடிமிர் செலென்ஸ்கி ஆகியோருக்கும் 2024 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
- ஜோர்டான் மன்னர், பிரேசில், அர்ஜென்டினா, துருக்கி, ஐக்கிய அரபு அமீரகம், கென்யா, அல்ஜீரியா, துனிசியா மற்றும் மௌரிடானியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் புக்லியாவின் தெற்குப் பகுதியில் உள்ள போர்கோ எக்னாசியாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.
- அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகியவை தங்களுக்கு இடையிலான உறவுகளில் ஒரு முக்கிய மைல்கல்லாக 10 ஆண்டு காலப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- G7 உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட முதல் போப்பாண்டவர் என்ற ஒரு பெருமையை வாடிகன் தலைவர்போப் பிரான்சிஸ் பெற்றுள்ளார்.
- G7 குழும நாடுகள் ஆனது, முடக்கப்பட்ட ரஷ்யச் சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட இலாபம் மூலம் உக்ரைனுக்கு 50 பில்லியன் டாலர் நிதியுதவி அளிக்க ஒப்பந்தம் செய்து உள்ளன.

## செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்கு NATO நிதி


- நேட்டோ அமைப்பின் நட்பு நாடுகளின் கூட்டமைப்பு ஆனது, அதன் ஒரு பில்லியன் யூரோ புத்தாக்க நிதியிலிருந்து நிதி பெறும் நிறுவனங்களின் முதல் பட்டியல் தொகுப்பினை உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில் கூட்டணியில் இணைந்த பின்லாந்து மற்றும் சுவீடன் உட்பட நேட்டோவின் 32 உறுப்பினர் நாடுகளில் 24 நாடுகளால் இந்த நிதிக்கு நிதியளிக்கப் படுகிறது.

- செயற்கை நுண்ணறிவு, எந்திர மனித அமைப்புகள் மற்றும் விண்வெளி தொழில் நுட்பங்களை உருவாக்கச் செய்வதன் மூலம் பாதுகாப்பு, காப்பு மற்றும் நெகிழ்திறன் ஆகியவற்றில் உள்ள சவால்களை எதிர்கொள்ள இது உதவும்.

## வார்ட்சிலா எஞ்சின் இயக்க ஆற்றல் உற்பத்தி ஆலை

- ஆஸ்திரேலியாவின் வார்ட்சிலா என்னும் நிறுவனம் உலகின் முதல் பெரிய அளவிலான முழுவதும் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் எஞ்சின் இயக்க மின் உற்பத்தி நிலையத்தினைத் தொடங்கியுள்ளது.
- புதிய இயந்திர இயக்க மின் உற்பத்தி ஆலையானது, இயற்கை எரிவாயு மற்றும் 25% ஹைட்ரஜன் ஆகிய கலவையில் இயங்கும்.
- ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் மின் உற்பத்தி நிலையத்தை அடிப்படையாகக் கொண்ட வார்ட்சிலா 31 எஞ்சின் இயக்க ஆலையானது, உலகிலேயே மிகவும் செயல் திறன் மிக்கது ஆகும்.
- முழுவதும் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இயந்திர இயக்க ஆலையானது, 2025 ஆம் ஆண்டில் கொள்முதல் பதிவுகளுக்கும், மேலும் 2026 ஆம் ஆண்டு முதல் வழங்கீடுகளுக்கும் கிடைக்கப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏப்ப (Burp) வரி – நியூசிலாந்து





- நியூசிலாந்து அரசாங்கம் ஆனது, 'பர்ப் வரியினை' - கால்நடைகளில் இருந்து ஏப்பம் வழியே வெளியேறும் பசுமை இல்ல வாயுக்களுக்கு வரி விதிக்கும் திட்டம் - ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அப்போதையப் பிரதமர் ஜசிந்தா ஆடர்ன் அரசால் இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- நியூசிலாந்தில், சுமார் 10 மில்லியன் கால்நடைகளும் 25 மில்லியன் செம்மறி ஆடுகளும் உள்ள நிலையில், அவை நாட்டின் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் சுமார் பாதியளவுப் பங்கினை வகிக்கின்றன.
- இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமானது, அசை போடும் விலங்கு (ரூமினன்ட்) இனங்களிலிருந்து வெளியேறும் மீத்தேன் உமிழ்வைக் குறைப்பதாகும்.

## ஹிஜாப் அணிவதற்குத் தடை – தஜிகிஸ்தான்




- ❖ ஹிஜாப் எனப்படும் தலையை மறைக்கும் ஆடைகள் அணிவதனைத் தடை செய்யும் மசோதாவிற்கு தஜிகிஸ்தான் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ அவையானது, "அந்நிய ஆடைகள்" மற்றும் ஈத் அல்-பித்ர் மற்றும் ஈத் அல்-ஆதா ஆகிய இரண்டு மிகப்பெரும் முக்கியமான இஸ்லாமிய விடுமுறை நாட்களில் குழந்தைகளின் கொண்டாட்டங்கள் ஆகியவற்றிற்குத் தடை விதித்துள்ளது.
- ❖ இந்தத் தடையானது, தஜிகிஸ்தான் நாட்டுக் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக அந்நாட்டின் செயல்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக கொண்டு வரப்பட்டு உள்ளது.

## மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் – சாட்




- ❖ 2024 ஆம் ஆண்டில், புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயான மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் (HAT) - தூக்க வியாதி - என்ற நோயினை அகற்றிய உலகின் 51 ஆவது நாடாகவும், முதல் நாடாகவும் சாட் மாறியுள்ளது.
- ❖ HAT ஆனது பாதிக்கப்பட்ட செட்சி வகை ஈக்கள் மூலம் பரவும் புரோட்டோசோவா ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது.
- ❖ இந்த நோய் ஆனது சிகிச்சை அளிக்கப்படாமல் விட்டால் உயிருக்கு ஆபத்தானதாகும்.
- ❖ HAT நோய்ப் பாதிப்பில் இரண்டு வடிவங்கள் உள்ளன என்ற நிலையில் அவை சம்பந்தப் பட்ட ஒட்டு உண்ணியின் கிளையினங்களால் தீர்மானிக்கப்படுகின்றன:

- டிரிபனோசோமா புரூசி கேம்பியன்ஸ் என்பது பதிவாகியுள்ள 92% பாதிப்புகளுக்கு காரணமாக உள்ளது;
- டிரிபனோசோமா புரூசி ரோடீசியன்ஸ் மீதமுள்ள 8 சதவீதப் பாதிப்புகளுக்கு காரணமாகும்.

## அமெரிக்கா – 'நுண்பள்ளிகள்' தோற்றம்

- அமெரிக்காவில் 7 மாணவர்களுடன் கூடிய 'நுண்பள்ளிகள்' உருவாக்கி வருகின்றன.
- நுண்பள்ளிகள் என்பது சராசரியாக 16 குழந்தைகளைக் கொண்டு முழு நேர, பகுதி நேர அல்லது கலப்பு நேர அடிப்படையிலான கல்விச் சேவையினை வழங்கும் மிகவும் சிறிய தனியார் கல்வி நிறுவனங்களாகும்.
- இந்தப் பள்ளிகள் முழு நேர ஆசிரியர்களுடன், பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டு, சில சமயங்களில் தரப்படுத்தப்பட்ட தேர்வுகளுடன் பெரும்பாலும் வாரத்திற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் திறந்திருக்கும்.
- தேசிய நுண் பள்ளிக் கல்வி மையம், நாடு முழுவதும் 1 மில்லியனுக்கும் அதிகமான மாணவர்களுக்கு கல்வி சேவை வழங்கி வரும் 95,000 நுண்பள்ளிகள் மற்றும் வீட்டுப் பள்ளிக் கூடங்கள் உள்ளன என்று மதிப்பிட்டுள்ளது.

## அஸ்ம்-இ-இஸ்தேகாம் நடவடிக்கை





- வன்முறையின் எழுச்சியை அடக்கும் நோக்கில் ஒரு புதிய ராணுவ நடவடிக்கையைத் தொடங்க பாகிஸ்தானின் உயர்மட்டத் தலைமை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 'அஸ்ம்-இ-இஸ்தேகாம்', அதாவது உருது மொழியில் நிலைத்தன்மைக்கான தீர்வு என்று அழைக்கப்படுகிறது.
- உள்நாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து வரும் ஆயுதமேந்திய போராளிகளின் செயல்பாடுகளை எதிர்கொள்வதை இது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாகிஸ்தான் இராணுவம் ஆனது, 2001 ஆம் ஆண்டு முதல், எல்லைப் பகுதிகளில் உள்ள உள்நாட்டுத் தீவிரவாதிகளுக்கு எதிராக "ஷர்ப்-இ-அஷ்ப்", "ரஹ்-இ-நிஜாத்", "ரஹ்-இ-ரஸ்த்" போன்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## மதிப்பு பணவீக்கக் குறியீடு 2023/24

- 2024-25 ஆம் நிதியாண்டிற்கான மதிப்பு பணவீக்கக் குறியீடு (CII) ஆனது 363 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- கடந்த நிதியாண்டில் இது 348 ஆகவும், 2022-23 ஆம் நிதியாண்டில் 331 ஆகவும் இருந்தது.
- இது 4.3 சதவீத உயர்வைக் காட்டுகிறது.
- மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) இந்தக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- CII என்பது பணவீக்கத்தினை அதாவது, பல ஆண்டுகளாக ஒரு பொருள் அல்லது சேவையின் விலையில் பதிவான மதிப்பிடப்பட்ட அதிகரிப்பினை கணக்கிடச் செய்வதற்கான ஒரு வழிமுறையாகும்.
- பணவீக்கத்தின் விளைவை நன்கு பிரதிபலிக்கும் வகையில் முதலீட்டின் கொள்முதல் விலையை ஈடு செய்ய இந்தக் குறியீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.
- அதிக கொள்முதல் விலை என்பது குறைந்த இலாபம், அதாவது குறைந்த வரியாகும்.




## இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய முன்னெடுப்புகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது PRAVAAH இணைய தளம், retail direct கைபேசி செயலி மற்றும் நிதித் தொழில்நுட்பக் களஞ்சியம் ஆகிய மூன்று முக்கிய முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த மூன்று முன்னெடுப்புகளும் முறையே 2023 ஆம் ஆண்டு ஏப்ரல், ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் அறிவிக்கப்பட்டன.
- PRAVAAH என்பது எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவனமும் அங்கீகாரம் பெறுவதற்கு பாதுகாப்பான மற்றும் மையப்படுத்தப்பட்ட இணைய அடிப்படையிலான இணைய தளமாகும்.

- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட retail direct திட்டம் மூலம் சில்லறை முதலீட்டாளர்கள் இந்திய ரிசர்வ் வங்கியுடன் நேரடி சில்லறை உயர் பாதுகாப்பு நிதிக் கணக்குகளை உருவாக்க retail direct தளம் உதவும்.
- retail direct கைபேசிச் செயலி மூலம், சில்லறை முதலீட்டாளர்கள் தற்போது தங்கள் கைபேசிகளைப் பயன்படுத்தி அரசுப் பத்திரங்களைக் கையாளலாம்.




## மூன்றாம் தரப்புப் பரிவர்த்தனை மாதிரி




- நான்கு ஐரோப்பிய வங்கிகள் மூன்றாம் தரப்புப் பரிவர்த்தனை மாதிரியை அங்கீகரிக்குமாறு இந்திய ரிசர்வ் வங்கியிடம் (RBI) கோரிக்கை விடுத்துள்ளன.
- கிரெடிட் அக்ரிகோல், சொசைட்டி ஜெனரல், டாய்ச் வங்கி மற்றும் BNP பரிபாஸ் ஆகிய நிறுவனங்கள் தணிக்கை மேற்பார்வை உரிமைகள் தொடர்பாக தங்கள் நிறுவன அதிகாரிகளுக்கும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே உள்ள பல தடைகளைத் தீர்க்க முயல்கின்றன.

- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், ஐரோப்பியப் பங்குகள் மற்றும் சந்தை ஆணையம் (ESMA) ஆனது இந்தியப் பங்கு வெளியீட்டுக் கழகத்தின் (CCIL) அங்கீகரித்ததை நீக்கியதிலிருந்து இந்திய அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் பல்வேறு வகையீடுகளை வர்த்தகம் செய்வதில் ஐரோப்பிய வங்கிகள் பெரும் தடைகளை எதிர் கொள்கின்றன.
- CCIL மீதான தணிக்கை மற்றும் ஆய்வு உரிமைகளை வழங்க இந்திய ரிசர்வ் வங்கி மறுத்ததன் விளைவாக ESMA ஆணையத்தின் முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- இந்த உரிமைகள் உள்நாட்டு அரசாங்கப் பத்திர வர்த்தகத்தை மேற்பார்வையிடச் செய்வதோடு, அதற்கான தீர்வுகளை உறுதிப்படுத்துகின்றன.

## தங்க கையிருப்புப் பரிமாற்றம்

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, ஐக்கியப் பேரரசில் இருந்து இந்தியாவில் உள்ள அதன் காப்புப் பெட்டகங்களுக்கு தோராயமாக 100 டன் (1 லட்சம் கிலோகிராம்) தங்கத்தைக் கொண்டு வந்துள்ளது.
- 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா இவ்வளவு பெரிய அளவிலான தங்கக் கையிருப்புப் பரிமாற்றத்தினை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க கையிருப்பில் பாதிக்கும் மேற்பட்டவை, வெளி நாடுகளில் பாங்க் ஆஃப் இங்கிலாந்து மற்றும் பேங்க் ஆஃப் இன்டர்நேஷனல் செட்டில் மென்ட் ஆகியவற்றில் பாதுகாப்பான பெட்டகங்களில் உள்ளன.
- தோராயமாக மூன்றில் ஒரு பங்கு உள்நாட்டில் சேமிக்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று நிலவரப்படி, மத்திய வங்கி அதன் அந்நியச் செலாவணி கையிருப்பின் ஒரு பகுதியாக 822.10 டன் தங்க கையிருப்பினை கொண்டு உள்ளது.
- இந்தியா தற்போது, தனது தங்கக் கையிருப்பின் பெரும்பகுதியை அதன் சொந்தப் பெட்டகங்களில் வைத்திருக்கும்.

**Table XII.4: Physical holding of Gold**

| | As on March 31, 2023 | As on March 31, 2024 |
|---|---|---|
| | Volume in metric tonnes | Volume in metric tonnes |
| 1 | 2 | 3 |
| Gold held as backing for Notes Issued (held in India) | 301.09 | 308.03 |
| Gold (including Gold Deposit) held as asset of Banking Department (including gold held abroad) | 493.54 | 514.07# |
| **Total** | **794.63** | **822.10** |


#: 100.28 metric tonnes held in India and 413.79 metric tonnes held abroad.

## இந்திய ரிசர்வ் வங்கியின் வருடாந்திர அறிக்கை 2023-24

| Sector | Growth Rate | | | | Share | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Average 2016-17 to 2023-24 | 2021-22 | 2022-23 | 2023-24* | 2021-22 | 2022-23 | 2023-24* |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| GDP at Market Prices (Expenditure Side) | | | | | | | |
| 1. Private Final Consumption Expenditure | 5.4 | 11.7 | 6.8 | 3.0 | 58.1 | 58.0 | 55.6 |
| 2. Government Final Consumption Expenditure | 5.0 | 0.0 | 9.0 | 3.0 | 9.9 | 10.0 | 9.6 |
| 3. Gross Fixed Capital Formation | 7.0 | 17.5 | 6.6 | 10.2 | 33.4 | 33.3 | 34.1 |
| 4. Change in Stocks | 57.1 | 525.4 | 14.5 | 5.0 | 1.1 | 1.1 | 1.1 |
| 5. Valuables | 6.9 | 32.5 | -19.1 | 13.8 | 1.9 | 1.4 | 1.5 |
| 6. Net Exports | -79.2 | 47.0 | 52.7 | -517.8 | -1.0 | -0.4 | -2.5 |
| a) Exports | 7.0 | 29.6 | 13.4 | 1.5 | 22.6 | 23.9 | 22.6 |
| b) Less Imports | 7.6 | 22.1 | 10.6 | 10.9 | 23.6 | 24.4 | 25.1 |
| 7. Discrepancies | -15.5 | -386.9 | 11.2 | -121.0 | -3.3 | -3.4 | 0.7 |
| 8. GDP | 5.5 | 9.7 | 7.0 | 7.6 | 100.0 | 100.0 | 100.0 |

- ஏப்ரல் மாதத்தில் தொடங்கிய நடப்பு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 7% வளர்ச்சி அடையும்.
- முந்தைய ஆண்டில் 7.0% ஆக இருந்த உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 7.6% ஆக அதிகரித்துள்ளதுடன் இந்தியப் பொருளாதாரமானது நன்கு மேம்பட்டுள்ளது என்பதோடு இது 7% அல்லது அதற்கு மேற்பட்ட வளர்ச்சி பதிவான மூன்றாவது தொடர்ச்சியான பதிவாகும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி என்பது நிதி அபாயங்கள் சமமாக பேணப்பட்டதுடன் 7.0% என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிகர வருமானம் 2024 ஆம் நிதியாண்டில் 2.11 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்ற நிலையில் இது முந்தைய நிதியாண்டில் சுமார் 87,420 கோடி ரூபாயாக இருந்தது.
- இந்த நிதியாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்புநிலை மதிப்பு ஆனது 11.08% அதிகரித்து 70.48 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.


## இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கை புதுப்பிப்பு




- இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக் குழுவானது, ரெப்போ விகிதத்தை தொடர்ந்து 8வது முறையாக 6.5% ஆகவே மாற்றாமல் நீடிக்க முடிவு செய்துள்ளது.

- மேலும் இது ‘பணப் புழக்கத்தினைக் குறைத்தல்’ என்ற நிலைப்பாட்டை தொடரவும் முடிவு செய்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது 2025 ஆம் நிதியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக் கணிப்பினை, முன்னதாக கணிக்கப்பட்ட 7 சதவீதத்திற்கு மாற்றாக 7.2 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- மத்திய வங்கியானது 2025 ஆம் நிதி ஆண்டிற்கான பணவீக்க முன்னறிவிப்பை 4.5% ஆக வைத்துள்ளது.

## அந்நியச் செலாவணி கையிருப்பு – ஜூன் 2024





- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது மே 31 ஆம் தேதியன்று நிலவரப் படி அதிகபட்சமாக 651.5 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- அந்த வாரத்தில் பதிவான கையிருப்பானது 4.8 பில்லியன் டாலர் உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது கடந்த இரண்டு மாதங்களில் ஏற்பட்ட உயர்வை விட மிகப்பெரிய உயர்வு ஆகும்.
- இவை அதற்கு முந்தைய வாரத்தில் 2 பில்லியன் டாலர் அளவிற்குக் குறைந்திருந்தது.

## வீட்டு மனைத் துறையில் முதலீட்டிற்கான உலகளாவிய இலக்குகள்

- மார்ச் மாத காலாண்டிற்கான, நிலம் மற்றும் மேம்பாட்டுத் தள முதலீடுகளில் உலக அளவிலான நாடுகளுக்கிடையேயான முன்னணி முதலீட்டு இடங்களில் ஒன்றாக இந்தியா இடம் பிடித்துள்ளது.
- இதில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் 55% முதலீடுகளைக் கொண்டுள்ளனர்.
- மேலும் குறிப்பிடத்தக்க வகையில், புதிய வெளிநாட்டு முதலீடுகளில் 73% பேர் ஆயத்த நிலை சொத்துக்களில் முதலீடு செய்வதை இலக்காகக் கொண்டுள்ளனர்.
- இந்திய வீட்டுமனை விற்பனை துறையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகளானது 2023 ஆம் ஆண்டில் சுமார் 3.6 பில்லியன் டாலர்களை எட்டியது என்ற நிலையில் இது இந்தியாவின் மொத்த முதலீட்டு வருவாயில் 67% ஆகும்.




## வீட்டு நுகர்வுச் செலவினக் கணக்கெடுப்பு 2022-23




- ❖ பணவீக்கத்தின் தாக்கத்தினை ஈடுசெய்த பிறகு, 2022-23 ஆம் ஆண்டில் கிராமப்புற இந்தியாவில் மாதாந்திர தனிநபர் வீட்டு நுகர்வுச் செலவினம் சுமார் 40 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- ❖ முழுமையான அளவில், 2011-12 ஆம் ஆண்டில் 1,430 ரூபாயாக இருந்த நாட்டின் கிராமப் புறங்களில் மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 2,008 ரூபாயாக உயர்ந்தது.

- 2011-12 ஆம் ஆண்டில் பணவீக்கத்தின் தாக்கத்தினை ஈடு செய்த பிறகு, 2022-23 ஆம் ஆண்டில் 2,360 ரூபாயாக இருந்த தனிநபர் குடும்ப நுகர்வுச் செலவினம் ஆனது 3,510 ஆக உயர்ந்துள்ளதால், நகர்ப்புற இந்தியாவிலும் சுமார் 33 சதவீதம் வரை வலுவான அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- பணவீக்கத்தின் மூலமான தாக்கத்தினை நீக்காமல், 2022-23 ஆம் ஆண்டில் நகர்ப்புறக் குடும்பங்களுக்கான செலவினம் சுமார் 6,459 ரூபாயாகவும், அதுவே கிராமப்புறக் குடும்பங்களுக்கான செலவினம் சுமார் 3,773 ரூபாயாகவும் இருந்தது.
- இது 2011-12 ஆம் ஆண்டில் முறையே 2,630 ரூபாய் மற்றும் 1,430 ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில், சராசரி கிராமப்புறக் குடும்பங்களின் நுகர்வில் உணவிற்கான செலவினமானது சுமார் 46 சதவீதமாக இருந்தது.
- நகர்ப்புறக் குடும்பங்கள் ஆனது தங்கள் மாதாந்திரத் தனிநபர் நுகர்வில் சுமார் 39 சதவீதத்தினை உணவிற்காக ஒதுக்கியுள்ளனர்.

## சுவிஸ் வங்கியில் இந்தியச் சொத்துக்கள்

- கடந்த ஆண்டு சுவிஸ் வங்கிகளில் இந்திய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் வைத்திருந்த பண மதிப்பில் கணிசமான வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
- சுவிட்சர்லாந்தின் மத்திய வங்கியின் கூற்றுப்படி, இந்த நிதிகள் 2023 ஆம் ஆண்டில் 70% சரிந்து 1.04 பில்லியன் சுவிஸ் பிராங்குகளாக (சுமார் 9,771 கோடி ரூபாய்) குறைந்து உள்ள நிலையில் இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைவான அளவு ஆகும்.
- 2023ம் ஆண்டின் இறுதியில் சுவிஸ் வங்கிகளின் இந்திய வாடிக்கையாளர்களுக்கான மொத்தக் கடன்கள் 1,039.8 மில்லியன் பிராங்குகளாக இருந்தன.
- சுவிஸ் வங்கிகளில் இந்திய வாடிக்கையாளர்களின் மொத்த நிதி 2021 ஆம் ஆண்டில் 3.83 பில்லியன் பிராங்குகள் என்ற அளவில் உச்சத்தைத் தொட்டது என்பதோடு இது கடந்த 14 ஆண்டுகளில் பதிவாகாத மிக அதிக அளவாகும்.
- சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் நிதிகளுக்கான உலகளாவியத் தரவரிசையில், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியா 67வது இடத்தில் இருந்ததோடு ஒரு வருடத்திற்கு முன்பு இந்தியா 46வது இடத்தில் இருந்தது.
- அதே நேரத்தில், ஐக்கியப் பேரரசு, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியவை இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.



## 53வது சரக்கு மற்றும் சேவை வரி சபைக் கூட்டம்

**53rd GST Council Meet: Key Updates**


- **Interest & Penalty Waived:** No interest or penalties for demand notices under Section 73 for FY 2017-18, 2018-19, and 2019-20 if tax paid by 31.03.2025.
- **ITC Time Limit Extended:** Deadline to avail ITC for FY 2017-18 to 2020-21 extended to 30.11.2021.
- **Appeal Limits Set:** Monetary limits for appeals set at Rs. 20 lakh (GST Appellate Tribunal), Rs. 1 crore (High Court), and Rs. 2 crore (Supreme Court).
- **Pre-Deposit Reduction:** Reduced pre-deposit requirements for GST appeals.
- **Appeal Filing Period:** 3-month period for filing GST Appellate Tribunal appeals to start from a date notified by the Government.
- **No Interest on ECL Balance:** No interest on delayed returns if balance in Electronic Cash Ledger on due date.
- **Anti-Profiteering Sunset Clause:** New applications for Anti-profiteering not accepted from April 1, 2025.
- **Compensation Cess Exemption:** SEZ imports exempt from Compensation Cess from 1st July, 2017.
- **Railway Service Exemptions:** Certain services by Indian Railways to common man and intra-railway supplies exempted.
- **Accommodation Service Relief:** Exemptions for accommodation services benefiting students and professionals.
- **Aadhaar Authentication:** Biometric-based Aadhaar authentication for registration applicants to be rolled out nationwide in phases.

- ❖ சரக்கு மற்றும் சேவை வரி சபையின் 53வது கூட்டம் ஆனது புது டெல்லியில் ஜூன் 22 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- ❖ நடைமேடை அனுமதிச் சீட்டு விற்பனை, ஓய்வு அறைகள் உள்ளிட்ட சாதாரண மக்களுக்கு இந்திய இரயில்வே நிர்வாகத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்கு தற்போது சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ கல்வி நிறுவனங்களுக்கு வெளியே அமைந்துள்ள மாணாக்கர் விடுதிகளுக்கும் சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள்:
    - பால் கேன்கள்: அனைத்து எஃகு, இரும்பு மற்றும் அலுமினிய பால் பாத்திரங்கள் மீது 12% சரக்கு மற்றும் சேவை வரி.
    - அட்டைப் பெட்டிகள்: அட்டைப் பெட்டிகள், பெட்டிகள் மற்றும் காகிதப் பெட்டிகள் மீதான சரக்கு மற்றும் சேவை வரி வரம்பு 18 சதவீதத்திலிருந்து 12% ஆக குறைக்கப் பட்டுள்ளது.
    - சூரிய சக்தியில் செயல்படும் சமையல் பாத்திரங்கள்: ஒற்றை அல்லது இரட்டை ஆற்றல் மூலம் கொண்ட அனைத்து சூரிய சக்தியில் செயல்படும் சமையல் பாத்திரங்களுக்கும் 12% சரக்கு மற்றும் சேவை வரி.
    - கோழி வளர்ப்புப் பண்ணைப் பயன்பாட்டிற்கான இயந்திரப் பாகங்கள்: கோழிப் பண்ணை இயந்திரங்களின் பாகங்களுக்கு 12% சரக்கு மற்றும் சேவை வரி.
- ❖ துறையின் மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்ய சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு 20 லட்சம் ரூபாயும், உயர் நீதிமன்றத்திற்கு 1 கோடி ரூபாயும், உச்ச நீதிமன்றத்திற்கு 2 கோடி ரூபாயும் என்ற நிதி வரம்பை சபை பரிந்துரைத்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலையான லித்தியம் அயனி மின் கலன்கள்

- ஆராய்ச்சியாளர்கள் மலிவான, பாதுகாப்பான மற்றும் நிலையான மின் கலன்களை உருவாக்க வழி வகுக்கும் வகையிலான இரும்பினால் ஆன எதிர் முனைப் பொருளை உருவாக்கியுள்ளனர்.
- எளிதில் கிடைக்கப் பெறக் கூடிய மற்றும் மலிவான இரும்பினால் ஆன எதிர் முனைப் பொருளை உருவாக்கியுள்ளனர்.
- வழக்கமான லித்தியம்-அயனி மின் கலன்கள் உற்பத்தியானது கோபால்ட் மற்றும் நிக்கல் உலோகங்களை அதிகம் சார்ந்துள்ளது என்பதோடு இவை விலையுயர்ந்தவை மற்றும் எளிதில் கிடைக்கப் பெறாதவையாக உள்ளன.
- புதிய பொருள் கோபால்ட் மற்றும் நிக்கல் போன்ற விலையுயர்ந்த மற்றும் அரிதான உலோகங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையை முடிவுக்குக் கொண்டு வரும்.
- இது மலிவான விலையில் மின்சார வாகனங்கள் (EVs) உற்பத்திக்கு வழி வகுக்கும்.




## கம்பளிப் புழுக்களின் மின்னேற்ற உணர்வு


- பெரும்பாலான நில வாழ் விலங்குகளுக்கு இல்லாத ஆறாவது அறிவு என்பது கம்பளிப் புழுகளுக்கு உள்ளது.
- அவை அதன் உடலில் உள்ள செட்டே எனப்படும் சிறிய முட்கள் மூலம் தங்களைச் சுற்றியுள்ள மின்சாரப் புலங்களை உணர்கின்றன என்ற வகையில் இது மின்னேற்ற உணர்வு எனப்படும்.
- கணுக்காலிகளான கம்பளிப்புழுக்கள், அருகிலுள்ள தனது இரைப் பூச்சிகளை உணர மின்னேற்ற உள் உணர்வுகளைப் பயன்படுத்துகின்றன.
- கம்பளிப் புழுக்களின் இழைகள் 50-350 ஹெர்ட்ஸ் அதிர்வெண்களுக்கு எதிர்வினை ஆற்றி, அச்சுறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல் இல்லாதவற்றை வேறுபடுத்தி அறிய உதவும்.

## மெகெல்லன் ஆய்வுக் கலம் - நாசா

- நாசாவின் மெகெல்லன் ஆய்வுக் கலம் ஆனது, 1990 ஆம் ஆண்டில் வெள்ளிக் கிரகத்தினை அடைந்து, அந்தக் கிரகத்தின் முழு மேற்பரப்பையும் வரைபடமாக்கிய முதல் விண்கலமாகும்.
- இது 1994 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று வெள்ளிக் கிரகத்தின் வளிமண்டலத்தில் அமிழ்ந்து போனது.
- அதற்குப் பிறகு, வெள்ளிக் கிரகத்தினை ஆய்வு செய்ய வேறு எந்த விண்கலமும் அனுப்பப் படவில்லை.
- அதன் தரவுகளை ஆய்வு செய்ததன் மூலம், ஆயிரக்கணக்கான எரிமலைகளைக் கொண்ட, நமது சூரிய மண்டலத்தில் உள்ள பூமியைப் போன்ற மிக அருகில் அமைந்த கிரகமான வெள்ளி இன்னும் செயலில் இருக்கக்கூடும் என்று அறியப்படுகிறது.
- இந்தக் கிரகத்தில், 1990 மற்றும் 1992 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் எரிமலை செயல்பாடுகள் நிகழ்ந்தன.
- கடந்த ஆண்டு மார்ச் மாதம், கிரகத்தின் ஒரு எரிமலை துளையானது அதன் வடிவத்தை மாற்றி, ஒரு வருடத்தில் அதன் அளவு கணிசமாக அதிகரித்திருப்பதை அறிவியலாளர்கள் கவனித்தனர்.
- 2031 ஆம் ஆண்டில், வெள்ளிக் கிரகத்தினை ஆய்வு செய்ய VERITAS என்று பெயரிடப் பட்ட புதிய ஆய்வுக் கலத்தினை அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.

## மரபணு மாற்றப்பட்ட கொசுக்கள் – டிஜிபௌட்டி

Spread of *Anopheles stephensi* in Africa





- கிழக்கு ஆப்பிரிக்காவின் டிஜிபௌட்டி நாட்டில் மலேரியாவை எதிர்த்துப் போராடச் செய்வதற்காக மரபணு மாற்றப்பட்ட (GMO) கொசுக்கள் வெளியிடப்பட்டன.
- அந்நாட்டில் மரபணு மாற்றப்பட்ட ஆண் கொசுக்கள் வெளியிடப்பட்டுள்ளன என்ற நிலையில் இது அவற்றின் பெண் சந்ததிகள் முதிர்ச்சியடைவதைத் தடுக்கும் ஒரு சிறப்பு மரபணுவைக் கொண்டுள்ளது.
- இந்தச் செயல் முறையானது, முக்கியமாக மலேரியா பரவுவதற்கு காரணமாகின்ற பெண் கொசுக்களைக் குறி வைக்கிறது.

- பெண் கொசுக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம், நோய் பரவுவதை கணிசமாகக் குறைக்க முடியும் என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.
- ஆண் கொசுக்கள் கடிக்காது எனவே அவற்றினால் மலேரியாவை பரப்ப முடியாது.
- ஊடுருவிய கொசு வகையான *அனோபிலிஸ் ஸ்டீபென்சியின்* பரவலைத் தடுக்க 'டிஜிபௌட்டிக்கு உகந்த கொசு கட்டுப்பாட்டுத் திட்டம்' இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்காவில் முதன்முதலில் *அனோபிலிஸ் ஸ்டீபன்சி* கண்டறியப் பட்டபோது, டிஜிபௌட்டியில் 27 மலேரியா பாதிப்புகள் பதிவாகின.
- 2020 ஆம் ஆண்டில், நாட்டின் மலேரியா பாதிப்பானது 73,000க்கும் அதிகமான எண்ணிக்கையைத் தாண்டியது.
- கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒரு மரபணு மாற்றப்பட்ட கொசு வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும் என்பதோடு புர்கினா பாசோ என்ற நாட்டிற்கு பிறகு ஆப்பிரிக்கக் கண்டத்தில் இந்தச் செயல்முறை மேற்கொள்ளப்படுவது இரண்டாவது முறையாகும்.

## OSIRIS-APEX

- நாசாவின் குறுங்கோள்-ஆய்வு விண்கலமான OSIRIS-APEX ஆனது Apophis என்ற குறுங் கோளினை நோக்கியப் பயணத்தில் அதன் முதல் முக்கியச் சோதனையில் தேர்ச்சி பெற்றுள்ளது.
- முதலில் OSIRIS-REx என அழைக்கப்பட்ட இந்த ஆய்வுக் கலம் ஆனது, சூரியனுக்கு மிக நெருக்கமாகச் சென்று கடக்கும் செயல்பாட்டினை வெற்றிகரமாக மேற் கொண்டு உள்ளது.
- இந்த விண்கலம் ஆனது தற்போது, 2029 ஆம் ஆண்டில் அபோபிஸ் குறுங்கோளினை அடையும் முன் சூரியனை மேலும் ஐந்து முறை நெருக்கமாக கொண்டு வரும் வகையிலான ஒரு நீள்வட்ட சூரிய சுற்றுப்பாதையில் இயல்பாக இயங்கி வருகிறது.
- அதன் அடுத்த அண்மை நிலை அல்லது சூரியனுக்கு மிக அருகில் வருதல் நிலையானது, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதியன்று சூரியனில் இருந்து 46.5 மில்லியன் மைல் தொலைவில் நிகழ உள்ளது.
- இது பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தில் பாதியளவாகும்.



## மரத்தினால் ஆன உலகின் முதல் செயற்கைக்கோள்

- உலகிலேயே முதன்முறையாக, ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் லிக்னோசாட் என்ற சிறிய மர செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளனர் என்பதோடு இது ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஏவு கலம் மூலமாக விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- இந்தப் புதுமையான செயற்கைக் கோளானது, பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையும்போது விண்வெளிக் குப்பைகளை முழுமையாக எரிப்பதனால் விண்வெளிக் குப்பைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சர்வதேச விண்வெளி நிலையத்திடம் (ISS) வழங்கப்பட உள்ளது.
- அதன் வலிமை மற்றும் தீவிர வெப்பநிலை ஏற்ற இறக்கங்களைத் தாங்கும் திறனை மதிப்பிடுவதற்கு என்று தொடர்ச்சியான சோதனைகளுக்கு அது உட்படுத்தப்படும்.




## கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை 'RudraM-II' 2024




- இந்தியா Su-30MKI என்ற போர் விமானத்தில் இருந்து வான்வழி-நிலப்பரப்பு கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- RudraM-II கதிர்வீச்சு எதிர்ப்பு மீயொலி ஏவுகணை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- RudraM-II எதிரி நாட்டின் பல வகையான தாக்குதல் அமைப்புகளை எதிர்கொள்கின்ற மிகச்சிறந்த ஏவுகணையாகும்.

- இந்த ஏவுகணையானது, 300 கி.மீ. தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது மற்றும் திட உந்துவிசை ஏவு கல இயக்கி மூலம் இயக்கப்படுகிறது.
- இந்தியாவானது தற்போது ரஷ்யாவின் Kh-31 என்ற கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையை இயக்குகிறது.
- RudraM-II ஏவுகணைகள் Kh-31s ஏவுகணைகளுக்கான மாற்றாக அமையும்.

## Y குரோமோசோம்களில் நிகழும் விரைவான மாற்றங்கள்





- ஆண் பாலின குரோமோசோம் என்றும் அழைக்கப்படும் Y குரோமோசோமின் வியத்தகுப் பரிணாம வளர்ச்சி குறித்த தகவல்களை சமீபத்திய ஒரு ஆய்வு வெளிக் கொணர்ந்துள்ளது.
- பல்வேறு குரங்கு இனங்களில் உள்ள Y குரோமோசோம் பகுதிகளில் 14-27% மட்டுமே மனிதர்களின் Y குரோமோசோம்களை மிக ஒத்ததாக இருப்பதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மனிதர்களும் மற்ற குரங்கு இனங்களும் மிகவும் வித்தியாசமாக பரிணமித்துள்ளன என்பதை இது காட்டுகிறது.
- மறுபுறம், X குரோமோசோம்கள் மிகவும் வேறுபட்டவையாக உள்ளன.
- குறிப்பிடத்தக்க வகையில், ஆண் மற்றும் பெண் இருபாலரின் உடலில் உள்ள X குரோமோசோம் இன்னும் நிலையானதாக உள்ளது.
- X மற்றும் Y குரோமோசோம்கள் பல உயிரியல் செயல்பாடுகளுடன் சேர்த்து பாலியல் வளர்ச்சி மற்றும் கருவுறுதல் ஆகியவற்றில் பங்கு வகிக்கின்றன.


## PREFIRE ஆய்வுத் திட்டம்

- பூமியின் துருவங்களில் இருந்து இழக்கப்படும் வெப்பத்தை அளவிடுவதற்காக, CubeSats (6U) எனப்படும் சிறிய ஓர் இணை செயற்கைக்கோள்களை நாசா சமீபத்தில் விண்ணில் ஏவியது.
- இந்த ஆய்வுத் திட்டத்திற்கு PREFIRE (துருவ அகச்சிவப்பு அலை நீளத்தில் துருவ கதிர் வீச்சு ஆற்றல் சோதனை) என பெயரிடப்பட்டுள்ளது.

- பூமியின் துருவங்களில் இருந்து வெளிவரும் வெப்ப உமிழ்வுகளை ஆய்வு செய்வதன் மூலம் கிரகத்தின் ஆற்றல் உட்கிரகித்தல் மற்றும் இழப்பு செயல்முறையினைப் புரிந்து கொள்வதில் உள்ள ஒரு முக்கியமான இடைவெளியை நிரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.





## மீளிணைவு புரதங்களின் அதிகளவிலான உற்பத்தி




- இந்திய அறிவியல் கல்விக் கழகம் ஆனது, இனக்கலப்பு (மீளிணைவு) புரதங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு புதிய முறையை உருவாக்கியுள்ளது.
- இந்தப் புதிய மாற்று என்பது ஒரு பொதுவான உணவு சேர்க்கைப் பொருளான மோனோசோடியம் குளுட்டமேட் (MSG) என்ற பொருளின் மீதான ஒரு பாதுகாப்பான செயல்முறையாகும.

- தடுப்பூசி ஆன்டிஜென்கள், இன்சுலின் மற்றும் மோனோக்ளோனல் ஆன்டிபாடிகள் போன்ற மீளிணைவுப் புரதங்கள் ஆகியவை பெரிய உயிர் வினை கலன்களில் மாற்றி அமைக்கப்பட்ட பாக்டீரியா, வைரஸ் அல்லது பாலூட்டிகளின் செல்கள் மூலம் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் உயிரினமானது ஈஸ்ட் பிச்சியா பாஸ்டோரிஸ் (தற்போது கோமகடேல்லா ஃபாஃபி என்று அழைக்கப்படுகிறது) ஆகும்.

## சங்’கே-6 தரையிறங்கு கலம்




- சீன நாடானது நிலவின் தொலைதூரத்தில் ஆளில்லா விண்கலத்தினைத் தரையிறக்கி உள்ளது.
- சங்’கே-6 விண்கலம் ஆனது தென் துருவத்தில் உள்ள அயிட்கென் படுகை எனப்படும் ஒரு பெரிய பள்ளத்தில் தரையிறங்கியது.
- இந்தத் தரையிறங்கு கலம் ஆனது 2 கிலோ (4.4 பவுண்டுகள்) எடை அளவிலான நிலவுப் பொருளைச் சேகரித்து பூமிக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் சீனா சங்’கே-5 எனப்படும் தனது முதல் நிலவு மாதிரி சேகரித்து பூமிக்குத் திரும்பும் ஆய்வுக் கலத்தினை விண்ணில் ஏவி நிலவின் அருகாமை பக்கத்திலிருந்து மாதிரிகளைச் சேகரித்தது.


## ஆரம்பகால மாபெரும் அண்டம்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கியானது, இதுவரையில் கண்டறியப்படாத இரண்டு ஆரம்பகால (முற்காலத்திய) மற்றும் மிகவும் தொலைதூர அண்டங்களைக் கண்டறிந்துள்ளது.

- அவை பெரு வெடிப்பிற்குப் பிறகான வகையில் வெறும் 300 மில்லியன் ஆண்டுகளுக்கு பிந்தையவையாகும்.
- இந்த இரண்டு அண்டங்களுக்கு JADES-GS-z14-0 மற்றும் JADES-GS-z14-1 எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த இரண்டில் பெரிய அண்டமான JADES-GS-z14-0, சுமார் 1,600 ஒளியாண்டுகள் தொலைவிற்குப் பரவியுள்ளது.
- பெரு வெடிப்பிற்குப் பிறகு சுமார் 330 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையதாகக் கருதப் பட்ட அண்டங்களை விட இவை முந்தையதாக உள்ளன.




## தொற்றாத வகையிலான நிபா வைரஸ் போன்ற துகள்கள்





- திருவனந்தபுரத்தில் உள்ள தொன்னக்கல் எனுமிடத்தில் உள்ள உயர்நிலை நச்சுயிரியல் கல்வி நிறுவனத்தினை (IAV) சேர்ந்த அறிவியலாளர்கள், ஆய்வகத்தில் தொற்றாத வகையிலான நிபா வைரஸ் போன்ற துகள்களை (VLPs) உருவாக்கும் ஒரு புதிய வழிமுறையினை உருவாக்கியுள்ளனர்.
- அவை காட்டு வகை நிபா வைரஸை (NiV) ஒத்துள்ளன.

- இந்தப் புதிய வழிமுறையானது உயிரிப் பாதுகாப்பு நிலை-2 (BSL) ஆய்வகத்தில் NiV வைரசிற்கு எதிரான நடுநிலைப் படுத்தும் ஆன்டிபாடிகளை உருவாக்குவதற்கான மாற்று, பாதுகாப்பான மற்றும் பயனுள்ள தளத்தை வழங்குகிறது.
- மிகவும் நோய்த் தொற்று மிக்க பாராமிக்ஸோவைரஸ் வகையினைச் சேர்ந்த விலங்கு வழி பரவும் வைரஸ் ஆன இந்த நிபா வகை வைரசினால் பாதிக்கப்பட்ட மனிதர்களில் உயிரிழப்பு விகிதம் 80% வரை இருக்கும்.

## உலகின் மிகப்பெரிய மரபணு

- மெசிப்டெரிஸ் ஆப்லான்சியோலாட்டா எனப்படும் ஃபோர்க் ஃபெர்ன் இனமானது, முந்தையதாக பெரிய மரபணுவினைக் கொண்டதாக பதிவான இனத்தினை விட 7% பெரியது மற்றும் மனித மரபணுவை விட 50 மடங்கு பெரிய மரபணுவைக் கொண்டு உள்ளது.
- ஜப்பானிய பூக்கும் தாவரமான பாரிஸ் ஜபோனிகா தான் இதற்கு முன்னதாக பெரிய மரபணுவினைக் கொண்டதாக பதிவான இனமாகும்.
- பெரிய மரபணுக்களுக்கு என்று டிஎன்ஏ பிரதி எடுப்பதற்கு, சரிபார்த்தல் மற்றும் படியெடுத்தல் ஆகியவற்றிற்கு அதிக மூலங்கள் தேவைப்படுகின்றன.
- மரபணு ஆனது ஓர் உயிரினத்தின் அனைத்து மரபணுத் தகவல்களையும் கொண்டு உள்ளது.
- ஓர் உயிரினத்தின் உடல் அளவிற்கும் அதன் மரபணு அளவிற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை.
- சிறிய ஃபெர்ன் இனத்தின் மரபணு நீலத் திமிங்கலத்தை விட 6,000% பெரியது மற்றும் ஆப்பிரிக்க யானையை விட 4,650% பெரியது ஆகும்.




## எந்திர இயக்கத்திலான 'மூன்றாவது கட்டைவிரல்'


- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர்கள் ஓர் ஆய்வினை நடத்தி, இது உண்மையில் நமது செயல்திறனை விரிவுபடுத்த உதவும் என்று கண்டறிந்துள்ளனர்.

- அவர்கள் பயன்படுத்த இது எளிதானது என்பதால மிகவும் கட்டுப்படுத்தக் கூடிய, ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய செயற்கையான கூடுதல் கட்டைவிரலை உருவாக்கியுள்ளனர்.
- இந்த சாதனம் மூன்றாவது கட்டைவிரல் என குறிப்பிடப் படுகிறது.
- இது ஒரு கையால் செய்ய இயலாத சவாலான அல்லது சாத்தியமில்லாத பணிகளைச் செய்ய அல்லது மற்ற நபர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படாமல் சிக்கலான பல பணிகளைச் செய்ய பயனருக்கு வழி வகை செய்கிறது.




## சுடர்மிகு நட்சத்திரம்

- நமது சூரியக் குடும்பத்திலிருந்து 3,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு மங்கலான நட்சத்திரத்தினை 1946 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக இரவு வானத்தில் விரைவில் வெறும் கண்களால் பார்க்க முடியும்.
- அதிகாரப்பூர்வமாக T கொரோனே போரியாளிஸ் (T CrB) என்று அழைக்கப்படும் "சுடர்மிகு நட்சத்திரம்" ஆனது, தற்போதிலிருந்து 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் மிகப் பிரகாசமாக காணப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தச் சுடர்மிகு நட்சத்திரத்தைப் பூட்ஸ் மற்றும் ஹெர்குலஸ் ஆகிய விண்மீன் திரள்களுக்கு இடையே உள்ள "வடக்கு மகுடம்" என்றழைக்கப்படும் கொரோனே போரியாளிஸ் விண்மீன் திரளில் காணப்படும்.
- இந்தச் சுடர்மிகு நட்சத்திரம் ஆனது, 1946 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆம் தேதியன்று, அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இருந்ததை விட 600 மடங்கு பிரகாசமாக இருந்தது.




## ICBM மினிட்மேன் III




- அமெரிக்க விமானப்படை மற்றும் அமெரிக்க விண்வெளிப் படை மினிட்மேன் III எனப் படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையின் இரண்டு வழக்கமான சோதனை ஆயுதமில்லாத ஏவுதல்களை நடத்தியது.
- மினிட்மேன் III கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் (ICBM) சுமார் 4,200 மைல்கள் (6,760 கிலோமீட்டர்) பறந்தன.
- இது பல தன்னிச்சை இலக்கு மறு நுழைவு வாகனங்களில் (MIRV) பொருத்தப்பட்ட முதல் அமெரிக்க ஏவுகணை ஆகும்.

## போயிங் ஸ்டார்லைனர்

- போயிங் நிறுவனம் ஆனது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பும் இரண்டு நாசா விண்வெளி வீரர்களை கொண்ட தனது முதல் ஸ்டார்லைனர் பெட்டகத்தினை விண்ணில் செலுத்தியது.
- நீண்ட மற்றும் கடினமான ஒரு மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பிறகு மக்களை ஏற்றிச் செல்லும் வகையிலான ஒரு வாகனம் சோதிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- புட்ச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் இந்தப் பெட்டகத்தினைச் சோதனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், விண்வெளிக்குச் செல்லும் சோதனைப் பயணத்தில் விண்கலத்தைச் செலுத்திய முதல் பெண்மணி என்ற பெருமையை இதன் மூலம் பெற்றுள்ளார்.





## இந்தோ-பிரெஞ்சு TRISHNA திட்டம்

- இந்திய மற்றும் பிரான்ஸ் நாட்டின் விண்வெளி நிறுவனங்கள் மனிதனால் ஏற்படும் பருவநிலை மாற்றம், நீர் பயன்பாடு, பனி உருகுதல் போன்றவற்றின் விளைவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக என்று தனித்துவமான செயற்கைக் கோளை உருவாக்கி வருகின்றன.
- இது 'TRISHNA' (உயர் தெளிவுத்திறன் கொண்ட இயற்கை வள மதிப்பீட்டிற்கான வெப்ப அகச்சிவப்பு ஆய்வு செயற்கைக்கோள்) என சுருக்கமாக அழைக்கப்படுகிறது.
- இது பூமியில் இருந்து 761 கி.மீ. உயரத்தில் சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப் படும்.
- இது பூமியின் மேற்பரப்பு மற்றும் பல்வேறுச் சுற்றுச்சூழல் அளவுருக்கள் மற்றும் பல முரண்பாடுகளை உயர் தெளிவுத் திறனில் ஆய்வு செய்ய உதவும்.




## ஹைட்ராக்ஸியூரியா உருவாக்கம்



- ❖ இந்தியாவில் அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காக ஹைட்ராக்ஸியூரியா மருந்தின் குறைந்த வீரிய கொண்ட அல்லது குழந்தைகளுக்கான வாய்வழி மருந்து சூத்திரத்தின் "கூட்டு உருவாக்கம் மற்றும் வணிகமயமாக்கலுக்காக" தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஈடுபாட்டு விருப்பத்தினை (EoI) தெரிவிக்குமாறு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) அழைப்பு விடுத்துள்ளது.
- ❖ தெற்காசியாவில் இந்தியாவில் தான் அரிவாள் உயிரணு சோகை நோய் பாதிப்பு அதிகம் பரவியுள்ளது என்பதோடு நாட்டில் 20 மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் அரிவாள் செல் உயிரணு சோகையினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ இந்தியாவில் உள்ள பெரும்பாலான மருந்து நிறுவனங்களானது ஹைட்ராக்ஸியூரியா 500 mg மாத்திரைகள் அல்லது 200 mg மாத்திரைகளைச் சந்தைப்படுத்துகின்றன.
- ❖ இந்த நோய் பாதிப்புள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிப்பதில் இவற்றின் பயனுள்ள பயன்பாட்டில் இந்த வீரிய அளவு மிகப்பெரிய சவாலாக உள்ளது.

## விண்வெளியில் நோய்க்கிருமிகள்



- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் நாசாவின் ஜெட் உந்து விசை ஆய்வகத்தின் ஆராய்ச்சியாளர்கள், சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) பல்வேறு மருந்துகளுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட நோய்க்கிருமிகள் காணப்படுவது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.
- ஆராய்ச்சியாளர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணப்பட்ட என்டரோபாக்டர் புகாண்டென்சிஸ் எனப்படும் மருத்துவமனையில் உருவாகக் கூடிய நோய்க்கிருமி குறித்து ஆய்வு செய்தனர்.
- இந்த ஆய்வானது விண்கலம் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அடைக்கப்பட்ட சூழல்களில் நுண்ணுயிர் மாசுபாட்டை மேலாண்மை செய்வதற்கான சில உத்திகளை உருவாக்க உதவுகிறது.


## சூரியச் சுடர்களின் சீற்றத்தினைப் படம் பிடித்த ஆதித்யா-L1

- இஸ்ரோவின் ஆதித்யா- L1 விண்கலத்தில் உள்ள இரண்டு தொலை உணர் கருவிகள் சமீபத்திய சூரியச் சுடர்களின் சீற்றத்தைப் படம் பிடித்துள்ளன.
- சூரியனில் உள்ள AR13664 என்ற அதி தீவிரச் செயல்பாடுகள் மிகுந்த பகுதியில் காணப் படும் பல X - வகை மற்றும் M - வகை சுடரொளிகளுடன் இந்த சூரியச் சீற்றம் நிகழ்ந்தது.
- இந்தியாவின் முதல் சூரிய ஆய்வுப் பயணமான ஆதித்யா- L1 விண்கலம் இந்த ஆண்டு ஜனவரி 06 தேதியன்று முதல் லக்ராஞ்சியன் புள்ளியை (L1) அடைந்தது.
- L1 புள்ளி பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் அமைந்து உள்ளதால் விண்கலமானது சூரியனைத் தொடர்ந்து ஆய்வு செய்ய அது உதவுகிறது.




## safeEXO-Cas

- ஆராய்ச்சியாளர்கள் "safeEXO-Cas" எனப்படும் எக்சோசோம் அடிப்படையிலான ஒரு தளத்தை உருவாக்கியுள்ளனர்.
- இது குறிப்பிட்ட செல்கள் மற்றும் திசுக்களில் CRISPR/Cas9 மரபணு திருத்தக் கூறுகளின் உள்ளீட்டினைக் கணிசமாக மேம்படுத்துகிறது.
- CRISPR/Cas9 என்பது டிஎன்ஏ வரிசையின் சில குறிப்பிட்டப் பகுதிகளை நீக்கி, சேர்த்தல் அல்லது மாற்றுவதன் மூலம் மரபணுவின் பாகங்களைத் திருத்துவதற்கு என்று மரபணு அறிவியலாளர்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு நன்கு உதவுகின்ற ஒரு தனித்துவமான தொழில்நுட்பமாகும்.




## எடுத்து செல்லக் கூடிய புதிய அணு கடிகாரம்




- கப்பல்களில் பயன்படுத்தக் கூடிய ஒரு வகையான கையடக்கமான ஒளியியல் அணுக் கடிகாரத்தினை ஆராய்ச்சியாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.
- இந்தச் சாதனங்கள் அளவு மற்றும் வலிமை ஆகியவற்றின் காரணமாக சில துல்லியத் தன்மையினைக் கொண்டுள்ளன.
- இவை மற்ற கப்பலில் உள்ள நேரக் கட்டுப்பாட்டுத் தேர்வு அமைப்புகளை விட அதிகம் துல்லியமாக இருந்தன.
- அணுக் கடிகாரங்கள் அணுக்களைப் பயன்படுத்தி நேரத்தை மிகவும் துல்லியமாக கணக்கிட்டுச் செயல்படுகின்றன.
- Cs-133 என்பது மிகவும் நிலையான அணு மற்றும் இயற்கையாகவே காணப்படுகிறது, அதனால் தான் இது அணுக் கடிகாரங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்தியாவும் தனது எல்லைகளுக்குள் நேரக்கட்டுப்பாட்டிற்காக வேண்டி விநாடிகளை வரையறுப்பதற்கு Cs-133 அணுக் கடிகாரத்தைப் பயன்படுத்துகிறது.


- ஒரு சீசியம் அணு கடிகாரம் ஒவ்வொரு 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கும் ஒரு நொடியை இழக்கிறது அல்லது பெறுகிறது.
- அணுக் கடிகாரங்கள் 300 மில்லியன் ஆண்டுகளில் ஒரு வினாடியையே இழக்கும் அல்லது பெறும் என்ற துல்லியத்திற்காக அதிக மதிப்பினைக் கொண்டுள்ளன.
- ஒளியிழை அணுக் கடிகாரங்கள் 300 பில்லியன் ஆண்டுகளில் ஒரு நொடியை மட்டுமே இழக்கின்றன அல்லது பெறுகின்றன.

## பூமியின் உள் கருவத்தின் சுழற்சியின் வேகத்தில் தொய்வு

- சமீபத்திய ஆய்வுகள், 2010 ஆம் ஆண்டு முதல் பூமியின் மேற்பரப்புடன் ஒப்பிடச் செய்கையில், அதன் உள் கருவத்தின் சுழற்சியின் வேகம் குறையத் தொடங்கியதாக குறிப்பிடுகின்றன.
- உட்கருவத்தின் வேகம் குறைவதால் பூமியில் ஒரு நாளின் நேர அளவானது ஒரு நொடி என்ற அளவின் வீதத்தில் மாறக்கூடும்.
- பூமியின் உள் கருவமானது, இரும்பு மற்றும் நிக்கல் ஆகியவற்றால் ஆன, திரவ வெளிப்புற கருவத்திற்குள் (உருகிய உலோகங்களால் ஆனது) காணப்படும், ஈர்ப்பு விசையால் அதன் இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஒரு திடமான கோளமாகும்.





## செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பள்ளங்களுக்குப் பெயரிடல்



- அகமதாபாத்தைச் சேர்ந்த இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் (PRL) அறிவியல் ஆய்வாளர்கள் செவ்வாய்க் கிரகத்தில் மூன்று புதிய பள்ளங்களைக் கண்டறிந்து உள்ளனர்.
- மறைந்த புகழ்பெற்ற காஸ்மிக் கதிர் இயற்பியலாளர் தேவேந்திர லால் மற்றும் வட இந்தியாவில் உள்ள முர்சன் மற்றும் ஹில்சா ஆகிய நகரங்களின் பெயரால் இந்த மூன்று பள்ளங்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளன.
- முர்சன் மற்றும் ஹில்சா ஆகியவை முறையே உத்தரப் பிரதேசம் மற்றும் பீகாரில் அமைந்துள்ள ஊர்களின் பெயர்கள் ஆகும்.
- இந்த செந்நிறக் கிரகத்தின் தர்சிஸ் எரிமலைப் பகுதியில் இந்த மூன்று பள்ளங்கள் அமைந்துள்ளன.
- தர்சிஸ் என்பது செவ்வாய்க் கிரகத்தின் மேற்கு அரைக்கோளத்தில் மத்திய ரேகைக்கு அருகில் அமைந்த ஒரு பரந்த எரிமலை பீடபூமி ஆகும்.
- இப்பகுதியில் சூரியக் குடும்பத்தின் மிகப்பெரிய எரிமலைகள் காணப்படுகின்றன.


## ஒலிம்பஸ் மோன்ஸில் உறைபனி நிறைந்த மலைச்சிகரங்கள்



- செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிவரும் இரண்டு விண்கலங்கள் செந்நிறக் கோளின் மத்திய ரேகைக்கு அருகில் உள்ள உயரிய எரிமலைகளின் மேல் பகுதியில் உறைபனி இருப்பதைக் கண்டறிந்துள்ளன.
- சூரியக் குடும்பத்தின் மிக உயரமான எரிமலைகளான தர்சிஸ் எரிமலைகளில் உறை பனி இருப்பதை அவை கண்டறிந்தன.
- மனித முடி அளவிலான தடிமனேயேக் கொண்டுள்ள (ஒரு மில்லிமீட்டரில் நூற்றில் ஒரு பங்கு தடிமன்) இந்த உறைபனியானது மிகப்பெரியப் பரப்பளவில் பரவியுள்ளது.
- இது செவ்வாய்க் கிரகத்தில் குளிர் காலங்களில் சுமார் 150,000 டன் நீர் உறைந்து ஆவியாவதற்குச் சமம் ஆகும்.
- இது தோராயமாக 60 ஒலிம்பிக் நீச்சல் குளங்களுக்குச் சமம் ஆகும்.
- செவ்வாய்க் கிரகத்தின் தர்சிஸ் பகுதியில் ஏராளமான எரிமலைகள் அமைந்துள்ளன.
- இதில் ஒலிம்பஸ் மோன்ஸ் மற்றும் தர்சிஸ் மாண்டஸ், அஸ்க்ரேயஸ், பாவோனிஸ் மற்றும் ஆர்சியா மோன்ஸ் ஆகியவை அடங்கும்.

- இந்தப் பகுதியில் உள்ள பல எரிமலைகள் பூமியில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தைப் போல் பெரியவை அல்லது அதைவிடப் பெரியவையாகும்.
- ஒலிம்பஸ் மோன்ஸ் எவரெஸ்ட்டைப் போல மூன்று மடங்கு உயரம் கொண்டது.

## புதிய வகையிலான சூரிய சுழற்சி





- சீன H-ஆல்ஃபா சூரிய ஆய்வுக் கலம் (CHASE) ஆனது சூரிய வளிமண்டலச் சுழற்சியின் புதிய வடிவத்தைக் கண்டறிந்துள்ளது.
- இதன் மூலம் உலகிலேயே முதல் முறையாக சூரியனைப் பற்றிய கூடுதல் ரகசியங்களை வழங்குகின்ற வகையிலான சூரிய வளிமண்டலச் சுழற்சியின் முப்பரிமாணப் படத்தினை ஆராய்ச்சியாளர்கள் பெற்றுள்ளனர்.
- சூரிய வளிமண்டலத்தின் இயற்பியலை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம் மற்றும் விண்வெளி வானிலையை எவ்வாறு கணிக்கிறோம் என்பதில் இது பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

## நாகாஸ்த்ரா-1 ஆளில்லா விமானங்கள்

- இந்திய இராணுவம் ஆனது நாக்பூரில் அமைந்துள்ள சூரியசக்தி தொழிற்சாலைகள் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நாகாஸ்த்ரா-1 எனப்படும் இலக்கினை மட்டும் குறி வைத்து தாக்கும் வகையிலான ஆயுதத்தினைப் படையில் இணைத்துள்ளது.
- "தற்கொலை தாக்குதலில் ஈடுபடும் (காமிகேஸ்) பயன்முறையில்" செயல்படும் நாகாஸ்த்ரா-1, 2 மீட்டர் என்ற துல்லியத்துடன் புவியிடங்காட்டி மூலமான துல்லியமான தாக்குதல்கள் மூலம் எதிரி நாட்டு ஆயுதத் தாக்குதல்களை எதிர்கொண்டு வீழ்த்தும் திறனைக் கொண்டுள்ளது.

- மனிதர்களால் சுமந்துச் செல்லக்கூடிய வகையிலான இந்த நிலையான இறக்கை கொண்ட மின்சாரத்தில் இயங்கும் ஆளில்லா வான்வழி வாகனம் ஆனது 30 நிமிடங்கள் தொடர்ந்து செயல்படும் திறனைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இது மனித ஈடுபாட்டுடன் கூடிய செயல்பாட்டில் 15 கிலோமீட்டர்கள் தொலைவு வரை செயல்படும் ஆற்றல் கொண்டுள்ளது.
- இது 30 கிலோமீட்டர் வரையிலான தொலைவு வரையில் தானாக இயங்கும் திறனைக் கொண்டுள்ளது.




## சங்க்'கே-7 ஆய்வுத் திட்டம்

- சங்க்'கே-7 ஆய்வுத் திட்டத்திற்கான அறிவியல் பயன்பாட்டுக் கருவிகளை உருவாக்கி வழங்குவதற்கான சர்வதேசப் பங்குதார நாடுகளாக எகிப்து மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் சீனாவுடன் இணைந்துள்ளன.
- சீனாவின் இந்த நிலவு ஆய்வுத் திட்டமானது, 2026 ஆம் ஆண்டில் நிலவின் தென் துருவத்தில் உறைபனியைத் தேடுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- சீன நாட்டுப் பொறியாளர்களின் உதவியுடன் எகிப்து மற்றும் பஹ்ரைன் இணைந்து உருவாக்கும் உயர் தெளிவு திறன் நிறமாலை ஆய்வு ஒளிப்படக் கருவியானது, சங்க்'கே-7 நிலவு ஆய்வுத் திட்டத்திற்காக CNSA நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு சர்வதேச விண்கல சாதனங்களில் ஒன்றாகும்.
- இந்த ஒளிப்படக் கருவியானது சுற்றுப்பாதையில் இருந்த படியே நிலவின் துருவப் பகுதிகள் உட்பட, நிலவின் மேற்பரப்பு அமைப்புகளைப் படம் பிடித்து பகுப்பாய்வு செய்யும்.


## குறுங்கோள் 2024 LZ4



- 2024 LB4 என அடையாளம் காணப்பட்ட (குறிப்பிடப்பட்ட) குறுங்கோள் ஆனது பூமியை நெருங்கி வருவதை நாசா கண்டறிந்தது.
- சுமார் 98 அடி விட்டம் கொண்ட இந்தக் குறுங்கோளின் அளவானது தோராயமாக வணிகப் பயன்பாட்டு விமான அளவினை ஒத்தது.
- இந்தக் குறுங்கோள் ஆனது நிலவு இருக்கும் தொலைவினை விட பூமிக்கு அருகில் 173,000 மைல்கள் தொலைவில் கடந்து சென்றது.
- ஒரு குறுங்கோள் ஆனது பூமியிலிருந்து 4.6 மில்லியன் மைல்கள் வரம்பிற்குள்ளும் மற்றும் 150 மீட்டருக்கும் அதிகமான பரப்பினைக் கொண்டதாகவும் இருந்தால் அது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது.
- இது மிகவும் நெருக்கமாக இருந்தாலும், குறுங்கோள் 2024 LZ4 ஆனது, மிகவும் சிறியது என்பதால் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை.

## செவ்வாய்க் கிரகத்தில் ஊதா நிற துருவ மின்னொளி

- நாசா சமீபத்தில் செவ்வாய்க் கிரகத்தில் இரவில் நிகழ்ந்த துருவ மின்னொளிகளின் ஒளிப்படக் காட்சியினைப் பகிர்ந்துள்ளது.
- இந்த வண்ணமயமான ஊதா நிற துருவ மின்னொளிகள் செந்நிறக் கிரகத்தின் மீது எவ்வாறு பரவின என்பதை இந்தப் படங்கள் காட்டுகின்றன.
- இந்தப் படங்கள் நாசாவின் MAVEN (செவ்வாய் வளிமண்டலம் மற்றும் ஆவியாகும் தன்மையின் பரிணாமம்) சுற்றுக் கலத்தினால் எடுக்கப்பட்டன.
- துருவ மின்னொளிகளானது சூரியப் புயல்களில் இருந்து வெளிப்படும் ஆற்றல் பெற்ற துகள்கள் ஒரு கிரகத்தின் காந்தப்புலக் கோடுகளுக்கு அருகில் செல்லும் போது தெரியும் வண்ணமயமான ஒளிகள் ஆகும்.
- முன்னொரு காலத்தில் செவ்வாய்க் கிரகமானது அதன் உட்பகுதியில் உருவாக்கப்பட்ட காந்தப்புலத்தை இழந்தது எனவே ஆற்றல்மிக்கத் துகள்களின் தாக்குதலிலிருந்து அது பாதுகாப்பு பெற்றிருக்கவில்லை.
- மின்னூட்டம் பெற்றத் துகள்கள் செவ்வாய் வளிமண்டலத்தைத் தாக்கும் போது, அது முழு கிரகத்திலும் பரவும் துருவ மின்னொளிகளைத் தோற்றுவிக்கிறது.





## புரதம் கொண்ட அரிசி வகை

- தென் கொரிய அறிவியலாளர்கள் புரதச் செல்கள் உட்செலுத்தப்பட்ட ஒரு புதிய அரிசி வகையை உருவாக்கி வருகின்றனர்.
- இது அறநெறி முறையிலிருந்து விலகாத வகையில் பெறப்பட்ட ஒரு புரத மூலத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "மீட்டி ரைஸ்" என்று பெயரிடப்பட்ட இந்தப் புதுமையான அரிசியானது, லேசான வெண்ணெய் வாசனையைக் கொண்டுள்ளது என்பதோடு இளஞ்சிவப்பு நிறத்தினைக் கொண்டிருந்தாலும் வழக்கமான அரிசி வகையையே இது ஒத்திருக்கிறது.
- இந்த அரிசியில் மாட்டிறைச்சியின் தசை மற்றும் அதன் கொழுப்பு செல் அணுக்கள் உட்பொதிக்கப் பட்டுள்ளது.
- இந்த "இறைச்சி" அரிசியில் வழக்கமான அரிசியை விட எட்டு சதவிகிதம் அதிக புரதமும் ஏழு சதவிகிதம் அதிக கொழுப்பும் உள்ளது.
- ஏற்கனவே சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளின் சந்தைகளில் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சி கிடைக்கப் பெறுகிறது.
- இருப்பினும், இத்தாலி அரசானது தனது கால்நடைத் துறையைப் பாதுகாப்பதற்காக முந்தைய ஆண்டில் இதன் விற்பனையினைத் தடை செய்தது.



## SN 2023adsy மீவொளிர் விண்முகில்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி, மிகவும் தொலை தூரத்தில் அமைந்த Ia வகை மீவொளிர் விண்முகிலான SN 2023adsy என்ற மீவொளிர் விண்முகிலை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மீவொளிர் விண்முகில்கள் (SNe) சக்தி வாய்ந்த மற்றும் ஒளிரும் விண்மீன் வெடிப்பு நிகழ்வுகள் ஆகும்.
- மீவொளிர் விண்முகில்கள் பொதுவாக அவற்றின் அணு நிறமாலையைப் பொறுத்து இரண்டு குழுக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.
- வகை I மீவொளிர் விண்முகில்களின் நிறமாலையில் ஹைட்ரஜன் இல்லை மற்றும் வகை II மீவொளிர் வீண்முகில்கள் நிறமாலையில் ஹைட்ரஜனைக் கொண்டும் உள்ளன.
- வகை Ia மீவொளிர் விண்முகில்கள் (SN Ia) இரட்டை ஈர்ப்பு அமைப்புகளாகக் காணப் படுகின்றன என்ற நிலையில் அவற்றுள் ஒன்று வெண் குறுவிண்மீன் ஆக உள்ளது.





## துருவா ஸ்பேஸ் நிறுவனத்தின் தைபோல்ட் செயற்கைக்கோள்கள்

- தைபோல்ட்-1 மற்றும் தைபோல்ட்-2 செயற்கைக்கோள்களை உள்ளடக்கிய துருவா ஸ்பேஸ் நிறுவனத்தின் முதல் விண்கலம் ஆனது 15,000 சுற்றுகளுக்குப் பிறகு வேறொரு சுற்றுப்பாதைக்குத் திசைதிருப்பப்பட்டது.
- ஐதராபாத் நகரத்தில் அமைந்துள்ள இந்த விண்வெளிப் புத்தொழில் நிறுவனத்தின் 10வது ஆண்டு விழாவான 2022 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று இந்த விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.
- இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வகை வணிக நோக்கம் சாரா வானொலி (ஹாம் ரேடியோ) இயக்க நிறுவனங்கள் இதில் தகவல்களைப் பெற ஈடுபடுத்தப்பட்டுள்ளன.




## சனிக்கோளின் ஆற்றல் சமநிலையின்மை




- கிரகங்களின் பருவநிலை பற்றிய நமது புரிதலை மாற்றியமைக்கக் கூடிய வகையிலான பருவகால ஏற்றத்தாழ்வினை வெளிக்கொணர்வதன் மூலம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சனிக்கோளின் ஆற்றல் இயக்கவியலைக் கண்டறிந்துள்ளனர்.
- ஒரு இராட்சத வாயு நட்சத்திரத்தில் பருவகால அளவீட்டில், உலகளாவிய ஆற்றல் ஏற்றத்தாழ்வு மதிப்பிடப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- சனிக் கோளானது மற்ற இராட்சத வாயுக் கோள்களைப் போலவே, சூரியக் கதிர்வீச்சு மற்றும் உள் வெப்பம் இரண்டிலிருந்தும் ஆற்றலைப் பெறுகிறது.
- இருப்பினும், அதன் பெரிய சுற்றுப்பாதை மையப் பிறழ்வானது, அதன் சுற்றுப்பாதை முழுவதும் உட்கிரகிக்கப்பட்ட சூரிய சக்தியில் பல்வேறு வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

- இந்த ஏற்றத்தாழ்வு ஆனது, அதன் வட்ட வடிவ சுற்றுப்பாதையின் காரணமாக குறைந்த பட்ச பருவகால ஆற்றல் மாறுபாடுகளை எதிர்கொள்ளும் பூமியை விடப் பெரிதும் வேறுபடுகிறது.
- சனிக்கோளின் ஒழுங்கற்ற ஆற்றல் சமநிலையானது, அதன் தீவிரமான சுழல்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன.

## இரட்டை சூரிய ஒளிவட்டம்




- "இரட்டை சூரிய ஒளிவட்டம்" என்று அழைக்கப்படும் ஓர் அரிய வான நிகழ்வு ஆனது சமீபத்தில் லடாக் பகுதியின் வானவெளியில் தென்பட்டது.
- சூரியனிலிருந்து வரும் ஒளியானது, சிரஸ் மேகங்களில் காணப்படும் பனிப் படிகங்கள் வழியாக ஒரு ஒளி விலகலுக்கு உள்ளாகும் போது இந்த ஒளியியல் மாயை ஏற்படுகிறது.
- இது சூரியனைச் சுற்றி அடர் நிற வளையங்கள் கொண்ட திகைப்பூட்டும் காட்சியை உருவாக்குகிறது.
- இந்தியாவின் பல பகுதிகளில் சூரிய ஒளிவட்டம் என்பது ஒரு பொதுவான நிகழ்வாகும், இருப்பினும், இரட்டை ஒளிவட்டம் என்பது ஓர் அரிதான நிகழ்வாகும்.

## ASMI மிதரக தானியங்கு துப்பாக்கி

- ஐதராபாத்தில் அமைந்துள்ள லோகேஷ் மெஷின்ஸ் லிமிடெட் நிறுவனம் ஆனது, ARDE மற்றும் இராணுவத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட, எளிதில் சுமந்து செல்லக் கூடிய ASMI மிதரக தானியங்கு துப்பாக்கியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ASMI ஆனது 2.4 கிலோவிற்கும் குறைவான எடை கொண்டது என்பதோடு இது சர்வதேச அளவிலான இதன் சக ஆயுதங்களைக் காட்டிலும் 10-15% இலகுவானது.
- 1 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான மதிப்பு கொண்ட இறக்குமதி செய்யப் பட்ட ஆயுதங்களுடன் ஒப்பிடும் போது, சுமார் 1 இலட்சம் ரூபாய்க்கும் குறைவான மதிப்பில் 30% குறைவாக இருப்பதால், இதற்கானச் செலவினம் குறைவாகும்.
- இது நிமிடத்திற்கு 800 சுற்றுகள் வீதம் தாக்குதல் மேற்கொள்ளும் திறன் கொண்டது என்பதோடு இது 32 சுற்றுகள் கொண்ட தோட்டா சட்டக உள்ளடக்கத் திறனையும் கொண்டது.




## பலோன் புரதம்





- பலோன் என்ற சிறப்புப் புரதத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புரதமானது சைக்ரோபாக்டர் யூரடிவோரன்ஸ் என்ற பாக்டீரியாவினை அதன் சூழல் மாறும்போது செயலற்ற நிலைக்குச் சென்று மீண்டு வர உதவுகிறது.
- இதனைச் செயலற்ற நிலைக்குக் கொண்டு சென்று மீண்டும் இயக்கலாம் என்பதால், ரைபோசோமின் செயல்பாட்டினை அமைதிப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் மற்ற புரதங்களிலிருந்து பலோன் புரதம் வேறுபட்டது.

## காசிமிர் விளைவு

- காசிமிர் விளைவு என்பது ஒரு குவாண்டம் (துளிம) நிகழ்வாகும். இதில் இரண்டு பொருட்கள், நெருக்கமாக வைக்கப்படும் போது, குவாண்டம் சார்ந்த ஏற்ற இறக்கங்களால் ஈர்க்கப் படலாம் அல்லது விலக்கப்படலாம்.
- ஒரு இரும்புக் கூழ்மத்தினை (ஃபெரோஃப்ளூயிடு) இடைநிலை ஊடகமாகப் பயன்படுத்தி ஈர்ப்பு மிக்கதாக உள்ள பொருளினை விலக்குத் திறன் கொண்டதாக மாற்றுவதன் மூலம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் இந்த விளைவை வெற்றிகரமாக கையாண்டனர்.

- 1948 ஆம் ஆண்டில், நெதர்லாந்து நாட்டின் இயற்பியலாளர் ஹென்ட்ரிக் காசிமிர் குவாண்டம் இயக்கவியலின் புலப்படாத அதிசயங்களைக் வெளிக் கொணர்வதற்காக இந்தத் தனித்துவமான பரிசோதனையை உருவாக்கினார்.




## சீனாவின் சங்க்'கே-6 ஆய்வுக் கலம்





- சீனாவின் சங்க்'கே-6 ஆய்வுக் கலத்தின் பெட்டகமானது, நிலவின் அறியப்படாத பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்ட அதன் முதல் மண் மாதிரிகளை எடுத்துக் கொண்டு புவிக்குத் திரும்பியுள்ளது.
- இதன்மூலம், நிலவின் வெகு தொலைவில் இருந்து பாறை மற்றும் மண் மாதிரிகளை வெற்றிகரமாக கொண்டு வந்த முதல் நாடாக சீனா மாறியுள்ளது.
- இந்த ஆய்வுக் கலம் ஆனது வடக்குப் பகுதி சீனாவின் மத்திய மங்கோலியன் பகுதியில் தரையிறங்கியது.
- முன்னதாக, அமெரிக்கா மற்றும் ரஷ்யா (சோவியத் ஒன்றியம்) போன்ற நாடுகள் நிலவின் அருகாமை பகுதியில் இருந்து மண் மாதிரிகளைச் சேகரித்துள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நகரமயமாக்கல் மற்றும் இரவு நேர வெப்பமயமாதல்

- நகரமயமாக்கல் ஆனது 140க்கும் மேற்பட்ட முக்கிய இந்திய நகரங்களில் அவற்றைச் சுற்றியுள்ள நகரங்கள் அல்லாத பகுதிகளுடன் ஒப்பிடும்போது சுமார் 60 சதவீதம் அதிக இரவு நேர வெப்பமயமாதலுக்கு வழிவகுத்துள்ளது.
- நகர்ப்புற வெப்ப தீவு (UHI) விளைவுக்கு நகரமயமாக்கல் காரணமாக இருப்பதாக அறியப் படுகிறது.
- கற்காரை (கான்கிரீட்) மற்றும் கருங்காரை (சாலைகள் மற்றும் நடைபாதை) மேற் பரப்புகள் பகலில் வெப்பத்தைச் சேமித்து மாலையில் வெளியிடுவதால், அது இரவு நேர வெப்பநிலையை உயர்கிறது.
- இந்தியா முழுவதும் உள்ள இந்த நகரங்களின் சராசரி நகர்ப்புற வெப்ப விளைவு கடந்த பத்தாண்டுகளில் 0.2 டிகிரி செல்சியஸ் ஆக பதிவானதாக கண்டறியப்பட்டது.
- இது மொத்த நகர்ப்புற வெப்பமயமாதலில் 37.73 சதவீதம் ஆனது நகரமயமாக்கலுடன் தொடர்பு கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தற்போது, இந்தியாவின் மக்கள்தொகையில் 36 சதவீதம், அதாவது சுமார் 40 கோடி பேர் நகர்ப்புறத்தில் உள்ளனர் என்ற நிலையில் இந்த எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டில் இரு மடங்காகி 80 கோடியாக உயரும்.





## தென்மேற்குப் பருவமழையின் தொடக்கம் 2024

- கேரளா மற்றும் வடகிழக்கு இந்தியாவில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- பருவமழை தொடங்குவதற்கான அதன் வழக்கமான ஜூன் 1 ஆம் தேதிக்குப் பதிலாக இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே நாட்டின் நிலப்பரப்பை எட்டியது.
- தென்மேற்குப் பருவமழை 2024 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று கேரளாவில் தொடங்கி வடகிழக்கு இந்தியாவின் பெரும்பாலானப் பகுதிகளை நோக்கி முன்னேறி உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை ஜூன் 08 ஆம் தேதியன்று தொடங்கியது.

- ஆனால் இது வங்காள விரிகுடாவில் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் தேதி அன்று அந்தமான் தீவுகளை வந்தடைந்தது.




## ஹாலோவீன் பிளவு





- 375 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள ஒரு பெரிய பனிப்பாறையானது, சமீபத்தில் அண்டார்டிகாவின் பிரண்ட் பனிப்படலத்தில் இருந்து உடைந்தது.
- உடைந்த பனிப்பாறைக்கு A-83 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- பனிப்பாறை A-83 முதன்முதலில் கிழக்கு வெட்டெல் கடலில் உள்ள ப்ரண்ட் பனிப் படலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது "ஹாலோவீன் பிளவு" எனப்படும் பிளவில் மூலம் உடைந்தது.
- பொதுவாக பனிப்பாறை சிறு துண்டுகளாக உடைவது இயல்பானது என்றாலும், அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள தாழ் மட்ட கடல் பனி சூழ்நிலைகள் உட்பட, மற்ற இடங்களில் உள்ள அதே அழுத்தத்தை பிரண்ட் பனிப்படலமும் எதிர்கொள்கிறது.
- முதன்முதலில் 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று கண்டுபிடிக்கப்பட்ட ஹாலோவீன் பிளவு மெக்டொனால்ட் ஐஸ் ரம்பிள்ஸ் எனப்படும் ஒரு பகுதியில் இருந்து தொடங்கி பாய்கிறது.

## புதிய பாசி இனம்



- கேரளாவில் கொல்லத்தில் உள்ள கும்பௌருட்டி பகுதியில் உள்ள இயற்கை காடுகளில் ஒடோகிளாடியம் சஹ்யாத்ரிகம் கண்டறியப்பட்டுள்ளது.
- ஒடோகிளாடியம் வகையினைச் சார்ந்த ஓர் இனம் கேரளாவில் பதிவு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- சஹ்யாத்ரிகம் என்ற பெயர் மேற்குத் தொடர்ச்சி மலையைக் குறிக்கிறது.
- ஒடோகிளாடியத்தின் இனங்கள் மருத்துவம், வேளாண்மை மற்றும் அஸ்டாக்சாந்தின் என்ற இயற்கை நிறமியின் உற்பத்தி ஆகியவற்றில் சாத்தியமான நடைமுறை பயன்பாடுகளைக் கொண்டுள்ளன.

## அரிவாள் மூக்கு உள்ளான் அல்லது கோட்டான்




- முதன்முறையாக, சத்தீஸ்கரில் ஒரு நீண்ட தூரம் வலசை போகும் பறவையான யூரேசிய விம்ப்ரல் அல்லது அரிவாள் மூக்கு உள்ளான் படம்பிடிக்கப்பட்டுள்ளது.
- யூரேசிய விம்ப்ரல் என்பது ஸ்கோலோபாஸிடே என்ற பெரிய குடும்பத்தினைச் சேர்ந்த அலைந்து திரியும் பறவையாகும்.
- அவை வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகிய ஐந்து கண்டங்களில் பரவிக் காணப்படுகின்றன.

- அவை தெற்கு அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் நேபாளம் உட்பட தெற்காசியாவில் உள்ள குளிர்காலப் பகுதிகளுக்கு தெற்கே வலசை போகின்றன.

## ஆரஞ்சு நிறமாக மாறும் அலாஸ்கா நதிகள்

- அலாஸ்காவில் சுத்தமான, தெளிவான நீல நிறத்தில் உள்ள ஆறுகள் மற்றும் நீரோடைகள் உருகும் நிலத்தடி உறைபனியினால் வெளியிடப்படும் நச்சு உலோகங்கள் காரணமாக துருப்பிடித்த ஆரஞ்சு நிறமாக மாறி வருகின்றன.
- இரும்பு, துத்தநாகம், தாமிரம், நிக்கல் மற்றும் ஈயம் போன்ற உலோகங்களால் நிறமாற்றம் மற்றும் தெளிவின்மை ஏற்படுகிறது.
- இதன் சில பகுதிகளில், வினிகரின் அமிலத் தன்மையைப் போலவே pH அளவு 2.3 ஆகக் குறைந்துள்ளது.
- ஆர்க்டிக் பகுதிகள் ஒட்டு மொத்த உலகத்தை விட நான்கு மடங்கு வேகமாக வெப்பம் அடைகின்றன.
- இதன் விளைவாக வட அமெரிக்காவில் உள்ள மிகவும் பழமையான ஆறுகளில் நீரின் தரம் மோசமடைந்து வருகிறது.




Nakolikurok River, 2016 Kutuk River, 2016 Kobuk River Headwater, 2013


## இந்தியாவின் இரண்டாவது வெப்பமான ஆண்டு

- 2023 ஆம் ஆண்டில், இந்தியா இதுவரையில் இல்லாத அளவிற்கான தனது இரண்டாவது வெப்பமான ஆண்டை எதிர்கொண்டது.
- 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் குறைந்தபட்சம் 102 வானிலை நிலையங்களில், கடந்த 122 ஆண்டுகளில் இல்லாத மாதாந்திர அதிகபட்ச 24 மணிநேர உச்சகட்ட வெப்பநிலை பதிவாகின.

- அதிகபட்ச வெப்பநிலைப் பதிவுடன் கூடிய இருபத்தேழு வானிலை நிலையங்கள் ஆந்திரா, கேரளா மற்றும் தமிழ்நாடு (தலா 9) ஆகிய மாநிலங்களில் உள்ளன.
- முப்பத்தி நான்கு வானிலை நிலையங்களில் 24 மணி நேர அதிகபட்ச வெப்பநிலை செப்டம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளது.
- அக்டோபர் மாதத்தைத் தவிர, மற்ற ஐந்து மாதங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை விட அதிகமாகவே இருந்தது என்பதோடு ஜூலை மாதத்தில் 0.57 செல்சியஸ் ஆக இருந்த வெப்பநிலை டிசம்பர் மாதத்தில் 1.71°C ஆக உயர்ந்துள்ளது.




## டோங்கா எரிமலை வெடிப்பு




- 2022 ஆம் ஆண்டில் பதிவான மிக மோசமான டோங்கா எரிமலை வெடிப்பு நிகழ்வானது ஏன் மிகவும் மோசமான நிகழ்வாக கருதப்படுகிறது என்பதற்கான மாற்று விளக்கத்தை அறிவியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.

- இந்த வெடிப்பு நிகழ்வு ஆனது, முன்னர் பரிந்துரைக்கப்பட்டபடி பாறைக் குழம்பிற்கும் தண்ணீருக்கும் இடையிலான எதிர்வினையால் அல்லாமல் வாயுவால் தூண்டப் பட்டு இருக்கலாம்.
- தென் பசிபிக் பெருங்கடலில் உள்ள நீருக்கடியில் உள்ள எரிமலையான ஹங்கா டோங்கா-ஹுங்கா ஹா'பாய், 2022 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று வெடித்தது.
- இது இதுவரையில் பதிவு செய்யப்படாத மிகத் தீவிரமான இடி மின்னலுடன் கூடிய புயலையும், பழங்காலத்திலிருந்து அறியப்பட்ட முதல் மாபெரும் சுனாமியையும் உருவாக்கியது.

## 2 புதிய ராம்சர் தளங்கள் – பீகார்


- ராம்சார் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களின் உலகளாவியப் பட்டியலில் பீகாரின் இரண்டு ஈரநிலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
- பீகாரின் ஜமுய் மாவட்டத்தில் அமைந்துள்ள நாகி மற்றும் நக்தி பறவைகள் சரணாலயங்கள் தற்போது ராம்சார் உடன்படிக்கையின் கீழ் அங்கீகரிக்கப் பட்டு உள்ளன.
- இதன் மூலம் நாட்டில் உள்ள உயர் அங்கீகாரம் பெற்ற நீர் தேங்கியுள்ள (ஈர நிலங்கள்) சுற்றுச்சூழல் அமைப்புகளின் மொத்த எண்ணிக்கை 82 ஆக உள்ளது.
- ஐக்கியப் பேரரசு நாடானது உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான (175) ராம்சார் தளங்களைக் கொண்டுள்ளது.




## உலகளாவிய வருடாந்திரம் முதல் தசாப்தம் அளவிலான பருவநிலை தகவல் சேர்ப்பு அறிக்கை (2024-2028)

- உலக வானிலை அமைப்பின் (WMO) படி, 2028 ஆம் ஆண்டு வரை 1991-2020 என்ற குறிப்பு ஆண்டினை விட உலகில் அதிக வெப்பநிலை பதிவாக வாய்ப்புள்ளது.

- "2024 மற்றும் 2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒவ்வோர் ஆண்டும் உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது, 1850-1900 ஆம் ஆண்டுகளில் இருந்த சராசரியை விட 1.1 °C முதல் 1.9 °C வரையிலான அளவில் அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது."
- உலகளாவியச் சராசரி மேற்பரப்பு வெப்பநிலை ஆனது, 2024 மற்றும் 2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குறைந்தபட்சம் ஓராண்டிற்கு 1850-1900 ஆம் ஆண்டுகளின் சராசரி அளவுகளை விட 1.5 °C அதிகமாக இருக்க 80 சதவீதம் வாய்ப்பு உள்ளது.
- ஐந்தாண்டு சராசரி இந்த வரம்பை மீறுவதற்கு 47 சதவீதம் வாய்ப்பு உள்ளது.




## இந்தியாவின் முதல் தனியார் உயிர்க்கோளக் காப்பகம்




- உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள இராஜாஜி தேசியப் பூங்காவை ஒட்டி அமைந்துள்ள இராஜாஜி இரகாதி உயிர்க்கோளக் காப்பகம் (RRB) எனப்படும் இந்தியாவின் முதல் தனியார் உயிர்க்கோளக் காப்பகம் ஆனது இரண்டு நபர்களால் உருவாக்கப்பட்டது.
- 1983 ஆம் ஆண்டு உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள மூன்று முக்கிய வனவிலங்குச் சரணாலயங்களான இராஜாஜி, மோட்டிச்சூர் மற்றும் சில்லா ஆகியவை இணைக்கப் பட்டு இராஜாஜி தேசியப் பூங்கா உருவாக்கப்பட்டது.

- மகாராஷ்டிராவின் புனேவுக்கு அருகிலுள்ள சஹ்யாத்ரி புலிகள் வளங்காப்பகத்தின் இடையக மண்டலத்தில் கொய்னா நதிக்கு மேலே - மேற்குத் தொடர்ச்சி மலையின் மேல் பகுதியில் இரண்டாவது உயிர்க்கோளத்தினை உருவாக்கவும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## ஆந்த்ரோபோசீன் காலத்தின் காற்றின் நிலை குறித்த திட்டம்

- லாஸ் ஏஞ்சல்ஸ், பெல்ஃபாஸ்ட் மற்றும் பர்மிங்காம் ஆகிய இடங்களில் உள்ள அரங்கக் காட்சிகளில் ஆந்த்ரோபோசீன் காலத்தில் காற்றின் நிலை குறித்த திட்டம் என்ற ஒரு காட்சியை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கண்ணுக்குத் தெரியாத காற்று மாசுபாட்டை காட்சிப்படுத்துவதற்காக "ஒளி கொண்டு உருவாக்கப்பட்ட ஓவியம்" என்று அழைக்கப்படும் ஒரு சர்வதேச திட்டத்திற்காக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலைஞர்கள் இணைந்துள்ளனர்.
- இதைக் கொண்டு காற்றில் உள்ள அபாயகரமான நுண் துகள்களின் (PM2.5) அளவைக் காணலாம்.
- டிஜிட்டல் ஒளி ஓவியம் மற்றும் குறைந்த விலையிலான காற்று மாசு உணர்விகளை இணைத்து, இந்தியா, எத்தியோப்பியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய மூன்று நாடுகளில் உள்ள பல்வேறு நகரங்களில் காணப்படும் மாசு அளவு பற்றிய புகைப்பட ஆதாரங்களை அறிவியல் குழு தயாரித்தது.




## அதிக எண்ணிக்கையிலான ஆலிவ் ரிட்லி ஆமை குஞ்சு பொரிப்பு பதிவுகள் 2024

- தமிழகத்தில் ஜனவரி முதல் மே மாதம் வரை 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆலிவ் ரிட்லி கடல் ஆமை குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.
- இதுவரை தமிழகத்தில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஆமைக் குஞ்சுகள் கடலில் விடபட்ட நிகழ்வு இதுவே ஆகும்.
- கடலூர் (89,648), நாகப்பட்டினம் (60,438) மற்றும் சென்னை (38,230) ஆகிய கடற்கரைப் பகுதிகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஆலிவ் ரிட்லி குஞ்சுகள் கடலில் விடப் பட்டன.
- மாநிலம் முழுவதும், இந்தப் பருவத்தில் 28,971 ஆமைகள் இறந்துள்ளன.



## நைட்ரஸ் ஆக்சைடு உமிழ்வு நாடுகள் 2024




- உலகிலேயே அதிக அளவில் நைட்ரஸ் ஆக்சைடு ($N_2O$) வெளியிடும் இரண்டாவது நாடாக இந்தியா உள்ளது.
- $N_2O$ என்பது ஒரு பசுமை இல்ல வாயு ஆகும் என்பதோடு இது கார்பன் டை ஆக்சைடை விட வளிமண்டலத்தினை அதிக வெப்பமாக்குகிறது.
- 2020 ஆம் ஆண்டில் உலக அளவில் மனிதனால் உருவாக்கப்பட்ட உமிழ்வுகளில் சுமார் 11% உமிழ்வானது இந்தியாவிலிருந்து வெளியிடப்படுபவையாகும் என்ற நிலையில் 16% பங்குடன் மட்டுமே சீனா இதில் முதலிடத்தில் உள்ளது.

- உரத்தின் பயன்பாடானது இந்த உமிழ்வுகளின் முக்கிய மூல ஆதாரமாக உள்ளது.
- கடந்த 40 ஆண்டுகளில் மனித நடவடிக்கைகளின் மூலமான $N_2O$ உமிழ்வுகள் 40% (ஆண்டிற்கு மூன்று மில்லியன் மெட்ரிக் டன் $N_2O$) அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் மனித நடவடிக்கைகள் மூலமான $N_2O$ உமிழ்வுகளின் அளவின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ள ஐந்து நாடுகள் சீனா (16.7%), இந்தியா (10.9%), அமெரிக்கா (5.7%), பிரேசில் (5.3%) மற்றும் ரஷ்யா (4.6%) ஆகிய நாடுகள் ஆகும்.

## தாவரங்களை உண்ணும் பனிச் சிறுத்தைகள்


- ஆசியாவின் உயர்ந்த மலைப் பகுதிகளில் காணப்படும் பனிப் பிரதேச வேட்டையாடி உண்ணும் ஊண் உண்ணி உயிரினமான பனிச் சிறுத்தைகளானது, தாவரங்களை உண்பதாக ஜப்பானிய அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உடல் முழுவதும் உரோமம் கொண்ட இந்த உயிரினமானது குறிப்பாக மைரிகேரியா இனத்தைச் சேர்ந்த தாவரங்களை உண்ணுகிறது.
- இந்தத் தாவரங்கள் பெரும்பாலும் புதர் இனங்கள் ஆகும் என்பதோடு இவை ஐரோப்பா மற்றும் ஆசியாவின் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- பனிச் சிறுத்தைகளானது தாவரங்களை உண்பதாக பதிவு செய்யப்பட்ட முதல் பெரும் பூனை இனம் அல்ல.
- உலகில் 41 பெரும் பூனை இனங்கள் உள்ளன.
- ஆராய்ச்சியாளர்கள் முன்னதாக இதில் 24 இனங்களின் சாணத்தில் தாவர எச்சங்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.



## ஓசோன் அளவைக் குறைக்கும் பொருட்கள் 2024

- முதன்முறையாக ஹைட்ரோகுளோரோஃப்ளோரோகார்பன்கள் (HCFCs) எனப்படும் வளிமண்டலத்தில் காணப்படும் சக்திவாய்ந்த ஓசோன் குறைப்பு பொருட்களின் (ODS) பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க சரிவு பதிவாகியுள்ளது.
- இந்த HCFCகள் ஆற்றல்மிக்க பசுமை இல்ல வாயுக்களாகும், எனவே இவற்றின் குறைவு புவி வெப்பமடைதலையும் குறைக்கும்.
- ஓசோன் குறைப்புப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு மீதான கட்டுப்பாடு முறைகளை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டி 1987 ஆம் ஆண்டில் மாண்ட்ரீயல் நெறிமுறையானது சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

- உலகளவில் குளோரோஃப்ளோரோகார்பன்களின் உற்பத்தியின் நிறுத்தமானது 2010 ஆம் ஆண்டில் நிறைவடைந்தது.




## காந்தி சாகர் சரணாலயத்தில் சிவிங்கிப் புலிகள் – மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவிற்கு அடுத்தப்படியாக காந்தி சாகர் வனவிலங்கு சரணாலயம் ஆனது இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் அறிமுகப் படுத்தப் படுவதற்கான இரண்டாவது இடமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- சம்பல் நதியானது இந்தச் சரணாலயத்தின் குறுக்கே பாய்ந்து அதனை இரண்டு சம பாகங்களாக பிரிக்கிறது.
- காந்தி சாகர் சரணாலயத்தின் சவன்னா (புல்வெளி) சுற்றுச்சூழல் அமைப்பு ஆனது, வறண்ட இலையுதிர் மரங்கள் மற்றும் புதர்கள் நிரம்பிய பரந்தப் புல்வெளிகளை உள்ளடக்கியதாகும்.
- இது சவானா வனப்பகுதி மற்றும் வனவிலங்குகளுக்குப் பெயர் பெற்ற கென்யாவின் மசாய் மாரா தேசியக் காப்பகத்தினை ஒத்துள்ளது.



## புதிய வகை விலாங்கு மீன்



- ஒடிசாவின் வெவ்வேறு கழிமுகச் சுற்றுச்சூழல் அமைப்புகளில் புதிய வகை விலாங்கு மீன் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அந்த மாநில மீன்வளத் துறையின் முன்னாள் இணை இயக்குநரான சூர்ய குமார் மொஹந்தியை கௌரவிக்கும் வகையில் இந்தப் புதிய இனத்திற்கு 'ஓபிச்தஸ் சூர்யாய்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய இனங்கள் அதனுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரே இனத்தினைச் சேர்ந்த ஓஃபிச்தஸ் அலெனி, ஓஃபிச்தஸ் சோபிஸ்டியஸ் மற்றும் ஓஃபிச்தஸ் அல்டிபென்னிஸ் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.
- ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் எரியான சிலிக்கா ஏரியில் இந்த இனங்கள் காணப் படுகின்றன.

## பாண்டனல் சதுப்பு நிலத்தில் தீ விபத்து





- பூமியின் மிகப்பெரிய வெப்பமண்டல ஈரநிலமான பிரேசிலின் பாண்டனல் சதுப்பு நிலத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் தீ விபத்தானது, 2020 ஆம் ஆண்டில் பதிவான மோசமான தீ விபத்தினையே விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது பராகுவே நதிப் படுகையில் உயர்ந்த பகுதிகளில் அமைந்துள்ளது.
- பிரேசிலில் அமைந்துள்ள பாண்டனல், பொலிவியா மற்றும் பராகுவே ஆகியவற்றுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.

- போர்ச்சுகலை விட சுமார் இரண்டு மடங்கு பெரியப் பரப்பளவைக் கொண்ட இந்த யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் ஆனது, ஜாகுவார் உயிரினங்களைக் அதிக எண்ணிக்கையில் கொண்ட உலகின் மிகப்பெரியப் பகுதியாகும்.
- பாண்டனல் பகுதியில் சுமார் 95% ஆனது தனியார் உரிமையின் கீழ் உள்ளது.

## பர்புரோகலின் நிறமி

- அறிவியலாளர்கள் நூற்றுக்கணக்கான மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஊதா நிறப் பாசிகளின் பரிணாம வளர்ச்சியைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்புகள் ஆனது பரிணாமம் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிய முக்கியக் கருத்தாக்கத்திற்கு சவால் விடுக்கிறது.
- சிறியதாக இருந்தாலும், இந்தப் பாசிகள் அவை வாழும் பனிப்பாறைகளில் வியத்தகு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- கோடைகாலத்தில் பனிப்பாறைகள் உருகும் பருவத்தில் பனிப்பாறைகளில் திரவ நீர் உருவாவதால், ஊதா நிறப் பாசிகளின் உருவாக்கம் ஆனது பனியின் மேற்பரப்பைக் கருமையாக்கி, அவை உருகும் வேகத்தைத் துரிதப்படுத்துகிறது.
- சூரியத் திரை போல செயல்படும் பனிப்பாறையின் ஊதா நிறம் ஆனது, நிறமி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள புதிய மரபணுக்களால் உருவாக்கப்பட்டது.
- பர்புரோகலின் எனப்படும் இந்த நிறமியானது, பாசி திசுக்களை புற ஊதா (UV) மற்றும் கட்புலனாகும் ஒளிகளின் சேதத்திலிருந்துப் பாதுகாக்கிறது.



## புதிய தாவர இனங்கள் – அந்தமான் மற்றும் அருணாச்சல்


- இந்தியத் தாவரவியலாளர்கள், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய இரண்டு உயிரி-புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலிருந்து இரண்டு புதிய தாவர இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- நிலமேல் தண்டு-ஒட்டுண்ணி பூக்கும் வகை தாவர இனங்கள் ஆன டென்ட்ரோப்தோ லாங்கென்சிஸ் மத்திய அந்தமானின் லாங் தீவுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

- மற்றொரு இனமானது அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் கண்டறியப்பட்ட பெட்ரோகோஸ்மியா அருணாசலன்ஸ் என்ற புதிய மூலிகை தாவர இனமாகும்.



## உலகின் முதல் ஆசிய ராஜ கழுகுகள் வளங்காப்பு மையம்

- உத்தரப் பிரதேசத்தில் ஆசிய ராஜ கழுகுக்கான உலகின் முதல் வளங்காப்பு மற்றும் இனப்பெருக்க மையம் ஆனது விரைவில் மகாராஜ்கஞ்ச் எனுமிடத்தில் அமைக்கப்பட உள்ளது.
- இதுவே செந்தலை கழுகு என்றும் அழைக்கப்படும் ஆசிய ராஜ கழுகுகளின் இனப் பெருக்கம் மற்றும் வளங்காப்பிற்கான உலகின் முதல் மையம் ஆகும்.
- இது 2007 ஆம் ஆண்டு முதல் இயற்கை பாதுகாப்பிற்கான IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்த மையமானது அந்தக் கழுகு இனங்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.



### இக்தியோபிஸ் ஸ்ப்


- அஸ்ஸாம் மாநிலத்தில் காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் சரணாலயத்தில் உள்ள விலங்கினங்களின் பட்டியலில் கால்கள் இல்லாத இருவாழ்வி இனம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.
- அசாமின் வனவிலங்கு அதிகாரிகள் முதன்முறையாக புலிகள் வளங்காப்பகத்தில் கோடுகள் கொண்ட சிசிலியன் - சிறுகண் காலிலி (Ichthyophis spp) - இனம் இருப்பதாகப் பதிவு செய்துள்ளனர்.
- கால்களற்ற நீர்நில வாழ்விகளான (இருவாழ்விகள்) இந்த சிசிலியன்கள் தங்கள் வாழ் நாளின் பெரும்பகுதியை மண்ணுக்கு அடியில் கழிக்கின்றன.
- புலிகள் வளங்காப்பகத்தில் சுமார் 24 வகையான இருவாழ்வி இனங்கள் மற்றும் 74 வகையான ஊர்வன இனங்கள் உள்ளன.
- இந்தியாவில் காணப்படும் சுமார் 29 வகையான கடல் ஆமைகள் மற்றும் நன்னீர் ஆமைகளில் 21 இனங்களும் இந்தப் பகுதியில் காணப்படுகின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2024


- உலகளாவிய உணவுக் கொள்கை அறிக்கை 2024: ஆரோக்கியமான உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான உணவு முறைகள் என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தினால் (IFPRI) வெளியிடப் பட்டு உள்ளது.
- தவறான உணவு முறையின் விளைவாக, இந்தியாவின் மக்கள் தொகையில் 16.6 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியாவில், 2011 ஆம் ஆண்டில் சுமார் 15.4% ஆக இருந்த ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை விகிதம் ஆனது 2021 ஆம் ஆண்டிற்குள் 16.6% ஆக அதிகரித்துள்ளது.
- இந்திய மக்கள் தொகையில் குறைந்தது 38 சதவீதம் பேர் ஆரோக்கியமற்ற உணவுகளை உட்கொண்டுள்ளனர் என்ற அதே சமயம் 28 சதவீதம் பேர் மட்டுமே பரிந்துரைக்கப் பட்ட ஐந்து உணவு வகைகளையும் உட்கொண்டுள்ளனர்.
- 2006 ஆம் ஆண்டில் 12.9% ஆக இருந்த, வயது வந்தோர்களில் பதிவான அதிக உடல் எடை பாதிப்பு ஆனது 2016 ஆம் ஆண்டில் 16.4% ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற தெற்காசிய நாடுகளில் அதிக எடை, உடல் பருமன் மற்றும் அது தொடர்புடைய தொற்றா நோய்களின் பரவல் அதிகரித்துள்ளது.

- இரண்டு பில்லியனுக்கும் அதிகமான மக்கள், அதிலும் மிக அதிகமாக ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசியாவில் உள்ளவர்கள் ஆரோக்கியமான உணவை வாங்க முடியாத நிலையில் உள்ளனர்.




## உலகளாவிய சமூகப் பாதுகாப்பில் நிலவும் இடைவெளியை நிரப்புதலுக்கான நிதி - ILO அறிக்கை


Figure 2. Financing gap for achieving universal social protection coverage per year, as a percentage of GDP, by social protection benefit, by national income group, and by region, 2024




- குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் உலகளாவிய சமூகப் பாதுகாப்பினை அடைய கூடுதலாக 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப் படுகிறது.
- அனைத்து குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.3 சதவீத நிதி இடைவெளியைக் கொண்டுள்ளன.
- ஆனால் குறைவான வருமானம் உள்ள நாடுகளில், இது அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52.3 சதவீதமாக உள்ளது.

- பிராந்திய ரீதியாக, அனைவருக்குமானப் பரவலை அடைவதில் ஆப்பிரிக்கா மிகப் பெரியதொரு சவாலை எதிர்கொள்கிறது என்பதோடு ஆண்டிற்குப் பிராந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17.6 சதவீத அளவிற்கு நிதி இடைவெளி உள்ளது.
- இதைத் தொடர்ந்து அரபு நாடுகளில் உள்ள குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் பிராந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.4 சதவீத அளவு நிதி இடைவெளியுடன் உள்ளன மற்றும் லத்தீன் அமெரிக்கன் மற்றும் கரீபியன் 2.7 சதவீத இடைவெளியுடன் உள்ளன.
- ILO அமைப்பின் புள்ளி விவரங்களின்படி, இன்று உலகளவில் 4.1 பில்லியன் மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு இல்லை.
- உலக மக்கள்தொகையில் சுமார் 29% பேர் மட்டுமே போதுமான சமூகப் பாதுகாப்புப் பலன்களை கொண்டுள்ளனர் மற்றும் 55% பேருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

## உலகச் செல்வ வள அறிக்கை 2024




- கேப்ஜெமினி ஆராய்ச்சி நிறுவனம் ஆனது 2024 ஆம் ஆண்டு உலகச் செல்வ வள அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் அதிக நிகரச் சொத்து மதிப்புள்ள நபர்களின் எண்ணிக்கை (HNWI) 2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 12.2% அதிகரித்துள்ளது.
- இது HNWI மக்கள்தொகையின் மொத்த எண்ணிக்கையை சுமார் 3.589 மில்லியனாக உயர்த்துகிறது.
- இந்தியாவின் HNWI நபர்களின் நிதிச் செல்வம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 12.4% அதிகரித்து 1,445.7 பில்லியன் டாலராக இருந்தது என்ற நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 1,286.7 பில்லியன் டாலராக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் சந்தை மிதநிலையானது HNWI நபர்களின் செல்வ வளத்தில் 3.8 டிரில்லியன் டாலர் அதிகரிப்பைத் தூண்டியது.

- APAC பகுதியில், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் முறையே HNWI செல்வ வளர்ச்சி 12.4% மற்றும் 7.9%ஆகவும், HNWI நபர்களின் எண்ணிக்கை வளர்ச்சி 12.2% மற்றும் 7.8% ஆகவும் பதிவாகியுள்ளன.
- ஆசியா-பசிபிக் பகுதியில் HNWI செல்வ வளர்ச்சியில் 4.2% அதிகரிப்பும், HNWI நபர்களின் எண்ணிக்கையில் 4.8% உயர்வும் பதிவானது.
- இந்தியாவின் சந்தை மூலதனம் 2022 ஆம் ஆண்டில் 6% அதிகரித்தது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் 29.0% அதிகரித்துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவுடன் ஒப்பிட்டுச் சதவீதமாக குறிப்பிடப்படும் நாட்டின் தேசியச் சேமிப்பு ஆனது 2022 ஆம் ஆண்டில் சுமார் 29.9% ஆக இருந்தது என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டில் 33.4% ஆக அதிகரித்துள்ளது.


## QS அமைப்பின் உலகப் பல்கலைக் கழக தரவரிசை 2025

- உலகளவில், மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, 13வது முறையாக இந்த ஆண்டும் 'உலகின் சிறந்த கல்வி நிறுவனம்' என்ற இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது இந்திய அளவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- காரக்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை முறையே 4வது மற்றும் 5வது இடங்களைப் பெற்றுள்ளன.

| Rank | University | Overall Score | |
|---|---|---|---|
| 118 | Indian Institute of Technology Bombay (IITB)<br>Mumbai, India | 56.3 | Shortlist |
| =150 | Indian Institute of Technology Delhi (IITD)<br>New Delhi, India | 52.1 | Shortlist |
| 211 | Indian Institute of Science<br>Bangalore, India | 45 | Shortlist |
| =222 | Indian Institute of Technology Kharagpur (IIT-KGP)<br>Kharagpur, India | 43.7 | Shortlist |
| =227 | Indian Institute of Technology Madras (IITM)<br>Chennai, India | 43.5 | Shortlist |

## உலக கடன் அறிக்கை 2024

- உலகளாவிய கடன் (குடும்பங்கள், வணிகங்கள் மற்றும் அரசாங்கங்களின் கடன்கள் உட்பட) 2024 ஆம் ஆண்டில் 315 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளது.
- இது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று மடங்கு அதிகமாகும்.
- உலகில் சுமார் 8.1 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர்.
- இந்தக் கடனை ஒவ்வொருவருக்குமென பிரித்தால், உலகில் உள்ள ஒவ்வொருவரும் சுமார் 39,000 டாலர் கடன்பட்டவராகக் கூடும்.
- மொத்த உலகளாவிய கடனில், வீட்டுக் கடன் 59.1 டிரில்லியன் டாலராக உள்ளது; வணிக கடன் 164.5 டிரில்லியன் டாலர்; மற்றும் அரசுக் கடன் (அரசாங்கங்களின் கடன்) 91.4 டிரில்லியன் டாலர் ஆகும்.
- இந்தியாவின் பொதுக் கடன் 2023 ஆம் ஆண்டில், 2.9 டிரில்லியன் டாலரினை எட்டியுள்ள நிலையில் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 82.7% ஆகும்.




## சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2024

- சமீபத்தில் சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கொள்கைக்கான யேல் மையம் ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- பசுமை இல்ல வாயு (GHG) உமிழ்வு என்பது குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளதன் காரணமாக எஸ்டோனியா நாடு இந்தத் தரவரிசையில் முன்னணியில் உள்ளது.
- எஸ்டோனியா, பின்லாந்து, கிரீஸ், தைமூர்-லெஸ்தே மற்றும் ஐக்கிய பேரரசு ஆகிய ஐந்து நாடுகள் மட்டுமே 2050 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய அளவிலான உமிழ்வு நிலையை அடையத் தேவையான ஒரு விகிதத்தில் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைத்துள்ளன.
- இந்தப் பட்டியலில் 34வது இடத்தில் உள்ள அமெரிக்காவில், உமிழ்வுகள் குறைந்து வருகின்றன, ஆனால் அவை குறைவான வேகத்தில் தான் குறைந்து வருகின்றன.
- சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகியவை முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அதிக அளவு பசுமை இல்ல வாயு உமிழ்வைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன.

- கடந்தப் பத்தாண்டுகளில் 32% உமிழ்வு அதிகரிப்புடன், உலகின் மூன்றாவது பெரிய பசுமை இல்ல வாயு உமிழ்வு நாடாக இந்தியா 176வது இடத்தில் உள்ளது.
- மியான்மர், லாவோஸ், பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் மட்டுமே இந்தியாவிற்கு அடுத்து உள்ள இடங்களைப் பிடித்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், மனிதனால் வெளியாகும் சல்பர் டை ஆக்சைடை அதிக அளவில் வெளியேற்றும் நாடான சீனாவை இந்தியா விஞ்சியது.

| COUNTRY | RANK | SCORE | 10Y Δ |
|---|---|---|---|
| Estonia | 1 | 75.3 | 17.3 |
| Luxembourg | 2 | 75.0 | 4.1 |
| Germany | 3 | 74.6 | 4.4 |
| Finland | 4 | 73.7 | 8.3 |
| United Kingdom | 5 | 72.7 | 2.1 |
| Bangladesh | 175 | 27.8 | 2.4 |
| India | 176 | 27.6 | 4.6 |
| Myanmar | 177 | 26.9 | -2.7 |
| Laos | 178 | 26.1 | 1.0 |
| Pakistan | 179 | 25.5 | -3.9 |
| Viet Nam | 180 | 24.5 | -4.6 |

## பெருங்கடல்களின் நிலை குறித்த அறிக்கை 2024





Figure 6 Global mean ocean heat content from 1960–2023 (in ZJ) for the upper 2,000 depth as derived as an ensemble mean approach considering several subsurface temperature products and its uncertainty (shaded). Source: Minière et al. (2023).

- யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையமானது ஐஸ்லாந்தில் 2024 ஆம் ஆண்டிற்கான பெருங்கடல்களின் நிலை குறித்த அறிக்கையினை (StOR) வெளியிட்டுள்ளது.
- பெருங்கடல் மேற்பரப்பில் 2,000 மீட்டர் (மீ) என அளவில் 1960 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஒரு சதுர மீட்டருக்கு 0.32 ± 0.03 வாட் (W/m2) என்ற விகிதத்தில் வெப்பம் அடைந்தன.
- கடந்த இருபது ஆண்டுகளில் மிக துரிதப்படுத்தப்பட்ட கடல் வெப்பமயமாதலில், இந்த விகிதம் 0.66 ± 0.10 W/m2 என்ற அளவில் இரட்டிப்பாகியுள்ளது.


- 2024 ஆம் ஆண்டில், 638 நிலையங்களில் அதிகளவிலான கடல் pH மதிப்புகள் பதிவாகி உள்ளன.
- 1993 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான உலகளாவிய சராசரி கடல் மட்ட உயர்வு ஆண்டிற்கு 3.4 +/-0.3 மிமீ என்ற விகிதத்தில் அதிகரித்துள்ளது.

## குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்த அறிக்கை 2024




- ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியமானது (UNICEF), "2024 ஆம் ஆண்டு குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்த அறிக்கையினை" வெளியிட்டுள்ளது.
- உலகளவில், நான்கில் ஒரு குழந்தை (27 சதவீதம்), அவர்களின் ஆரம்பகால குழந்தைப் பருவத்தில் கடுமையான குழந்தை உணவு வறுமையை (CFP) எதிர்கொள்கிறது.
- இதன் மூலம் 5 வயதுக்குட்பட்ட சுமார் 181 மில்லியன் குழந்தைகள் இந்த வறுமையினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- கடுமையான குழந்தைப் பருவ உணவு வறுமையில் வாழும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு (65 சதவீதம்) குழந்தைகள் இருபது நாடுகளில் வசிக்கின்றனர்.
- இந்தியாவில், 40% குழந்தைகள் கடுமையான குழந்தைப் பருவ உணவு வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற நிலையில், இது தெற்காசியாவில் இரண்டாவது மிக அதிக எண்ணிக்கையிலான பாதிப்பு ஆகும்.
- பொருளாதாரச் சமத்துவமின்மையால் சுமார் 74% குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவை வாங்க முடியாத நிலை உள்ளது.
- மேலும் சுமார் 69% இந்தியர்கள் மட்டுமே மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளைப் பயன்படுத்துகின்றனர்.

## உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கை 2024




- தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்கள் மற்றும் உள்கட்டமைப்பில் முதலீடு ஆனது 2024 ஆம் ஆண்டில் 3 டிரில்லியன் டாலர் என்ற ஒரு புதிய உலகளாவிய அதிகபட்ச அளவினை எட்டும்.
- இந்த ஆண்டு சுமார் 675 பில்லியன் டாலர்களுடன் தூய்மையான எரிசக்தி முதலீட்டில் சீனா மிகப்பெரிய பங்கைக் கொண்டிருக்கும்.
- புதிய எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடு ஆனது இந்த ஆண்டு 7% அதிகரித்து 570 பில்லியன் டாலராக இருக்கும்.
- மேலும், மற்ற வளர்ந்து வரும் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களில் தூய்மையான எரிசக்தி முதலீடு சுமார் 320 பில்லியன் டாலர் என்ற அளவில் குறைவாக உள்ளது.
- இந்தியாவின் செலவினம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 68 பில்லியன் டாலரை எட்டியது என்ற நிலையில் இது 2016-2020 ஆம் ஆண்டுகளின் சராசரியை விட சுமார் 40 சதவீதம் அதிகமாகும்.
- புதைபடிவ எரிபொருள் முதலீடு ஆனது அதே காலகட்டத்தில் 6 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் 33 பில்லியன் டாலர்களை எட்டியது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 500 ஜிகாவாட் (Gw) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் என்ற இந்தியாவின் இலக்கினை நிறைவு செய்ய அடுத்த ஏழு ஆண்டுகளில் 190 பில்லியன் டாலர் முதல் 215 பில்லியன் டாலர் வரை முதலீடு தேவைப்படுகிறது.

## உலகளாவியப் பாலின இடைவெளிக் குறியீடு 2024

- உலகப் பொருளாதார மன்றம் ஆனது 2024 ஆம் ஆண்டு உலகளாவியப் பாலின இடைவெளிக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இடம் பெற்றுள்ள 146 நாடுகளில் கடந்த ஆண்டை விட இந்தியா இரண்டு இடங்கள் பின்தங்கி தற்போது 129வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளான வங்காளதேசம் 99, சீனா 106, நேபாளம் 117, இலங்கை 122, பூடான் 124 மற்றும் பாகிஸ்தான் 145 வது இடங்களில் உள்ளன.

- மீண்டும் முதல் இடத்தைப் பிடித்த ஐஸ்லாந்து நாடானது (93.5%) 15 ஆண்டுகளாக இந்தக் குறியீட்டில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து பின்லாந்து, நார்வே, நியூசிலாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் உள்ளன.

**Southern Asia**

| Economy | Rank | | Score |
|---|---|---|---|
| | Regional | Global | |
| Bangladesh | 1 | 99 | 0.689 |
| Nepal | 2 | 117 | 0.664 |
| Sri Lanka | 3 | 122 | 0.653 |
| Bhutan | 4 | 124 | 0.651 |
| India | 5 | 129 | 0.641 |
| Maldives | 6 | 132 | 0.633 |
| Pakistan | 7 | 145 | 0.570 |

## NDCகள் பற்றிய UNEP அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது (UNEP), "இலட்சிய இலக்குகளை மேம்படுத்துதல், நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல்: காடுகளுக்கான மேம்படுத்தப் பட்ட தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளை நோக்கி" என்றதொரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தற்போதைய தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளில் (NDCs) வழங்கப் படும் வனப் பாதுகாப்பில் காணப்படும் பல குறிப்பிடத்தக்க இடைவெளிகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- 2019-2023 ஆம் ஆண்டு வரை, முன்னணி 20 நாடுகளில் வெப்பமண்டல காடழிப்பு மூலம் ஆண்டுதோறும் சுமார் 5.6 பில்லியன் டன்கள் கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றப் படுகிறது.
- 8 நாடுகளில் மட்டுமே அளவு வரம்பு கணக்கிடப்படக் கூடிய காடழிப்பு இலக்குகளைக் கொண்டுள்ளன என்ற நிலையில் மேலும் UNFCCC கட்டமைப்பின் பங்குதார நாடுகளில் வெறும் 38% நாடுகள் மட்டுமே வன அழிப்பு நடவடிக்கைக் குறைப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளன.
- வேளாண்மை மற்றும் பலவீனமான நிலப் பயன்பாட்டுக் கொள்கைகள் இதில் முக்கிய காடழிப்பு காரணிகளாக உள்ளன.

## உலகளாவிய அமைதிக் குறியீடு 2024

- பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான கல்வி நிறுவனம் ஆனது அதன் வருடாந்திர உலகளாவிய அமைதிக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள 163 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் நிலவும் அமைதி நிலையினை மதிப்பிடுகிறது.

- ஒட்டு மொத்தத்தில், உலக நாடுகளில் நிலவும் அமைதி நிலை இந்த ஆண்டு 0.56% குறைந்துள்ளது.
- ஒட்டு மொத்தத்தில், கடந்த ஆண்டு மோதல் காரணமாக சுமார் 162,000 பேர் உயிர் இழந்துள்ளனர் என்ற நிலையில் இது கடந்த 30 ஆண்டுகளில் பதிவான இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்பினைக் குறிக்கிறது.
- வன்முறையின் காரணமாக ஏற்பட்ட உலகளாவியப் பொருளாதார தாக்கம் ஆனது கடந்த ஆண்டு 19.1 டிரில்லியன் டாலராக அதிகரித்தது என்ற நிலையில் இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13.5 சதவீதமாகும்.
- ஐஸ்லாந்து நாடானது மிகவும் அமைதியான நாடாக இப்பட்டியலில் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது என்பதோடு அது 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இந்த நிலையினை வகித்து வருகிறது.
- அதைத் தொடர்ந்து அயர்லாந்து, ஆஸ்திரியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- ஆப்கானிஸ்தானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மிகவும் அமைதி குறைந்த நாடாக ஏமன் இடம் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து சூடான், தெற்கு சூடான், ஆப்கானிஸ்தான் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- இதில் இந்தியா 5 இடங்கள் முன்னேறி 116வது இடத்தில் உள்ளது.

| Regional Rank | Country | Overall Score | Score Change | Overall Rank |
|---|---|---|---|---|
| 1 | Bhutan | 1.564 | -0.042 | 21 |
| 2 | Nepal | 2.069 | 0.051 | 81 |
| 3 | Bangladesh | 2.126 | 0.033 | 93 |
| 4 | Sri Lanka | 2.195 | 0.029 | 100 |
| 5 | India | 2.319 | -0.039 | 116 |
| 6 | Pakistan | 2.783 | -0.025 | 140 |
| 7 | Afghanistan | 3.294 | 0.007 | 160 |

## உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2024

- உலக வங்கியானது உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- 2025 ஆம் நிதியாண்டிற்கான GDP வளர்ச்சி விகிதம் 6.6% என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியா உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- தெற்காசிய பிராந்தியத்தில், 2023 ஆம் ஆண்டில் 6.6% ஆக இருந்த GDP வளர்ச்சி விகிதம் 2024 ஆம் ஆண்டில் 6.2 % ஆக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.


- கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக, உலகப் பொருளாதாரம் ஆனது 2024 ஆம் ஆண்டில் உறுதித் தன்மைக்கான அறிகுறிகளை வெளிப்படுத்துகிறது.
- தெற்காசியப் பிராந்தியத்தில் 2023 ஆம் ஆண்டில் 5.6% ஆக இருந்த தனிநபர் வருமான வளர்ச்சியானது 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 5.1% ஆக குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்று இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

TABLE 2.5.2 South Asia country forecasts

(Real GDP growth at market prices in percent, unless indicated otherwise)

| | | | | | | | Percentage point differences from January 2024 projections | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 | 2022 | 2023e | 2024f | 2025f | 2026f | 2024f | 2025f |
| **Calendar year basis** | | | | | | | | |
| Afghanistan[1] | -20.7 | -6.2 | .. | .. | .. | .. | .. | .. |
| Maldives | 37.7 | 13.9 | 4.0 | 4.7 | 5.2 | 4.1 | -0.5 | -0.3 |
| Sri Lanka | 4.2 | -7.3 | -2.3 | 2.2 | 2.5 | 3.0 | 0.5 | 0.1 |
| **Fiscal year basis[2]** | 2021/22 | 2022/23 | 2023/24e | 2024/25f | 2025/26f | 2026/27f | 2024/25f | 2025/26f |
| India | 9.7 | 7.0 | 8.2 | 6.6 | 6.7 | 6.8 | 0.2 | 0.2 |
| | 2020/21 | 2021/22 | 2022/23 | 2023/24e | 2024/25f | 2025/26f | 2023/24e | 2024/25f |
| Bangladesh | 6.9 | 7.1 | 5.8 | 5.6 | 5.7 | 5.9 | 0.0 | -0.1 |
| Bhutan | -3.3 | 4.8 | 4.6 | 4.9 | 5.7 | 6.0 | 0.9 | 1.1 |
| Nepal | 4.8 | 5.6 | 1.9 | 3.3 | 4.6 | 5.3 | -0.8 | -0.4 |
| Pakistan[2] | 5.8 | 6.2 | -0.2 | 1.8 | 2.3 | 2.7 | 0.1 | -0.1 |

## உலகளாவியப் போக்குகள் அறிக்கை: 2023 ஆம் ஆண்டில் பதிவான கட்டாய புலம் பெயர்வு





- 2023 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரை உலகளவில் 120 மில்லியன் மக்கள் வலுக்கட்டாயமாக புலம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் முகமையின் (UNHCR) உலகளாவியப் போக்குகள் அறிக்கையில் இந்தப் புதிய தரவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 117.3 மில்லியன் மக்கள் வலுக்கட்டாயம் காரணமாக புலம்பெயர்ந்துள்ளனர்.
- மே மாதத்தில் உலகளவில் சுமார் 120 மில்லியன் மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்ற நிலையில் இது 2022 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களை விட சுமார் 10% அதிகமாகும்.
- இது உலக மக்கள் தொகையில் சுமார் 1.5% ஆகும்.
- இந்த ஆண்டு, அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையானது தொடர்ந்து 12வது ஆண்டாக, 114 முதல் 120 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- வெறும் ஐந்து நாடுகளில் அதிக புதிய புகலிட கோரல் விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன என்ற நிலையில் அவற்றுள் 1.2 மில்லியன் விண்ணப்பங்களுடன் மிகவும் பெரும்பாலானவை அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- அதைத் தொடர்ந்து 329,100 பதிவுகளுடன் ஜெர்மனியும் அதனைத் தொடர்ந்து எகிப்து, ஸ்பெயின் மற்றும் கனடா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

## SDG 7 இலக்குகளைக் கண்காணித்தல்: ஆற்றல் முன்னேற்ற அறிக்கை 2024

- இது சர்வதேச எரிசக்தி முகமை (IEA), ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் பிரிவு (UNSD), உலக வங்கி மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முகமையினால் (IRENA) தயாரிக்கப் பட்டது.
- உலக மக்கள்தொகையில் 91 சதவீதம் பேர் 2022 ஆம் ஆண்டில் மின்சார வசதியினைப் பெற்றதாக இந்த அறிக்கைக் கண்டறிந்துள்ளது.
- மேலும், 685 மில்லியன் மக்கள் இன்றும் மின்சார வசதிக்கான அணுகல் இல்லாமல் இருந்தனர் என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டினை விட 10 மில்லியன் அதிகமாகும்.
- இதே போல், 2022 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் சுமார் 74 சதவீதத்தினர் தூய்மையான சமையல் எரிபொருட்களுக்கான அணுகலைப் பெற்றிருந்தனர்.
- சுமார் 2.1 பில்லியன் மக்கள் இன்னும் மாசினை ஏற்படுத்தும் எரிபொருளையே சார்ந்து உள்ளனர் என்ற வகையில் 2030 ஆம் ஆண்டிற்குள் இதன் பயன்பாட்டுக் குறைப்பில் ஓரளவு முன்னேற்றம் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளவிலான மொத்த இறுதி ஆற்றல் நுகர்வில் 18.7% புதுப்பிக்கத் தக்க ஆற்றல் ஆகும்.
- இது 2015 ஆம் ஆண்டில் 16.7 சதவீதமாக இருந்த அளவை விட சற்று அதிகமாக உள்ளது என்ற நிலையில் மேலும் உலக நாடுகளானது 2030 ஆம் ஆண்டிற்குள் ஆற்றல் திறனை இரட்டிப்பாக்கும் போக்கின் பாதையில் இல்லை.
- இது 2021 ஆம் ஆண்டில் 0.8 சதவீதம் மட்டுமே மேம்பட்டுள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளில் மிகவும் தூய்மையான ஆற்றலுக்கு ஆதரவாக வழங்கப் பட்ட சர்வதேசப் பொது நிதி வழங்கீடுகள் 2022 ஆம் ஆண்டில் சுமார் 15.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்தன.
- 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 25% அதிகமாகும்.
- 80% நிதி வழங்கீடுகள் வெறும் 25 நாடுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.




## THE இதழின் பல்கலைக்கழக தாக்க தரவரிசை 2024




- THE இதழானது, 2024 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த பல்கலைக்கழகங்களின் தாக்க தரவரிசையில் 125 நாடுகள்/பிராந்தியங்களைச் சேர்ந்த 2,152 பல்கலைக்கழகங்களை மதிப்பீடு செய்துள்ளது.
- 96 கல்வி நிறுவனங்களுடன், இந்தப் பட்டியலில் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக இந்தியா உள்ளது. அதைத் தொடர்ந்து துருக்கி (91) மற்றும் பாகிஸ்தான் (89) இடம் பெற்றுள்ளன.
- அமிர்த விஸ்வ வித்யாபீடமானது 81வது இடம் பிடித்து இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது.
- சென்னையின் சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் கல்வி நிறுவனம் ஆனது 201 முதல் 300 வரையிலான பிரிவில் இடம் பெற்றுள்ளது.
- ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் ஆனது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

- ஐக்கியப் பேரரசின் மான்செஸ்டர் பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- ஐக்கியப் பேரரசு ஆனது பொறுப்பு மிக்க நுகர்வு மற்றும் உற்பத்தியில் (SDG 12) சிறந்த செயல்திறன் கொண்ட பல்வேறு பல்கலைக் கழகங்களைக் கொண்டுள்ளது.
- தென் கொரிய நாடானது, குறிப்பாக பண்பார்ந்த வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (SDG 8) விவகாரங்களில் செயல்திறன் மிக்கதாக உள்ளது.

## உலகின் பிரதான நகரங்கள் குறியீடு

- கடந்த 12 மாதங்களில், ஆடம்பர வீட்டு மனை விலைகளில் 11.5% உயர்ந்ததையடுத்து, உலகளவில் மணிலா மற்றும் டோக்கியோவிற்கு அடுத்தபடியாக மும்பை நகரானது மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.
- டெல்லியின் பிரதான குடியிருப்புகளின் விலையானது கடந்த ஆண்டில் 10.5% உயர்ந்து உள்ளது.
- இது நைட் ஃபிராங்க் எனப்படுகின்ற சொத்துகள் சார்ந்த ஆலோசனை வழங்கீட்டு நிறுவனத்தின் உலகின் பிரதான (செழிப்புமிகு) நகரங்களின் குறியீட்டில் ஐந்தாவது இடத்தினைப் பிடித்துள்ளது.
- 26.2% வருடாந்திர வளர்ச்சியுடன் மணிலா முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து 12.5% சதவீதத்துடன் டோக்கியோ இடம் பெற்றுள்ளது.
- 11.1% சதவீதத்துடன் பெர்த் நான்காவது இடத்தில் இடம் பெற்றுள்ளது.

**The Knight Frank Prime Global Cities Index Q1 2024**

Ranked by annual % change

| Rank | City | 12-month % change | 6-month % change | 3-month % change |
|---|---|---|---|---|
| 1 | PH Manila | 26.2 | 6.0 | 4.6 |
| 2 | JP Tokyo | 12.5 | 8.3 | -2.1 |
| 3 | IN Mumbai | 11.5 | 6.7 | 1.5 |
| 4 | AU Perth | 11.1 | 7.9 | 5.6 |
| 5 | IN Delhi | 10.5 | 6.4 | 6.3 |
| 6 | KR Seoul | 9.6 | -5.1 | 0.1 |
| 7 | NZ Christchurch | 9.1 | 2.6 | 1.2 |
| 8 | AE Dubai | 8.6 | -2.7 | 4.2 |
| 9 | US Los Angeles | 8.3 | 1.5 | 0.4 |
| 10 | ES Madrid | 7.6 | 3.0 | 1.3 |

## பாக்டீரியா எதிர்ப்பு ஆராய்ச்சி பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது, “2023 ஆம் ஆண்டு மருத்துவ மற்றும் மருத்துவ சிகிச்சை மேம்பாட்டிற்கு முந்தைய நிலையில் பாக்டீரிய எதிர்ப்புக் காரணிகள்: ஒரு கண்ணோட்டம் மற்றும் பகுப்பாய்வு” என்ற தலைப்பிலான தனது வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளாவியப் பாக்டீரிய எதிர்ப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகளில் இந்தியா 1% மட்டுமே பங்களிக்கிறது.
- 84% பாக்டீரிய எதிர்ப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள் ஆனது அதிக வருமானம் கொண்ட நாடுகளில் அதிகம் மேற்கொள்ளப் படுகிறது என்ற நிலையில் மீதமுள்ள 12% செயல்பாடுகள் உயர்மட்ட நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் மேற் கொள்ளப் படுகிறது.
- ஆனால் இந்தியா உள்ளிட்ட கீழ்நிலையிலான நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் 4% மட்டுமே பங்களிக்கின்றன.
- சீனாவிலும் ரஷ்யக் கூட்டமைப்பிலும் உருவாக்கப்படும் புதிய பாக்டீரிய எதிர்ப்புக் காரணிகள் முறையே 3% மற்றும் 2% ஆகும்.
- இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் ஒவ்வொன்றும் தலா 1% அளவு பங்கினை அளிக்கின்றன.




## மெர்சர் நிறுவனத்தின் அதிக செலவு மிக்க நகரங்களின் பட்டியல்


- மும்பை நகரமானது ஆசியாவிலேயே வெளிநாட்டவர்களுக்கு அதிக செலவு மிக்க நகரங்களின் பட்டியலில் தற்போது 21வது இடத்தில் உள்ளது என்ற நிலையில் டெல்லி இதில் 30வது இடத்தில் உள்ளது.
- மும்பை, உலக அளவில் கடந்த ஆண்டை விட 11 இடங்கள் முன்னேறி இதில் 136வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஹாங்காங், சிங்கப்பூர், சூரிச், ஜெனீவா மற்றும் பெர்ன் ஆகியவை உலகின் அதிக செலவு மிகுந்த முதல் 5 நகரங்கள் ஆகும்.

- இப்பட்டியலின் முதல் 20 இடங்களில் இடம் பெற்ற மற்ற இந்திய நகரங்கள்: புது டெல்லி (164 வது இடம்), சென்னை (189) மற்றும் பெங்களூரு (195) ஆகியனவாகும்,
- மற்றவை ஹைதராபாத் (202), புனே (205) மற்றும் கொல்கத்தா (207) ஆகியனவாகும்.

**MOST EXPENSIVE CITIES IN INDIA**

| Cities | 2024 Ranking | 2023 Ranking |
|---|---|---|
| Mumbai | 136 | 147 |
| New Delhi | 165 | 169 |
| Chennai | 189 | 184 |
| Bengaluru | 195 | 189 |
| Hyderabad | 202 | 202 |
| Pune | 205 | 213 |
| Kolkata | 207 | 211 |

## நிலையான மேம்பாட்டு அறிக்கை 2024




- சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலை அமைப்பானது (SDSN) 9வது நிலையான மேம்பாட்டு அறிக்கையினை வெளியிட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 16% SDG இலக்குகள் தான் நிறைவு செய்யப்படும் பாதையில் உள்ளது என்ற நிலையில் 84% இலக்குகள் வரையறுக்கப்பட்ட அல்லது தலைகீழான முன்னேற்றத்தையே கொண்டுள்ளன.
- SDG இலக்குகளை அடைவதில் நோர்டிக் நாடுகள் முன்னணியில் உள்ளன என்ற நிலையில் பின்லாந்து (86.4) முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து சுவீடன் (85.7), டென்மார்க் (85.0), ஜெர்மனி (83.4) மற்றும் பிரான்ஸ் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- BRICS மற்றும் BRICS+ நாடுகள் 2015 ஆம் ஆண்டு முதல் SDG இலக்கு நிறைவில் சராசரியை விட விரைவான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன.
- கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து SDG இலக்கு நிறைவில் அதிக முன்னேற்றத்தைக் கொண்டுள்ள பகுதிகளாகும்.


- கீழ் மட்டத்தில் உள்ள 3 நாடுகள் தெற்கு சூடான், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு மற்றும் சாட் ஆகியனவாகும்.
- இந்தியா 64.0 மதிப்பெண்களுடன் இதில் 109வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் 30% SDG இலக்குகள் மட்டுமே நிறைவு செய்யப்படும் பாதையில் உள்ளன அல்லது நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## SIPRI இயர்புக் 2024

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) ஆனது ஆயுதங்கள், ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேசப் பாதுகாப்பின் நிலை பற்றிய ஒரு வருடாந்திர மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.
- அணு ஆயுதம் கொண்ட ஒன்பது நாடுகளும் 2023 ஆம் ஆண்டில் அணு ஆயுதங்களை நவீனமயமாக்குவதைத் தொடர்ந்தன என்பதோடு மேலும் பல நாடுகள் புதிய அணு ஆயுதம் அல்லது அணு சக்தி கொண்ட ஆயுத அமைப்புகளை பயன்பாட்டில் கொண்டு வந்தன.
- அவை அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, சீனா, இந்தியா, பாகிஸ்தான், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு (வட கொரியா) மற்றும் இஸ்ரேல் ஆகியனவாகும்.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மதிப்பிடப்பட்ட 12,121 ஆயுதங்கள் அடங்கிய மொத்த உலகளாவிய இருப்புகளில், சுமார் 9585 சாத்தியமானப் பயன்பாட்டிற்காக இராணுவக் கையிருப்புகளில் இருந்தன.
- ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை ஒருசேர சுமார் 90 சதவீத அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 410 இருந்த சீனாவின் அணு ஆயுத இருப்பானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 500 ஆக அதிகரித்தது.

| | Deployed warheads[a] | Stored warheads[b] | Military[c] stockpile | | Retired[d] warheads | | Total inventory[e] | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Country | 2024 | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 |
| United States | 1 770 | 1 938 | 3 708 | 3 708 | 1 536 | 1 336 | 5 244 | 5 044 |
| Russia | 1 710 | 2 670 | 4 489[f] | 4 380 | 1 400 | 1 200 | 5 889[f] | 5 580 |
| United Kingdom | 120 | 105 | 225 | 225[g] | – | – | 225 | 225[g] |
| France | 280 | 10 | 290 | 290 | – | – | 290 | 290 |
| China | 24[h] | 476 | 410 | 500 | – | – | 410 | 500 |
| India | – | 172 | 164 | 172 | – | – | 164 | 172 |
| Pakistan | – | 170 | 170 | 170 | – | – | 170 | 170 |
| North Korea | – | 50 | 30 | 50[i] | – | – | 30 | 50[i] |
| Israel | – | 90 | 90 | 90 | – | – | 90 | 90 |
| Total | 3 904 | 5 681 | 9 576[f] | 9 585 | 2 936 | 2 536 | 12 512[f] | 12 121 |

## உலக ஆற்றல் மாற்றக் குறியீடு 2024





- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது உலக ஆற்றல் மாற்றக் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- 67வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது மொத்தம் 120 நாடுகளில் 63வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- சுவீடன் இந்தக் குறியீட்டில் முதலிடத்தினைப் பெற்றதோடு, மற்ற ஐரோப்பிய நாடுகள் இந்தப் பட்டியலில் முன்னணி இடங்களைப் பெற்றுள்ளன.
- அதைத் தொடர்ந்து டென்மார்க், பின்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இதன் முதல் ஐந்து இடங்களில் உள்ளன.
- சீனா இதில் 20வது இடத்தைப் பெற்றுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் உயிரி எரிபொருட்கள் ஆகியவற்றுடன் கூடிய இந்தியாவின் தூய்மையான எரிசக்தி உள்கட்டமைப்பு ஆனது, அதன் மின் உற்பத்தி திறனில் 42% பங்கினைக் கொண்டுள்ள நிலையில் இது உலகளவில் நான்காவது பெரிய புதுப்பிக்கத் தக்கச் சந்தையாக இந்தியாவினை மாற்றுகிறது.
- $CO_2$ மதிப்பீட்டில் 1.7 டன் ஆக உள்ள இந்தியாவின் தனிநபர் உமிழ்வுகள் ஆனது, $CO_2$ மதிப்பீட்டில் 4.4 டன் என்ற உலக சராசரி அளவை விட 60% குறைவாக உள்ளது.

## வெப்பம் மற்றும் நீர் நெருக்கடி சார்ந்தப் பிரச்சினைகளின் உலகளாவியத் தாக்கங்கள் – அறிக்கை

- வெப்பம் மற்றும் நீர் நெருக்கடி சார்ந்தப் பிரச்சினைகளால் 2050 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய உணவு உற்பத்தி 6 முதல் 14 சதவீதம் வரை குறையும்.
- இது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கையை 1.36 பில்லியன் வரை (2020 ஆம் ஆண்டில் இருந்த அளவுடன் ஒப்பிடும்போது) அதிகரித்துள்ளது.

- இதன் காரணமாக, நிகர உணவு ஏற்றுமதியாளர்களாக உள்ள சீனா மற்றும் ஆசியான் நாடுகள் போன்ற பிராந்தியங்கள் 2050 ஆம் ஆண்டிற்குள் உணவு இறக்குமதி நாடுகளாக மாறலாம்.
- இந்தியாவில், பருவநிலை மாற்றத்தின் மோசமான சூழ்நிலையில், நீர் மற்றும் வெப்பம் சார்ந்த நெருக்கடிகளின் விளைவாக 2050 ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி 16.1 சதவீதம் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- சீனாவில் 22.4 சதவீதமும், அமெரிக்காவில் 12.6 சதவீதமும் குறையும் என கணிக்கப் பட்டுள்ளது.
- ஆப்பிரிக்காவில் உணவு உற்பத்தியானது, சுமார் 8.2 முதல் 11.8 சதவீதமும், ஆஸ்திரேலியாவில் 14.7 சதவீதமும், மத்திய அமெரிக்காவின் சில பகுதிகளில் 19.4 சதவீதமும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- உலகளவில், 2020 ஆம் ஆண்டில் இருந்த அளவுடன் ஒப்பிடும்போது, 2050 ஆம் ஆண்டில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை என்பது 556 மில்லியன் முதல் 1.36 பில்லியன் என்ற ஒரு இடைப்பட்ட எண்ணிக்கையில் அதிகரிக்கக் கூடும்.



# மாநிலச் செய்திகள்

## புதைபடிவ மரத்தில் வரலாற்றுக்கு முந்தைய கலைப்பொருட்கள்

- சோனிபட்டில் உள்ள அசோகா பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள், பாந்தவ்கர் தேசிய பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தில் இருந்து புதைபடிவமான மரத்தால் செய்யப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய காலத்தின் கலைப் பொருட்களைக் கண்டறிந்துள்ளனர்.
- பண்டைய காலத்தினைச் சேர்ந்த வேட்டையாடி உணவு உண்ட மக்கள் தங்கள் கருவிகள் மற்றும் கலைப்பொருட்களை உருவாக்க வேண்டி புதைபடிவமான மரத்தின் தண்டுகளை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தினர் என்று இந்தக் கண்டுபிடிப்பு தெரிவிக்கிறது.

- அவை குறைந்தது சுமார் 10,000 ஆண்டுகள் பழமையானவை என ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது மத்தியப் பிரதேசத்தில் முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்டது.
- மத்தியப் பிரதேசத்தின் திண்டோரி மாவட்டத்தில் அமைந்துள்ள குக்வா தேசிய புதை படிவப் பூங்கா 1983 ஆம் ஆண்டில் தேசியப் பூங்காவாக நிறுவப்பட்டது.
- புதைபடிவமான மரத்தால் செய்யப்பட்ட கருவிகள் இந்தியாவில் அரிதானவை என்ற நிலையில் தமிழ்நாடு, ராஜஸ்தான் மற்றும் திரிபுராவில் என சில இடங்களில் மட்டுமே இவை காணப்படுகின்றன.



## அதிக அரசியல் பேரணிகள்





- மேற்கு வங்காளத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக பேரணிகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்காக அளிக்கப்பட்ட சுமார் 94,975 விண்ணப்பங்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

- ஏழு கட்டப் பிரச்சாரத்தின் போது சுமார் 1,19,276 விண்ணப்பங்கள் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டன என்பதோடு மேலும் 94,975 பேரணிகள், பொதுக் கூட்டங்கள் மற்றும் பிற வகையான பிரச்சாரங்களுக்கு தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியது.
- இந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட அனுமதி நாட்டிலேயே அதிகமாக உள்ளது.
- 890 விண்ணப்பங்களில் 669 பிரச்சாரங்களில் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்த இந்தியத் தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது.

## இணைத் தலைநகர் - ஹைதராபாத்

- 2014 ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தின் படி, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் பொதுத் தலைநகராக ஹைதராபாத் இனிமேல் செயல்படாது.
- ஜூன் 02 ஆம் தேதி முதல், ஹைதராபாத் தெலுங்கானாவின் தலைநகரமாக மட்டுமே இருக்கும்.
- 2014 ஆம் ஆண்டில், ஆந்திரப் பிரதேச மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது ஹைதராபாத் நகரமானது 10 ஆண்டுகளுக்கு இரு மாநிலங்களுக்கும் ஒரு இணைத் தலைநகராக நிர்ணயிக்கப்பட்டது.




## உத்தரகாண்டில் உள்ள இடங்களின் பெயர்கள் மாற்றம்

- உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சில இடங்களின் பெயர்களை மாற்றுவதற்காக முன்வைக்கப்பட்ட மாநில அரசின் முன்மொழிதலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.
- சமோலி மாவட்டத்தில் உள்ள ஜோஷிமத் தாலுக்கா ஜோதிர்மத் என்றும், நைனிடால் மாவட்டத்தில் உள்ள கோசியாகுடோலி தாலுக்கா பர்கானா ஸ்ரீ கைஞ்சி தாம் என்றும் மாற்றப்பட உள்ளன.
- 8 ஆம் நூற்றாண்டில் ஆதி குரு சங்கராச்சாரியார் வருகை தந்த பின்னர் இப்பகுதி முதலில் ஜோதிர்மத் (ஜோஷி மடம்) என்று அழைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

- பாபா நீம் கரோலி மகாராஜின் ஆசிரமத்தின் பெயரால் கைஞ்சி தாம் என பெயர் மாற்றம் செய்யப்பட உள்ளது.



## முதல் பசுமை அம்சங்கள் கொண்ட மாநிலத் தலைமையகம்




- அசாம் செயலகம் ஆனது நாட்டின் முதல் முழு பசுமை ஆற்றல் அம்சங்கள் கொண்ட மாநில அரசு தலைமையகமாக மாறியுள்ளது.
- அதன் வளாகத்தில் 2.5 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின்னாற்றல் உற்பத்தித் ஆலை தொடங்கப்பட்டுள்ளது.
- அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் தங்கள் மின் நுகர்வுக்கு அவர்களே கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- இந்த முன்னெடுப்பானது, மின்சார பயன்பாட்டை பெருமளவில் குறைப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது ஏற்கனவே அம்மாநிலம் முழுவதும் உள்ள 8,000 அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் பிற நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## வாதவன் துறைமுகத் திட்டம்





- மகாராஷ்டிராவில் தஹானுவுக்கு அருகில் உள்ள வாதவனில் அனைத்துப் பருவ நிலையிலும் இயங்கக் கூடிய வகையிலான ஆழ்கடல் துறைமுகத்தினை உருவாக்கச் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த துறைமுகம் ஆனது, பெரிய கொள்கலன் கப்பல்களுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையம் (JNPA) மற்றும் மகாராஷ்டிரா கடல்சார் வாரியம் (MMB) ஆகியவற்றால் இணைந்து கட்டமைக்கப்பட உள்ளது.
- இதற்கான மொத்தச் செலவினம் ஆனது தோராயமாக 76,220 கோடி ரூபாய் ஆகும்.
- முதல் கட்டம் 2029 ஆம் ஆண்டிலும், இரண்டாவது கட்டம் 2037 ஆம் ஆண்டிலும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் வகையில் இது இரண்டு கட்டங்களாக உருவாக்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தத் துறைமுகம் ஆனது, 23 மில்லியன் TEU (20-அடிக்குச் சமமான அலகுகள்) சரக்குகளைக் கையாளும் திறன் கொண்டிருக்கும்.
- இது இயற்கை சார்ந்த பல வரம்புகள் காரணமாக இந்தியாவில் உள்ள வேறு எந்தத் துறைமுகத்திலும் இல்லாத திறன் ஆகும்.
- இது ஒவ்வொன்றும் சுமார் 1000 மீட்டர் நீளம் கொண்ட, சுமார் 24,000 TEU அலகுகளை ஏற்றிச் செல்லும் வகையிலான உலகின் மிகப்பெரிய கப்பல்களை நிறுத்த உதவும் வகையிலான ஒன்பது கொள்கலன் கப்பல் முனையங்களைக் கொண்டிருக்கும்.

## ஹெமிஸ் திருவிழா 2024

- ஹெமிஸ் செச்சு என்று அழைக்கப்படுகின்ற இந்த ஹெமிஸ் திருவிழாவானது, குரு பத்மசாம்பவா அவர்களின் பிறந்த நாளினைக் கொண்டாடும் விதமாக லடாக்கில் கொண்டாடப் படுகிறது.
- திபெத்திய புத்த மதத்தை நிறுவிய குரு பத்மசாம்பவா அவர்களின் பிறந்த நாளினை ஹெமிஸ் திருவிழா கொண்டாடுகிறது.
- இந்தத் திருவிழாவின் போது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று நடக்கும், ஒரு சமய ஓவியமாகக் கருதப்படும் ஒரு துணியில் பெரிய அளவில் செய்திப் பதிவு செய்யும் (தங்கா) மற்றொரு அரிய நிகழ்வும் நடைபெறும்.
- இதன் அடுத்த நிகழ்வு 2025 ஆம் ஆண்டில் நடைபெறும்.

## இந்தியாவின் முதல் யுனெஸ்கோ இலக்கிய நகரம்




- யுனெஸ்கோ அமைப்பின் இலக்கிய நகரமாக அறிவிக்கப்பட்ட இந்தியாவின் முதல் நகரமாக கேரளாவின் கோழிக்கோடு நகரம் வரலாறு படைத்துள்ளது.
- அடுத்த நான்கு ஆண்டுகளில், கோழிக்கோடு நகரத்தில் அதன் புதிய நிலையைக் கொண்டாடுவதற்கும் மேம்படுத்துவதற்குமான வகையில் தொடர்ச்சியான இலக்கிய மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் நடத்தப்படும்.
- மானாஞ்சிரா, தளி, குட்டிச்சிறா போன்ற கேரளாவின் முக்கிய இடங்கள் இலக்கிய நிகழ்வுகளுக்கான செயல்பாடுகள் மிக்க மையங்களாக மாற்றப்படும்.

## பீகார் மாநிலத்தின் 65 சதவிகித இட ஒதுக்கீடு




- கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் 50% ஆக வழங்கப்படும் இட ஒதுக்கீட்டினை 65% ஆக உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் பீகார் மாநில சட்ட மன்றம் நிறைவேற்றிய சட்டத் திருத்தங்களை பாட்னா உயர்நீதிமன்றம் ரத்து செய்து உள்ளது.
- பீகார் அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (EBC), பட்டியலிடப் பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) இட ஒதுக்கீட்டை அதிகரித்தது.
- 10% பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான (EWS) ஒதுக்கீட்டுடன், இந்த மசோதா பீகாரில் இடஒதுக்கீட்டை 75% ஆக உயர்த்தியது என்ற நிலையில் இது உச்ச நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட 50% உச்ச வரம்பைத் தாண்டியது.

## KGF தங்கச் சுரங்கத்தினைப் புனரமைத்தல்



- கோலார் தங்க வயல்களில் (KGF) 1,003.4 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள 13 சுரங்கக் கழிவுகளைப் புனரமைப்பதற்காக ஏலம் விடுதல் மற்றும் மீண்டும் தங்கச் சுரங்கப் பணிகளைத் தொடங்குவதற்கான மத்திய அரசின் முன்மொழிதலுக்கு கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- KGF பகுதியில் உள்ள 13 சுரங்கக் கழிவுகளில் 33 மில்லியன் டன் சுரங்கக் கழிவுகள் (பிரித்தெடுப்புக் கழிவுகள்) உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஒரு டன் கழிவினை செயல்முறைக்கு உட்படுத்தினால் ஒரு கிராம் தங்கம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- சுரங்கத் துறையின் கீழ் 1972 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனமான பாரத் கோல்ட் மைன்ஸ் லிமிடெட், KGF பகுதியில் அமைந்த அதன் அலுவலகத்துடன் 2001 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சாத்தியமின்மை காரணமாக மூடப்பட்டது.

## அம்புபாச்சி மேளா 2024

- அசாம் மாநிலத்தின் கௌஹாத்தியில் உள்ள காமக்யா கோவிலில் நிகழும் விழாவான அம்புபாச்சி மேளா ஒரு முக்கிய வருடாந்திர விழாவாகும்.
- இந்த சிறப்பு நிகழ்வானது கருவுறுதல் மற்றும் பெண்மையைக் குறிக்கும் காமக்யா தேவியின் வருடாந்திர மாதவிடாயைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டு நேபாளம் மற்றும் கனடா உட்பட உலகம் முழுவதிலுமிருந்தும் வந்த நாகா சாதுக்கள் மற்றும் புனித மனிதர்கள் உள்ளிட்ட சாதுக்களின் பங்கேற்புடன் இந்த விழா நடைபெற்றது.

## சிறுத்தைகளைக் காண்பதற்கான இந்தியாவின் மிகப்பெரிய சுற்றுலாப் பூங்கா

- சிறுத்தைகளைக் காண்பதற்காக என்று தென்னிந்தியாவின் முதல் மற்றும் நாட்டின் மிகப்பெரிய சுற்றுப் பயணப் பூங்காவானது பன்னேர்கட்டா உயிரியல் (BBP) பூங்காவில் திறக்கப்பட்டுள்ளது.
- தற்போது இதற்காக எட்டு சிறுத்தைகள் திறந்தவெளி வனப் பகுதியில் விடப்பட்டு உள்ளன.
- BBP பூங்காவானது 2004 ஆம் ஆண்டில் பன்னேர்கட்டா தேசியப் பூங்காவில் இருந்து பிரிக்கப் பட்டு, கர்நாடகாவின் மிருகக்காட்சி சாலை ஆணையத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- இது உயிரியல் பூங்கா, சுற்றுப் பயணப் பூங்கா, வண்ணத்துப் பூச்சி பூங்கா மற்றும் மீட்பு மையம் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியது.

## அமைச்சர்களுக்கு வருமான வரி

- மாநில அமைச்சர்களின் வருமான வரியினை மாநில அரசு செலுத்தாமல், அவர்களே தங்கள் வருமான வரியைச் செலுத்த வேண்டும் என்று மத்தியப் பிரதேச மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- அமைச்சர்களின் ஊதியம் மற்றும் சலுகைகளுக்கு மாநில அரசு வருமான வரி செலுத்த வழிவகை செய்யும் 1972 ஆம் ஆண்டு விதியை அம்மாநில அரசானது ரத்து செய்துள்ளது.

- முன்னதாக இதர பிற மாநில அரசுகளும் அமைச்சர்களுக்கு வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கும் விதிகளைத் திருத்தியமைத்துள்ளன.
- 2019 ஆம் ஆண்டில், உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவையானது முதல்வர் மற்றும் பிற அமைச்சர்கள் தங்கள் சொந்த வருமான வரியினைச் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கும் சட்டத்தைத் திருத்த முடிவு செய்தது.
- 2022 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேச மாநில அமைச்சரவையானது அனைத்து அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் சொந்த வருமான வரியைச் செலுத்துவர் என்று கூறியது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம்

- இந்திய அமைதி காப்பாளர் நாயக் தனஞ்சய் குமார் சிங் அவர்களுக்கு டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் (மரணத்திற்கு பின்) வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- அவர் காங்கோ ஜனநாயகக் குடியரசில் (MONUSCO) ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப் படுத்தல் திட்டத்தில் பணியாற்றினார்.
- நாயக் சிங் இராணுவ வீரர்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்கச் செய்வதைக் கையாள்கின்ற இராணுவ மருத்துவப் படையின் ஓர் அங்கத்தினராக இருந்தார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படைக்கான சீருடைப் பணியாளர்களின் பங்களிப்பில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியா தற்போது 6,000க்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் காவல் பணியாளர்களை ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறது.

## கிரகத்தின் நிலைத்தன்மை குறித்த கண்ணோட்ட உச்சி மாநாடு

- மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கான (CPSEs) முதலாவது 2024 ஆம் ஆண்டு கிரகத்தின் நிலைத்தன்மை குறித்த கண்ணோட்ட உச்சி மாநாடு & விருதுகள் கோவா மாநில அரசு சமீபத்தில் நடத்தியது.
- விருதுகள் நான்கு முக்கியப் பிரிவுகளில் வழங்கப்பட்டது:
  - நிலையான ஆளுகையில் வாகையர்,
  - பெருநிறுவனப் பொறுப்பு பிரிவில் வாகையர்,
  - சுழற்சி முறை வாகையர், மற்றும்
  - பருவநிலை நடவடிக்கையில் வாகையர்.
- தொகுப்பாசிரியர் தேர்வுப் பிரிவில் (எடிட்டர்ஸ் சாய்ஸ்) உள்ள நிலைத்தன்மை வாகையர்கள் விருதுகளானது, நிறுவன மற்றும் தனிநபர் பிரிவுகளில் மகத்தானப் பங்காற்றிய கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.
- தனிநபர் பிரிவில், இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் நிறுவனத்தின் டாக்டர். P.S. கஹ்லாட் மற்றும் காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் தலைவர் பேராசிரியர் ரிந்து பானர்ஜி ஆகியோரின் பங்களிப்பிற்காக விருது வழங்கி அங்கீகரிக்கப்பட்டது.

## காசா உச்சி மாநாடு


- கவாங்கோ ஷாம்பேசி எல்லை தாண்டிய பிராந்திய காப்புப் பகுதி (KAZA TFCA) அரசுத் தலைவர்கள் உச்சி மாநாடானது ஜாம்பியாவின் லிவிங்ஸ்டோன் நகரில் நடைபெற்றது.
- இந்நிகழ்வின் போது "Rivers of Life" என்ற புதிய இடம் சார் அடையாளம் அறிமுகப் படுத்தப் பட்டது.
- TFCA அமைப்பின் பகுதிகள் அங்கோலா, போட்ஸ்வானா, நமீபியா, ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய ஐந்து பங்குதார நாடுகளில் உள்ளன.
- தோராயமாக 200,773 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட கவாங்கோ ஷாம்பேசி பிராந்திய எல்லை தாண்டிய வளங்காப்புப் பகுதி உலகின் மிகப்பெரிய நிலப்பரப்பு சார்ந்த எல்லை தாண்டிய பிராந்திய காப்புப் பகுதியாகும்.

## ருசிரா கம்போஜ்

- ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் முதல் பெண் நிரந்தரப் பிரதிநிதியான ருசிரா கம்போஜ் 35 ஆண்டு கால பணிக்குப் பிறகு ஓய்வு பெற்றுள்ளார்.
- இவர் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 ஆம் தேதியன்று நியூயார்க்கிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி / தூதரானார்.
- இவர் 2002-05 ஆம் ஆண்டு வரை நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர தூதுக்குழுவில் ஆலோசகராகப் பணியாற்றினார்.
- இலண்டன் காமன்வெல்த் செயலகத்தில் உள்ள தலைமைச் செயலாளர் அலுவலகத்தின் துணைத் தலைவராகவும் இவர் பணியாற்றினார்.




## மராத்திய இராணி அஹில்யா பாய் ஹோல்கர்




- மராத்திய இராணி அஹில்யா பாய் ஹோல்கரின் 300வது பிறந்தநாள் ஆனது மே 31 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- அவரது கணவர் கந்தே ராவின் மறைவுக்குப் பிறகு, அவர் மல்ஹர் ராவ் ஹோல்கரிடம் இராணுவ விவகாரங்கள் தொடர்பான பயிற்சியினைப் பெற்றார்.
- அவரது மாமனார் மல்ஹர் ராவ் ஹோல்கரின் மறைவுக்குப் பிறகு அவர் ஆட்சிக்கு வந்தார்.
- அவர் மகேஸ்வர் (மத்தியப் பிரதேசத்தில்) நகரினை ஹோல்கர் வம்சத்தின் தலைமை இடமாக நிறுவினார்.
- பீகாரின் கயாவில் உள்ள விஷ்ணுபாத் கோயிலின் தற்போதைய அமைப்பு ஆனது 1787 ஆம் ஆண்டில் மகாராணி அஹில்யா பாய் ஹோல்கரால் கட்டப்பட்டது.

## சுனில் சேத்ரிக்கு உலக நாடுகள் பிரியாவிடை

- இந்தியக் கால்பந்து வீரரான சுனில் சேத்ரி சர்வதேச கால்பந்து விளையாட்டுப் போட்டியிலிருந்து அதிகாரப் பூர்வமாக ஓய்வு பெற்றார்.
- சேத்ரி 151 சர்வதேச விளையாட்டுகளில் 94 கோல்களை அடித்துள்ளார்.
- இதன் மூலம் இவர் ஒரு சர்வதேச வீரர் அடித்த கோல்களின் அடிப்படையிலான பட்டியலில் நான்காவது இடத்தினைப் பிடித்துள்ளார்.
- இவரது ஓய்வு என்பது FIFA கூட்டமைப்பின் பாராட்டுக்களுடன் உலகம் முழுவதும் நன்கு கொண்டாடப் பட்டது.




## சுனிதா வில்லியம்ஸ் 3வது விண்வெளி பயணம்

- இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனையான் சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு மீண்டும் பயணித்துள்ளார்.
- இவரே இயக்கும் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தனது 24 மணி நேரப் பயணத்தை அவர் மேற்கொண்டார்.
- 2012 ஆம் ஆண்டில், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு தான் மேற்கொண்ட முந்தைய பயணத்தின் போது, வில்லியம்ஸ் விண்வெளியில் டிரையத்லானை நிறைவு செய்த முதல் நபர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- வில்லியம்ஸ் தனது முதல் விண்வெளிப் பயணத்தினை 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 09ஆம் தேதியன்று மேற்கொண்டார் என்ற நிலையில் அந்தப் பயணம் 2007 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் தேதி வரை நீடித்தது.

## பான் பருவநிலை மாநாடு 2024

- பான் பருவநிலை மாற்ற மாநாடு என்றும் அழைக்கப்படுகின்ற, பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC) மீதான துணை அமைப்புகளின் 60வது அமர்வானது சமீபத்தில் நடைபெற்றது.
- பருவநிலை நிதியுதவியில் (NCQG) கூடிய விரைவில் புதிய கூட்டு அளவீட்டு இலக்கை அமைக்க இந்த நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

- UNFCCC கட்டமைப்பின் பங்குதார நாடுகளின் 29வது மாநாடு (COP 29) ஆனது இந்த ஆண்டின் இறுதியில் அஜர்பைஜானின் பாகு நகரில் நடைபெற உள்ளது.




## WEF தொழில்நுட்ப முன்னோடி நிறுவனங்களின் பட்டியல் 2024

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது ஒவ்வோர் ஆண்டும் மக்கள் மற்றும் கிரகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக செல்வாக்கு மிக்க அரசியல், வணிக மற்றும் கலாச்சாரத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்ற 100 நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்கிறது.
- WEF அதன் 2024 ஆம் ஆண்டு தொழில்நுட்ப முன்னோடி என்ற திட்டத்திற்காக 10 இந்திய தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்தப் புத்தொழில் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு, தூய்மையான ஆற்றல், சுகாதாரம், உயிரித் தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் நரம்பியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் தங்கள் புதுமையான பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- Amperehour Solar, Cropin, Entri, HealthPlix, International Battery Company, Niramai, NxtWave, Pixxel, Sarvam AI, மற்றும் String Bio ஆகிய இந்திய நிறுவனங்கள் இந்தத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- அவை 23 நாடுகளில் உள்ள புத்தொழில் நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன.



## சாகித்ய அகாடமி விருதுகள் 2024

- ஆங்கில மொழி எழுத்தாளர் K. வைஷாலி, இந்தி மொழி எழுத்தாளர் கௌரவ் பாண்டே உட்பட 23 எழுத்தாளர்களின் பெயர் பட்டியல்களை சாகித்ய அகாடமி அறிவித்துள்ளது.
- தேசிய எழுத்துக்கள் அகாடமியானது 2024 ஆம் ஆண்டிற்கான பால் சாகித்ய புரஸ்கார் விருதை வென்ற 24 பேரின் பெயர் பட்டியல்களையும் அறிவித்துள்ளது.
- யுவ புரஸ்கார் விருது 10 கவிதை நூல்கள், ஏழு சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் ஒரு கட்டுரைத் தொகுப்பு, ஒரு புதினம், ஒரு கசல் (அரேபியக் கவிதை) புத்தகம் மற்றும் ஒரு நினைவுக் குறிப்பு ஆகியவற்றிற்கு வழங்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாட்டினைச் சேர்ந்த யூமா வாசுகி "Tanvi's birthday" என்ற தனது படைப்பிற்காக பால் சாகித்ய விருதையும், லோகேஷ் ரகுராமன் தனது விஷ்ணு வந்தார் என்ற படைப்பிற்காக யுவ புரஸ்கார் விருதையும் பெற்றுள்ளனர்.

## 2024 ஆம் ஆண்டின் காவ்லி பரிசு

- வானியற்பியல், நரம்பியல் மற்றும் நுண் அறிவியலுக்கான அவர்களின் மிகப் பெரும் பங்களிப்பிற்காக எட்டு பேருக்கு 2024 ஆம் ஆண்டிற்கான காவ்லி பரிசு வழங்கப் பட்டு உள்ளது.
- காவ்லி பரிசு ஆனது, நார்வே-அமெரிக்க தொழிலதிபர் மற்றும் புரவலர் பிரெட் காவ்லி (1927-2013) அவர்களின் நினைவாக வழங்கப்படுகிறது.
- டேவிட் சார்போன்னோ மற்றும் சாரா சீகர் ஆகியோருக்கு வானியற்பியல் பிரிவில் விருதுகள் வழங்கப்பட்டன.
- ராபர்ட் லாங்கர், அர்மண்ட் பால் அலிவிசாடோஸ் மற்றும் சாட் மிர்கின் ஆகியோருக்கு நுண் தொழில்நுட்பத்தில் ஆற்றிய முக்கியப் பங்களிப்பிற்காக வேண்டி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.
- நான்சி கன்விஷர், வின்ரிச் ஃப்ரீவால்ட் மற்றும் டோரிஸ் சாவோ ஆகியோருக்கு நரம்பியல் துறையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய கைவலு மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2024

- ஆசிய கைவலு மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியானது உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரில் நடைபெற்றது.
- ஸ்ரீமத் ஜா மாற்றுத் திறனாளிகளுக்கான இடது கை பிரிவில் இந்தியாவிற்கான ஒரே தங்கப் பதக்கத்தினையும் மாற்றுத் திறனாளிகளுக்கான வலது கை பிரிவில் வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார்.
- லட்சுமண் சிங் பண்டாரி மற்றும் சச்சின் கோயல் ஆகியோர் முறையே இரண்டு மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- இபி லோலன் பெண்கள் பிரிவில் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றார்.
- இந்திய அணி ஒரு தங்கம் மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களுடன் தனது பங்கேற்பினை நிறைவு செய்தது.

## தைவான் தடகள ஓபன் போட்டி 2024

- மகளிருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் இந்திய வீராங்கனை நயனா ஜேம்ஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஆடவருக்கான 800 மீ ஓட்டத்தில் இந்தியாவின் அங்கேஷ் சௌத்ரி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஆடவருக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில், தேவ் மீனா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் D.P. மனு 81.58 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- மகளிருக்கான 100 மீட்டர் தடை ஓட்டத்தில் நித்யா ராம்ராஜ் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- அதே சமயம், மகளிருக்கான 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் V.K. விஸ்மயா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- இந்திய அணியானது மூன்று தங்கம், மூன்று வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் உட்பட ஏழு பதக்கங்களுடன் தனது பங்கேற்பினை நிறைவு செய்துள்ளது.



## நார்வே சதுரங்கப் போட்டி 2024

- நார்வே சதுரங்கப் போட்டியில் மேக்னஸ் கார்ஸ்லென் மற்றும் ஜூ வென்ஜுன் ஆகியோர் சாம்பியன்களாக உருவெடுத்துள்ளனர்.
- அவரது இணைப் போட்டியாளரான உலகின் 2 வது முன்னணி சதுரங்க வீரர் ஹிகாரு நகமுரா (அமெரிக்கா) R. பிரக்ஞானந்தாவினால் தோற்கடிக்கப்பட்டார்.
- இந்தப் போட்டிகளில் பிரக்ஞானந்தா 3வது இடத்தைப் பிடித்தார்.
- நார்வே சதுரங்கப் போட்டியில் உலகின் முன்னணி வீரரான மேக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்து ஆரம்பச் சுற்றில் பிரக்ஞானந்தா மகத்தான வெற்றியைப் பெற்றார்.
- அதே வேளையில், நார்வே சதுரங்கப் போட்டியின் மகளிர் பிரிவில், ஜு வென்ஜுன் பட்டத்தை வென்றார்.
- வைஷாலி ரமேஷ்பாபு இப்போட்டியில் 4வது இடம் பிடித்தார்.

Norway Chess 2024 final standings:

| | | | |
|---|---|---|---|
| 1 | Magnus Carlsen | NOR | 17½ |
| 2 | Hikaru Nakamura | USA | 14½ |
| 3 | Alireza Firouzja | FRA | 13½ |
| 4 | Praggnanandhaa Rameshbabu | IND | 13 |
| 5 | Fabiano Caruana | USA | 11½ |
| 6 | Ding Liren | CHN | 7 |

Norway Chess Women 2024 final standings:

| | | | |
|---|---|---|---|
| 1 | Ju Wenjun | CHN | 19 |
| 2 | Anna Muzychuk | UKR | 16 |
| 3 | Lei Tingjie | CHN | 14½ |
| 4 | Vaishali Rameshbabu | IND | 12½ |
| 5 | Humpy Koneru | IND | 10 |
| 6 | Pia Cramling | SWE | 8 |

## பிரெஞ்ச் ஓபன் போட்டி 2024

- ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவை வீழ்த்தி ஸ்பெயின் நாட்டு விளையாட்டு வீரர் கார்லோஸ் அல்கராஸ் தனது முதல் பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்றார்.
- ஓபன் போட்டிகளின் சகாப்தத்தில் கடின தள மைதானம், களிமண் மற்றும் புல் தள மைதானம் ஆகிய மூன்று பரப்புகளிலும் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற மாபெரும் சாதனையை எட்டிய இளம் நபர் என்ற பெருமையினை இவர் பெற்றுள்ளார்.
- மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில், போலந்தின் இகா ஸ்வியாடெக் மீண்டும் இத்தாலியின் ஜாஸ்மின் பயோலினியை வீழ்த்தினார்.

| Title | Winner | Runner |
|---|---|---|
| **Men's Singles** | Carlos Alcaraz | Alexander Zverev |
| **Women's Singles** | Iga Swiatek | Jasmine Paolini |
| **Men's doubles** | Marcelo Arevalo & Mate Pavic | Simone Bolelli and Andrea Vavassori |
| **Women's doubles** | Coco Gauff & Katerina Siniakova | Sara Errani & Jasmine Paolini |

### U-17 ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டி 2024


- ஜோர்டானின் அம்மான் நகரில் நடைபெற்ற 17 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா தனது பங்கேற்பினை நிறைவு செய்து உள்ளது.
- இந்தியாவினைச் சேர்ந்த இளம் வீரர்கள் அணியானது நான்கு தங்கம், இரண்டு வெள்ளி, ஐந்து வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 11 பதக்கங்களை வென்றது.
- 46 கிலோ எடைப் பிரிவில் திபன்ஷி, 53 கிலோ கிலோ எடைப் பிரிவில் முஸ்கான், 61 கிலோ கிலோ எடைப் பிரிவில் ரஜ்னிதா, 69 கிலோ கிலோ எடைப் பிரிவில் மான்சி லாதர் ஆகியோர் மகளிருக்கான மல்யுத்தப் போட்டியில் நான்கு தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.
- ஆடவருக்கான போட்டியில், 55 கிலோ எடைப் பிரிவில் சமர்த் கஜனன் மக்காவே வெள்ளிப் பதக்கம் வென்றார்.




## முக்கிய தினங்கள்

### உலக செரிமான ஆரோக்கிய தினம் - மே 29

- செரிமானப் பிரச்சனைகளைத் தடுப்பதையும், அதற்கான முக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் உலக இரைப்பைக் குடலியல் அமைப்பினால் (WGO) தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Your Digestive Health: Make It a Priority" என்பதாகும்.




## உலகப் பெற்றோர் தினம் - ஜூன் 01




- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்வில் வகிக்கும் முக்கியப் பங்கை நினைவு கூரும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது.
- இது சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வையும் ஊக்குவிக்கிறது.
- 2012 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (UNGA) இந்நாளை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "The Promise of Playful Parenting" என்பது ஆகும்.


## சர்வதேசப் பாலியல் தொழிலாளர்கள் தினம் - ஜூன் 02

- இது உலகின் பாலியல் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் உடல்நலம் மற்றும் வேலை சூழ்நிலைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- 1975 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று, பிரான்சின் லியோனில் உள்ள செயின்ட்-நிசியர் தேவாலயத்தில் சுமார் 100 பாலியல் தொழிலாளர்கள் ஒன்று கூடி சுரண்டப் படும் வேலை மற்றும் வாழ்க்கை சூழ்நிலைகளுக்கு எதிராக போராட்டத்தைத் தொடங்கினர்.
- அவர்கள் உலகில் மிகவும் வெகுவாக பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்பதோடு மேலும் அவர்கள் சுரண்டல், உடல் மற்றும் பல்வேறு உணர்வுகள் சார்ந்த சுரண்டல், மனித உரிமை மீறல்கள் மற்றும் சமூகத்தின் சமூகத்தின் தவறான கருத்துகளுக்கு அடிக்கடி ஆளாகின்றனர்.

## தெலுங்கானா மாநில உருவாக்க தினம் - ஜூன் 02

- இந்தியாவின் இந்தப் புதிய மாநிலமானது ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து உருவாக்கப் பட்டது.
- 1951 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று, இந்தியா குடியரசாக மாறியதும், ஹைதராபாத் ஒரு B பிரிவு மாநிலத்தின் அந்தஸ்தினைப் பெற்றது.
- 1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் ஆந்திர மாநிலம் மற்றும் தெலுங்கானா ஆகியவை இணைக்கப்பட்டு ஆந்திரப் பிரதேசம் என்ற ஒரே மாநிலமாக மாற்றப்பட்டது.
- ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் கீழ், தனி தெலுங்கானா மாநிலம் உருவாக்கப் படுவதற்காக 2014 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- தெலுங்கானா மாநிலமானது 2014 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக இந்தியாவின் 28வது மாநிலமாக மாறியது.




## உலக பால் தினம் - ஜூன் 01

- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, 2001 ஆம் ஆண்டில் இந்த நாளை அனுசரிக்கத் தொடங்கியது.
- உலகளாவிய உணவாக பால் விளங்குவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும், பால் பொருட்கள் துறையை கொண்டாடுவதும் இதன் நோக்கமாகும்.

- நீர் நுகர்வு மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வைக் குறைக்கும் உற்பத்தி முறைகளை ஊக்குவிப்பதோடு, விலங்கு நலன் மற்றும் பாதுகாப்பான வேலைச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.




## உலக மிதிவண்டி தினம் - ஜூன் 03

- போலந்து-அமெரிக்க சமூக அறிவியலாளரும் மிதிவண்டி ஓட்டுதல் ஆர்வலருமான பேராசிரியர் லெசெக் சிபில்ஸ்கி என்பவர் மிதிவண்டி தினக் கொண்டாட்டத்தினைக் கொண்டாடுவதற்கானக் கருத்தாக்கத்தினை முன்வைத்தார்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்த நாளை அறிவித்தது.
- இது மிதிவண்டி ஓட்டுதலின் பல்வேறு நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் நிலையான வாழ்க்கை முறையை செயல்படுத்தும் போக்குவரத்து முறையாக மிதிவண்டியினைப் பயன்படுத்த வேண்டி மக்களை வலியுறுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Promoting Health, Equity, and Sustainability through Cycling" என்பதாகும்.



## உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 05

- நமது கிரகத்தின் பாதுகாப்பை ஆதரிப்பதோடு, மேலும் நிலையான நடைமுறைகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் மனித சுற்றுச்சூழல் குறித்த ஸ்டாக்ஹோம் மாநாட்டின் தொடக்கத்தின் நினைவாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளை நிறுவியது.
- சவூதி அரேபியா நாடானது2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் உலகளாவியக் கொண்டாட்டங்களை நடத்துகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Land restoration, desertification, and drought resilience" என்பதாகும்.

## உலகப் பூச்சி தினம் - ஜூன் 07

- இது பொது சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பைப் பாதுகாப்பதில் பூச்சி மேலாண்மை அமைப்புகளின் முக்கியப் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்புவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது முதன் முதலில் பெய்ஜிங் நகரில் 2017 ஆம் ஆண்டு ஜூன் 06 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Global Solutions, Local Impact: Mapping Success in Pest Management" என்பதாகும்.

## உலக உணவுப் பாதுகாப்பு தினம் - ஜூன் 07

- இந்த நாள் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறுவப்பட்டது.
- இது முதன் முதலில் 2019 ஆம் ஆண்டு ஜூன் 07 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- இந்த தினமானது, உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உணவு சார்ந்து ஏற்படும் அபாயங்களைக் கண்டறிந்து, தடுத்து, மேலாண்மை செய்யவும் உதவும் பல செயல்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "Food Safety: Prepare for the Unexpected" என்பதாகும்.

## சர்வதேச இருப்புப் பாதை கடப்பு விழிப்புணர்வு தினம் - ஜூன் 07


- இது சர்வதேச இரயில்வே ஒன்றியத்தினால் (UIC) தொடங்கப்பட்டது.
- இருப்புப் பாதை கடப்பின் போது ஏற்படும் விபத்துகள் என்பவை சாலை விபத்து சார்ந்த உயிரிழப்புகளில் 1% மட்டுமே ஆகும் ஆனால் அனைத்து வகையான இரயில் விபத்து சார்ந்த உயிரிழப்புகளில் 28% ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "vulnerable road users" என்பதாகும்.

## உலகப் பெருங்கடல் தினம் – ஜூன் 08

- இது பெருங்கடலின் முக்கியத்துவம் மற்றும் அதன் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் கனடாவின் சர்வதேசப் பெருங்கடல் மேம்பாட்டு மையம் (ICOD) மற்றும் கனடாவின் பெருங்கடல் கல்வி நிறுவனம் (OIC) ஆகியவற்றினால் முதன் முதலாக முன் மொழியப் பட்டது.
- இந்த தினமானது, 2008 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மூலம் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "“Awaken New Depth" என்பதாகும்.

## உலக மூளைக் கட்டி நோய் தினம் - ஜூன் 08

- இது மூளைக் கட்டி நோயைப் பற்றியும், மேலும் இதனை முன்கூட்டியே கண்டறிந்து சரியான நேரத்தில் சிகிச்சையளிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மூளைக் கட்டிகள் என்பது மூளையில் உள்ள உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சி ஆகும்.
- இந்த வளர்ச்சிகளானது புற்றுநோயாகவும் இருக்கலாம் (வீரியம் உடையது) அல்லது புற்றுநோய் அல்லாதவையாகவும் (தீங்கற்றது) இருக்கலாம்.
- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, வயது வந்தோரில் பதிவாகும் புற்றுநோய்களில் மூளைக் கட்டிகளின் பங்கு 2% மற்றும் குழந்தைப் பருவப் புற்றுநோய்களில் அதன் பங்கு 1.9% மட்டுமே ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Brain Health and Prevention" என்பதாகும்.




## தற்சிறப்பினத் தன்மைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 05

- மனிதர்களைப் போலவே விலங்குகள் மீதும் தவறான முற்கோள்களை இனியும் கொண்டிருக்கக் கூடாது என்பதை மக்களுக்கு உணர்த்துவதே இதன் நோக்கமாகும்.
- தற்சிறப்பினத் தன்மை என்பது மனிதர்கள் மற்ற எல்லா உயிரினங்களையும் விட உயர்ந்தவர்கள் என்றும், அவற்றைச் சுரண்டுவதற்கும், நமது தேவைகள் மற்றும் தேவைகளுக்காக அவற்றினைத் துன்பப்படுத்துவதற்கும் மனிதர்களுக்கு உரிமை உண்டு என்றும் கருதுகின்ற பகுத்தறிவற்ற தவறான கருத்தாக்கம் ஆகும்.

- 1970 ஆம் ஆண்டில் உளவியலாளர், நெறிமுறையாளர், எழுத்தாளர் மற்றும் அரசியல் விலங்குப் பரப்புரையாளர் டாக்டர் ரிச்சர்ட் D. ரைடர் என்பவர் இந்தச் சொல்லினை உருவாக்கினார்.




## சட்டவிரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்திற்கான சர்வதேச தினம் - ஜூன் 05




- இத்தினமானது கடல் சார் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு சட்டவிரோத முறையிலான மீன்பிடித்தல் ஏற்படுத்தும் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மத்தியத் தரைக் கடலுக்கான பொது மீன்பிடி ஆணையம் ஆனது இந்த நாளை அனுசரிப்பதற்கான ஒரு முன்னெடுப்பினைத் தொடங்குவதற்காக முன்மொழிந்தது.

- 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளுக்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2022 ஆம் ஆண்டினை சர்வதேச கைவினைஞர் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்புக்கான ஆண்டாகவும் அறிவித்தது.
- சட்டவிரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) மீன்பிடித்தல் கடல் சார் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்களில் ஒன்றாக உள்ளது.

## உலக அங்கீகார தினம் - ஜூன் 09

- நுகர்வோர், ஒட்டு மொத்த சமுதாயம், வணிகம் அல்லது அரசு என வாழ்க்கையின் பல அம்சங்களை மேம்படுத்த அங்கீகாரம் எவ்வாறு உதவுகிறது என்பதைப் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச அங்கீகார மன்றம் (IAF) மற்றும் சர்வதேச ஆய்வக அங்கீகார ஒத்துழைப்பு (ILAC) ஆகியவற்றால் இந்த உலகளாவிய முன்னெடுப்பு நிறுவப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Accreditation: Empowering Tomorrow and Shaping the Future" என்பதாகும்.


## குழந்தைத் தொழிலாளர் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் - ஜூன் 12

- குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான ஒரு உலகளாவிய அழைப்பை ஊக்குவிப்பதையும் விரிவுபடுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) 2022 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் தேதியன்று குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான முதல் உலக தினத்தைக் கொண்டாடியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Let’s Act on Our Commitments: End Child Labour” என்பதாகும்.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளை அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது என வரையறுக்கிறது.
- இந்தியாவில், 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சுரங்கங்கள், தொழிற்சாலைகள் அல்லது அபாயகரமான தொழில்களில் பணி புரிவதை அரசியலமைப்பு சாசனமானது வெளிப்படையாகத் தடை செய்கிறது.


## சர்வதேச தோல் வெளிர்தல் நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 13

- தோல் வெளிர்தல் நோய் உள்ள நபர்களின் பல குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க அழைப்பு விடுப்பதோடு, அவர்களின் உரிமைகளை நன்கு மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தோல் வெளிர்தல் நோய் என்பது தோலில் நிறமி பற்றாக்குறையை ஏற்படுத்துகின்ற ஓர் அரிதான, மரபணு ரீதியாக மரபு வழியாகப் பெறப்பட்ட ஒரு நிலையாகும் என்ற நிலையில் இதன் விளைவாக வெளிர்ந்த முடி, தோல் மற்றும் கண்கள் போன்றவை இயல்பற்ற முறையில் காணப்படுகின்றன.

- இது சூரியன் மற்றும் பிரகாசமான ஒளியினை காண முடியாத ஒரு நிலையை ஏற்படுத்துகிறது என்பதோடு மேலும் தோல் புற்றுநோய் உருவாகும் வாய்ப்பினையும் இது உருவாக்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "10 years of IAAD: A decade of collective progress" என்பதாகும்.




## உலக இரத்த தான தினம் - ஜூன் 14




- இரத்த தானம் செய்வதன் முக்கியத்துவம் மற்றும் சமூகங்களுக்கு ஆதரவளிப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1868 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் தேதியன்று பிறந்த கார்ல் லேண்ட்ஸ்டெய்னரின் பிறந்த நாளில் கொண்டாடப்பட்டது.
- ABO இரத்த வகையைக் கண்டுபிடித்ததற்காக லேண்ட்ஸ்டெய்னருக்கு நோபல் பரிசு வழங்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 20 years of celebrating giving: thank you blood donors என்பதாகும்.

## உலகளாவிய காற்று தினம் - ஜூன் 15

- காற்றாலை ஆற்றலின் முக்கியத்துவம் மற்றும் பூகோளத்தை மாற்றியமைக்கும் அதன் ஆற்றல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது காற்றாலை ஆற்றலை ஒரு நிலையான மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முயற்சியாகும்.
- முதல் காற்று தினம் 2007 ஆம் ஆண்டில் ஐரோப்பிய காற்று ஆற்றல் சங்கத்தால் (EWEA) கொண்டாடப் பட்டது.




## உலக முதியோர் வன்கொடுமை குறித்த விழிப்புணர்வு தினம் - ஜூன் 15




- முதியோர்களின் நல்வாழ்வு மற்றும் போதுமான சுகாதாரநலப் பாதுகாப்பு ஆகிய சில விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த உலகை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 1 பில்லியனாக இருந்த 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கையானது 38% அதிகரித்து 1.4 பில்லியனாக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு Spotlight on Older Persons in Emergencies என்பதாகும்.

## சர்வதேச கல்லீரல் அதிகொழுப்பு படிவு நோய் தினம் - ஜூன் 13

- இது ஆண்டுதோறும் ஜூன் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று அனுசரிக்கப் படுகிறது.
- கல்லீரல் அதிகொழுப்பு படிவு நோயானது வளர்சிதை மாற்ற ஆரோக்கியம், இருதய ஆரோக்கியம் மற்றும் புற்றுநோய்களை உருவாக்கும் அபாயம் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது.
- இந்த கோளாறு ஆனது தற்போது சரியான முறையில் மறுவகைப்படுத்தப்பட்டு, 'வளர்சிதை மாற்ற செயலிழப்புடன் தொடர்புடைய, கொழுப்புகளைத் தக்க வைத்துக் கொள்ளும் நிலையிலான கல்லீரல் நோய்' (MASLD) என அழைக்கப்படுகிறது.
- உலகளாவிய MASLD நோய்ப் பாதிப்பு 25-30% என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள இளம் பருவத்தினரிடையே கல்லீரல் கொழுப்பு படிவு நோய்ப் பாதிப்பு 38.6% ஆகவும், பருமனான குழந்தைகளிடையே இது 36% ஆகவும் இருந்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Act Now, Screen Today' என்பதாகும்.




## ASEAN டெங்கு தினம் - ஜூன் 15

- பிராந்திய மற்றும் தேசிய அளவில் டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- 10வது ஆசியான் (ASEAN) சுகாதார அமைச்சர்கள் கூட்டம் (2010) ஆனது இத்தினத்தை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Together Against Dengue: Building a Resilient ASEAN Community” என்பதாகும்.
- 7வது ஆசிய டெங்கு உச்சி மாநாடு ஆனது சமீபத்தில் கோலாலம்பூர் நகரில் நடைபெற்றது.




## சர்வதேச ஆப்பிரிக்கக் குழந்தைகள் தினம் - ஜூன் 16


- ஆப்பிரிக்காவில் குழந்தைகளுக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இது ஆப்பிரிக்கக் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கான இன்றியமையாத தேவையை உணர்த்துகிறது.
- இது 1976 ஆம் ஆண்டில் நடைபெற்ற சோவெட்டோ எழுச்சியில் பங்கேற்பவர்களைக் கௌரவிக்கும் தினமாகும்.
- ஆப்பிரிக்காவில் உள்ள கறுப்பின மக்களை விட வெள்ளையர்களுக்குத் தரமான கல்வியை வழங்கும் கல்வி முறையில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து அவர்கள் போராடினர்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு: “Education for All Children in Africa: The Time is Now”.

## வெளிநாட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் பணம் அனுப்புதலுக்கான சர்வதேச தினம் - ஜூன் 16

- 2008 ஆம் ஆண்டு சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதியம் (IFAD) மற்றும் உலக வங்கி இணைந்து இந்தத் தினத்தினை அனுசரித்தன.
- 2015 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்த நாளை அதிகாரப் பூர்வமாக நிறுவியது.
- 800 மில்லியனுக்கும் அதிகமான குடும்ப உறுப்பினர்களுக்கான ஆதரவினை வழங்கும் 200 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரைக் கௌரவிக்கும் வகையில் இந்த சிறப்பு நாள் கொண்டாடப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Digital remittances towards financial inclusion and cost reduction” என்பதாகும்.





**பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினம் - ஜூன் 17**




- 1992 ஆம் ஆண்டு ரியோ புவி உச்சி மாநாட்டின் போது, பாலைவனமாக்கல், பல்லுயிர்ப் பெருக்க இழப்பு மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவை நீடித்த மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான மிகப்பெரிய சவால்களாக இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டன.
- 1994 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையினை UNCCD) நிறுவியது என்பதோடு இது சட்டப்பூர்வமானப் பிணைப்புத் தன்மை கொண்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- 2007 ஆம் ஆண்டில், UN பொதுச் சபையானது 2010 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தினை ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனங்கள் மற்றும் பாலைவன மாக்கலுக்கு எதிரான போராட்டத்திற்கான தசாப்தம் ஆக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “United for Land. Our Legacy. Our Future” என்பதாகும்.

## மன இறுக்க நோய் நினைவு தினம் - ஜூன் 16





- இந்தத் தினமானது மன இறுக்கம் கொண்டவர்களின் மதிப்பின் மீதான ஒரு பெரும் முக்கியத்துவத்தையும் நேர்மறையான பல சமூக மாற்றங்களை வளர்க்கச் செய்வதில் அதன் முக்கியத் தாக்கத்தையும் அங்கீகரிக்கிறது.
- மன இறுக்க நோய் நினைவு தினம் ஆனது 2005 ஆம் ஆண்டில் பிரேசிலில் கொண்டாடப் பட்டது.
- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் நோய் (ASD) என்பது ஒரு நரம்பியல் மற்றும் வளர்ச்சிக் கோளாறு ஆகும்.
- இது மனிதர்கள் மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள், அவர்களின் தகவல் தொடர்பு, கற்றல் மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பாதிக்கிறது.
- மன இறுக்க நோய் பொதுவாக குழந்தைப் பருவத்திலேயே முதலில் கண்டறியப் படுகிறது.
- 110 குழந்தைகளில் ஒருவருக்கு மன இறுக்க நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- ஆண் குழந்தைகளில் ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு பெண் குழந்தைகளை விட மூன்று முதல் நான்கு மடங்கு அதிகமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Taking the Mask Off" என்பதாகும்.

## உலக முதலை தினம் - ஜூன் 17

- உலகெங்கிலும் உள்ள அழிந்து வரும் முதலைகள் மற்றும் பெரிய அலகுடைய முதலைகளின் அவலநிலையை முன்னிலைப்படுத்தச் செய்வதற்காக வேண்டி இந்த உலகளாவிய விழிப்புணர்வுத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த விலங்கினக் குடும்பத்தில் சுமார் 24 இனங்கள் உள்ளன என்ற நிலையில் இதில் 'உண்மையான முதலைகள்', பெரிய அலகுடைய முதலைகள், தென் அமெரிக்க முதலை வகை (கெய்மன்) மற்றும் கங்கை நீர் முதலை (கரியல்) ஆகியவை அடங்கும்.
- இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் காணப்படுகின்றன.
    - மக்கர் அல்லது சதுப்பு நில முதலை (க்ரோக்கொடைலஸ் பளுஸ்ட்ரீஸ்);
    - கழிமுகம் அல்லது உப்புநீர் முதலை (க்ரோக்கொடைலஸ் போரோசஸ்) மற்றும்

  - கங்கை நீர் முதலை அல்லது கரியல் (கவியலிஸ் கேங்ஜெடிகஸ்).

- இந்திய அரசு ஆனது, 1975 ஆம் ஆண்டில் ஒடிசாவின் பிதர்கனிகா தேசியப் பூங்காவில் தனது முதலை வளங்காப்புத் திட்டத்தைத் தொடங்கியது.




## நிலையான சமையல் கலை தினம் - ஜூன் 18

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று இந்த நாளை அனுசரிப்பதற்கான அதன் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- ஒரு நிலையான சமையல் கலை என்பது உணவுப் பொருட்கள் எங்கிருந்து வருகிறது, உணவுப் பொருட்கள் எவ்வாறு வளர்க்கப்படுகிறது மற்றும் அது நமது சந்தைகளுக்கும் இறுதியில் நமது உணவுத் தட்டுகளுக்கும் எவ்வாறு கொண்டு வரப்படுகிறது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் சமையற்கலை என்று பொருளாகும்.




## வெறுப்பினை உண்டாக்கும் பேச்சைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 18

- சமூகத்தின் நலன், குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்களின் பெரு நலனுக்காக அதிகம் கவனிக்கப்படக் கூடிய ஒரு விவகாரமாக மாறியுள்ள வெறுப்பினை உண்டாக்கும் பேச்சுகளுக்கு தீர்வு காண்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் தேதியன்று வெறுப்பினை உண்டாக்கும் வகையிலான பேச்சுகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உத்தி மற்றும் செயல் திட்டம் தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'The Power of Youth for Countering and Addressing Hate Speech' என்பதாகும்.





## உலக அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் விழிப்புணர்வு தினம் - ஜூன் 19



- இது அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் மற்றும் நோயாளிகள், அவர்களது குடும்பத்தினர் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய ஒரு பொதுவான அறிவையும் அதன் மீதான புரிதலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, அரிவாள் வடிவ உயிரணு சோகை நோயை ஒரு பொது சுகாதாரப் பிரச்சனையாக அங்கீகரித்தது.
- அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் என்பது ஹீமோகுளோபின் மரபணுவில் ஏற்படும் மாற்றத்தால் ஏற்படும் ஒரு மரபணு இரத்தக் கோளாறு ஆகும் என்ற நிலையில் இது அசாதாரண ஹீமோகுளோபின் S உற்பத்திக்கு வழிவகுக்கிறது.
- இது இரத்த ஓட்டத்தைத் தடுக்கக் கூடிய கடினமான, பிறை வடிவ சிவப்பு இரத்த அணுக்களை உருவாக்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Hope Through Progress: Advancing Sickle Cell Care Globally" என்பதாகும்.


## தேசிய வாசிப்பு தினம் - ஜூன் 19

- ஒவ்வோர் ஆண்டும் P.N. பணிக்கர் அவர்களின் நினைவு தினமானது தேசிய வாசிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- இவர் கேரளாவில் 'நூலக இயக்கத்தின் தந்தை' என்று பிரபலமாக அறியப்படுகிறார்.
- பணிக்கர் கேரள முறைசாரா கல்வி மற்றும் மேம்பாட்டுச் சங்கத்தின் (KANFED) நிறுவனரும் ஆவார்.
- கிராமப்புறங்களில் கல்வியறிவு விகிதங்கள் மற்றும் கல்வி விழிப்புணர்வை நன்கு மேம்படுத்துவதில் KANFED ஈடுபட்டுள்ளது.



## மோதல் நிகழ்வுகளில் பாலியல் வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 19

- 2015 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஆனது இந்நாளை அறிவித்தது.
- பாலியல் வன்முறையால் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களைக் கௌரவிக்கும் விதமாகவும் மோதல் தொடர்பான பாலியல் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதன் அவசியம் குறித்த ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "மோதல் தொடர்பான பாலியல் வன்முறை" என்ற சொல் ஆனது கற்பழிப்பு, பாலியல் சார்ந்த அடிமைத்தனம், வலுக்கட்டாயமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல், பலவந்த கருத்தரிப்பு, பலவந்த கருக்கலைப்பு, பலவந்த கருத்தடை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மோதலுடன் தொடர்புடைய கட்டாயத் திருமணம் ஆகியவற்றைக் குறிக்கிறது.




## உலக அகதிகள் தினம் - ஜூன் 20

- போர், துன்புறுத்தல் அல்லது இயற்கைப் பேரழிவுகள் காரணமாக தங்கள் நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையானது அகதிகள் உரிமைகளை நன்கு வரையறுத்ததையடுத்து, ஆப்பிரிக்கா 1970 ஆம் ஆண்டில் அவர்களைக் கௌரவிக்கும் விதமாக இந்த நாளை நிறுவியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "For a World Where Refugees Are Welcomed' என்பதாகும்.

## உலக நீர் நிலையியல் தினம் - ஜூன் 21

- நீர் நிலையியல் என்பது பூமியில் இருக்கும் நீர்நிலைகளின் இயற்பியல் அம்சங்களை விவரிக்கும் அறிவியல் ஆகும்.
- இது நீர் நிலையியலின் முக்கியத்துவம் மற்றும் நீர் நிலையியல் நிபுணர்களின் வேலை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சர்வதேச நீர் நிலையியல் அமைப்பினால் (IHO) தொடங்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டில் முதன்முதலில் கொண்டாடப்பட்டது.
- இந்த நாள் ஆனது 1921 ஆம் ஆண்டில் IHO நிறுவப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Hydrographic Information – Enhancing Safety, Efficiency and Sustainability in Marine Activities" என்பதாகும்.

## சர்வதேச யோகா தினம் - ஜூன் 21

- ஜூன் 21 ஆம் தேதியானது வடக்கு அரைக்கோளத்தில், ஆண்டின் மிக நீண்ட நாளான கோடை கால சங்கிராந்தி நாளுடன் ஒத்துப்போகிறது.
- உடல், மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த யோகாவின் பல நன்மைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியன்று, இந்நாளை அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Yoga for Self and Society' என்பதாகும்.

## கோடைகால சங்கிராந்தி - ஜூன் 21




- வடக்கு அரைக்கோளத்தில் ஜூன் 20 முதல் ஜூன் 22 ஆம் தேதி வரை கோடைகால சங்கிராந்தி ஏற்படுகிறது.

- சங்கிராந்தி தினத்தில், வடக்கு அரைக்கோளம் அதிகபட்ச பகல் நேரத்தைக் கொண்டு உள்ளது.
- பூமியின் சாய்வின் காரணமாக தெற்கு அரைக்கோளத்தில் ஆண்டின் மிகக் குறுகிய நாள் பதிவாகிறது.
- ஜூன் மாத சங்கிராந்தியானது வடக்கு அரைக்கோளத்தில் கோடையின் வானியல் ரீதியான முதல் நாளைக் குறிப்பதால் பிரபலமானதாகும்.
- ஜூன் மாத சங்கிராந்தி நாளில், வடக்கு அரைக்கோளமானது அதிக நேர்கோணத்தில் சூரிய ஒளியைப் பெறுகிறது.

## சர்வதேச ஒலிம்பிக் தினம் - ஜூன் 23

- சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC) ஆனது 1894 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதியன்று, பாரீசில் உள்ள சோர்போன் எனுமிடத்தில் நிறுவப்பட்டது.
- இந்தத் தினம் அனைத்து தரப்பு நபர்களையும் ஒலிம்பிக் போட்டிகளின் மதிப்புகளான சிறப்பம்சம், நட்பு மற்றும் மரியாதையை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் 1948 ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Let's Move and Celebrate' என்பதாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை தினம் - ஜூன் 23

- உலகெங்கிலும் உள்ள அனைத்துத் துறைகளின் வளர்ச்சியிலும் பொதுச் சேவையின் பங்களிப்பு மற்றும் பங்கை இது எடுத்துக்காட்டுகிறது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2002 ஆம் ஆண்டில் இந்த நாளை அறிவித்தது.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை விருதுகள் (UNPSA) திட்டத்தினை நிறுவியது.
- 2024 ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை மன்றம் மற்றும் விருது வழங்கும் விழா ஆனது தென் கொரியக் குடியரசின் இன்சியோன் எனுமிடத்தில், ‘உலகளாவியச் சவால்களுக்கு மத்தியில் புதுமையை மேம்படுத்தச் செய்வது: ஒரு பொதுத்துறைக் கண்ணோட்டம்’ என்ற கருத்துருவின் கீழ் நடைபெறுகிறது.



## மாலுமிகள் தினம் - ஜூன் 25

- 2010 ஆம் ஆண்டில், சர்வதேச கடல்சார் அமைப்பானது இந்த நாளை நிர்ணயித்தது.
- உலகப் பொருளாதாரம் மற்றும் பொதுச் சமூகத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பிற்காகவும், தாங்கள் பணியில் இருக்கும் போது அவர்கள் எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் தனிப்பட்ட இழப்புகளுக்காகவும் கடற்படையினருக்கு நன்றி தெரிவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- #SafetyTipsAtSea என்பது 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் முழக்கமாகும்.

## உலக மழைக்காடுகள் தினம் 2024 - ஜூன் 22


- 2017 ஆம் ஆண்டில் மழைக்காடுகள் கூட்டாண்மை மூலம் இந்தத் தினத்தினை அனுசரிப்பதற்கான முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- பருவநிலை நிலைத்தன்மை, பல்லுயிர்ப் பாதுகாப்பு, கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் நிலையான வாழ்வாதாரத்திற்காக வளமான, நீடித்த நிலையான மழைக்காடுகளைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தை இது கொண்டாடுகிறது.
- இந்த இன்றியமையாத சூழல்களைப் பாதுகாத்து மீட்டெடுப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கும் உலகளாவிய தளமாக இது செயல்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Empowering the World in Défense of Our Rainforests' என்பதாகும்.




## உலக தோல் நிறமி இழப்பு நோய் தினம் - ஜூன் 25

- இது தோல் நிறமி இழப்பு நோய் சார்ந்த உடல்நலம் மற்றும் கல்வியினை அளிப்பதற்கான முயற்சியை அதிகரிப்பது மற்றும் இந்த நோயினால் பாதிக்கப் பட்டவர்கள் எதிர்கொள்ளும் சமூக இழிவு மற்றும் மனநலம் சார்ந்த சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- தோல் நிறமி இழப்பு நோய் என்பது மெலனின் உற்பத்தி செய்யும் மெலனோ சைட்டுகள் உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தினால் அழிக்கப்படுகின்ற ஒரு தோல் நோயாகும்.
- இதனால் சருமம் அதன் நிறத்தை இழந்து, தோலில் வெண்மையான, வழுவழுப்பான திட்டுகள் ஏற்படும்.
- தோல் நிறமி இழப்பு நோய் என்பது ஓர் அரிய நோயாகும் என்பதோடு இது உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் தொகையில் சுமார் 1% அல்லது அதற்கும் அதிகமான நபர்களுக்கு ஏற்படலாம்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "United by the Skin" or "Unidos Por La Piel" என்பதாகும்.




## உலக போதைப் பொருள் தினம் - ஜூன் 26

- இந்தத் தினமானது போதைப் பொருள்களின் தவறானப் பயன்பாடு மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது போதைப்பொருள்களின் தவறானப் பயன்பாடுகளால் ஏற்படும் தீங்கான விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான பல்வேறு உலகளாவிய முயற்சிகளை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "The evidence is clear: invest in prevention" என்பதாகும்.

## சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம் - ஜூன் 26

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று இந்த நாளை அறிவித்தது.
- சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்துதல் அல்லது தண்டனையளித்தல் ஆகியவற்றிற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையானது 1987 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த நாளினை இந்த தேதியானது குறிக்கிறது.
- 1975 ஆம் ஆண்டில், பொதுச் சபையானது சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறையில் நடத்துதல் அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் வெகுவாகப் பாதுகாப்பதற்கான பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- பல சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தன்னார்வ நிதியம் ஆனது 1981 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நிறுவப் பட்டது.
- 1985 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணையத்தினால் சித்திரவதை தொடர்பான முதல் சிறப்பு அறிக்கையாளர் நியமிக்கப்பட்டார்.
- 2002 ஆம் ஆண்டில், சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கைக்கான விருப்பத் தெரிவு நெறிமுறை ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## சர்வதேச குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் - ஜூன் 27


- இந்தத் தினமானது இந்த நிறுவனங்களைக் கொண்டாடுவதோடு, அவற்றின் பெரும் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அவற்றின் பங்களிப்புகளை வெளிக் கொணர்ந்து, அவற்றின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவிக்கிறது.
- முதல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் தினம் ஆனது 2017 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் ஆனது உலகளவில் 90% வணிகங்கள், 60 முதல் 70% வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50% பங்கினைக் கொண்டுள்ளன.

- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ‘குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகள்’ என்பதாகும்.




## தேசியப் புள்ளியியல் தினம் - ஜூன் 29

- ஜூன் 29 ஆம் தேதியானது பேராசிரியர் மஹாலனோபிஸ் அவர்களின் பிறந்தநாள் ஆகும்.
- அவர் வகைப்படுத்தல் மற்றும் தொகுப்புப் பகுப்பாய்வுத் துறையில் பயன்படுத்தப் படுகின்ற 'மஹாலனோபிஸ் தொலைவு' என்ற சூத்திரத்தை கண்டுபிடித்தார்.
- புள்ளியியல் மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் துறைகளில் பிரசந்த சந்திர மஹாலனோபிஸ் ஆற்றியப் பங்களிப்பை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- அவர் இந்தியாவின் முதல் திட்டக் குழுவில் ஓர் அங்கம் வகித்தார் மற்றும் 1931 ஆம் ஆண்டில் இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தை (ISI) நிறுவுவதில் மிக முக்கியப் பங்கு வகித்தார்.




## சர்வதேச வெப்ப மண்டல தினம் - ஜூன் 29

- இது வெப்ப மண்டலத்தின் அசாதாரண பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதோடு, வெப்ப மண்டல நாடுகள் எதிர்கொள்ளும் பல்வேறு தனித்துவமான சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எடுத்துக்காட்டுகிறது.
- 2014 ஆம் ஆண்டில், மியான்மரின் நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி அவர்களால் தொடங்கப்பட்ட முதல் ‘வெப்ப மண்டல அறிக்கையை’ நினைவு கூரும் வகையில் இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- வெப்ப மண்டலம் என்பது கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடைப்பட்ட பகுதி என தோராயமாக வரையறுக்கப்படுகின்ற பூமியின் ஒரு பகுதியாகும்.
- உலகின் சதுப்புநிலக் காடுகளில் ஏறக்குறைய 95% பரப்பளவு மற்றும் 99% சதுப்புநிலக் காடுகளை வெப்பமண்டலப் பகுதி கொண்டுள்ளது.
- உலகின் புதுப்பிக்கத்தக்க நீர் மூலங்களில் பாதிக்கு மேலான பகுதிகள் (54%) ஆனது வெப்ப மண்டலங்களாக உள்ளன.

## உலக குளிர்பதனத் தினம் - ஜூன் 26




- 1824 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று கெல்வின் பிரபு பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இது ஐக்கியப் பேரரசின் டெர்பிஷையரில் உள்ள உலக குளிர்பதனத் தினத்திற்கான செயலகத்தினால் நிறுவப்பட்டது.
- இது குளிர் பதனிடுதல், வளி குளிரூட்டல் மற்றும் வெப்ப விசையியக்கிகள் துறையின் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் நவீன வாழ்க்கை மற்றும் சமூகத்தில் இந்தத் தொழில் துறை மற்றும் அதன் தொழில்நுட்பம் வகிக்கும் குறிப்பிடத் தக்கப் பங்கில் கவனம் செலுத்துகிறது.

## உலக குறுங்கோள் தினம் - ஜூன் 30

- இத்தினமானது குறுங்கோள்கள் மற்றும் அவை நமது கிரகத்திற்கு ஏற்படுத்தக்கூ டிய ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1908 ஆம் ஆண்டில் நிகழ்ந்த துங்குஸ்கா நிகழ்வின் மீதான ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ஒரு குறுங்கோள் அல்லது வால்நட்சத்திரத்தின் துண்டு பகுதி வெடித்து ரஷ்யாவின் சைபீரியப் பகுதியின் மீது மோதி சுமார் 2,000 சதுர கிலோமீட்டர் பரப்பிலான காடுகளை அழித்தது.
- குறுங்கோள்களின் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பல ஆபத்துகள் குறித்து விழிப்பு உணர்வை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபையானது 2016 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக இத்தினத்தினை அறிவித்தது.


### சர்வதேசப் பாராளுமன்ற தினம் - ஜூன் 30

- ❖ சர்வதேசப் பாராளுமன்ற தினமானது உலகப் பாராளுமன்ற தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ இது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டு, பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியத்தினால் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ 1889 ஆம் ஆண்டு இந்த நாளில் தான் பாரீஸ் நகரில் பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம் நிறுவப்பட்டது.
- ❖ இந்தியா உட்பட 179 நாடுகள் IPU அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.


# இதரச் செய்திகள்

### புவியியல் சாராத சிற்றினத் தோற்ற வழிமுறைகள்

- ❖ மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், அதே பகுதியில் புதிய உயிரினங்களின் உருவாக்கத்தில் சுற்றுச்சூழல் வளங்கள், மரபணுக்கள் மற்றும் பல்வேறு இனங்களில் இனச்சேர்க்கை ஆகியவற்றின் பங்கைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ தனித்துவமானப் புவியியல் பகுதிகளில் மட்டுமே புதிய இனங்கள் உருவாக முடியும் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்திற்கு இது சவால் விடுக்கிறது.
- ❖ இனவிருத்தி (சிற்றினத் தோற்றம்) அல்லது புதிய இனங்களின் உருவாக்கம், அமைப்பு ரீதியான தடைகள் இல்லாவிட்டாலும் கூட நிகழ்வதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ மலைகள் அல்லது நீர்நிலைகள் போன்ற அமைப்பு சார்ந்த தடைகள் மக்கள் தொகையைப் பிரிந்து புதிய உயிரினங்கள் உருவாகுவதே வேற்றிடவழிச் சிற்றினத் தோற்றம் ஆகும்.
- ❖ இதற்கு நேர்மாறாக, அத்தகையத் தடைகள் இல்லாத அதே பகுதிகளில் இணையுயிரி சிற்றினத் தோற்றம் நிகழ்கிறது.



## பிரஸ்டன் வளைவு




- பிரஸ்டன் வளைவு என்பது ஒரு நாட்டில் ஆயுட்காலம் மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவற்றுக்கு இடையே காணப்படும் ஒரு குறிப்பிட்ட செயலறிவுத் தொடர்பினைக் குறிக்கிறது.
- இது முதன்முதலில் அமெரிக்க சமூகவியலாளர் சாமுவேல் H. பிரஸ்டன் என்பவரால் 1975 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டது.
- அவர் "The changing relation between mortality and level of economic development" என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையை எழுதினார்.
- ஏழ்மையான நாடுகளில் வாழும் மக்களுடன் ஒப்பிடும் போது, செல்வ வளம் மிக்க நாடுகளில் வாழும் மக்கள் பொதுவாக நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பதை அவர் கண்டறிந்தார்.
- செல்வ வளம் மிக்க நாடுகளில் உள்ள மக்கள் சிறந்த மருத்துவ வசதி, சிறந்த கல்வியறிவு, தூய்மையான சூழலில் வாழ்வது, சிறந்த ஊட்டச்சத்தினைப் பெறுவது போன்றவற்றால் இது சாத்தியமாக உள்ளது.
- 1947 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு சுமார் 9,000 ரூபாயாக இருந்த இந்தியர்களின் சராசரி தனிநபர் வருமானம் ஆனது 2011 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு 55,000 ரூபாயாக உயர்ந்தது.
- அதே காலகட்டத்தில், இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் ஆனது வெறும் 32 வயதில் இருந்து 66 வயதுக்கு மேல் ஆக உயர்ந்துள்ளது.
- இருப்பினும், தனிநபர் வருமானம் மற்றும் ஆயுட்காலம் ஆகியவற்றுக்கு இடையேயான நேர்மறையான தொடர்பு ஒரு குறிப்பிட்ட புள்ளிக்குப் பிறகு கிடைமட்டமாக நீள்கிறது.

## பனி உருகுவதைக் குறைக்கும் வைரஸ்கள்




- ❖ கிரீன்லாந்தின் பனிப்படலத்தில் மர்மமான மிகப்பெரிய சில வைரஸ்களை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இந்த வைரஸ்கள் 1981 ஆம் ஆண்டில் பெருங்கடலில் முதல் முறையாக கண்டறியப் பட்டன.
- ❖ இவை பொதுவாக பெருங்கடலில் உள்ள பாசிகளைத் தாக்கக் கூடியது.
- ❖ ஆனால் இத்தகையப் பனி வாழ்விடங்களில் மிகப்பெரிய வைரஸ்கள் காணப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இந்த மிகப்பெரிய வைரஸ்கள் ஒருவித இரகசிய ஆயுதமாகச் செயல்படும் என்றும், பனி உருகுவதைக் குறைக்க உதவுவதாகவும் அறிவியலாளர்கள் கூறுகிறார்கள்.
- ❖ வழக்கமான வைரஸ்கள் 20-200 நானோமீட்டர் அளவைக் கொண்டிருக்கும், அதே சமயம் ஒரு வழக்கமான பாக்டீரியா என்பது 2-3 மைக்ரோமீட்டர்கள் வரையிலான அளவில் தான் இருக்கும்.
- ❖ வேறு விதமாக கூறுவதென்றால், ஒரு சாதாரண வைரஸ் என்பது பாக்டீரியாவை விட 1,000 மடங்கு சிறியதாகும்.
- ❖ ஆனால் இந்த மிகப்பெரிய வைரஸ்கள் சுமார் 2.5 மைக்ரோமீட்டர் அளவில் வளரும் என்ற நிலையில் இது பெரும்பாலான பாக்டீரியாக்களை விட பெரியதாகும்.

## 2022 ஆம் ஆண்டில் அதிகளவில் பிடிக்கப்பட்ட நீர்வாழ் உயிரினங்கள்


- ❖ கட்லா (லாபியோ கட்லா) 2022 ஆம் ஆண்டில் மனிதர்களால் அதிகளவில் பிடிக்கப்பட்ட முதல் 10 வகையான நீர்வாழ் விலங்குகளில் ஒன்றாகும்.
- ❖ 2022 ஆம் ஆண்டில் 4 மில்லியன் டன்களுக்கு மேல் வளர்க்கப்பட்ட கட்லா, 'முதல் 10 வகையிலான இனங்கள் பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ இந்த இனம் ஆனது, “வட இந்தியா, சிந்து சமவெளி மற்றும் பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளின் அருகிலுள்ள மலைகளில் உள்ள நதி அமைப்புகளில் காணப்படுகிறது.
- ❖ கட்லா மற்றும் இரண்டு முக்கியமான இந்திய கெண்டை மீன்கள் - ரோஹு (லேபியோ ரோஹிதா), மற்றும் மிருகல் (சிர்ரினஸ் மிரிகலா) - இந்தியாவின் உள்நாட்டு மீன் உற்பத்தியில் அதிகம் வளர்க்கப்படும் மூன்று மீன் வகைகள் ஆகும்.

- 6.8 மில்லியன் டன்களுடன், வெள்ளை இறால் (பெனாயியஸ் வண்ணமேய்) 2022 ஆம் ஆண்டில் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்ட நீர்வாழ் விலங்கு இனமாகும்.

| Name | Scientific name | Harvest in Mt |
|---|---|---|
| Whiteleg shrimp | *Penaeus vannamei* | 6.8 |
| Cupped oysters nei | *Crassostrea spp* | 6.2 |
| Grass carp | *Ctenopharyngodon idellus* | 6.2 |
| Nile tilapia | *Oreochromis niloticus* | 5.3 |
| Silver carp | *Hypophthalmichthys molitrix* | 5.1 |
| Anchoveta | *Engraulis ringens* | 4.9 |

## மிகச்சிறிய மனிதக்குரங்கு இனங்கள்


- 11 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக அறியப்பட்ட மிகச்சிறிய மனிதக் குரங்கு இனம் ஆனது ஜெர்மனியில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தப் புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த உயிரினம் என்பது, புரோனியஸ் மன்ஃப்ரெட்ஷ்மிடி என்று அழைக்கப்படுகிறது.
- இது வெறும் 10 கிலோ எடையுடன், இதுவரையில் அறியப்பட்ட எந்தவிதமான மனிதக் குரங்குகளையும் விட மிகவும் சிறியதாகும்.




## முசங்க்வா சன்யாடியென்சிஸ்

- ஜிம்பாப்வேயில் உள்ள கரிபா ஏரியின் கரையோரத்தில் முற்றிலும் புதிய டைனோசர் இனத்தின் படிமங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்த அரிய கண்டுபிடிப்பிற்கு முசங்க்வா சன்யாடியென்சிஸ் என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இது ஜிம்பாப்வேயில் கண்டறியப்பட்ட நான்காவது டைனோசர் இனமாகும்.
- டைனோசரின் இந்தப் புதிய மாதிரி பெறப்பட்ட பாறைகள், சுமார் 210 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய ட்ரயாசிக் காலகட்டத்தினைச் சேர்ந்தவையாகும்.
- முசங்க்வா சன்யாடியென்சிஸ் அதன் சகாப்தத்தின் மிகப்பெரிய டைனோசர்களில் ஒன்றாகும்.
- சுமார் 390 கிலோ எடையுடைய இது தாவரங்களை உண்ணும் இனமாகும்.



## உலகளாவிய கடல்சார் உணவு உற்பத்தி

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான உலக மீன்பிடி வளம் மற்றும் மீன்வளர்ப்பு நிலை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் முதன்முறையாக மீன்வளர்ப்பு உற்பத்தியானது கடல்சார் மீன்பிடி வளத்தின் உற்பத்தியை விட விஞ்சியதைக் காட்டுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், உலகளாவிய உற்பத்தி 223.2 மில்லியன் மெட்ரிக் டன்களை என்ற சாதனை அளவினை எட்டியது என்ற நிலையில் இது 2020 ஆம் ஆண்டை விட 4.4 சதவீதம் அதிகமாகும்.
- ஆசிய நாடுகளானது, அனைத்து நீர்வாழ் விலங்குகளில் 70 சதவீதத்தினை உற்பத்தி செய்கின்றன.
- 2022 ஆம் ஆண்டில் மாபெரும் அளவிலான கடல்சார் மீன்பிடிப்பானது 92.3 மெட்ரிக் டன்கள், மற்றும் நீர்வாழ் விலங்குகள் 91.0 மெட்ரிக் டன்கள், 1.3 மெட்ரிக் டன்கள் பாசிகள் போன்றவற்றை உற்பத்தி செய்தது.
- மீன்பிடி உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது (14.3 சதவீதம்), அதைத் தொடர்ந்து இந்தோனேசியா (8.0 சதவீதம்) மற்றும் இந்தியா (6.0 சதவீதம்) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- 2032 ஆம் ஆண்டில் நீர்வாழ் விலங்குகளின் உற்பத்தி 10 சதவீதம் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

**Aquatic animals**

In million tonnes (live weight)

| | 1950 |
|---|---|
| France | 0.1 |
| China | 0.1 |
| United States of America | 0.1 |
| Union of Soviet Socialist Republics | 0.1 |
| Indonesia | < 0.1 |
| Others | 0.3 |
| **Total** | **0.6** |

| | 2022 |
|---|---|
| China | 52.9 |
| India | 10.2 |
| Indonesia | 5.4 |
| Viet Nam | 5.2 |
| Bangladesh | 2.7 |
| Others | 18 |
| **Total** | **94.4** |

## படகோனியாவில் புதிய டைனோசர் இனங்கள்

- ஆராய்ச்சியாளர்கள் அர்ஜென்டினாவின் படகோனியாவில் 6 அடி உயரத்திலான டைட்டானோசரின் புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனமானது கொலகென் இனகயாலி எனப்படும் அபெலிசௌரிட் வகை ஆகும்.
- இது சுமார் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கிரெட்டேசியஸ் என்ற சகாப்தத்தின் பிற்பகுதியின் போது, இப்பகுதியில் வாழ்ந்த இரண்டாவது அறியப்பட்ட அபெலிசௌரிட் இனமாகும்.

## 500 ஆண்டுகள் பழமையான இந்தியாவின் வெண்கலச் சிலை



- தமிழ்நாட்டில் உள்ள கோவிலில் இருந்து திருடப்பட்டதாக நம்பப்படும் 500 ஆண்டுகள் பழமையான வெண்கலச் சிலையை இந்தியாவிற்குத் திருப்பித் தர ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமானது ஒப்புக் கொண்டுள்ளது.

- 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித திருமங்கை ஆழ்வாரின் வெண்கலச் சிற்பம் ஆனது ஆஷ்மோலியன் அருங்காட்சியகத்தில் உள்ளது.
- இந்தச் சிலையானது தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோவிலில் இருந்து திருடப்பட்டதாக நம்பப் படுகிறது.

## மினோவான் நாகரிகம் - கிரீஸ்

- கிரீட் தீவில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மினோவான் நாகரீக மக்கள் தங்கள் சமயச் சடங்குகளுக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்று கருதப்படுகின்ற 4,000 ஆண்டுகள் பழமையான ஒரு கட்டமைப்பைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த வட்ட வடிவ அமைப்பு ஆனது வெண்கலக் காலத்தினைச் சேர்ந்த மினோவான் நாகரிகத்திற்கு முந்தையதாகக் கருதப்படுகிறது.
- இது வெண்கலக் காலத்தில் கிரீட் தீவில் உருவாகி கி.மு. 3000 முதல் கி.மு. 1450 ஆம் ஆண்டு வரை நீடித்த நாகரிகமாகும்.
- கடற்பயணம், வணிகம் மற்றும் கலை ஆகியவற்றில் மினோவான் சமூகத்தினர் மிகவும் மேம்பட்ட நிலையிலான சமூகமாக இருந்துள்ளனர்.
- மினோஸ் என்ற புராண அரசரின் நினைவாக இந்த நாகரிகத்திற்கு இந்தப் பெயரிடப் பட்டது.

## செனாப் பாலத்தில் சோதனை ஓட்டம்

- உலகின் மிக உயரமான எஃகினால் ஆன வளைவு இரயில் பாலமான செனாப் பாலத்தில் இந்திய இரயில்வே சோதனை ஓட்டத்தை நடத்தி வருகிறது.
- இந்த உலகின் மிக உயரமான இரயில் பாலம் ஆனது செனாப் ஆற்றின் மீது 359 மீ (1,178 அடி) உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது பாரீசு நகரின் ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் அதிகம் உயரமானது.
- இது உதாம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா புதிய இரயில் பாதை திட்டத்தின் ஒரு பகுதியாக அமைக்கப் பட்டது.
- இந்தப் பாதையானது, ஜம்மு & காஷ்மீரின் அனந்த்நாக், புல்வாமா, சோபியான், பத்காம், ஸ்ரீநகர் மற்றும் பாரமுல்லா ஆகிய மாவட்டங்களை இணைக்கும் வகையில் அமைக்கப் பட உள்ளது.

## கோட்பந்தர் கோட்டையில் உள்ள இரகசிய அறை

- கோட்பந்தர் கோட்டையின் மறுசீரமைப்பு பணியின் போது அதன் உள் அடுக்குகளுக்கு அடியில் இரகசிய அறை ஒன்று இருப்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிர மாநிலம் தானேயில் உல்லாஸ் ஆற்றின் மீது அமைந்துள்ள கோட்பந்தர் கோட்டை போர்த்துகீசியர்களால் 1730 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.
- தொடக்கத்தில் குதிரை வணிகத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இக்கோட்டை பின்னர் மராட்டியர்களாலும் ஆங்கிலேயர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டது.

- இந்தக் கோட்டையில் 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்த போர்த்துகீசிய தேவாலயம் மற்றும் பல்வேறு வரலாற்று கட்டமைப்புகள் உள்ளன.


## பண்டைய முத்து நகரம் - துயாம்

- ஐக்கிய அரபு அமீரகத்தின் உம் அல் குவைன் என்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 6 ஆம் நூற்றாண்டின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- அது தொலைந்து போன துயாம் நகரமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- இந்த இடிபாடுகள் ஒரு தொகுப்பு அமைப்பின் ஒரு பகுதியான அல் சின்னியா தீவில் அமைந்துள்ளது.
- இந்தப் பகுதியில் வசித்ததற்கான ஆரம்ப கட்ட அறிகுறிகள் கி.பி 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும் என்பதோடு இது 5 ஆம் அல்லது 6 ஆம் நூற்றாண்டில் உச்சத்தை அடைந்தன.
- அமீரகத்தின் வளைகுடாப் பகுதிக் கடற்கரையில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட அந்தக் காலத்தினைச் சேர்ந்த மிகப்பெரிய நகரம் இதுவாகும்.



## அதி நீர்விலக்குத் தன்மைக் கொண்ட வினையூக்கி

- அசாம், ஒடிசா, சீனா, ஐக்கியப் பேரரசு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் குழுவானது நீர் விலக்குத் தன்மைக் கொண்ட வினையூக்கியை உருவாக்கியுள்ளது.
- இது "சுற்றுச்சூழலுக்கு தீங்கற்ற" உயிரி டீசலை உற்பத்தி செய்வதற்கான செலவை தற்போதைய அளவிலிருந்து கணிசமான வகையில் குறைக்கும்.
- இது உயிரி டீசல் உற்பத்தியின் போது நீர் கொண்ட விளை பொருளினை தாங்கும் வகையிலான "கோள வடிவ அதி நீர்விலக்குத் தன்மை கொண்ட ஒரு செயலாக்கப்பட்ட கார்பன் வினையூக்கியை" அடையும் செயல்முறையாகும்.
- அதி நீர்விலக்குத் தன்மை கொண்ட வினையூக்கிகள், தாமரை இலைகள் போன்ற இயற்கையான மேற்பரப்புகளில் ஈரம் எதிர்ப்பு அல்லது தண்ணீரை விலக்கும் பண்புகளைப் கொண்டுள்ளது.
- இந்த வினையூக்கியானது, மிகவும் பயனுள்ளதாக உள்ளது மற்றும் பல முறை மீண்டும் பயன்படுத்தப்படும் வகையிலானது ஆகும் என்ற வகையில் இது வினையூக்கச் செயல்முறையை மிகவும் திறன் மிக்கதாகவும், செலவு குறைந்ததாகவும் மாற்றுகிறது.




## உலகின் பழமையான கரையான் புற்றுகள்




- 34,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலக் கட்டத்தினைச் சேர்ந்த, உலகின் மிகப் பழமையான மற்றும் செயல்பாட்டில் உள்ள கரையான் புற்றுகள் ஆனது, நமீபியாவின் நாமகுலாந்தில் கண்டறியப்பட்டுள்ளன.
- உரோமங்கள் நிறைந்த யானை இனங்கள் (மாமோத்கள்) வாழ்ந்த கடைசிப் பனி யுகத்திற்கு முன்பு இருந்தே அவை உள்ளன.
- இந்தப் புற்றுகளில் தெற்கு ஹார்வஸ்டர் கரையான்கள் வசிக்கின்றன.
- இதற்கு முன்னதாக வேறு கரையான் இனங்கள் காணப்படுகின்ற மிகப் பழமையான புற்றுகள் பிரேசிலில் கண்டுபிடிக்கப்பட்டன.
- மேலும் அவை 4000 ஆண்டுகள் பழமையானவை ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★